
# கலைச் செல்வி

## விபுலானந்தர் நூற்றாண்டுச் சிறப்பு மலர்



முத்தமிழ் மன்றம்

அரசினர் ஆசிரியர் கலாசாலை

மட்டக்களப்பு

1992

மட்டக்களப்பு - கொழும்பு பயணங்களா? ......
இதோ ஒரு தகவல்,
"CO-OP ட்ரவல்ஸ்" சொகுசு பஸ் சேவை.
குறைந்த செலவில் விரைந்த பயணம்

மட்டக்களப்பு - கொழும்பு.
கொழும்பு - மட்டக்களப்பு.

ஒரு வழிப்பயணம் ரூபா 80/=

மற்றும்:-
சுற்றுலா பயண வசதிகளுக்கும்,
பிரத்தியேக பயண வசதிகளுக்கும் தொடர்புகொள்ளுங்கள்:

பொதுமுகாமையாளர்
மட்/ப.நோ.கூ.சங்கம்,
105, திருமலை வீதி.
மட்டக்களப்பு.
தொலைபேசி: 065-2111.

ஆசனங்கள் பதிவு செய்ய

மட்டக்களப்பில்......
கிராமிய வங்கிப் பகுதி
மட்/ப.கூ.சங்கம்
105, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

கொழும்பில்......
லங்கா ரேடர்ஸ்
62, ப, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு - 11.

உங்கள் தேவையே எங்கள் சேவை.

# KALAICHELVI

PUBLIC LIBRARY,
BATTICALOA.

*With Best Compliments From:*

**MUTHTHAMIL MANTRAM**
**Govt. Teachers College,**
**Batticaloa.**

## MUTHTHAMIL MANTRAM

## GOVT. TEACHERS' COLLEGE, BATTICALOA.

# தமிழ்மொழி வாழ்த்து

*வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி!*
*வாழிய வாழியவே!*

*வானமளந்த தனைத்தும் அளந்திடும்*
*வான்மொழி வாழியவே!*

*ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி*
*இசை கொண்டு வாழியவே!*

*எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி*
*என்றென்றும் வாழியவே!*

*சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்*
*துலங்குக வையகமே!*

*தொல்லை வினைதரு தொல்லை யகன்று*
*சுடர்க தமிழ்நாடே!*

*வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி*
*வாழ்க தமிழ்மொழியே!*


*வானம் அறிந்த தனைத்தும் அறிந்து*
*வளர் மொழி வாழியவே!*

**இம் மலரில் மணம் பரப்பும் படைப்புகளுக்கு அவற்றின் படைப்பாளிகளே பொறுப்பாளிகளாவர்.**

— *ஆசிரியர்* —

# சமர்ப்பணம்

## ஈசன் உவக்கும் இன்மலர் மூன்று



வெள்ளைநிற மல்லிகையோ, வேறெந்த மாமலரோ,
வள்ளலடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ?
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.

காப்பவிழ்ந்த தாமரையோ, கழுநீர் மலர்த்தொடையோ
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது

பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரிலில்லாக் கற்பகமோ,
வாட்டமுறாதவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
பாட்டளிசேர் கொன்றையல்ல பாரிலில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது.

சுவாமி விபுலாநந்தர்

சுவாமி விபுலாநந்தர்

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி!
வாழிய வாழியவே!
[illegible]
[illegible]மொழி வாழியவே!
[illegible]
[illegible]
[illegible] தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
[illegible]
[illegible]
[illegible]மொழி ஓங்கத்
[illegible]
[illegible]
[illegible] தமிழ்நாடே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே!

இம் மலரில் வரும் படைப்புகளுக்கு அவற்றின் படைப்பாளிகளே பொறுப்பாளிகளாவர்.

—ஆசிரியர்—

# சமர்ப்பணம்



சுவாமி விபுலாநந்தர்

# கலைச்செல்வி

## சுவாமி விபுலாநந்தர் சிறப்பு

## மலரமைப்புக் குழு

**காப்பாளர்**

திரு. வ. கனகசிங்கம்
(முதல்வர்)

**ஆலோசகர்கள்**

திரு. தி. பொன்னம்பலம்
(துணை முதல்வர்)
திரு. செ. வினாசித்தம்பி
(விரிவுரையாளர்)

திரு. சி. கிருஸ்ணபிள்ளை
(பிரதி முதல்வர்)
திரு. ந. நடராசா
(விரிவுரையாளர்)

**மலராசிரியர்**

திரு. த. சகாதேவராஜா

**துணையாசிரியர்கள்**

திரு. பெ. தணிகாசலம்
திரு. பயஸ் ஆனந்தராஜா
திரு. மு. விஜயநாதன்

**உறுப்பினர்கள்**

திரு. செ. முருகுப்பிள்ளை
செல்வி. ஐ. சுனீத்திரா
செல்வி. கு. கலைச்செல்வி
திரு. சு. நவரெட்ணம்
செல்வி. செ. முல்லைமலர்

செல்வி. த. சுமித்ரா
திருமதி. தே. ரவீந்திரன்
திரு. மா. ஜீவரெட்ணம்
திருமதி. ல. தங்கராஜா
திரு. இ. மேகாம்பிகைராஜா

# கலாசாலை வாழ்த்துப்பா

பல்லவி

ஒருதனி முதல்தரு மாதமிழ் வாழ்க
ஓதும் நல் மாணவர் வாழ்க.

சரணங்கள்

ஸ்ரீலங்கா தேவிதரு மட்டுமா நகரில்
மாபெரும் ஆசிரியர் மன்றம்
ஆன நல் ஞான ஒளியினை உதவும்
அரசினர் நீடூழி வாழ்க
அறிவினை யாமறிவோமே
அறிவதும் பிறருக்காமே
அழகுறப் பயின்றிடுவோமே - ஜெயமே
ஜெயமே, ஜெயமே, ஜெய ஜெய ஜெய ஜெயமே
ஓதும் நல் மாணவர் வாழ்க.

உண்மையும் நன்மையழகாகிய நோக்கமும்
உள்ளதோர் நல்லவராவோம்
திடகாத்திர தேகமும் காத்திர மனமும்
காணும் நல் வீரர்களாவோம்
கல்வியின் மூலமும் நாமே
கடவுளை அடைந்திடுவோமே
களங்கமில் தொண்டு செய்வோமே - ஜெயமே
ஜெயமே, ஜெயமே, ஜெய ஜெய ஜெய ஜெயமே
ஓதும் நல் மாணவர் வாழ்க.

நம் மாணவ மாணவி பரிசுத்த தன்மை
மதித்து நல் அறநெறி புகழ்வோம்
சாதனை போதனை யாவிலும் சுத்தசன்
மார்க்க நல் ஆசிரியராவோம்
ஆதியில் மானிடர் ஒன்றே
ஆண்டவன் என்பதும் ஒன்றே
ஒருயிர் போலினி வாழ்வோம் - ஜெயமே
ஜெயமே, ஜெயமே, ஜெய ஜெய ஜெய ஜெயமே
ஓதும் நல் மாணவர் வாழ்க:

# மலரினிதழ்கள்


| | | | |
|---|---|---|---|
| 1. | முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த சுவாமி | ... | 03 |
| 2. | விட்டபணி தொடர்வது யார்? | ... | 06 |
| 3. | விபுலாநநத அடிகளாரின் கல்வி ஒழுங்கு | ... | 07 |
| 4. | அன்பு, அறிவு, ஆனந்தம் ... விபுலாநந்தர் | ... | 09 |
| 5. | முத்தமிழ் மன்றம் கண்ட முத்தமிழ் துறவியின் முத்திருநாள் | ... | 12 |
| 6. | முத்தமிழ் வித்தகர் விபுலாநந்தரின் வாழ்க்கைக் குறிப்பு | ... | 16 |
| 7. | நிவாரணம் | ... | 17 |
| 8. | கல்விக்கான உந்து சக்திகள் | ... | 19 |
| 9. | கலாசாலை வரலாற்றில் ஒரு கண்ணோட்டம் | ... | 22 |
| 10. | கற்பித்தல் நுட்பங்கள் | ... | 27 |
| 11. | கல்விச் சிந்தனையாளர்கள் காட்டிய கற்பித்தல் முறைகள் | ... | 30 |
| 12. | ஊமையாகும் உண்மைகள் | ... | 33 |
| 13. | உலக கிண்ண கிரிக்கட் - 1992 | ... | 36 |
| 14. | ஆசிரியன் | ... | 37 |
| 15. | வாழ்வில் ஊழ் | ... | 39 |
| 16. | விடிவு | ... | 42 |
| 17. | கீதை கூறும் ஒழுக்கம் | ... | 43 |
| 18. | கல்வி உளவியல் | ... | 45 |
| 19. | உண்மை நட்பு | ... | 47 |
| 20. | ஞான விநாயகனே | ... | 48 |
| 21. | ஒலிம்பிக் | ... | 49 |
| 22. | ஒரு பசுஞ்சோலை பாலைவனமாகிறது | ... | 51 |
| 23. | இராமன் வாலி மீது மறைந்திருந்து பாணந் தொடுத்தது | ... | 54 |
| 24. | பயிர்களைப் பாதுகாக்க ஒன்றிணைந்த ... முறை | ... | 58 |
| 25. | மானிடரும் சிரிப்பும் | ... | 62 |
| 26. | ஞாபகமும் மறதியும் | ... | 63 |
| 27. | இந்து மத தத்துவத்தின் சில துளிகள் | ... | 67 |
| 28. | ஆளுனர் பேரவை 1991 - 1992 | ... | 68 |
| 29. | சார்க் - சாவ் | ... | 70 |
| 30. | கலியுகத்தின் காலன் | ... | 71 |
| 31. | நிர்க்கதி | ... | 73 |
| 32. | இறைவன் படைப்பு | ... | 76 |
| 33. | முத்தமிழ் மன்ற அறிக்கை | ... | 77 |
| 34. | சிந்தித்து வாழ்ந்தால் சிறப்படையலாம் | ... | 78 |
| 35. | எயிட்ஸ் | ... | 81 |


PUBLIC LIBRARY

36. சக்தி வழிபாடு ... 84
37. இந்து மாமன்ற அறிக்கை ... 86
38. கிறீஸ்தவ ஒன்றிய அறிக்கை ... 89
39. வேதாகமம் கூறும் இல்லற வாழ்க்கை ... 90
40. மனிதனின் உள்ளம் இதுதானா? ... 92
41. யாழும் அதன் மகிமையும் ... 93
42. பெண் ... 96
43. அலைகள் ஓய்ந்த பின் ... 97
44. படி! படி! படி!! இது பாட்டல்ல ... 100
45. பாடசாலைச் சமூகத் தொடர்புகளும் கல்வி வளர்ச்சியும் ... 101
46. வாழ்க்கை நீடித்த கல்வி ... 104
47. ஆத்திசூடியும் புதிய ஆத்திசூடியும் ஒரு ஒப்பியல் நோக்கு ... 107
48. ஓசோன் படை அழிவதால் பூமிக்கு ஏற்படும் ஆபத்து ... 109
49. கதிரியக்கமும் அதன் விளைவுகளும் ... 111
50. வாழ்க்கையில் தத்துவத்தின் பங்கு ... 114
51. விளையாட்டில் சாதனைகள் ... 117
52. விளையாட்டு மன்ற அறிக்கை ... 120
53. வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி பெறுபேறுகள் ... 123
54. உங்கள் குழந்தை எதிர்கால மேதையாக வளர ... 125
55. சதிர்முகன் போல வல்லோர் ... 128
56. ஆயகலைகள் அறுபத்து நான்கு ... 129
57. கணித, விஞ்ஞான மன்ற அறிக்கை ... 130
58. காத்திருப்பேன் காலமெல்லாம் ... 131
59. அணிசேரா இயக்கம் ... 134
60. எழுவாய் உதயம் ... 135
61. குறள் தந்த மருத்துவம் ... 137
62. சித்திரக் கலையைக் கற்பிப்பதில் ஆசிரியரின் பங்கு ... 140
63. தினப் பதிவேட்டின் நீங்காத நினைவுகள் ... 141
64. சுவாமி விவேகானந்தர் ... 143
65. எமது கலாசாலை சிற்றூழியர்கள் ... 146
66. பண்டைத் தமிழர் திருமணங்கள் ... 147
67. வேதனை ... 150
68. தண்ணீரில் மீனழுதால் ... 151
69. பெண்களும் அலங்காரமும் ... 153
70. English for you ... 157
71. பண்டைத் தமிழர் நாகரீகம் ... 159
72. கர்ணன் களம் ... 161
73. முத்தமிழ் வித்தகரின் உதிர உறவுடன் ஓர் செவ்வி ... 162

# மலராசிரியரின் மனதிலிருந்து.........

மீன்பாடும் தேனாட்டிலே மிளிரும் உயர் கல்விக் கூடமான ஆசிரியர் கலாசாலையின் முத்தமிழ் மன்றமானது வருடாவருடம் தமிழன்னைக்கு பாதகாணிக்கையாக ''கலைச்செல்வியை'' சாத்துவது வழமை.

முத்தமிழ் மூவேந்தர் நித்தம் தமிழ் வளர்த்த நீர்மை என் நினைவுக்கு வருகின்ற போதே, அதற்கேற்பட்ட சிறுமையால் எம் தமிழ்த்தாய் நிலையிழந்து, தலைகவிழ்ந்து, அடங்கி, ஒடுங்கி, ஒதுங்கி நிற்கும் நிலைகண்டு என் நெஞ்சம் கலங்குகிறது. இதனை ஈடுசெய்யவே தமிழ்க்காதல் காரணமாக தமிழ்த்தாய்க்கு சில பணிகளை சிலர் செய்கின்றனர்.

இப்பணியில் எமது கலாசாலை முத்தமிழ் மன்றத்தினரும் பங்கேற்பதில் பேருவகை கொள்கின்றேன். அதிலும் சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டுக் காலத்திலே எமது இந்தக் கலைச்செல்வி - சிறப்புமலராக வெளிவருகிறாள். இக்கலாசாலையின் 47 வருட கால வரலாற்றிலே இது பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய தொன்றாகும். இதனையிட்டு பெருமைப்பட வேண்டியவர்கள் நாம்.

இம் மலர் சிறப்புற வெளிவர உதவிய அதிபர், விரிவுரையாளர்கள், கல்விமான்கள் சக பயிற்சி ஆசிரிய ஆசிரியைகள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் நன்றியை தெரிவிக்கும் அதேவேளை என்னுடன் தோளோடுதோள் நின்றுழைத்த நிதிச் செயலாளருக்கும் மற்றும் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

''சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்''

தம்பிராஜா சகாதேவராஜா
(மலராசிரியரும்,
முத்தமிழ் மன்றத் தலைவரும்)

விபுலாநந்த ம. ம. வி. வீதி,
காரைதீவு 04 (கி. மா)

# மலரை நுகருமுன்..............

மீன்களும் இசைபாடும் மட்டுமாநகரின் கண்ணே வானுயர்ந்து நிற்கும் எமது ஆசிரியர் கலாசாலை ஆண்டுதோறும் பலநூற்றுக்கணக்கான ஆசிரியர்களைப் பயிற்றுவித்து வெளியேற்றிய பெருமையில் கெம்பீரமாக நிற்கிறது. கிழக்கின்புகழ், தமிழ் அன்னையின் புகழ், கலாசாலையின் புகழ், ஈழத்தின் எல்லாத் திசைகளிலும் ஏன் கடல் கடந்தும் பெருக வேண்டும் என்ற நோக்கில் முத்தமிழ்த்தொண்டு செய்யும் எமது தணியாத ஆர்வத்திலும், துடிப்பிலும் ஆண்டுக்கொரு முறை பலரும் கலாசாலைச் செல்வியாம் நம் கலைச்செல்வி இம் முறையும் தமிழ் வளர்த்த துறவி வித்தகர் விபுலாநந்தர் நூற்றாண்டுச் சிறப்புச் செல்வியாக துள்ளுநடைபோட்டு உங்கள் முன் வருகிறாள்

நம் கலைச்செல்வி இம்முறை சிறப்பு மலராக அலங்கரிக்கப்பட்டிருப்பது கண்டு தமிழாரணங்கு பூரிப்படைகிறாள். தமிழ்ப்பற்று எமது இதயங்களிற் பொங்க வழிவகுத்து. இம் மலரைச் சிறப்புடன் வெளியிட ஆலோசனைகளைத் தந்து ஊக்குவித்த அனைவருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக இலக்கியம் உள்ளதென்றால் நம் கலாசாலையைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக இக் கலைச்செல்வியே இருக்கிறாள். காலவோட்டத்தின் வேகத்தினால் நாம் நமது பயிற்சியின் இறுதிக் கட்டத்திலிருக்கிறோம். இந்த இருவருடகாலத்தினுள் நாம் கடந்து வந்த பாதைகள், அதில் ஏற்பட்ட மறக்க முடியாத சம்பவங்கள், நாம் நடத்திய பல விழாக்களின் பசுமையான நினைவுகள் இன்னும் எமது இதய மன்றினில் நர்த்தனமாகிக் கொண்டிருக்கின்றன.

ஆம்...... எமது இனிய நினைவுகள் ஆக்கங்கள் என்றும் மறக்க முடியாதவாறு இருக்க வேண்டுமென்பதற்குக் களமமைதத கலைச்செல்வியைத் தமிழன்னையின் பெயரால் உங்கள் திருமுன்பு பெருமகிழ்வுடன் சமர்ப்பிக்கிறோம்.

சிந்தனைக்கு விருந்தாகும் தரமான படைப்புக்களை தன்னகத்தே கொண்ட நம் ''கலைச்செல்வி'' உங்கள் கரங்களில் பொலிவுற வீற்றிருந்து புது மணம் பரப்பி உள்ளத்தைக் கொள்ளை கொள்வாள் என்பது எமது நம்பிக்கை.

மலர் அமைப்பு அணியினர்

## ஆசிச் செய்தி

மாண்புமிகு

கல்வி இராஜாங்க அமைச்சர்

# திருமதி. இராஜமனோகரி புலேந்திரன்

அவர்கள்



மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை, முத்தமிழ் மன்றம் வெளியிடும் ''கலைச்செல்வி'' சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இம்முறை முத்தமிழ் வித்தகர், சுவாமி விபுலாநந்த அடிகளாரின் நூற்றாண்டு விழாவினையொட்டி, ''கலைச்செல்வி'' சிறப்பாக மலர்வதையிட்டு மட்டற்ற உளநிறைவு பெறுகிறேன்.

முத்தமிழுக்கும் பணியாற்றியதுடன், பல் துறைகளிலும் எம் மக்கள் வளர்ச்சி பெறுவதற்கு அயராது உழைத்தவர், அடிகளார். அல்லல்களுக்கெல்லாம் அறியாமையே காரணம் என்றுணர்ந்த அடிகளார், கல்லூரிகளையும் பாடசாலைகளையும் அமைத்துக் கல்விப்பணியாற்றியமை, அவர் தொண்டுகளுள் எல்லாம் தலைசிறந்த தொண்டாகக் கொள்ளப்பட வேண்டும். ஆசிரியராக, அதிபராக, பேராசிரியராக விளங்கிய அடிகளார், ஆசிரியத்துவத்திற்கு இலக்கணமாக அமைந்தவர். கற்றல், கற்றாங்கு ஒழுகுதல் ஆகிய இரண்டும் ஆசிரிய இலட்சணங்கள். இதனை நன்கு வலியுறுத்தி, ஒரு சிறந்த ஆசிரிய சமுதாயத்தைக்காண விழைந்தவர் சுவாமி விபுலாநந்தர். அவ்வாறு அவர்கள் வாழ்ந்தும் காட்டியுள்ளார். விழுமியப் பண்புகளுக்கு மதிப்பளிக்கும் ஆசிரியர்களிடமே நாட்டில் நல்ல ஒழுக்கம் நிறைந்த கட்டுக்கோப்பான கற்றோர் சமுதாயத்தை உருவாக்கும் மாபெரும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுவாமி விபுலாநந்தர் காண விழைந்த நல்லாசிரியர் சமுதாயத்தை, அவர் வகுத்த நெறியில் கட்டியெழுப்புவது தான் நாம் அவருக்கு இந்நேரத்தில் ஆற்றும் பெரும்பணியாகும்.

விபுலாநந்த அடிகளாரின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுகின்ற ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் அவர் காட்டிய பாதையில், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, அர்ப்பணம், தியாகசிந்தை, சேவைமனப்பான்மை ஆகியவற்றை தம்மில் வளர்த்துக்கொள்ள வேண்டும். இப்பண்புகளைத் தாமாகவே எண்ணி, உணர்ந்து தம்மில் ஏறபடுத்திக் கொள்ள வேண்டுமே தவிர, புறத்திலே இருந்து புகுத்துதல் முடியாத காரியம். அவ்வாறு புகுத்தப்பட்டாலும் அவை நிலைத்து நிற்கப் போவதில்லை.

ஆசிரியப் பயிற்சியில், பாடப்பொருள், கற்பித்தல் முறைகள், கல்விக் கோட்பாடுகள், கல்வி உளவியல் போன்றன எத்துணை முக்கியத்துவம் பெறுகின்றனவோ அவற்றை விடச் சற்று அதிகமாக, மனிதப் பண்புகள், விழுமியங்கள், ஒழுக்க சீலங்கள் என்பவற்றை பயிற்சியின் போது ஆசிரியர்களில் வளர்த்தல் முக்கியத்துவம் பெற வேண்டும்.

''மனித ஆக்கத்தில்'' ஈடுபடுகின்ற ஆசிரியர்கள் முதலில் தம்மை 'மனிதர்'' ஆக்கிக் கொள்ளுதல் அவசியம். விபுலாநந்தரின் ஆசிரியர் பற்றிய சிந்தனையிலும் இதுவே முதன்மை பெறுகின்றது.

திருமதி. இராஜமனோகரி புலேந்திரன்.
கல்வி இராஜாங்க அமைச்சர்

கல்வி இராஜாங்க அமைச்சு,
இசுருபாய, பத்தரமுல்லை.
20 - 05 - 1992.

MESSAGE

# MRS. G. V. S. S. RAJAPAKSA

*Director of Education,*
*Teachers Education Administration.*

I have great pleasure in sending this message to the Batticaloa Government Teachers' College annual magazine "KALAICHELVI" a special issue in celebrating the Centenary of Swamy Vipulananda.

The Teachers are recognised and respected in a high grade of Society and I am very much proud to say that this college has produced such educators in the past years.

In the mean time the Government Teachers' College has made good contribution for the Cultural Education and Religious development in the country.

I have a firm belive that Institution will continue to provide valuable services in coming years.

I convey my best wishes to all those who have taken an untiring effort in the publication of this magazine.

With good wishes.

*Mrs. G. V. S. S. Rajapaksa*
*Director of Education,*
*Teachers Education Administration.*

T: E: A. Branch,
Ministry of Education,
and Higher Education,
" Isurupaya "
BATTARAMULLA.
1992 - 07 - 01.

## ஆசிச் செய்தி


வடக்கு - கிழக்கு மாகாணக்

கல்விப் பணிப்பாளர்

ராசா

திரு. க. தியாகராசா

அவர்கள்



மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் வெளியீடான ''கலைச்செல்வி''க்கு இவ்வாசியுரையினை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். ஆண்டுதோறும் கலைமணம் பரப்பும் கலைச்செல்வி இவ்வாண்டு விபுலாநந்தர் நூற்றாண்டுச் சிறப்பு மலராக மலர்வது அதன் சிறப்பாகும். மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை விபுலாநந்த அடிகளாரது நூற்றாண்டு விழாவினைக் கடந்த பங்குனித் திங்கள் 26ம், 27ம், 28ம் திகதிகளில் சிறப்பாகக் கொண்டாடியமை இங்கு குறிப்பிடத்தக்கது. புகழ்பூத்த நிலையில் கலைச்செல்வி ஆண்டுதோறும் மலர்வதையிட்டு எனது பாராட்டுக்கள்.

கல்வி மிகவும் பரந்தது. கற்கும்காலம் பொன் போன்றது. அறிவு, திறன், மனப்பாங்கு, ஆற்றல், வாழ்வின் விழுமியங்கள் - இவற்றை எமது ஆசிரிய சமூகம் பெருக்கிக்கொள்ள வேண்டும், உறுதி செய்து கொள்ள வேண்டும். கற்றலும் கற்பித்தலும் வகுப்பறைக்குள்ளும் பாடநூலுடனும் மாத்திரம் முடங்கிவிடக் கூடாது. பல ஆண்டுகளாக ஆசிரிய மாணவர் தம் திறன்களை, படைப்பாற்றலை வெளிப்படுத்தி, மெருகூட்டி வழியமைத்துக் கொடுக்கும் களமாக கலைச்செல்வி விளங்கி வந்துள்ளது. ஆண்டிற்கு ஆண்டு கலைச்செல்வி செம்மையும், விரிவாக்கமும், பொலிவும் பெற்றுவருவது பாராட்டுக்குரியது.

கலைச்செல்வியின் ஆக்கத்தில் முன்னின்று உழைக்கும் அனைவரையும் பாராட்டுவதுடன் எதிர்காலத்திலும் தொடர்ந்து அது சகல சிறப்பு அம்சங்களுடனும் மலர்ந்து கலைமணம் பரப்பவேண்டுமென வாழ்த்துகிறேன்.

க. தியாகராசா
வட - கிழக்கு மாகாணக்
கல்விப் பணிப்பாளர்.

மாகாண கல்வி அலுவலகம்
வட - கிழக்கு மாகாணக்
கல்வி அமைச்சு, உவர்மலை
திருகோணமலை.
1992 - 08 - 19

| ஆசிச் செய்தி |
|---|

எமது கலாசாலை முதல்வர்

## திரு. வ. கனகசிங்கம் அவர்கள்

நல்லாசிரியர்களை உருவாக்கும் நற்பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர் கலாசாலை தனது கடமையில் தவறாது, தொடர்ந்து செல்வதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். கலாசாலையின் முக்கிய பணிகளில் ஒன்றாகிய கலைச்செல்வி இந்த வருடமும் புதுப் பொலிவுடன் மலர்வதையிட்டு நாம் பெருமை கொள்ளத்தான் வேண்டும். எமது ஆசிரிய மாணவ மணிகளின் நன் முயற்சியின் பேறாக வெளிவரும் கலைச்செல்வியைக் களமாகக் கொண்டு பல எழுத்தாளர்கள் உருவாகின்றனர். இந்த நற்பணியையும் நான் மனமராப் பாராட்டுகிறேன்.


எனவே இந்த ஆண்டும் இளமை குன்றாமல் வெளிவரும் கலைச்செல்வியை வாழ்த்துவதுடன் எனது நல்லாசிகளையும் வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

வ. கனகசிங்கம்
முதல்வர்

அரசினர் ஆசிரியர் கலாசாலை,
மட்டக்களப்பு,
*31 - 08 -1992.*

# எமது முதல்வர்

THE PUBLIC LIB...
31-10-199...
BATTICALO...



திரு.வ.கனகசிங்கம் (SLEAS-III)

T.T,B,A(Cey), Dip-in-Ed.

## துணை முதல்வர்



திரு. தி. பொன்னம்பலம் - SLEAS (III)
Sp. Trd. MATHS, B.Sc (CEY)

THE PUBLIC LIBRARY
31-10-1992
BATTICALOA.

## பிரதி முதல்வர்



திரு. சி. கிருஷ்ணபிள்ளை - SLEAS (III)
T. T. B. A (CEY) DIP. in. Ed.

# எமது உயர் நிர்வாக பீடம் - 1992

முதல்வர் : திரு.வ.கனகசிங்கம்.
T.T, B.A.(Cey) , Dip-in-Ed, SLEAS.

துணை முதல்வர் : திரு.தி.பொன்னம்பலம்
B.Sc, Sp . Trd (Maths) , SLEAS.

பிரதி முதல்வர் : திரு.சி.கிருஷ்ணபிள்ளை
T.T, B.A. (Cey) , Dip - in - Ed, SLEAS.

**விரிவுரையாளர்கள்**

(அ) **நிரந்தரம்** :திரு.ந.நடராசா - M.A, B.Ed. SLEAS.
திரு.செ.வினாசித்தம்பி – B.A (Hons),(Tamil) Dip-in-Ed, SLEAS
திரு.வே.லக்ஷ்மிசுந்தரம் – Sp . Trd. (Physical Edu.)

(ஆ) **இணைப்பு**: திரு.மு.தேவராஜமுதலி B.Sc , Dip-in-Ed.
திரு.கு.காராளசிங்கம் - Sp . Trd. (Agriculture)
திருமதி.ஜே.ஜே.யோகேந்திரன் - Sp . Trd. (Home Science)
திரு.வ.தெய்வேந்திரன் - B. A. (Cey), Sp . Trd. (Maths)
திரு.க.வினாயகமூர்த்தி - B.Sc


(இ) **பகுதிநேரம்**: திரு.எம்.பாஸ்கரன் B.Sc , Dip-in-Ed.
திருமதி.ச.சுந்தரலிங்கம் - B.Sc , Dip-in-Ed.
திரு.பொ.காந்தியடியான் - B.Sc , Dip-in-Ed
திரு.எஸ்.பாக்கியராஜா Sp . Trd (Science)
சகோ.எஸ்.டி.தங்கத்துரை Evengelist.
செல்வி.க.செல்லத்துரை - Dip-in-Dance.
திருமதி.இ.சோதிநாதன் - Sp . Trd (Music)
திரு.எஸ்.ஸ்ரீ கமலச்சந்திரன் – Sp . Trd (Art),
National Certificate in Art.
செல்வி.பி.ஜ.மத்தியுஸ் Sp . Trd (Pyhsical Edu)
திரு.பொ.கோவிந்தராஜா B.Sc

**விடுதி அத்தியட்சகர்கள்**: திரு.க.சிவலோகநாதன்
செல்வி.எல்.ஜே.ஜே.இராசையா

**அலுவலக எழுதுவினைஞர்**: திரு.க.மயில்வாகனம்

**தட்டெழுத்தாளர்**: **திருமதி.எஸ்.என்.சண்முகரெட்ணம்**

# எமது நிர்வாக உயர் பீடம்



முன்வரிசை (இடமிருந்து வலம்)
திருமதி.ஜே.ஜே.யோகேந்திரன், திரு.த.நடராஜா, திரு.சி.கிருஷ்ணபிள்ளை (பிரதி முதல்வர்), திரு.வ.கனகசிங்கம் (முதல்வர்), திரு.தி.பொன்னம்பலம் (துணை முதல்வர்), திரு.எம்.பாஸ்கரன், சகோ.எஸ்.டி.தங்கத்துரை.

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)
செல்வி.எல்.ஜே.ஜே.இராசையா (விடுதி மேற்பார்வையாளர்), திரு.கு.காராளசிங்கம், திரு.எஸ்.ஸ்ரீ கமலச்சந்திரன், திரு.வ.தெய்வேந்திரன், திரு.எஸ்.பாக்கியராஜா, திரு.க.சிவலோகநாதன் (விடுதி அத்தியட்சகர்), திருமதி.எஸ்.என்.சண்முகரெட்ணம் (தட்டெழுத்தாளர்)

படத்தில் இல்லாதோர்
திரு.செ.வினாசித்தம்பி, திரு.வே.லக்ஷ்மிசுந்தரம், திரு.மு.தேவராஜமுதலி, திருமதி.ச.சுந்தரலிங்கம், திரு.பொ.காந்தியடியான், செல்வி.க.செல்லத்துரை, திருமதி.இ.சோதிநாதன், செல்வி.பி.ஐ.மத்தியுஸ், திரு.பொ.கோவிந்தராஜா, திரு.க.மயில்வாகனம் (எழுதுவினைஞர்)

# மலர் அமைப்புக்குழு
## •முத்தமிழ் மன்றம்•



முன்வரிசை (இடமிருந்து வலம்)

திரு.வே.லக்ஷ்மிசுந்தரம் (விரிவுரையாளர்), திரு.வ.தெய்வேந்திரன் (விரி), திரு.தி.பொன்னம்பலம் (துணை முதல்வர்), திரு.த.சகா தேவராஜா (மலராசிரியரும், தலைவரும்), திரு.வ.கனகசிங்கம் (முதல்வர்), திரு.சி.கிருஷ்ணபிள்ளை (பிரதி முதல்வர்), திரு.கு.காராளசிங்கம் (விரி)

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)

செல்வி.செ.முல்லைமலர், செல்வி.ஐ.கவித்திரா, திரு.இ.மேகாம்பிகை ராஜா, திரு.ப.ஆ.ரவீந்திரன், திரு.க.நவரெட்ணம், செல்வி.கு.கலைச்செல்வி, திரு.பயஸ் ஆனந்தராஜா (துணையாசிரியரும், நிதிச் செயலாளரும்), திரு.செ.முருகுப்பிள்ளை, திரு.மா.ஜீவரட்ணம், திரு.மு.விஜயநாதன் (துணையாசிரியர்), திருமதி.தே.ரவீந்திரன், செல்வி.த.சுமித்ரா

படத்தில் இல்லாதோர்

திரு.பெ. தணிகாசலம்.(துணையாசிரியரும்,செயலாளரும்), திருமதி.ல.தங்கராஜா.

# KALAICHELVI

## SWAMY VIPULANANDA CENTENARY SPECIAL ISSUE - 1992


## EDITORIAL BOARD

PATRON

**Mr. V. Kanagasingam**
Principal

ADVISORS

**Mr. T. Ponnampalam**
Vice Principal

**Mr. S. Vinasithamby**
Lecturer

**Mr. S. Krishnapillai**
Deputy Principal

**Mr. N. Nadarajah**
Lecturer

EDITOR

**Mr. T. Sahadevarajah**

SUB EDITORS

**Mr. P. Thanigasalam**
**Mr. Pius Anandarajah**
**Mr. M. Vijayanathan**

MEMBERS

**Mr. S. Murugupillai**
**Miss. I. Suneethra**
**Miss. K. Kalaichelvi**
**Mr. S. Navaratnam**
**Miss. S. Mullaimalar**
**Miss. T. Sumithra**
**Mrs. T. Raveendran**
**Mr. M. Jeevaratnam**
**Mrs. L. Thangarajah**
**Mr. R. Mehambigairajah**


IN THIS ISSUE

Our Annual Magazine "Kalaichelvi" is published as a special issue this year to grace Swamy Vipulananda Centenary. As usual this issue contains valuable articles, extracts and reviews written by the lecturers and Teacher Trainees.

EDITOR

"ஈழம் முதல் இமயம் வரை கொடி கட்டுமிசைத் தமிழன்"

முத்தமிழ் வித்தகர்

# ஸ்ரீமத் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் நூற்றாண்டுச் சிறப்பு மலர்

எமது கலாசாலை இவ்வருடம் பங்குனித் திங்களில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிய போது, இச் சிறப்பு மலரை வெளியிடலாமெனத் திட்டமிட்டிருந்தோம். ஆனால் காலதேச வர்த்தமானங்களால் அஃது தாமதமானதால் கலைச் செல்வியுடன் அம் மலரை இப்போது வெளியிடுவதில் முத்தமிழ் மன்றம் மிகவும் பூரிப்படைகின்றது. எமது அன்பு வேண்டுகோளுக்கிணங்க ஆக்கங்களனுப்பிய பெருந்தகைகளுக்கு எமது மனமார்ந்த நன்றிகள் பல. இங்கு இடம் பெறாத ஆக்கங்கள் யாவும் அடுத்த மலரில் இடம்பெறுமென்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி.

**மலரமைப்புக்குழு.**

---

**அட்டைப் படம்......**

எமது உயர்கலைக்கூடம் அமைந்துள்ள இயற்கை வளம் கொழிக்கும் மீன்பாடும் தேனாட்டையும், இம் மண்ணுக்கு பெருமை சேர்த்த புகழ் பூத்த வித்தகரையும் நினைவு கூருகிறது.

(ஆ - ர்)

---

# முத்தமிழ் வித்தகர் — விபுலானந்த சுவாமி

மகாவித்துவான் **F.X.C.** நடராசா

விபுலானந்த அடிகள் முத்தமிழ் வித்தகர். முத்தமிழ் என்றால் இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத்தமிழ். வித்தகர் எனின் ஞானம், அறிவு, உணர்வு.விபுலாநந்த ஸ்வாமி வடமொழிப் பெயர். தமிழில் வந்தால் விபுலானந்தம் வரும். தந்நகரம் றன்னகரமாகி வரும். விபுலானந்த - தீர்க்கசந்தி. ஸ்வாமி என்ற வடமொழி சுவாமி > சாமி என்றும் வரும்.

உண்மை, வாய்மை, மெய்மை எஃபன இயல், இசை, நாடகம் சரியொக்கும். உண்மை = [1] உள்+மை > உள்ளமை. என்றும் உண்மை என்றும் புணரும். உள்ளத்திலிருந்து வருவது உண்மை. அஃது இயற்றமிழுக்குச் சரி

வாய்மை இசைத்தமிழுக்குச் சரி. வாயாற் பாடுவது, சாரீர வினை எனப்படும். கண்டவினையெனப்படும். கண்டம், மிடறு தொண்டை, என்பன பரியாயம். உண்மையிலும் பார்க்கக் குறைவு.

மெய்மை என்பது வாய்மையிலும் குறைவு நாடகத் தமிழுக்குச் சரி. அவிநயம் பிடிப்பது மெய்யினால். வாய்பாடும். சரீரத்தினால் அவிநயம். நவரசம் எழுப்பும். மெய்ப்பாடுதோன்றும். உண்மை புறப்படும், நல்ல நடிகன் உண்மைக்கு உவமை. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் சேர்ந்தது நாடகம் என்றழைக்கப்படும். சிலப்பதிகாரம் உதாரணம்.

இசைத்தமிழிலும் உண்மை, வாய்மையும் சேர்ந்தியங்கும். இயற்றமிழில் உண்மையும் வாய்மையும் சேர்ந்தியங்கும். இயற்றமிழும் இசைத்தமிழும் இணைந்தியங்கும் என்பது புலனாகின்று.

உண்மை, வாய்மை, மெய்மை என்ற பண்புச் சொற்களுக்கேற்ற இயல், இசை, நாடகம் உவமைகளாக இணைந்தும் பிணைந்தும் துணை செய்வதென நாம் உணர்ந்தோம்.

எழுத்தொடு சொற்பொருள் யாப்பணியென்னா
வழுத்துஞ் சுருதிசுரம் வண்ணம் - அழுத்துந்
தனியொத்துப் பாவம் சரச மிரசம்
பனிரண்டிலக்கணமாம் பார்.

மதிவாணர் வெண்பா

முத்தமிழுக்குரிய இலக்கணங்கள் ஆமாறு உணர்த்துகின்றது.

i) இயற்றமிழ் - எழுத்து, சொல்,பொருள், யாப்பு, அணி - ஐந்து.

ii) இசைத்தமிழ் - சுருதி, சுரம், இராகம் (வண்ணம்) - மூன்று.

iii) நாடகத்தமிழ் - தாளம், பாவனை அலங்காரம், நவரசம் - நான்கு.

முத்தமிழுக்குரிய இலக்கணமானது பன்னிரண்டு வகையினையுடைத்தாம். இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழில் முன்னது ஏனையிரண்டினும் சிறந்தது என்பது தோன்ற என்னா எனும் இடைச்சொற் கொடுத்துப் பிரித்தோதினார்.

பொதுவாக எழுத்துஞ் சொல்லுப் படிப்பது சகசம். படிப்பவர்க்கு எல்லாம் படித்தல்

[1]. **ஆண்மை :-** ஆளுந்தன்மை. அஃது இருபாலார்களுக்குமுரியது; குடிமாண்மையென்பதுமது. Personality - ஆளுமை என்றெழுதுகிறார்கள். ஆளுமை என்றால் சுத்தப் புணர்ச்சி விதிக்குமாறானது. இலக்கியம் இலக்கணமுணர்ந்தவர்கள்-அப்பாற் பட்ட விடயமாகும்.

எழுத்து, சொல். இது குறைந்த அளவு, பொருள் யாப்பு, அணி என்ற மூன்றினையும் படிப்பித்தல் விபுலானந்த சுவாமிகள் போன்றவர்கள்.

முத்தமிழுங்கற்றவர் விபுலானந்த அடிகள். மதங்க சூளாமணி 1926 ல் எழுதி அச்சியற்றியுள்ளார். நாடகத்திற்கு இலக்கணம் வகுக்கின்றார், அகத்தியர்.

இயலிசை யுடன்பா வனையலங் காரம்
தான மிரதந் தழைப்பன[1] நாடகம்.

மதிவாணர் செய்தது போல்.

இசைத்தமிழும் கற்றவர், விபுலானந்த அடிகளார். இசைத்தமிழில் வல்லவர் தஞ்சாவூர் மக்கள், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து தமிழ்த்துறைப் பேராசிரியராக இருந்த காலத்திலே, இசைப்பகுதிக் கல்வி முறையினையும் மேற்பார்வையிடும் கடமை ஏற்படலாயிற்று. தஞ்சைத் திருவாளர் க. பொன்னையா பிள்ளையவர்கள் சங்கீதத் தலைவராக இருந்தனர்[2]. கருநாடக சங்கீதத்தைக் கேட்டறிந்தேன்.

இவ்வகையிற் தோன்றியது யாழ்நூல். தாயாகிய கண்ணகையைப் போற்று முகத்தான் இளங்கோ அடிகள் கூறிய கூற்றுமுறையில் வாழ்த்தி வணங்குகிறார். எழிசைச் சொற்களை முதற் சொற்களைப் பெய்து தெய்வ வணக்கங் கூறுகின்றார்.

யாழ் நூல் பாராட்டுக்குரிய நூல் என்று பலர் காட்டுகிறார். பாராட்டுக்குரியவற்றை வகை செய்து காட்டுவதும்

i) அரங்கேற்று காதை: யாழ் ஆசிரியன் அமைதி கூறு 25 அடிகளுக்கு இயைந்த விரிவுரையாக யாழ்நூல் அமைந்துகிடக்கிறது.

"மேலது உழை இளி கீழது கைக்கிளை அரங்கே......" 8? ம அடி

ii) சிலப்பதிகாரத்து இசை வளர்ச்சியைக் குறிப்பது, யாழ்நூல்.

iii) சிலப்பதிகாரத்து இசையைக் காட்ட

அ. பரிபாடல்
ஆ. கல்லாடம்
இ. தொல்காப்பியம்
ஈ. சீவகசிந்தாமணி
உ. புறநானூறு
ஊ. பிங்கலநிகண்டு
எ. தொன்னூல் விளக்கம்
ஏ. நற்றிணை
ஐ. பத்துப்பாட்டு
ஒ. மணிமேகலை முதலியன.

iv) யாழ்நூல் என்றபடியால்

அ. பேரியாழ்
ஆ. சீறியாழ்
இ. வில்யாழ்
} கடைச்சங்கம்

க. சகோடயாழ்
உ. மகரயாழ்
ா. செங்கோட்டியாழ்
} சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, சீவகசிந்தாமணி

v) பாலை என்னுஞ் சொல் வழக்கு - பாலை பல்வேறு பொருள்கள்.

vi) தெய்வஞ் சுட்டிய வாரப்பாடல் தேவாரம் எனக் கொள்ளலாம்.

vii) தார நரம்பே முதலிற் தோன்றிய தென்பது பழந்தமிழிசை நாற்றுணிபு "(3)பொற்புடைத் தளராத் தாரம்" - சிலப் : அரங்: அடி 75

viii) யாழ்க் கருவிக்கும் வீணைக்கருவிக்கும் இடையே உள்ள வேறுபாடுந் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

---

1. வாசகப்பா என்னும் நாடகம் கடலோர மக்கள் நடிப்பார்கள், வீரமாமுனிவர். வாசகப்பாவும் நாடகத்திற்கும் அகத்தியர் இலக்கணம் வகுத்தார்.

   ஆசிரியப்பா கலந்த வாசகம்
   வாசகப் பாவென வழுத்தினர் புலவர்.

2. கருநாடக சங்கீதமென எழுதுகின்றார் விபுலானந்த சுவாமிகள் கர்நாடக சங்கீதம் எனப் பிழையாக எழுதுகிறார்கள்.

(3) இப்படி, சுத்துவக்கும் இன்பம் பெற்றதாதலின் தாரத்தைப் "பொற்புடைத்தாரம்" என அடிகள் கொண்டாடினார்.

சிலப்பதிகாரத்து இசைத்தமிழ் டாக்டர் எஸ். இராமநாதன் 1981, பக்: 53

நாடகத் தமிழும் - மதங்க சூளாமணி - இசைத்தமிழும் - யாழ்நூல் - ஒழிந்த இயற்ற மிழைப் பார்ப்போம். 1942ல் என்று நினைக் கிறேன். மதுரைமாநகரம் பொலிந்து குலுங் கியது. இயற்றமிழ் மகாநாட்டிற்கு விபுலா னந்த அடிகளார் தலைமை தாங்குகிறார். குமரகுருபரற் பாட்டினை - தொடுக்கும்..... பாடுகின்றார். பரவசப்பட்ட நிலையில் மக் கள் தென்படுகிறார்கள். யாழ் நூலிலே முகப் பில் சுவாமி படம் இருக்கிறது. பொலிந்த தோற்றம்; கண்கள் பிரகாசம்; வட்டமுகம்; குறுமுனிவர் போல் நிற்கின்றார்; இளங்கோ அடிகள் வடிவம்.

தமிழ்த் தன்மை நுவல்கிறார். உயர் தனிச் செந்தமிழ் உச்சரிக்கின்றார். உயர்ந் தது, இறைவன்போல. உண்மையான பொரு ளுக்கு அழகு, நன்மை, செம்மை இருக்கத் தான் செய்யும். இறைவன் உண்மையுள்ள வல். அழகு, நன்மை, செம்மை - Bueaty, Goodness, Truth உன்னத தன்மையுள்ளவன். அது போல தமிழும்.

தமிழில், கட்டுரைகள், செய்யுள்கள் பாடியிருக்கின்றார். எத்தனையோ பேச்சுக்கள் பேசியிருக்கின்றார்கள். இவையாவும் இயற்ற மிழ் என்பது புலப்படும். இயல்பிருக்கும் வரை இயன்ற மட்டும் முத்தமிழ்ச் சேவை, பணி, தொண்டு செய்திருக்கின்றார்.

இவ்வகையில் முயன்ற விபுலாநந்த அடி கள் முத்தமிழுங் கற்றுத் தேறிய மூதறிஞர். முழுக்க முழுக்க இயல், இசை, நாடகம் என் னும் இலக்கணங்கள் - பன்னிரண்டு - எல்லாம் படித்திருக்கிறார். உபயோகஞ் செய்திருக் கின்றார். பிரயோகப்படுத்தியிருக்கிறார்.

முத்தமிழ் வித்தகர், விபுலாநந்த சுவாமி வழுத்துவோமாக.

---

## வாழ்த்துகிறோம்

நாடறிந்த தமிழறிஞரும், எமது கலாசாலை
முன்னாள் விரிவுரையாளருமான
இலக்கியச் செம்மல், மகாவித்துவான்

## எவ். எக்ஸ். சி. நடராசா

அவர்கள்
கடந்த தேசிய வீரர் தினத்தன்று (22 - 5 - 92)
அதிமேதகு ஜனாதிபதி அவர்களால்

## கலாசூரி

விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்,
அன்னாரின் தமிழ்ப்பணி இனிதே தொடர எமது
நல்வாழ்த்துக்கள்.

முத்தமிழ் மன்றம்.

# விட்டபணி தொடர்வது யார்?

கவிஞர் செ. குணரத்தினம்

''தமிழ் வளர்ப்பேன்!'' என்று மார்பு
தட்டாமல் தமிழ் வளர்த்தான்!
எமதுதமிழ் இசைவளர
எஞ்ஞான்றும் அவனுழைத்தான்!

''புதுமை செய்வேன்!'' என்று வீணாய்ப்
புலம்பாமல் கவிபடைத்தான்!
பதுமையென அவனிருந்து
பார்போற்றும் பணிகள்செய்தான்!

''பலமொழிகள் தெரியுமென்று
பதறாமல் படித்துயர்ந்தான்!
''கலையில் வல்லோன்!'' என்று தன்னை
காட்டாமல் கலைவளர்த்தான்!

வயதுவர முன்பு ஞானம்
வந்ததென்ற பெருமையதன்
மயக்கமின்றி, மனிதகுலம்
மாண்புறவே சேவைசெய்தான்!

யாழிசையில் அவன் கலக்க
யாழ்நூலை ஆக்கிவைத்தான்!
தோள்களிலே காவி போர்த்து
துறவறத்தில் மேன்மை கண்டான்!

பெற்றவரும் மற்றவரும்
பெருமையுற வாழ்ந்திருந்தான்!
கற்றவரும் கல்லாதோரும்
காமுறவே புகழெடுத்தான்!

மட்டுநகர் பிறந்த தென்றல்!
மாணிக்கத் திருவிளக்கு!
வித்தகனாம் விபுலாநந்தன்
விட்டபணி தொடர்வது யார்?

# விபுலாநந்த அடிகளாரின் கல்வி ஒழுங்கு

திரு. க. கணபதிப்பிள்ளை
P. A. F.R.G.S.

தனது தாயகமாகிய மட்டக்களப்பினை முன்னேற்ற வேண்டும் என்ற சிந்தனையில் ஈடுபாடுடையவராயிருந்தவர் விபுலாநந்த அடிகளாரவர்கள். அவர் பிறந்தது மட்டக்களப்பு மண்ணில். அது வளமுற்றுள்ள மண். அங்கு நீர் வளமும், நிலவளமும் உண்டு. நீரும் நிலனும், நிலம் பொதியும் நெற்கட்டும் அங்கு உண்டு. இவையனைத்தும் ஒரு நாட்டில் பெறப்படுவனவாகில், அந்நாட்டிற்கு வேறெவைதான் தேவை? மக்கள் வேண்டும்; புகழ் பெற்றுள்ள மக்கள் வாழ்வதற்கான உள இணைப்புகள் வேண்டும். பெருவாழ்வு வேண்டும். குடியிருப்பதற்கு முறையாக அமைக்கப்பட்டுள்ள குடியிருப்புக்கள்: கிராமப்புறங்கள் தேவை. அவற்றில் வதிந்து வரும் மக்களுக்கு பேரும் புகழும், புத்திசாலித்தனமும், தெள்ளிய எண்ணமும், சலியாத உழைப்பும், பெருகிக் கொண்டே போய்க் கொண்டிருக்கும் பொருள் நிறைவும் வேண்டும். மக்கள் ஒருவரோடொருவர் நல்லிணக்கங் கொண்டு வாழப் பழகிக் கொண்டவர்களாகவும் இருத்தல் அத்தியாவசியம்: அதுவே சமூகப் பிணைப்பு: சமூக உறவு.

மக்களின் உளப்பாங்கு வளர்ச்சியுடன் கிராம வளர்ச்சி இணைக்கப்பட்டுள்ளதாயிருத்தல் நலம். அவ்வாறமைந்திருந்தால் மேலும் மேலும் சமூக விருத்திக்கு இடமுண்டு. வாழ்க்கையின் சிகரத்தினையே அடைந்து விடலாம்: எண்ணங்கள் சிந்தனைகள் உளவாக்கங்கள் நலம்பெற அமையப் பெறின், வாழ்க்கையின் முதற்படிக்கும் இறுதிப்படிக்கும் உறுதியான இணைப்பு அமைக்கப்படும். அவ்வுறவே கல்வியின் முழுமையான நோக்கமாகும்.

எந்த அமைப்புக்கும் இணைப்புக்கும் காலப் பொருத்தம் இருத்தல் வேண்டும்; இடப் பொருத்தமும் இருத்தல் வேண்டும். கல்வியோ பொருளாதாரமோ நாட்டாண்மையோ கால இடப் பொருத்தமில்லாது நடைபெற இயலாது. முற்றான சிந்தனையில்லாத எவ்வாக்கமும், எத்தனமும், சித்தி எய்துதல் அசாத்தியம். எனவே, விபுலாநந்த அடிகளாரின் கல்வி ஒழுங்கில் அவர் சிந்தனையில் கொண்டுள்ள அம்சங்களாவன: ஊக்கங் கொள்ளுதல், எண்ணித்துணிதல், கருமம் மேற் கொள்ளல் என்பனவாம்.

இப்பூவுலகில் ஜெனித்த நாள் முதல் ஒரு குழந்தையானது கற்கத் தொடங்கி விடுகின்றது. பல்வேறு இணக்கங்களைக் கொண்டுள்ள குழந்தை: கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து பெறவல்ல உலக விவகாரங்களத்தனையையும் உற்றுணர்ந்து தெள்ளிய புலமையினைப் பெற்றுவிட எத்தனங்கள் பலவற்றினைச் செய்கின்றது. அதன் உலகியலறிவு: முதல் ஐந்தாவது பராயத்துக்குள் தானே பெருக்கெடுத்து விடுகின்றது. பியாஜே என்னும் ஞானி இக்கருத்தினை வெளியிட்டுள்ளான் - தன் சளையா உழைப்பின் காரணமாக!

எனவே கற்கை நன்றே! கற்கை நன்றே! பிச்சை புகினும் கற்கை நன்றே! என்னும் அதி வீரராமனின் முதுமொழி உறுதி பெறுகின்றது. நீ எந்த நிலையில் இருந்தாலும் கற்பதை கை நழுவ விட்டு விடாதே! அதை உனது வாழ்க்கையின் விரதமாகக் கொள்வாயாக! அத்துடன் உணவையும் தேவையான அளவில் உண்டாக்கிக் கொள்வாயாக! அதுவே உனது விரதமாகும். வாழ்க்கை உறுதிப்பாடு அது.

'அன்னம் பகு குர்வித தத் விரதம்'

இருசெல்வங்கள் மனிதனுக்கு இன்றியமையாதனவாம். கல்விச் செல்வம் ஒன்று, உணவுச் செல்வம் மற்றது. பசியால் எக்கிப் போன வயிற்றில் படிப்பு ஏறுமா?

நாம் நமது வாழ்க்கைத் திட்டத்தினை திட்டவட்டமாக அமைத்துக்கொள்ளக் கட

மைப் பாடுடையோம். அவ்விடயத்தில் நாம் எத்துணை முயற்சிதான் எடுத்தாலும் நமது நாற்பதாவது பராயம் வரை அரைப்பகுதி வாழ்க்கைத்திட்ட வட்டத்தினைத்தான் நாம் அமைத்துக் கொள்ள முடியும். இது இரேக்க ஞானியாகிய பிளேட்டோவின் சிந்தனைச் சிகரம். இதற்கு மேல் தெளிவான எண்ணம் இல்லை.

எனவே முடிவு எவ்வாறு? நாற்பதாவது பராயம் வரை கல்! படித்துக்கொள்! சிந்தனை செய்! தெளிவான எண்ணங்களை ஆக்கிக் கொள்! உசாவுக! ஊக்கங்கொண்டு உழைக் குக! நல்லிணக்கங்களை நலமுற உணர்ந்து கொள்! எனினும் தகாத முடிவுகளைக் கட்டி எழுப்பி விடாதே! அப்படிச் செய்வதற்கு இன் னுங்காலமுளது. தீர அனுபவித்த பின்னரே முடிவுகளைக் கொள்ளலாம். இளம் பராயத் தில் பெற்றுவிட்ட முடிவு குட்டியாட்டின் ஊனத்தினைப் போன்றது. அது வ ழுவழுப்புப் போகாதது.

'பிறௌணிங்' ஞானியின் கூற்றினைச் கவனிப்போமாக:

'A whole I planned
Youth shows but half : trust
God; see all, nor be afraid.
- R. Browning -

நான் ஒரு திட்டமிட்டேன்:
எனது இளமையில் அதில் பாதிதான்
தென்பட்டது - எனவே
இறை இணக்கம் கொள்! அஞ்சாதே,
முழுமையும் ஜெனிக்கும் நாள் முற்றுப் பெறும் முதிர்வு பெற்றபின்!

இவ்வொழுங்கில்தான் விபுலாநந்த அடி களாரவர்கள் தமது கல்வித்திட்டத்தினை சமைத்துக் கொண்டார்கள்.

## கல்வியின் முக்கியத்துவம்

ஒரு மைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்கு
எழுமையு மேமாப் புடைத்து - திருக்குறள்

உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்ற னன்றே. - புறநானூறு

நல்லம்யாம் என்னும் - நெஞ்சத்து நடுவு நிலைமையால்
கல்வி யழகே யழகு. - நாலடியார்

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே. - வெற்றிவேற்கை

ஓதுவது ஒழியேல் - ஆத்திசூடி

கைப் பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
- கொன்றை வேந்தன்

அறம் பொருள் இன்ப வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும் - உறங்கவலொன்று
உற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை. - நீதிநெறிவிளக்கம்

# அன்பு, அறிவு, ஆனந்தம் இம்மூன்றின் பூரண வடிவமே சுவாமி விபுலாநந்தர்

திரு. த. சகாதேவராஜா
விஞ்ஞானம்
(விடுகையாண்டு)

"புத்தகாசிரியனாய் புகழ்பெறு யாழ் நூலாக்கி
பத்திராசிரியனாயும் பல்கலைக் கழகம் தன்னில்
வித்தகாசிரியனாயும் விளங்கிய விபுலாநந்தன்
செத்திலன் அமரனாகி நித்தியம் வாழ்கின்றானே"

தென்னிலங்கை குணபாலிற் காரேறு மூதூர் காரைதீவின் மாதவத்தின் பேறாக திக்கெட்டும் புகழ் விளங்கத் தோன்றியவர், தமிழ் காத்த மறைமுனி, தன்னிகரற்ற சமரச ஞானி, பாவாணர் போற்றும் பாவலன், தென்முனைக் கதிர், இளங்கோவின் மறு அவதாரம், கலியுக அகத்தியர், ஈழம் முதல் இலங்கை வரை கொடிகட்டிமிசைத் தமிழன், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார். அவர் ஒரு கலைஞர், துறவி, அறிஞர். இம்மூன்றும் சேர்ந்தவர் சுவாமி அடிகளார் காரைதீவில் (ஈழத்தில்) பிறந்தாலும் தமிழ் நாட்டிலும் வட இந்தியாவிலும் வாழ்ந்தவர். இதனாலும் விபுலாநந்தரின் ஆளுமைப் பின்னணிகளான மரபு வழித் தமிழ் கல்வி, ஆங்கிலக் கல்வி, விஞ்ஞான கணித அறிவு, வடமொழி அறிவு, இராம கிருஷ்ண மடத் தொடர்பு, பன்மொழியறிவு போன்றவற்றினாலும் அடிகளார் தமிழுக்கு ஏன் இருள் படிந்து கிடந்த இவ்வுலகிற்கு செயற்கரிய அரிய பெரிய செயல்களை அளித்தவர். அவர் தம் வாழ்வே மானிடர் தம் வாழ்விற்கு ஒரு வரைவிலக்கணம். தேனூறும் விபுலாநந்தரின் செந்தமிழ் உரைகளுக்கு மக்கள் யாவரும் நாவூறி நின்றனர். கலைவாணியின் பூரண கடாட்சம் பெற்ற ஒருவருக்குத்தான் மிக நுண்மை செறிந்த இவ்விலக்கண வரைபுகள் புலப்படும்.

"நவிலும் தோறும் இனிமை பயக்கும் நூல் நயம் போலவும் பயிலும் தோறும் இனிமை பயக்கும் பண்புடையாளர் தொடர்பு" போலவும் அடிகளாருக்கிருந்த கற்றவர் தொடர்பு பல துறைகளில் கைதேர வைத்தது. மாறாக இல்லறவியல் வெறுத்தது. அகம், புறம் எனும் இருதிணை வகுப்பும் இயலிசை நாடகத் தமிழ் எனும் மூவகை மொழி பகுப்புங் கொண்டு உலகில் எம்மொழியிலும் இல்லாத தனிச் சிறப்புடன் திகழ்வது தமிழ் மொழி. இந்த மொழி புலவர்களாற் காலத்திற்குக் காலம் ஆராய்ந்து தக்கதென காணப்படாதவை நீக்கப்பட்டு, தகுதியானவை என தோன்றியவை ஏற்கப்பட்டு வளர்ந்த ஒரு செம்மொழி.

சமண, பௌத்த மதங்களின் வருகையால் இசையும் கூத்தும் அதற்கான இலக்கண இலக்கியங்களும் அழித்தொழிக்கப்பட்டன. இதனால் பல இசை நூல்களும் மறைந்து போயின. 'பெருநாரை, பெருங்குருகு, மாபூத புராணம், வியாளமாலை போன்ற அரிய தமிழிசை நூல்கள் இருந்த இடம் தெரியாமற் போயின. அதனை ஈடு செய்யவே அடிகளார் இவ்வுலகில் அவதரித்தார் போலும். சங்க இலக்கியங்களையும், சிலப்பதிகாரத்தையும், தேவாரத்தையும் ஆதாரமாகக் கொண்டு தமிழரின் இசைப் பாரம்பரியத்தை தொடர்ச்சியாக இனம் காண முயல்கிறார். அடிகளார் பேராசிரியராக இருந்த காலை சிலப்பதிகாரத்து அரங்கேற்றக் காதையில் யாழாசிரியரின் அமைதி கூறும் வரிகள் விபுலாநந்தரின் உள்ளக் கமலத்திலே யாழ்பற்றிய ஆராய்ச்சிகள் செய்ய

விழைய வித்திட்டன. அதுவே ஆலவிருட்சமென வளர்ந்தது. யாழில் பல வகைகளுள. நாரத முனிவரின் 'மகதியாழ்', வாணியின் 'வீணை', மாதவி மீட்டிய 'சகோடயாழ்', பேரியாழ், மகரயாழ், முளரியாழ், செங்கோட்டுயாழ், சீறியாழ், வில்யாழ் என்று பற்பல யாழ் நூல் பாயிரவியல் தொடக்கம் ஒழிபியல் வரை ஏழு இயல்களைக் கொண்டது.

இசைக்குக் கிடைத்த சொத்தாகிய யாழ் நூல் 05. 06. 1947 இல் திருக்கொள்ளம் பூதூரில் ஆளுடைய பிள்ளையார் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது. யாழ் நாலுக்கு முகவுரை எழுதிய நீ. கந்தசாமி

'இன்னிசைதேர் யாழ்நூலிசை பரப்பினான் புலமை
பன்னுவிபு லாநந்த மாமுனிவன் - தொன்மை
தமிழ்ப்புலமை மல்கத் தமிழ்வளர்த்து வாழ்க
இமிழ்கடல் சூழ் ஞாலத் தினிது'

என்றார்.

பாயிரவியலில் நோக்கம் கூறிய அடிகளார் யாழுறுப்பியலில் பண்டைத் தமிழின் இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு யாழ்களை மீளுருவாக்கஞ் செய்கின்றார். பாலைத் திரிபியலில் செம்பாலை, படுமலைப் பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, விளரிப் பாலை பற்றிக் கூறுகிறார். பண்ணியலில் பண்களைப் பற்றி பிங்கலந்தை சேந்தன், திவாகரம், சூடாமணி, நிகண்டு ஆகிய நூல்களிலிருந்து சூத்திரங்கள் காட்டப்படுகின்றன. தேவாரவியலில் 4ம் திருமுறைக்கு யாப்பமைதி கூறப்படுகிறது. இந்தளம் தக்க ராகம் தக்கேசி, காந்தாரம், குறிஞ்சியாகிய பண்கள் கூறப்படுகின்றன. ஒழிபியலில் கணிதத்திறனும், இசைக்குமுள்ள தொடர்பு விளக்கப்படுகிறது. இதில் குடுமியாமலை இசைக் கல்வெட்டு பற்றியும் தமிழிசையின் சுருக்கமான வரலாறும் கூறப்படுகின்றன. சேர்க்கையில் நாடக சூத்திரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

யாழ் நூலைப் புரிந்து கொள்ள இசையறிவு, கணித அறிவு, தமிழ் அறி தேவைப்படற்பாலது. இங்கு சுவாமியின் தமிழ் புலமையும், ஆங்கில, விஞ்ஞான, கணித சங்கீத புலமையும் சங்கமிப்பதனைக் காணலாம். ஆரம்பத்தில் சித்தாந்தியாக இருந்த விபுலாநந்தர் வேதாந்தியாக பிற்காலத்தில் தன்னை மாற்றிக் கொள்கிறார். பழமையும் புதுமையும் அவரில் இணைகிறது. செந்தமிழ் மரபே தனிமரபு, பாண்டியன் தமிழே தமிழ் என்றுரைத்த அவர் பேச்சு தமிழையும் வரவேற்கிறார். அதே வேளை ஆங்கிலத்தையும் அரவணைக்கத் தவறவில்லை.

1943 ல் எழுதிய கட்டுரையிலிருந்து

''பழமையும் புதுமையும், துவைதமும், அத்வைதமும், பௌதீக விஞ்ஞானமும் மெய்ஞானக் காட்சியும், மேற்றிசையறிவும் கீழ்திசைச் சமயமும், மனமொடுங்கிய தியான நிலையும், மன்பதைக்குத் தொண்டு புரிதலும் சமசரப்பட வேண்டிய காலமிது'' என்று கூறியது ஓர் ஆருடமே. இவர் பாரதியின் கீற்று போல்வார். பாரதிதாசனின் பாடலான

''தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத் தமிழ் இன்பத்
தமிழ் எங்கள் உயிருக்கு நேர்.''

என்பதை சிரமேற் கொண்டு பணியாற்றினார், ஒழுகினார் என்றால் மிகையாகாது. இசைத் தமிழுக்கு மட்டுமல்ல நாடகத் தமிழையும் பருகத் தவறவில்லை. மில்டன், சேக்ஸ்பியர், வாஸ்டர், ஷெல்லி, கீட்ஸ் ஆகிய ஆங்கிலப் புலவர்களையும், நோர்வேப் புலவர் இப்சனையும், வங்கப் புலவர் தாகூரையும் தம் வசமாக்கிக் கொண்ட இவர் நாடகத் தமிழுக்கு மதங்க சூளாமணியைப் படைத்துத் தந்தார். இஃது உறுப்பியல், எடுத்துக்காட்டியல், ஒழிபியல் என மூன்று வகையில் எழுதப் பெற்றது. இஃது றோமியோ யூலியற், மக்வெத், யூலியசீசர், குவெல்த்நைற், அஸ் யூ லைக்கிற், மேர்சன்ற் ஒப் வெனிஸ் போன்ற சேக்ஸ்பியரின் 12 நாடகங்களைத் தழுவி எழுதப் பெற்றது. அவர் ஆருட விற்பன்னர். தமிழிலக்கணம், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை பதினெண் கீழ் கணக்கு கற்றுத் தேர்ந்தவர்.

இவர் அறிவிலே ஆனந்தமானவர். இவர் பேராசிரியராக இருந்தாரென்றால் உலகமுதல் நிலை பெற்றே திகழ்ந்தார். ஏனெனில் அடிக

ளாரின் காலத்திலோ அதற்கு முன்போ ஏராளமான தமிழறிஞர்கள் வாழ்ந்தனர் என்பதை மறுப்பதற்கில்லை. அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஏற்ற தமிழ்த் துறைப் பேராசிரியர் என்னும் பதவியை எவரும் எப்பல்கலைக் கழகத்திலும் ஏற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ரா. பி சேதுப்பிள்ளை உதவி விரிவுரையாளர், 1944 ல் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியரானார். திரு. இராசவையங்கார் 1944ல் திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகப் பேராசிரியரானார்.

திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் தமிழ்த்துறை ஆசிரியராகவும் டாக்டர் மா. இராசமாணிக்கனார் தமிழ்த் துறைத் தலைவராகவும் இருந்தனர். எனவே அக்காலத்தில் இந்தியாவிலோ, இலங்கையிலோ ஏன் உலகிலோ தமிழ்த் துறைக்கென பேராசிரியர் பதவி இல்லாத நிலையில் முதல் முறையாக சுவாமி விபுலாநந்தர் இவ்வரிய பதவியை ஏற்றதன் பயனாக உலகத்தில் முத்தமிழ்த்துறைப் பேராசிரியனாக விளங்கினாரென்றால் அது எமக்குப் பெருமையை அளிக்கின்றது. அடிகளாரிடம் கல்வி பயின்ற மாணாக்கர்களே இன்று தமிழ்த்துறைத் தலைவர்களாகவும் பேராசிரியர்களாகவும் மிளிர்கின்றனர். இதனால் விபுலாநந்தர் பரம்பரை தொடர்கின்றது.

1931 ஆடிமாதத்தில் முதல் தமிழ் துறைப் பேராசிரியர் எனும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பதவியினைப் பெற்றதன் மூலம் கிழக்கிலங்கை காரைதீவை உலக வரலாற்றுடன் இணைத்தது மட்டுமன்றி தமிழ் வரலாற்றில் முதற் பேராசிரியர் என்ற உன்னத அந்தஸ்த்தையும் தேடிக்கொண்டார். அனைத்திலும் சமாசம் கண்டு நல்லன கொள்ளும் இவர் போக்கினை இலக்கியத்திலும் காண்கின்றோம். புதுமை, பழமை, தமிழ், ஆங்கிலம், நன்மை, தீமை சகலவற்றையும் கலந்து நன்மை பயப்பனவற்றை ஏற்று ஏற்காதவற்றை விலக்கிவிடுதல் அவர்தம் பண்பாகும்.

ஒட்டுமொத்தமாக நோக்கின் அடிகளார் தமிழ் கூறு நல்லுலகிற்குக் கிடைத்த அரும் பெருஞ் சொத்தாகும். தனது நாமத்திற்கேற்ப அன்பு, அறிவு, ஆனந்தம் மூன்றும் சேர்ந்து இயங்கியவர் அடிகளார். அவர்தம் பணி சிறக்க நாமனைவரும் ஒன்று சேர்வோமாக.

**வாழ்க விபுலாநந்தர் நாமம்! வளர்க அவர்தம் பணி!!**


**உசாத்துணை நூல்கள்**

1. நினைவுப் பேருரை - 1
2. தொண்டன்
3. கனடா இதழ்
4. ''விபுலானந்தா'' ஆங்கில நூல்


---

மனித சக்தி அவன் மனதிலே தான் உள்ளது. வெளியில் ஒன்றுமில்லை, மனதில் ஏதாயினும் ஒரு உயர்நத நோக்கம் இருக்க வேண்டும். வாழ்க்கை அதை நிறை வேற்றிச் செல்ல வேண்டும்.

பயனில்லாத செயலும், சிந்தனையும், விவேகமற்று நடப்பதும். ஆத்துமத் துரோகமாகும்

அன்பே வெற்றியடையும். அதை எதுவும் வெல்ல முடியாது. ஆனால் உண்மையான அன்புக்குத்தான் அந்தவல்லமை.

**சுவாமி விபுலாநந்தர்.**

# முத்தமிழ் மன்றம் கண்ட முத்தமிழ் துறவியின் முத்திரு நாள் விழா

மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையின் 47 வருட வரலாற்றுப் பலகணியிலே பொன்னெழுத்துக்களால் பதிக்கப்பட வேண்டிய மூன்று தினங்களுண்டு. அவை சுவாமி அவர்களின் நூற்றாண்டு விழாவை மூன்று தினங்களில் முதன் முதலாகக் கொண்டாடிய 1992 பங்குனித் திங்கள் 26, 27, 28ம் திகதிகளாம். இச்செயல் 'முத்தமிழ் வித்தகர்' என்ற அவர் புகழ் பெயருக்குப் பொருத்தமுடையதாய் அமைந்திருந்தது. ஈழக் கரிகாலன், நவீன அகத்தியர், முத்தமிழ் வித்தகன் எனப் பலவாறு போற்றப்படும் சுவாமி விபுலாநந்தரின் நூற்றாண்டு விழாவை ஏற்பாடு செய்த எமது கலாசாலை முத்தமிழ் மன்றமானது இவ் விழாவிற்கு முத்தாய்ப்பு வைத்தாற் போல் அடிகளாரின் திருவுருவச் சிலையையும் முதல்நாளே திறந்தும் வைத்தது.

இவ் விழாவானது சுப வேளையில் முத்தமிழ் மன்றத் தலைவர் திரு. த. சகாதேவராஜா அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. சிலை திறப்பு நிகழ்ச்சி முதல் நிகழ்வாக இடம் பெற்றது. இதற்கு மதப் பிரமுகர்களாக மட்/இ.கி.மிஷன் தலைவர் சுவாமி ஜீவனானந்தஜீ திருமலை - மட்டு / மறை மாவட்ட ஆயர் அதி வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, மட்டு / பெரிய பள்ளிவாசல் இமாம் அல்ஹாஜ் மௌலவி யூ. எல். எம். ஹாரிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். சுவாமிஜீ சிலையைத் திறந்து வைத்தார். விபுலாநந்தர் ஸ்ரீ இராம கிருஷ்ண மிஷன் சங்கத்துறவி. இது யாவரும் அறிந்தது இவர் சிலையை அதே சங்கத் துறவி ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தஜீ மஹராஜ் அவர்கள் திறந்து வைத்தது முத்தமிழ் மன்றத்துக்கும், ஆசிரிய கலாசாலைக்கும் கிடைத்ததோர் கைங்கரியமாகும். அன்றைய சிறப்புப் பேச்சாளராக கிழக்குப் பல்கலைக் கழக நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி எஸ். மௌனகுரு 'விபுலாநந்தரை ஈர்த்த இலக்கிய நாயகர்கள்' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார். அன்றைய பிரதம விருந்தினராக மட்டு மாவட்ட அரச அதிபர் திரு. ஆர். மோனகுருசாமி அவர்கள் கலந்து சிறப்பித்தார். விழாவிலே ஆசிரிய மாணவர்களின் கோலாட்டம் இடம் பெற்றது. சிலை வடித்த சிற்பி ஜீவம் யோசப்புக்கு பிரதி அதிபர் தி. பொன்னம்பலம் அவர்களால் பொன்னாடை போர்த்தி பொற்கிழியும் வழங்கப்பட்டது.

இரண்டாம் நாள் சிறப்புரையாற்ற காத்தான்குடி ம. ம. வி. கொத்தணி அதிபர் ஜனாப் எம். எம். எம். மஃரூப் கரீம் வருகை தந்திருந்தார். அத்துடன் விரிவுரையாளர் திரு. ந. நடராஜா அவர்களின் சொற்பொழிவும் இடம் பெற்றது. அன்று கவியரங்கு, ஓரங்கநாடகம், கிராமிய நடனம், பாடல் மற்றும் பல கலைப் பரல்கள் பங்கேற்றன. அன்று பிரதம விருந்தினராக கிழக்குப் பல் கலைக்கழக உபவேந்தர் எஸ்.சந்தானம் அவர்கள் (பேராசிரியர்)கலந்து சிறப்பித்தார். கவியரங்கிலே புகழ் பெற்ற கவிஞர் செ. குணரெத்தினமும் கலந்து கொண்டார். கிழக்குப் பல் கலைக்கழகப் பதிவாளர் திரு. சி. நடராஜா அவர்களும் கலந்து சிறப்பித்தார். இறுதி நாள் சிறப்புரை 'விபுலாநந்தர் வரலாற்றில் காணப்படும் ஆய்வுச் சிக்கல்கள்' எனுந் தலைப்பிலே மட்டு புனித மிக்கேல் கல்லூரி முன்னாள் அதிபர் வித்துவான் சா. இ. கமலநாதன் சிறப்புரையாற்றினார். பிரதம விருந்தினராக மட்டு மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. கே. தியாகராஜா கலந்து சிறப்பித்தார். அன்றைய தினம் விவாத அரங்கு, பரத நாட்டியம், வில்லுப் பாட்டு, பாடல் ''கர்ணன் களம்'' எனும் நாட்டுக் கூத்தும் இடம் பெற்றது.

இம் மூன்று நாள் சிறப்பு விழாவிலே முத்தமிழ் மன்ற செயலாளர் திரு. பெ. தணிகாசலம், நிதிச் செயலாளர் திரு. பயஸ் ஆனந்தராஜா, கவிமணி வெளியீட்டுக்குழுத் தலைவர் திரு. கே. ரோமபாதன், செயலா

# சுவாமி விபுலாநந்தர்
## நூற்றாண்டு விழா காட்சிகள்













# மட்டுநகரில் விபுலாநந்தர் நூற்றாண்டு விழா

### இன்று ஆரம்பம்: 3 நாள் நிகழ்ச்சிகள்



(மண்டூர், காரைதீவு நிருபர்கள்)

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் மன்றத்தின் விபுலானந்தர் நூற்றாண்டு விழா இன்று 26 ஆம் திகதி முதல் 3 நாட்களுக்கு கலாசாலை விபுலானந்தர் அரங்கில் கோலாகலமாக நடைபெறும்.

முதல் நாள் நிகழ்ச்சிகளில் கல்லடி இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஜீவானந்தஜி, திருமலை-மட்டுநகர் ஆயர் அதிவணை. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, மட்டக்களப்பு பெரியபள்ளிவாசல் பிரதம இமாம் மௌலவி அல் ஹாஜ் யூ. எல். எம். ஹாரிஸ் ஸலாஹி ஆகியோர் கலந்து கொண்டு அடிகளாரின் திருவுருவச்சிலையைத் திறந்து வைத்து ஆசியுரையாற்றுவார்கள். பிரதம விருந்தினராக அரச அதிபர் ஆர். தியாகராசா ஆகியோர் கலந்துகொள்வர். சிறப்புப் பேச்சாளராக கலாநிதி ... ளர் கே. தியாகராசா ஆகியோர் கலந்துகொள்வர்.

காரைதீவு விபுலானந்தர் ஞாபகார்த்த பணிமன்றத் தலைவர் டாக்டர் எம். பரசுராமன், ஜனாப் எம். எம். மஹ்ருப் கரீம், வித்துவான் சா. இ. கமலநாதன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுவர்.

# சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழா காட்சிகள்

ளர் திரு. எம். சசிதரன், அனுமன்றத் தலைவரும் கர்ணன் களம் நாட்டுக் கூத்து தயாரிப்பாளருமாகிய திரு எஸ். ரவிநாதன், இசைத் துறைத் தலைவி செல்வி. கு. கலைச்செல்வி ஆகியோர் முக்கிய பங்காற்றினர். ஈற்றில் ஒத்துழைப்பு நல்கிய அதிபர், விரிவுரையாளர்கள், மன்றங்கள், பயிற்சி ஆசிரிய ஆசிரியைகள் அனைவருக்கும் நன்றிகள் நவிலப்பட்டது.

இம் மூன்று நாள் விழாவிலும் அடிகளாரின் அரும் பணிகள் எடுத்துரைக்கப்பட்டு அவை போற்றவும் பட்டன. இதன் மூலம் அவரை நேரிலே கண்டது போன்ற ஒரு மன நிறைவு ஏற்பட்டதை ''அவர் அறிவு அனைவருக்கும் பயன்பட வாய்ப்பளித்த முத்தமிழ் மன்றத்தின் தொண்டிற்கு ஆசி'' எனக் கூறிய அனேகரின் உணர்வுகளின் மூலமும், அனைத்து தகவல் தொடர்புச் சாதனங்களின் வெளிப்பாட்டின் மூலமும், கலந்து சிறப்பித்த அதிதிகளின் பாராட்டுகளின் மூலம் புலப்பட்டது.

**தமிழ் விழாக் கண்டோம் - தமிழ்ச் சுவை உண்டோம் - தொண்டு முடிந்து விடவில்லை.**

## விபுலானந்தர் நூற்றாண்டு விழாக்கள்

**மட்டக்களப்பு**

மட்டக்களப்பு விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபையினரின் விழா கடந்த 03-05-92 மட்/வின்சன் மகளிர் கல்லூரியிலும், 04-05-92, மட்/விபுலானந்தர் இசை நடனக் கல்லூரியிலும், 05-05-92 மட்/கல்லடி விபுலானந்தர் மணி மண்டபத்திலும் சிறப்பாக நடைபெற்றது. விழாச்சபைத் தலைவரும், கல்விப் பணிப்பாளருமான திரு. க. தியாகராஜா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவின் இறுதி நாளில் வரலாறு காணாத அலங்கார ஊர்திகளுடன், கூடிய கண்கவர் ஊர்வலம் நகரினூடாக கல்லடி மணிமண்டபத்தை அடைந்ததை எவரும் மறக்க மாட்டார்கள்.

**கொழும்பு**

கொழும்பு விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபையினரின் விழா கடந்த 14-6-92 வெள்ளவத்தை இராமக்கிருஷ்ண மண்டபத்தில் சபைத் தலைவர் திரு. க. செல்வரெத்தினம் தலைமையில் பல அரச அமைச்சர்களின் பிரசன்னத்துடனும், கலை நிகழ்ச்சிகளுடனும் சிறப்பாக நடைபெற்றது.

**மலேசியா**

முன்னாள் அமைச்சரும், தற்போதைய இலங்கைத் தூதுவருமான திரு. செ. இராசதுரை அவர்களின் ஏற்பாட்டில், தலைநகர் கோலாலம்பூரில் ''யாழின் நரம்புகள்'' எனும் தலைப்பில் விபுலானந்தர் நூற்றாண்டு விழா கடந்த 14-6-92இல் இனிதே நடைபெற்றது.

# முத்தமிழ் வித்தகர் விபுலாநந்தரின் வாழ்க்கைக் குறிப்பு

*1892* - மட்/காரைதீவில் அவதரிப்பு.

தாயார் - கண்ணம்மை.

தந்தையார் - சாமித்தம்பி விதானையார்

இளமைப் பெயர் - மயில்வாகனன்.

வித்தியாரம்பம் - நல்லரெத்தினம் ஆசிரியரவர்கள். குஞ்சித்தம்பி ஆசிரியரவர்கள்.

*1901* - கல்முனை, மெதடிஸ்த பாடசாலையில் ஆங்கிலம் பயிலத் தொடங்கினார்.

*1904* - மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய பாடசாலையில் ஆங்கிலம் கற்றார்.

*1906* - மட்டக்களப்பு, அர்ச். மிக்கல் கல்லூரியில் பயின்றார்.

*1908* - கேம்பிரிஜ் சீனியர் பரீட்சையில் சித்தி.

*1909* - மட்டு. அர்ச். மிக்கேல் கல்லூரி ஆசிரியரானார்.

*1911* - தாயார் கண்ணம்மை இறப்பு.

*1912* - கொழும்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இரு வருட பயிற்சி பெற்று சித்தி.

*1915* - அரசினர் பொறியியல் கல்லூரியில் விஞ்ஞானம் பயின்று தேர்ச்சி.

*1916* - மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டிதத் தேர்விலும் சித்தி.

*1920* - பி. எஸ். ஸி (லண்டன்) பரீட்சையில் சித்தி.

*1922* - மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபரானார்.

*1922* - சென்னை, மைலாப்பூர் இராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்து 'பிரபோத சைதன்யர்' பட்டம் பெற்றார். பத்திரிகை ஆசிரியரானார்; 'இராமகிருஷ்ண விஜயம்' (தமிழ்) 'வேதாந்த கேசரி' (ஆங்கிலம்)

*1924* - சித்ரா பூரணையில் 'ஞானோபதேசம்' பெற்று சுவாமி விபுலாநந்தரானார்.

*1925* - காரைதீவு சாரதா வித்தியாலயம், கல்லடி உப்போடை சிவானந்தா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு கல் நாட்டினார். திருகோணமலை ஆங்கில கலாசாலைக்கும் கால்கோளிட்டார்.

*1927* - மகாத்மா காந்தியை வரவேற்றமை.

*1928* - திருகோணமலை ஆங்கில கலாசாலையின் தலைமைப் பொறுப்பேற்றார்.

*1929* - மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலய ம் திறப்பு.

*1931* - அண்ணாமலை பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

*1934* - கரந்தைத் தமிழ்ச் சங்க விழாவிற்கு தலைமை.

*1936* - 'யாழ்ப்பாணம்', 'தமிழிசை', 'சிலப்பதிகார அரங்கேற்றுக்காதை' 'ஏழாம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னரும் இருந்த தமிழிசை', 'பழந்தமிழகத்தின் சிற்பாசிரியர்கள்', 'பரிசனவேதி' பற்றிய சொற்பொழிவுகள் நடத்தியமை.

*1937* - இமயமலைக்கு வடக்கேயுள்ள திருக்கைலாய மலைக்கு யாத்திரை.

*1939* - 'பிரபுத்த பாரத' பத்திரிகை ஆசிரியரானமை.

*1943* - இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக அமர்த்தப்பட்டமை.

*1947* - கும்பகோணத்துக்கடுத்துள்ள திருக்கொள்ளம் பூதூரில் 'யாழ்நூல்' அரங்கேற்றம்.

*1947* - கொழும்பு மாநகரில் வீடு பேறடைந்தார்.

*

அறிவுச் செல்வம் பொருட் செல்வத்தை விடச் சிறந்தது. ஏனெனில் பொருட் செல்வத்தை நாம் காக்க வேண்டும். அறிவுச் செல்வம் நம்மைக் காக்கிறது.

- அலி

# நிவாரணம்

கவிமணி திமிலைத்துமிலன்
(விரிவுரையாளர்)

தம்பி நின்றன் தொழில் மகத்துவம் தனையுணர்ந்து பாரடா
சர்வசீரும் படைக்கவல்ல பிரமன்தானே நீயடா!
கம்பிவேலி போட்டுவைத்தல் பயிரின்காவ லுக்கடா
கையைக்காலைக் கிழித்துக்கொண்டு கதறுதலுக் கல்லடா
எம்பிரானார் கொடுத்துவைத்த பகுத்தறிவிற் செல்லடா
எடுத்துக்காட்டு நின்னையன்றி எவரிங்குண்டு சொல்லடா
நம்பிநின்றன் பின்னர்நிற்கும் பரம்பரையை நினையடா
நாட்களெல்லாம் உயிர்குடிக்க நமன்கைக்கொண்ட கணையடா!

தீயைக்கொண்டு கறியும் சோறும் தினம்சமைத்து உண்ணலாம்
தீக்கொழுத்தி நமக்குநாமே சாவும்உண்டு பண்ணலாம்
நாயைப் பார்த்தும் நன்றிகெட்டு நாம் நடந்து கொள்வதா?
நல்லபாதை இருக்கும்போது முள்ளின்மீது செல்வதா?
போயும் போயும் தீங்கெண்ணாத குரவர்தம்மை இகழ்வதா?
புத்திகெட்டுப் பொழுது போக்கும் போக்கிரியாய்த் திகழ்வதா?
தூயபாதை ஆசிரியத் தொழிலுக்கென்றே உள்ளது
தொடர்ந்துபேணும் நல்லொழுக்கம் உயிரைக்காக்க வல்லது.

பாவம்என்ன என்றுஉன்னுள் பார்த்துணர்ந்து கொள்ளுவாய்
பழியைநீக்கி ஒளிகொழுத்தப் பகட்டுவாழ்க்கை தள்ளுவாய்
தூபமிட்டுக் கலகமூட்டித் தொல்லைதேடல் நல்லதா?
துணைகள்கொண்டு ஒன்றுபட்டு விதியைவெல்லல் வல்லதா?
ஆவதெல்லாம் அன்பினாலே ஆகுமென்று தேடுவாய்
அனைத்துக்கண்ணும் உன்னைப்பார்க்கும் அதனைவிட்டெங் கோடுவாய்?
ஏவலற்று உணர்ந்துசெய்யும் இங்கிதத்தைப் பேணுவாய்
எங்களுக்கு நேர்ந்ததென்ன? எதனால்? உர்ந்து காணுவாய்

ஆண்டுவந்த வெள்ளைப்பூனை அகன்றும் ஐம்ப தாண்டுகள்
அடுத்துவந்த குரங்கின்கையில் நாங்கள் கிள்ளுப் பூண்டுகள்
நீண்டுசெல்லும் காலஓடம் நீந்தும்ரத்த ஆறுகள்!
நிமிடந்தோறும் நூறுநூறு நெருப்பில் ஆக்கைக் கூறுகள்!
பாண்டுமக்க ளோடுமாமன் பகடையாட்டம் நடத்தினான்
பக்கவீட்டுப் பெருமாள்கூடப் பதாகைவந்து உயர்த்தினான்
கூண்டினோடு சொர்க்கம்ஏறும் கொடுமை இங்கு குறைந்ததா?
கொடிய காலன் நிகழ்த்தும் ஆட்டக் குவியல் இங்கு நிறைந்ததா?

தமிழருக்கும் ஒற்றுமைக்கும் தூரம் என்று சொல்கிறார்
சாட்சியாக இன்றுபல்கும் கூட்டம் காட்டி என்கிறார்.
அமிழ்தைஒத்த தாய்க்கு நாங்கள் காட்டும்பாசம் கொஞ்சமா
ஆனபோதும் எங்களுக்குள் பிரிவினைக்குப் பஞ்சமா?
துமிக்கும்சின்னத் துளிகள் சேர்ந்தால் தொடர்ந்துபல்கும் வெள்ளமாம்
துயர்கள்பட்டும் ஒன்றுபடாச் சாதனம்நம் உள்ளமாம்
உமிழ்கிறார்கள் உறைக்கிறதா? நீங்கள் தானே காரணம்!
உத்தமநல் லாசானாகி உதவுதல்நி வாரணம்.

**கவிமணி வெளியீட்டுக் குழுத் தலைவரிடமிருந்து............**

கிழக்கிலங்கைத் தமிழ் இலக்கிய வானிலே நீந்திவரும் நட்சத்திரங்களில் குறிப்பிடத்தக்கவர் கவிமணி திமிலைத்துமிலன் அவர்கள். அவரது, செந் தமிழுள்ளே செம்பொருள் பதிந்த ஆக்கங்களை வெளியிடுவதில் மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலைக் கவிமணி வெளியீட்டுக்குழு பெரும் பங்காற்றி வருகின்றது. *1991* ல் 'மஞ்சு நீ மழை முகில் அல்ல' எனும் இலக்கிய நாவலை வெளியிட்ட இக்குழு, இவ்வருடம் 'முத்தொள்ளாயிரம்' எனும் கவிதை நாடக நூலினை வெளியிடக் காத்திருக்கின்றது.

**கி. ரோமபாதன்.**
தலைவர்
கவிமணி வெளியீட்டுக்குழு

# கல்விக்கான உந்து சக்திகள்

வ. கனகசிங்கம்
கலாசாலை முதல்வர்

பழமைப் பிடியிலிருந்து மெல்ல மெல்ல விலகி நவீன கல்வித் துறையில் காலூன்றி மலர்ந்து வரும் நமது கல்வியமைப்பு குறிப்பிடத்தக்க வகையில், வளர்ச்சி கண்டு வருகின்றதென்றால் அது மிகையாகாது. நமது சமூகம் நவீன சிந்தனையை ஏற்றுக் கொள்ள கல்வியமைப்பில் நல்ல மாற்றங்களைக் கொண்டு வரவேண்டியுள்ளது. ஏனெனில் சமூக, பொருளாதார, கலாசார அமைப்பில் கல்வியின் தாக்கம் மிகப் பெரியதாக விளங்குவதேயாம். கல்வியின் நவீனத்துவத்துக்கும், அதை வளர்த்தெடுக்கும் சமூக நிறுவனங்களுக்கும் இடையில் நெருக்கமான உறவு அமைய வேண்டியது அவசியமாகும். கூறப்போனால் கல்விக்கான உந்து சக்திகளாக இச்சமூக நிறுவனங்கள் விளங்குகின்றனவென்றால் அது மிகையாகாது.

கல்விக்கான திட்டமிடலும் செயற்பாடும் அரசைச் சார்ந்ததாக இருப்பினும் சமூக நிறுவனங்களின் பங்களிப்பும் அவசியமாக உணரப்படுகின்றது. கல்வி நிபுணர்களின் ஆலோசனையும் அனுபவமும் கல்வித் திட்டத்திலும் செயற்பாட்டிலும் முக்கிய பங்கு வகித்த போதிலும் மக்கள் நிறுவனங்களின் பங்களிப்பு கிடைக்காத போது அவை தோல்வியையே தழுவ நேரிடும். கல்வியானது தேக்க நிலைக்கு உட்படாததும் உட்படுத்த முடியாததுமாகும். அது கால ஓட்டத்திற்கு ஏற்ப மாற்றமடைய வேண்டியதுமாகும். அது மட்டுமன்றி கல்விச் சிந்தனையை ஏற்றுக் கொண்ட நாட்டின் சூழ்நிலையும் கல்வியமைப்பினையும் செயற்பாட்டையும் மாற்றியமைத்து விடும் என்பதும் உண்மையாகும். இந்த மாற்றங்களுக்கான விளைவுகளை ஏற்படுத்தும் சாதனங்களாக சமூக நிறுவனங்களைக் கூற முடியும். மக்கள் சமூக நிறுவனங்களுக் கூடாகவே தான் கல்வியை உற்று நோக்குகின்றனர். எனவே சமூக நிறுவனங்கள்தான் கல்விக்கான உந்து சக்திகள் எனக் கூறமுடியும்.

அண்மைக் காலத்தில் ஏற்பட்டு வரும், கல்விக்கான மாற்றங்களும் வளர்ச்சியும், அதன் பின்னடைவுகளும் சமூக நிறுவனங்களின் உந்து சக்தியிலேதான் தங்கியுள்ளன, என்றால் மிகையாகாது. சமூக நிறுவனங்களின் வளர்ச்சி அதன் செயற்படு தன்மை என்பவற்றை ஆராயும் போது இதனை விளங்கிக் கொள்ள முடியும்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், சமய நிறுவனங்கள், பொதுச் சுகாதார மன்றங்கள், வங்கிகள், தபால் அலுவலகங்கள் தகவல் தருனர் நிலையங்கள், தொடர்புச் சாதனங்களின் அமைப்புக்கள், வளர்ந்தோர் கல்வி மன்றங்கள் பழைய மாணவர் சங்கங்கள் போன்ற இன்னோரன்ன நிறுவனங்களே இன்று கல்வியில் பெரும் ஆதிக்கத்தைச் செலுத்தி வருகின்றன இவைகளின் தன்மை, அவை கொண்டுள்ள கொள்கைகள் போன்றவற்றுக் கேற்ப கல்வியை வழி நடத்திச் செல்ல முடியும்.

நாடு தழுவிய ரீதியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் சகல பாடசாலை மட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. இவைகளின் தொழிற்பாடு இடத்துக்கிடம் வேறுபட்டு அமைந்த போதிலும், பாடசாலைக் கல்வியை ஊக்குவிக்கும் பான்மையிலும் இடத்துக்கிடம் வேறுபட்டமைந்தே காணப்படுகின்றன. பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் பொறுப்பும் கடமையும் மிகச் சிறப்பானதென்று கூறமுடியும். எனினும் சில பிரதேசங்களில் இவற்றின் செயற்திறன் குன்றிக் காணப்படுகின்றது.

அரசின் வேண்டுகோளுக்கேற்ப, பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் அமைக்கப்பட்டு இயங்கிய போதிலும் குறிப்பிட்ட பிரதேசங்களில் உள்ள பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேச சங்கங்கள் தொழிற்பாடற்றுக் காணப்படுகின்றன.

கல்வியில் கூடிய பங்களிப்பை வழங்கக்கூடிய இச்சங்கங்கள் செயற்பாடற்ற நிலையில் காணப்படுவது கல்விக்குப் பின்னடைவையே வழங்கும் எனலாம்.

அண்மைக காலங்களில், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை போன்ற மாவட்டங்களில் கல்வியின் தரம் குன்றிக் காணப்படுவதற்கு கல்விக்கான உந்து சக்திகளின் இயக்கத்தன்மை வலு குறைந்து காணப்படுவதே காரணமாகும். அது மட்டுமன்றி ஆசிரியர் பற்றாககுறை, கட்டடத் தளபாடப் பற்றாக்குறை, சீரான நிருவாக சேவை இன்மை போன்ற காரணங்களை எடுத்துக் காட்டுவது இன்று வழமையாகி விட்டது. கல்விப் பின்னடைவுக்குக் காரணம் சிறந்த பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் இயக்கமின்மைதான் எனத் துணிந்து கூற முடியும்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் இயக்கமின்மைக்கு பல காரணங்களை எடுத்துக் காட்ட முடியும். அதிபர்கள், ஆசிரியர்கள் ஆர்வங்காட்டாமை, பெற்றாரின் ஆர்வமின்மை அசமந்த போக்கு விளக்கக் குறைபாடு என்பன அவையாகும். சில பாட சாலை அதிபர்கள்; ஆசிரியர்கள் அக்கறை எடுத்துக் கொண்டபோதிலும், சில பெற்றோர் இச் சங்கங்களின் வலிமை பற்றிச் சிறிதேனும் தெரியாதவர்களாக உள்ளனர். மாணவரின் கல்வியில் ஆர்வமும் விருப்பமும் கொண்ட எந்தப் பெற்றோரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்களாகவே காணப்படுவர்.

பாடசாலை நிறுவனங்களின் சகல வசதிகளையும் அரசுதான் ஏற்படுத்தித் தர வேண்டும் என எதிர்பார்பபது இக் காலகட்டத்திற்குப் பொருந்தாது. இவ்வுண்மையை பல பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் உணர்ந்து கொள்வதில்லை. ஆகவே தான் இச்சங்க அங்கத்தவர்களான பெற்றோர் தமது குழந்தைகளின் எதிர்காலத்தைக் கருத்திலெடுக்க வேண்டும். வெறுமனே அரசையும் ஆசிரியர்களையும் நொந்து கொள்வதில் பயனில்லை. பாடசாலை நிறுவனம் வளர்ச்சியடைவதற்கு பெற்றோர் பல வழிகளிலும் உந்து சக்தியாக விளங்க வேண்டும்.

ஆசிரியர்களைப் பற்றி அடிக்கடி குறை கூறுவதும், அதிபரைச் சாடுவதும், கல்வியை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லாது நேரங்கண்டு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். கல்விப்போதனை, உடற்கல்வி, சமய சார்பான கல்வி, கலாசார பண்பாட்டுக் கல்வி, ஒழுக்கம் சார்ந்த கல்வி, சமூக சார்பானகல்வி போன்ற துறைகளில் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் உதவி செய்ய முடியும்.

இலங்கையில் இளைஞர்கட்கான பல சேவை அமைப்புக்கள் காணப்படுகின்றன. இவற்றின் சேவையை பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பாடசாலைக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும். உடற்பயிற்சி, பத்துயிரளிக்கும் விளையாட்டுக்கள் என்பவற்றை வழங்கும் நிறுவனங்களான, தேசிய விளையாட்டுச் சபை, விளையாட்டு சம்பந்தமான கல்வி, விளையாட்டு ஆராய்ச்சி நிறுவனம், தனியார் விளையாட்டும், புத்துயிரளிக்கும் சங்கங்களும் பாடசாலை அமைப்பிற்கு உதவியளிக்க முடியும்.

சமய சம்பந்தமான கல்வி, பாடக்குறை நிரப்புக்கல்வி, என்பவற்றை வழங்குவதற்காக, பல்வேறு இடங்களிலும், ஞாயிற்றுக் கிழமைப் பள்ளிக் கூடங்கள், போயாதின வகுப்புக்கள், தர்ம பாடசாலைகள். இலங்கை கிறிஸ்தவ இளைஞர் இயக்கம், இஸ்லாமிய அகதிய பாடசாலைகள், கோறான் மட்றாசாஸ், போன்ற அமைப்புக்கள் இளைஞர்களுக்காக சேவைக்குக் காத்திருக்கின்றன. இவற்றை தகுந்த முறையில் பெற்றுக் கொள்வதில் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் உதவ முடியும். பண்பாட்டு அலுவல் திணைக்களம், கலைச் சங்கம், போன்றவற்றிலிருந்து பண்பாடு சார்பான முயற்சிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

விருப்பத்தக்க அளவில் ஒழுக்கம் சார்ந்த பண்புகளை உணர்த்துதல், தலைமை தாங்கும் பயிற்சி, ஒழுக்கப் பயிற்சி, தன்னம்பிக்கை பற்றுறுதி, நேர்மை, முன்னேற்றத்திற்கு அவசியமான சமூக மனோதத்துவ அம்சங்கள் என்பவற்றை வழங்கக் கூடிய இயக்கங்களுடன் தொடர்பைப் பாடசாலைகளுடன் ஏற்படுத்திக் கொடுக்க பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களுக்கு முடியும். சாரணர் இயக்கம், சாரணிகள் இயக்கம், கிறிஸ்தவ வாலிபர் சங்கம், பௌத்த வாலிபர் சங்கம், இஸ்

ஸாமிய வாலிபர் சங்கம், இந்து வாலிபர் சங்கம் போன்றவற்றுடனான தொடர்பையும் பாடசாலையுடன் ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

சமூக முயற்சிகளில் பங்குபற்றும் தன்மையும், சமூகப்படுத்தும் தன்மையும் முன்னேற்ற வல்ல தொடர்புகளும், உறவுகளும் பாடசாலை முன்னேற்றத்துக்கு அவசியம். இவற்றை மகிலசமித்தி, கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சர்வோதய இயக்கம் செஞ்சிலுவைச் சங்கம், சென்ற் ஜோண்ஸ் அம்புலன்ஸ் சங்கம், றோட்டரி சங்கங்கள், சௌக்கியதான இயக்கம், மாதர் சங்கம் போன்ற அமைப்புக்களிலிருந்து பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பாடசாலைக்குப் பெற்றுக் கொடுக்க முடியும்.

இது தவிர தொழிற்பயிற்சி சார்ந்த அமைப்புக்களிலிருந்தும் உதவியைப் பெற்றுக் கொடுக்க முடியும். மரபற்ற வாழ்க்கைத் தொழில் சம்பந்தமான கல்வியும் பயிற்சியும், வாழ்க்கைத் தொழில் சம்பந்தமான வழிகாட்டலும், தொழில் அமர்த்தும் சேவைகளும் பெறுவதற்கு அதனுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும். இளம் பண்ணையாளர் களரிகள், செயல்முறை விவசாயப் பாடசாலைகள், தொழில் இலாகாவால் நடத்தப்படும் தொழிற் பயிற்சி நிலையங்கள், சிறுகைத்தொழில் இலாகாவால் நடாத்தப்படும் தொழிற் பயிற்சி நிலையங்கள், நன்னடத்தைப் பாதுகாவல் குழந்தை பராபரிப்புத் திணைக்களத்தால் இயக்கப்படும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சிப் பாடசாலைகள், தேசிய இளைஞர் சபை, தேசிய பயிலுனர் சபை, இளைஞர் குடியேற்றத் திட்டங்கள், பகுதி அபிவிருத்திச் சபைகள் என்பன போன்ற அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு அவற்றின் உதவியைப் பாடசாலைக்குப் பெற்றுக் கொடுக்க முடியும்.

பொதுவாக, காலத்துக்கும், இடத்துக்கும் வசதிக்கும் ஏற்ப பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் பாடசாலைக்கு உதவமுடியும். இதனாற்றான் கல்விக்கான உந்து சக்தியின் முதல்தரமான நிறுவனங்களாகப் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் விளங்குகின்றன.

இன்று நகரங்களிலும் சரி, கிராமங்களி சரி, விளையாட்டுக்கழகங்கள் பல்வேறு நாமங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன. இவை பாடசாலை அமைப்புடன் தொடர்பு கொண்டு வகுப்பு வயது என்பவற்றுக்கேற்ப தேசிய, சர்வதேசிய விளையாட்டுக்களைக் கற்பிக்க முடியும். குழந்தைகளின் உடலுறுதி, மனவுறுதி என்பன வளர்ச்சியடைய இது பெரிதும் உதவும்.

ஒழுக்கவளர்ச்சி இன்று குன்றிக் காணப்படுவது பெருங்குறைபாடான காரியமாகும். ஒழுக்கம் வீட்டிலேதான் ஆரம்பமாகின்றது எனக் கல்விமான்கள் கூறுயபோதிலும், பாடசாலைகள் இவற்றில் பெரும் பணியாற்ற முடியும் ஆயினும் பாடசாலைமட்டுமல்லாது சமய நிறுவனங்களும் இவ்வொழுக்கவிருத்திக்கு உந்துசக்தியாக விளங்கமுடியும் சிறுபராயந் தொட்டு தத்தமது சமய அனுட்டானங்களைக் கைக்கொள்வதற்கு ஊக்கமளிப்பது அவசியம். மிகக் குறுகிய காலவேளையில் இப்பாரிய கடமையைப் பாடசாலை மட்டும் செய்து முடிக்க முடியாது. இதற்கு உந்து சக்தியாக சமய நிறுவனங்களும் விளங்கலாம். குறை நிரப்புப் பாடங்களை ஓய்வு நேரங்களில் கற்பிப்பதன் மூலம் இப்பணியை சமய நிறுவனங்கள் நிறைவேற்றலாம் மாணவரது மனித நேயத்தைத் தூண்டிவிடத்தக்க வகையில் சகல சமய நிறுவனங்களும் பாடசாலைகளுடன் தொடர்பு கொண்டு வழிகாட்ட முடியும்.

குழந்தைகளுக்கான சுகவாழ்வு முக்கியமானதாகும். பாடசாலை மட்டுமல்லாது, சுகாதார கழகங்கள், வைத்தியசாலைகள், குழந்தை நலன் பேணும் அமைப்புக்கள் என்பன ஒருங்கிணைந்த வேலைத் திட்டத்தின் மூலம் பாடசாலைகளுக்கு உதவி செய்து எதிர்கால சௌக்கியமான சமுதாய மொன்றைக் கட்டியெழுப்ப முடியும். இவ்வரும் பணியை பல்வேறு சுகாதார அமைப்புக்கள் கைக் கொண்டு வருகின்றன.

வங்கிகள் தபால் அலுவலகங்கள் கூடக் கல்வியில் அரும்பணியாற்ற முடியும். பணச் சேமிப்பு கொடுக்கல் வாங்கல், உறவினர் தொடர்பு உலகத்தொடர் போன்ற காரியங்களை இவ்வமைப்புக்கள் நல்கிகுன்றன. வானொலி, தொலைக்காட்சி பல்வேறு ரச பத்திரிகைகள் போன்றன குழந்தைகளின் கல்விக்கு உந்து சக்தியாக விளங்குகின்றன. பயன்பாடும் அமைப்பும், சிறப்பாக இருக்குமேயானால் பாடசாலைகள் பயனடைவது திண்ணம். நவீன கல்வி இன்று பல்வேறு காரணிகளில் தங்கியிருப்பதனால் பாடசாலை நிறுவனம் இவற்றை மிகவும் புத்திசாதுர்யமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போது தான் கல்வியில் பின்னடைவைப் போக்கி, நாட்டுக்குத் தேவையான எதிர்கால நற்பிரசைகளை உருவாக்கலாம்.

# கலாசாலை வரலாற்றில் ஒரு கண்ணோட்டம்

பயஸ் ஆனந்தராஜா
விடுகை வருடம்

இலங்கையின் தமிழ் மொழி மூல ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் கிழக்கு மாகாணத்தில் முக்கியத்துவம் பெற்று விளங்கிக் கல்விப் பணியாற்றி வருகிறது மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை ஆகும். இப்பயிற்சிக் கலாசாலை மூலம் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக நாட்டின் பல்வேறு பட்ட பகுதிகளில் பல்லாயிரக் கணக்கான ஆசிரிய தீபங்கள் கல்விச் சுடரை மாணவரிடையே ஏற்றி நற்பணி புரிந்து வருவதை நாம் அறிவோம்.

மேலான புனிதப் பணியாம் ஆசிரியப் பணியை மேற்கொள்ளும் நமது நினைவலைகளில் ஆசிரியர் கலாசாலைப் பயிற்சிக் காலம் என்றும் மறக்கமுடியாததொன்றாகவே உள்ளது. இந்நிலையில் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் பயிற்சிபெற்று வெளியேறி நற்சேவை புரிந்து கொண்டிருப்போர், தற்போது ஆசிரிய மாணவர்களாகப் பயிற்சி பெறுவோர், இன்னும் ஆசிரியப் பயிற்சி பெறாத நிலையில் அடுத்தடுத்த வருடங்களில் பயிற்சி பெறக் காத்திருப்போர் அனைவருமே கலாசாலையின் வரலாற்றை அறிந்திருப்பது முக்கியமானது.

நமது கலாசாலை விரைவில் ஐம்பதாண்டுகள் நிறைவுறும் பொன் விழாவை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறது. கலாசாலையின் ஆரம்ப வரலாற்றுக் குறிப்புக்களை, அப்போதைய ஆரம்ப காலத்தில் பயிற்சி பெற்று இன்றும் நம் மத்தியிலே ஓய்வு பெற்ற அதிபர்களாக, ஆசிரியர்களாக இருக்கும் சிலர் அறிந்திருக்கிறார்கள்.

மேலாக, கலாசாலையின் ஆரம்பகால விரிவுரையாளர்களாகத் தலை சிறந்த கல்விப் பணியாற்றி ஓய்வு பெற்ற நிலையிலும், நம் தாய்மொழியாம் இன்பத் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கெனத் தம்மையே அர்ப்பணித்துப் பணியாற்றிவரும் மகாவித்துவான் எவ் எக்ஸ் சி. நடராசா, பண்டிதை கங்கேஸ்வரி கந்தையா மற்றும் திரு. டானியேல், திருமதி டானியல் திரு. எம். சி. தியாகராசா ஆகிய ஆசான்கள் இன்றும் நம் மத்தியிலே கலாசாலை வரலாற்றை உறுதிப் படுத்துபவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வரலாற்றுக் குறிப்புக்களை ஆதாரமாக வைத்து நோக்குமிடத்து, கிழக்கு மாகாணத்தில் ஒரு தேசிய ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இல்லாத பெருங் குறையை நீக்கி வைத்த பெருமை, உயர்திரு எஸ். தர்மரெத்தினம் (Member of State Council) அவர்களையே சாரும். இவர் அப்போதைய அரசாங்க சபையில் உறுப்பினராக இருந்தவராவார். இவரின் முயற்சியினால் *1941* ம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி அட்டாளைச்சேனையில் அமைந்திருந்த தங்கு சாவடியில் (Rest House) திரு. V. நல்லையா B.A. அவர்களை அதிபராகக் கொண்டு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அரசாங்க ஆதரவுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கடந்த வருடம் அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் கலாசாலை தனது பொன் விழாவைக் கொண்டாடியது குறிப்பிடத்தக்கது.

*1945* ம் ஆண்டுவரை இக்கலாசாலையிலே தமிழ், முஸ்லிம் ஆசிரிய மாணவர்கள் ஒற்றுமையுடன் பயிற்சி பெற்று வந்தனர். எனினும் *1945* ம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் இங்கு இடம் பெற்ற சில விரும்பத்தகாத சம்பவங்களினால் பயிற்சி பெற்று வந்த தமிழ் ஆசிரிய மாணாக்கர்கள் அனைவரும் இரவோடிரவாக மட்டுநகர் வந்து சேர்ந்தனர். இந்தச் சூழ்நிலையே தமிழ் ஆசிரியர்கள் பயிற்சி பெற, தனியான ஆசிரி

யர் கலாசாலை இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்த்தியது.

அட்டாளைச்சேனையில் தமிழ் விரிவுரையாளராகக் கடமை புரிந்த பண்டிதர் செ. பூபாலபிள்ளை அவர்களின் பெருமுயற்சியுடன் மற்றும் பல கல்விமான்களும் ஒன்று சேர்ந்து தமிழ் ஆசிரியர்கள் பயிற்சி பெறுவதற்கென தனியான ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென அரசாங்கத்தினைக் கோரினர். இக்கோரிக்கை அப்போதைய அரச சபையின் மட்டக்களப்புப் பகுதி அங்கத்தவராயிருந்தவரும், தேசிய கல்வி ஆணைக்குழுவில் அங்கம் வகித்தவருமான உயர்திரு. V. நல்லையா அவர்கள் மூலம் விடுக்கப்பட்டது.

இக்கட்டான இந்தச் சூழ்நிலையில் அட்டாளச்சேனையிலிருந்து பயிற்சியினைப் பூர்த்தி செய்யாத நிலையில் மட்டக்களப்பு வந்த ஆசிரிய மாணவர்கள் தமது பயிற்சியைத் தொடரவும், தொடர்ந்தும் தமிழ் ஆசிரிய மாணவர் தனியாகப் பயிற்சி பெறுவதற்கும் ஆனவசதி கோரப்பட்டது. திரு. நல்லையா அவர்களின் விடாப்பிடியான கோரிக்கையை ஏற்ற அப்போதைய அரசாங்கத்தின் கல்வி அமைச்சர் கௌரவ. C.W.W கன்னங்கரா (இலவசக் கல்வியை அறிமுகஞ் செய்தவர்) மட்டக்களப்பில் தனியானதொரு ஆண்களுக்கான ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை ஆரம்பிக்க உடன் அனுமதி அளித்தார்.

இதன்படி 1945 ம் ஆண்டு மே மாதம் முதலாம் நாள் (01 . 05 . 1945) மட்டக்களப்பில் அமைந்துள்ள R.A.F கட்டடத்தில் (இப்போது மட்/ இந்துக்கல்லூரி என அழைக்கப்படுகின்ற அரசினர் கல்லூரி அமைந்திருக்கின்ற வளவில்) ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை திரு. நல்லையா அவர்களால் தற்காலிக முறையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதுவே மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஆரம்பம் எனலாம். அப்போதிருந்த கிழக்குப் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. S. U. சோமசேகரம் அவர்களின் பரிந்துரையின் பேரில் அடிப்படை ஆங்கிலக்கல்வி அதிகாரி திரு.V. துரைசிங்கம் அவர்கள் கலாசாலையின் முதலாவது அதிபராகத் தற்காலிகமாகக் கடமையேற்றார்கள்.

அட்டாளைச்சேனையில் பயிற்சி பெற்று, பயிற்சியைத் தொடர முடியாத சூழ்நிலையின்நிமித்தம் இங்கு வந்த 27 ஆசிரிய மாணவர்களும் முதலில் இதிலே சேர்க்கப்பட்டனர். இவர்களுக்கான விரிவுரைகளும், பயிற்சிகளும் முறையாக அளிக்கப்பட்டன. அதற்கடுத்த வருடம் 1946ம் ஆண்டு முதன் முதலில் புதிய ஆசிரிய மாணவர்கள் நேர்முகப் பரீட்சையைத் தொடர்ந்து நடைபெற்ற போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டனர். அப்போதைய காலத்தில், இப்போதைய முறையில்லாது சிரேஸ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (S. S. C) சித்தியடைந்தவர்களிடையே விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஆசிரிய பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்டனர். பயிற்சி முடிவுற்ற பின்னர், வெற்றிடங்களைப் பொறுத்தே நிரந்தர ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன.

இப்படியாக முதலில் அனுமதிக்கப்பட்ட ஆசிரிய மாணவர்களின் தொகை 52 ஆகும். ஆரம்ப விரிவுரையாளர்களாக பண்டிதர் செ. பூபாலபிள்ளை, வித்துவான் F.X.C. நடராசா, திரு.S. சேதுகாவலர் ஆகியோர் நிரந்தரமாகவும், திரு. S. ஆறுமுகவடிவேல் (ஆங்கிலம்), திரு .E R, வில்லியம்ஸ் (வரைதல்), திரு. M. C. தியாகராசா (உடற்கல்வி), திரு. P. சந்திரசேகரம் (இசை) ஆகியோர் பகுதி நேர விரிவுரையாளர்களாகவும் கடமையாற்றினர். இக்காலகட்டத்தில் அதாவது 01-09-1946 முதல், அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் கலாசாலை அதிபர் திரு.S. கந்தசாமி B.Sc அவர்கள் இக்கலாசாலையின் நிரந்தர அதிபராக நியமனம் பெற்றார்கள்.

பயிற்சிபெறும் மாணவர்கள் அனைவருமே விடுதியிலே கட்டாயம் தங்கவேண்டும் என்ற நிலைப்பாடு அப்போதிருந்தது. கலாசாலை இயங்கிய (இந்துக் கல்லூரி வளவில்) R.A.F. கட்டடத் தொகுதியின் ஏனைய பகுதிகள் விடுதியாகப் பயன்படுத்தப்பட்டன, இவற்றின் கூரை ஓலையினால் வேயப்பட்டிருந்தது, ஆரம்ப வருடத்திலேயே விளையாட்டுப் போட்டிக்காக கலைமகள், மலைமகள், திருமகள் என இல்லரீதியாக ஆசிரிய மாணவர்கள் பிரிக்கப்பட்டிருந்தனர். விடுதி அமைப்பும் மூன்றாகப் பிரிக்கப்பட்டு இல்லரீதியாக மாணவர்கள் விடுதியில் தங்கும் ஒழுங்கு முறை

ஆரம்பத்தில் காணப்பட்டது. விடுதிக்குப் பொறுப்பாக பண்டிதர் செ. பூபாலபிள்ளை அவர்களே கடமையாற்றினார்கள்.

பயிற்சிநெறி ஒன்றாகவே ஆரம்பத்தில் அமைந்திருந்தது. தமிழ்மொழிப் பயிற்சியும், அதனோடு இணைந்த வகையில் ஏனைய பாடங்களுக்குமான பொதுப்பயிற்சியும் அளிக்கப்பட்டது. தேசிய உடை கட்டாயமாக அணிதல், உரிய நேரத்தில் பாடங்களுக்கான விரிவுரைகள், சமயக் கடமைகளை நிறைவேற்றல், நிறைவான கற்பித்தற் பயிற்சி, தினமும் அதிகாலையிலும், மாலையிலும் தீவிரமான உடற்பயிற்சி, தோட்ட வேலை போன்ற பல ஒழுங்கு முறைகள் பின்பற்றப்பட்டன. பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர் ஒருவருக்கு அரசாங்கத்தினால் ரூ 20/- சகாயப் பணமாக வழங்கப்பட்டது. எனினும் உணவு உட்பட ஒரு வருக்கான சராசரி மொத்தச் செலவு ரூ 35/- ஆக இருந்தது குறிப்பிடத்தக்கது

அக்காலத்தில் ஆண்களே ஆசிரியர் பயிற்சிக்கென அதிகமாகத் தெரிவு செய்யப்பட்டனர். தெரிவு செய்யப்பட்ட சில பெண்களும் யாழ்ப்பாணத்திற்குச் சென்றே பயிற்சி பெற முடியும். ஏனெனில், பெண்களுக்கென தனியான ஆசிரியர் கலாசாலை மட்டக்களப்பில் இருக்கவில்லை. போக்குவரத்து மற்றும் பிற பிரச்சனைகள் காரணமாகத் தகுதியானவர்கள் கூட பயிற்சிக்குச் செல்லாது இருந்தனர்.

இப்பெருங் குறையை உணர்ந்த பண்டிதர் செ. பூபாலபிள்ளை அவர்கள், அரசசபை உறுப்பினர் திரு. V. நல்லையா அவர்களின் கவனத்திற்கு இதைக் கொண்டு வந்தார். இதன் பலனாக அப்போது இலங்கை இராமகிருஷ்ண மிஷனுக்குச் சொந்தமாக இருந்த ஆனைப்பந்தி விவேகானந்தா மகளிர் வித்தியாலய மண்டபத்தில் (இப்போதைய மட்/ ஆனைப்பந்தி இ. கி. மி. பெண்கள் ம. வி) பெண்களுக்கென தனியான ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 1945ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் முதலாவது அதிபராக திருமதி E S தம்பிராசா B. A அவர்கள் கடமையேற்றார்கள். ஆரம்ப வருடத்தில் பயிற்சி பெற்ற ஆசிரிய மாணவிகளின் தொகை 58 ஆக இருந்தது. அதிபரோடு, திருமதி. T.V நல்லையா, திருமதி. கங்கேஸ்வரி கந்தையா, திருமதி. M. மயில்வாகனம் ஆகியோர் பெண்கள் கலாசாலையின் நிரந்தர விரிவுரையாளர்களாகவும் திருமதி N எதிர்வீரசிங்கம் சங்கீத பகுதி நேர விரிவுரையாளராகவும் கடமையாற்றினர்.

பெண் ஆசிரியைகளுக்கான விடுதி அருகிலுள்ள தனியாருக்குச் சொந்தமான கட்டடத்திலேயே இயங்கியது. விடுதிப் பொறுப்பாளராக செல்வி. A. கந்தவனம் அவர்கள் பொறுப்பேற்றார்கள்.

இவ்வேளையில் ஆண், பெண் ஆசிரியர் கலாசாலைகளுக்கென நிரந்தர கட்டடமின்மையால், புதிய கட்டடங்களின் தேவை உணரப்பட்டு திரு. நல்லையா அவர்களால் இதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இவரது முயற்சியின் பலனாக ஆண்கள் கலாசாலை இயங்கிய R. A. F. கட்டட வளவில் பெண்களுக்கான கலாசாலையும் இன்று ஆசிரியர் கலாசாலை அமைந்துள்ள வளவில், ஆண்களுக்கான கலாசாலையும் ஒரேயளவான மாதிரியமைப்பிலும், வடிவத்திலும் தனித்தனியாகக் கட்டப்பட்டன.

எனினும் பயிற்சி பெறும் பெண்களின் தொகை குறைவடைந்து கொண்டு வந்தமையாலும், ஆண்களுக்கெனவும், பெண்களுக்கெனவும் தனித் தனியே பயிற்சி கொடுப்பதற்கு அப்போதைய அரசாங்கத்தின் நிதி நிலமை வாய்ப்பளிக்காத காரணத்தினாலும் ஆண், பெண், கலாசாலைகளை ஒன்றிணைக்கும்படி அரசினால் ஆலோசனை கூறப்பட்டது.

இதன்படி 1950 ம் ஆண்டு மே மாதம் 8ம் திகதி ஆண் பெண் பயிற்சிக் கலாசாலைகள் ஒரே நிர்வாகத்தில் ஒன்றாக இணைக்கப்பட்டன. ஒன்றாக இணைக்கப்பட்ட பின்னரும், ஒரே நிர்வாகத்தில் கலாசாலை சிறப்பாக இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. பெண்கள் கலாசாலைக்கென அமைக்கப்பட்ட கட்டடம் வேறிடத்தில் இயங்கி வந்த அப்போதைய அரசினர் கல்லூரிக்குக் கையளிக்கப்பட்டது

மட்டக்களப்பு மாநகருக்குப் பெருமை தேடித்தரும் வகையில் தனியான தமிழ்

மொழி மூல ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை ஆரம்பிக்க உறுதுணை புரிந்த ஸ்தாபகர் உயர்திரு. V. நல்லையா அவர்கள் நம் ஒவ்வொருவராலும் என்றென்றும் நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டியவராவார். கிழக்கு மாகாணம் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டம் வாழ, பல துறைகளிலும் சிறந்தோங்க வழிவகுத்து உழைத்த திரு நல்லையா அவர்கள் சுகாதாரப் பகுதியின் பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டார்கள்.

இவரது இடைவிடாத முயற்சியாலும், ஒத்துழைப்பினாலும், அப்போதைய கலாசாலை அதிபர் திரு. S. கந்தசாமி அவர்களின் அயராத ஊக்கத்தினாலும், இன்று வரை நிலைத்து நிற்கும் பெரிய கட்டடங்கள் நமக்குக் கிடைத்தன. பிரதான கட்டடத்தின் கீழ்ப் பகுதியில் நிர்வாகப் பகுதி, உணவுச் சாலை, வாசிகசாலை, விஞ்ஞான ஆய்வு கூடம், வகுப்பறைகள் ஆகியன அமைந்துள்ளன. மேற்பகுதி பெண்கள் விடுதியாகப் பயன்படுத்தப்படுகிறது.

ஸ்தாபகர் திரு. நல்லையா அவர்களைக் கௌரவிக்கும் முகமாக பிரதான கட்டடத்தின் வகுப்பறை அமைந்துள்ள பெரிய மண்டபத்திற்கு "நல்லையா மண்டபம்" எனப் பெயர் சூட்டப்பட்டு இப்போதும் அழைக்கப்படுகிறது.

ஆண்களுக்கென தனியான விடுதிக் கட்டடம் மைதானத்தை அடுத்துள்ள பகுதியில் *30 - 08 - 1953* ல் திறந்து வைக்கப்பட்டது. மேலதிகமாக, மேடையுடன் கூடிய பெரிய அளவிலான மண்டபமும், வகுப்பறை மண்டபமும் பின்னர் அமைக்கப்பட்டன.

### கலாசாலையை வழிநடத்திய அதிபர்கள்

1945 ம் ஆண்டு மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆரம்பிக்கப்பட்டதும் அப்போதைய அடிப்படை ஆங்கிலக் கல்வி அதிகாரி திரு. V. துரைசிங்கம் அவர்கள் தற்காலிக அதிபராகக் கடமையாற்றியுள்ளார். அடுத்த வருடம் அதாவது 1946ல் அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலை அதிபராக இருந்த திரு. S. கந்தசாமி அவர்கள் நிரந்தர அதிபராக நியமனம் பெற்றார்கள். பின்னர் அவர் சிலகாலம் தமது உயர்கல்வி சம்பந்தமாக வெளி நாடு சென்றதால் அப்போதைய உப அதிபர் திரு. S. மகேசன் B.A அவர்கள் பதில் அதிபராகப் பணிபுரிந்தார்கள். மீண்டும் தமது வெளிநாட்டு உயர் கல்வியை முடித்து நாடு திரும்பிய திரு. S. கந்தசாமி அவர்கள் தொடர்ந்தும் (அதாவது ஆண், பெண் கலாசாலைகள் ஒன்றிணைக்கப்பட்ட பின்னரும்) அதிபராகச் சேவையாற்றியுள்ளார்கள். இதே வேளை 1945ல் ஆரம்பிக்கப்பட்டு ஒன்றாக இணைக்கப்படும் வரை இயங்கி வந்த பெண்கள் கலாசாலையின் அதிபராக திருமதி. E.S. தம்பிராசா அவர்கள் கடமையாற்றியுள்ளார்கள்.

**கலாசாலை சம்பவத்திரட்டுப் புத்தகத்தின் ஆதாரப்படி ஆரம்பம் முதல் இன்றுவரை பின்வருவோர் கலாசாலையின் மேன்மை மிக்க அதிபர்களாக நற்பணி ஆற்றியுள்ளனர்.**

| | |
|---|---|
| *01 - 05 - 1945 — 31 - 08 - 1946* | திரு. V. துரைசிங்கம் (Basic English E. O) (பதில் அதிபர்) |
| | திருமதி. E. S. தம்பிராசா (B. A. Dip - in - Ed.) (பெண்கள் கலாசாலை அதிபர்) |
| *01 - 09 - 1946 — 31 - 10 - 1948* | திரு. S. கந்தசாமி (B.Sc. Dip-in-Ed.) |
| *01 - 11 - 1948 — 31 - 07 - 1949* | திரு. S. மகேசன் (B. A. Dip-in-Ed.) (பதில் அதிபர்) |
| *01 - 08 1949 — 03 - 01 - 1954* | திரு. S. கந்தசாமி (B.Sc. Dip-in- Ed.) |
| *04 - 01 - 1954 — 28 - 02 - 1956* | திரு. P. சவரிமுத்து (M. Lit. M. A.) |
| *29 02 - 1956 — 31 - 09 - 1956* | திரு. S. திருஞானசம்பந்தன் (B. A. PGT.) (பதில் அதிபர்) |

| | | |
|---|---|---|
| 01 - 10 - 1956 — 13 - 02 - 1962 | திரு. S. கனகலிங்கம் (B. A. Dip - in - Ed) | |
| 14 - 02 - 1962 — 15 - 03 - 1963 | திரு. S. திருஞானசம்பந்தன் (B. A. PGT.) (பதில் அதிபர்) | |
| 16 - 03 - 1963 — 28 - 02 - 1970 | திரு. க. கந்தையா (B. A. PGT.) | |
| 01 - 03 - 1970 — 31 - 12 - 1973 | திரு. சா. சி. கருணானந்தன் (B. A. (Econ. M. A. Tamil. Dip - in - Ed.) | |
| 01 - 03 - 1974 — 28 - 02 - 1976 | திரு. ச. சி. வேலாயுதபிள்ளை (B.Sc., Dip - in - Ed.) | |
| 01 - 03 - 1976 — 01 - 07 - 1980 | மேஜர். சு. தர்மலிங்கம் (B. A. Dip - in - Ed.) | |
| 02 - 07 - 1980 — 16 - 11 - 1980 | திரு. கோ. கோணேசபிள்ளை 1st Class Eng. Sec. Tr. (Maths) B.Ed. Part II Queensland. | |
| 17 - 11 - 1980 — 28 - 02 - 1985 | திரு. சி. புலேந்திரன் (B. A. Dip - in - Ed.) | |
| 01 - 03 - 1985 — 18 - 08 - 1990 | திரு. க. கனகசூரியம் (B. A. Dip - in - Ed.) (1st Class Sp. Trained, SLEAS) | |
| 19 - 08 - 1990 — இன்றுவரை | திரு. வ. கனகசிங்கம் (B. A. Dip - in - Ed.) T. T. SLEAS | |

இந்த அதிபர்களின் நல்வழி காட்டலில் கடமையைக் கண்ணெனப் போற்றும் விரிவுரையாளர்களினதும் உன்னத சேவையுடன் இணைந்த கலாசாலைப் பணி தொடர்ந்தும் நம் ஆசிரிய சமூகத்திற்கு நிறைவாகக் கிடைக்குமென்பதில் எவ்வித ஐயமுமில்லை. கலாசாலை விருது வாக்கின் படி நாமும் பாங்குடன் பயின்று பண்பாடெய்துவோம்.

## பாராட்டுகிறோம்

எமது கலாசாலையில் கருமமே கண்ணாயிருந்து
பிரச்சினைகளை அணுகும் முறையிலணுகி பரிகாரமும் கண்டு
கண்ணியம் நேர்மையோடு கல்விப் பயிர் வளர்த்து
இடமாற்றலாகிச் சென்ற

முன்னாள் துணை முதல்வர் திரு. மு. பரஞ்சோதி

முன்னாள் விரிவுரையாளர் திரு. வீ. இராசையா

இவர்களுக்கு எமது இதயம் நிறைந்த நன்றிகளும்
மனம் உவந்த பாராட்டுக்களும்

# கற்பித்தல் நுட்பங்கள்

## TEACHING TECHNIQUES

எம். பாஸ்கரன் B.Sc.
(கல்வி டிப்ளோமா)
விரிவுரையாளர்

கற்பித்தலைச் சிறந்த முறையில் மேற் கொள்ள வேண்டுமெனின் மிகவும் பொருத்த மான கற்பித்தல் நுட்பங்களைக் கையாளும் திறமை ஒரு ஆசிரியனுக்குக் கட்டாயமாக இருத்தல் அவசியமாகும். இவ்வாறு கற்பித் தல் நுட்பங்களைக் கையாளும் போது கல்விக் கொள்கைகள் தொடர்பான அறிவையும் தமது செய்முறை அனுபவங்களையும் பயன்படுத்திக் கொள்ள முடிகின்றது.

ஒரு ஆசிரியர் கற்பித்தலைச் செவ்வனே மேற்கொள்ளுவதற்கு முதலில் அவர் திட்ட மிடல்வேண்டும். இதற்கு அவர் முதலில் கருத் திற் கொள்ளவேண்டியது பாட ஆயத்தம் செய்தலாகும். இதற்குப் பாடக் குறிப்பு முக் கியமாகத்தேவைப்படுகின்றது. ஒரு பாடத்தை நன்கு ஆயத்தம் செய்யாமல் வகுப்பறையில் கற்பித்தலை மேற்கொள்ளுவாராயின், மாண வர்களுக்கு அப்பாடத்தின் மீது விருப்புக்குப் பதிலாக வெறுப்பு ஏற்படும். இதனால் பிள்ளை யின்மனநிலை பாதிப்படைவதோடு ஆசிரியரி டத்திலுமுள்ள நேரடிப்பற்றும் குறைகின்றது. பாடத்தின் அடைவை ஆசிரியர் பெறமுடியா மல் போய்விடும். முதலில் மாணவனிடம் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்ற அவாவை ஆசிரியர் ஏற்படுத்தல் வேண்டும். அத்தோடு அப்பிரச்சினையைத் தெளிவாகக் கணிக்கவும் விளங்கவும் வழிகாட்டுதல்வேண் டும். இவ்வாறு ஒரு ஆசிரியர் செய்யும் போது மாணவரின் பழைய அனுபவங்களை உதவி யாகக் கொண்டு பிரச்சினையை நன்றாக விளங்கச் செய்ய வேண்டியது அவரது கடமை யாகும்.

அடுத்து எடுத்துக் கூறல். இப்படியில் ஆசிரியர் வகுப்பிற்கு விரிவுரைகளினாலும், செய்து காட்டல் முறைகளினாலும் அலகின் முக்கிய கருத்துக்களை எடுத்துக் கூறுவார். ஆசிரியர் எடுத்துக் கொண்ட ஒரு அலகைப் பற்றிய முக்கிய கருத்துக்கள் மாணவரின் நாட் டங்களை மேலும் தூண்டுவதற்கான முறை யிலும் அவர்களின் கவனத்தை ஈர்க்கும் முறை யிலும் விளக்கமாகக் கூறப்படல் வேண்டும். பின்னர் ஆசிரியர் கூறிய கருத்துக்களை எவ் வளவு தூரம் விளங்கிக்கொண்டார்கள் என அறியும் நோக்கமாக ஒரு பரீட்சை வைத்தல் அவசியமாகும்.

கற்பித்தல் நுட்பங்களில் அடுத்து முக்கிய மாகக் கருதப்படுவது கற்பித்தலின் போது வினாக்கேட்டலாகும். பிள்ளைகளின் உள வாழ்க்கைக்குரிய முதல் தூண்டல்களில் வினா முக்கியமான இடத்தை வகிக்கின்றது. பிள்ளை யின் வியப்பு, ஆச்சரியம், ஆராய்வூக்கம், சந் தேகம் போன்றன வினாக்களுக்கு அடிப்படை யாக அமைகின்றன. இவையே கற்றலுக்குரிய ஊக்கத்தைத்தூண்டும் முக்கிய சக்தியாகும். மாணவர்களைத் தூண்டுவதற்கு ஆசிரியருக் குக்கிடைக்கக் கூடிய சிறந்த தூண்டு வினா வாகும். ஆரம்பப்பாடசாலைகளாக இருந்தா லும் சரி இடை நிலைப் பாடசாலைகளாக இருந்தாலும் சரி ஆசிரியர் வினாக்கள் கேட் பதில் திறமை பெற்றவர்களாக இருக்கவேண் டும். இத்திறமையை அவர் பெற்றிராவிட் டால் தமது தொழிலைச் சிறப்பாகச் செய்ய முடியாது. இவ்வாறு ''கால்வின்'' கூறியிருக் கின்றார்.

ஒரு வகுப்பில் உள்ள மாணவர்கள் தமது பிரச்சினை நிலையைத் தீர்ப்பதில் கூட்டாகச் செயல்படுவதில் மிகவும் ஆர்வமுடையவர்க ளாக இருப்பார்கள். எனவே மாணவர்கள் ஆசிரியருடைய வினாக்களுக்கு மட்டும் விடை காண்பதில் திருப்தி ஒருபோதும் அடைய மாட்டார்கள், காரணம் தமது செயல்களைச் சரியாகவும் முற்றாகவும் செய்து முடிப்பதற்கு அவர்கள் அறியவேண்டிய பல விடயங்கள் உள்ளன. எனவே அவற்றிற்குரிய விடை களை அறியும் நோக்கமாக அவர்கள் ஆசிரி யர்களிடத்திலும் மற்றையவர்களிடத்திலும்

பல வினாக்களை எழுப்பி தமது பிரச்சினை களுக்கு ஒரு தீர்க்கமான முடிவைப்பெற எத்தனிக்கின்றார்கள். ஒரு ஆசிரியர் தாம் கேட்ட வினாவுக்கு விடை கிடைத்தவுடன் திருப்தியாக இருந்து விடலாகாது. மாணவர்களிடமிருந்து பெற்ற விடையிலிருந்து தொடர்ந்து பல வினாக்களைக்கேட்டு மாணவர்கள் தம் குறிக்கோளை அடைவதற்கு ஆவன செய்தல் வேண்டும். பாட விடயம் விளங்காமல் மனக் குழப்பமடையும் மாணவர்களின்சந்தேகத்தை ஆசிரியர் விளக்கள் மூலம் தெளிவுறச் செய்தல் வேண்டும். மாணவர்களின் தரங்களை அறிந்து அவர்களின் தரங்களுக்கேற்ப ஆசிரியர் விடை அளிக்கவேண்டும். வகுப்பறையில் மாணவர்கள் கேட்கின்ற பல வினாக்களில் எவை பாடத்துடன் சம்பந்த முடையன என அறிந்து ஆசிரியர் விடை அளித்தல் இங்கு அவசியமாக்கப்படுகின்றது. பிள்ளைகளின் வினாக்களுக்கு விடை அளிக்கும்போது அவர்களின் இறுதி இலக்குகளுக்கு அல்லது உடனடிக் குறிக்கோளை அடைவதற்கு முழு வகுப்பையும் ஆசிரியர் வழி நடத்திச்செல்லுதல் கட்டாயமாகும். வினாக்களைக் கேட்கும்போது ஆசிரியர் பாடப்பரப்பைப்பற்றிய பரந்த தெளிந்த அறிவுடையவர்களாக இருக்கவேண்டும். விடய அறிவும் தர்க்க ரீதியான சிந்தனையும் ஆசிரியருக்கு இருக்க வேண்டும். வினாக்கேட்கும் போது ஆசிரியரிடம் சுய நம்பிக்கை இருத்தல் வேண்டும். தாம்கேட்கின்ற ஒவ்வொரு வினாவும் பொருத்தமுடையதா, தெளிவானதா, மாணவர்களுக்கு இலகுவாக விடை அளிக்க முடியுமா என்பதை ஆசிரியர் தெரிந்திருக்கவேண்டும். மாணவர்களின் அடைவைப்பரிசோதித்து அறிவதற்கும் கற்கும் பாடத்துடன் தாம் பெற்ற அனுபவங்களைத் தொடர்பு படுத்துவதற்கும் வினாக்கள் மாணவர்களுக்கு பெரிதும் உதவுகின்றன என்பதை ஒரு ஆசிரியர் மறந்து விடலாகாது. வினாக்கள் சிந்தனையைத் தூண்டுவதாக இருக்க வேண்டும். அத்துடன் சிறியனவாகவும் அமைய வேண்டும். வினாக்கள் சந்தேகத்துக்கு இடமில்லாதவாறு அமைவதோடு மட்டுமல்லாமல் 'ஆம்' அல்லது 'இல்லை' என்னும் விடைகளைத் தரக்கூடிய வினாக்கள் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

ஆசிரியரின்து கருத்துக்களுக்கு மாறான வினாக்களை எழுப்புவதற்கான உரிமை பிள்ளைகளுக்கு அளிக்கப்பட வேண்டும். இவ்வுரிமை மறுக்கப்படும்போது மாணவர்களின் சிந்தனைத் திறன் தடை செய்யப்படுகின்றது. ஒரு ஆசிரியன் தான் கூறிய விடயங்கள் அனைத்தையும் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும என்ற நிலைப்பாட்டினை மாற்றிக் கொள்ள வேண்டும். மாறாக மாணவர்கள் அவற்றைச் சிந்தித்து ஆராய்ந்து ஏற்கும் வண்ணம் மாணவர்களை ஊக்கப்படுத்துவது கற்பித்தலின் முக்கியமான ஒரு நுட்பமாகும். மாணவர்கள் கேட்கும் வினாக்களுக்குத் தற்செயலாக ஒரு ஆசிரியருக்கு விடை தெரியாவிட்டால் அதைத் தெரியாது என்று ஏற்றுக் கொள்ளல் வேண்டுமே தவிர பிழையான தகவல்களைக் கொடுக்கக்கூடாது. அப்படிச் செய்யுமிடத்து மாணவர்களை ஏமாற்றுவதாக அது அமையும். இந்த வகையில் அவ் வாசிரியர் எந்த ஒரு நன்மையும் அடைய மாட்டார். மாணவர்களின் விடைகளை ஆசிரியர் ஆராயும்போது அவர்களுக்குச் சாதகமாகவே ஆராய்தல் வேண்டும். ஓரளவுக்கு சரியான விடைகளை வகுப்பில் மதிப்பீடு செய்யத் தூண்டலாம்.

மேலும் கற்பித்தலை வலுவடையச் செய்வதற்கு கற்பித்தலில் ஓர் ஆசிரியர் சில உத்திகளைக் கையாளலாம். ஒன்று விரிவுரை முறையைக் கையாளலாம் அல்லது கலந்துரையாடல் முறை அல்லது செயல் திட்டம் முறை ஆகியவற்றைப் பயன்படுத்தலாம். கற்பித்தல் முறையைத் தேர்ந்தெடுக்கும் போது இயன்றளவில் மாணவரின் அனுபவம் செயல்பாடு ஆகியவற்றின் மூலம் அறிவை வழங்குதல் முக்கியமானதாகும். விரிவுரை முறையை விட செயன்முறைக் கற்பித்தல் முறையின் மூலம் கற்பிப்பதனால் மாணவர்களின் ஆர்வமும், ஊக்கமும், உற்சாகமும், பங்குபற்றுதலும் அதிகரிக்க முடியும். இதே போன்று குழுமுறை, பிரச்சினை விடுவித்தல் முறை போன்றவற்றின் மூலமும் கற்றலுக்காக மாணவரிடையே ஒரு சிறந்த பின்னணியை ஆசிரியர் உருவாக்க முடியும். எந்த ஒரு செயன்முறையும் தனித்தனியாக மேற்கொள்வதைவிட சிறுசிறு குழுக்களாக அமைத்துச் செய்வதையே மாணவர்கள் மிகவும் விரும்புகின்றனர். இந்தவகையான அவர்களின் விருப்பத்தை ஒரு ஆசிரியர் நிறைவேற்றுபவராக இருந்தால் நிச்சயம் அவ்வாசிரியரின் கறபித்தல் முறை அவருக்குப் பெரும் வெற்றியைத் தேடித்தரும் என்பது திண்

ணம். மேலும் பல அனுபவங்களைப் பெறுவதற்கும், ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும் ஏற்றவாறு மாணவர்களின் விருப்பு வெறுப்புக்களைக் கற்பித்தலின் போது பயன்படுத்திக் கொள்ள முடியும்.

பல அறிவாளிகள் அல்லது பிரமுகர்கள் அல்லது முக்கியஸ்தர்கள் இவர்களைச் சந்தித்து அளவளாவுவதன் மூலம் தகவல்களைப் பெற்று சில பாடப் பகுதிகளைக் கற்றற்கு மாணவர்களை ஆசிரியர்கள் உற்சாசப்படுத்தலாம். மாணவர்களின் திறமைகளுக்கு மதிப்பளித்தல், அதனை விதைந்துரைத்தல், அனுமதித்தல், பாராட்டிப்பேசுதல் போன்ற பல யுக்திகளைக் கற்பித்தலின் போது ஆசிரியர் கையாளுவதன் மூலமும் மாணவர்களிடையே கற்றலுக்கான ஓா ஆர்வத்தை ஏற்படுத்த முடியும்.

இவற்றை விட மேலும் சில நுட்பங்களையும் உத்திகளையும் ஆசிரியர் கற்பித்தலில் மேற்கொண்டால் எதிர்பார்க்கும் பலாபலன்களை அடையலாம். இதில் ஒன்று கற்பிக்கும் போது மேற்கொள்ள வேண்டிய தெரிந்ததிலிருந்து தெரியாததற்குப் போதலாகும். தெரியாத ஒரு பாடப்பொருளை ஆசிரியர் திடீரெனக் கற்பிக்க முயல்வாரானால் அது மாணவர்களுக்கு மலைப்பையும் விளக்கமின்மையையும் ஏற்படுத்தலாம். ஆகவே மாணவரின் பாடப்பொருள் சம்பந்தமான அனுபவத்தைக் கண்டறிந்து அதனோடு தொடர்புபடுத்தி புதியபாடப் பொருளை விளக்குதல் வேண்டும். உதாரணமாக ஆகுபெயர் கற்பிப்பதானால் அதனோடு தொடர்புடைய அனுபவத்தைத் தூண்டுதல் வேண்டும். சாதாரண வாழ்க்கையில் நாளாந்தம் எத்தனையோ சொற்பிரயோகங்களை மாணவர் கேட்டறிகின்றனர், மேற்கொள்கின்றனர். ஆனால் அவை தாம் ஆகுபெயர் என்பதை அறியார் ''வண்ணான் முந்தாநாள் தான் அழுக்கெடுக்க வந்தான். இன்று வெள்ளை கொண்டு வந்துவிட்டான்'' என்ற வாக்கியத்தில், அழுக்கு, வெள்ளை என்பன எதைக்குறிக்கின்றன என வினவி ஆகுபெயரை அறிமுகப் படுத்தலாம். இவ்வாறு செய்வதன் மூலம் புதிய பாடப்பொருளை ஐயம் திரிபின்றி விளங்கவைக்கலாம்.

இறுதியாக சமூகப் பொருளாதாரம் சம்பந்தமான விடயங்களையும் பாடப் பொருளோடு தொடர்பு படுத்தி பாடப்பொருளின் சரியான விளக்கத்தைப் பெறச் செய்வது கற்பித்தலின் ஒரு நுட்பமாகும். இதனால் சமூகத்தில் நடைபெறுகின்ற அன்றாட விடயங்களைக் குறிபிட்ட பாடங்களுடன் தொடர்பு படுத்தி மாணவர்கள் விளங்கிக் கொள்ள முடியும். இதனால் அப்பாடப் பொருள் நடைமுறைச்சாத்தியமானதாகவும், பயனுள்ளதாகவும் அமையும்.

—✱—

---

சிறந்த முறையில் பிள்ளைகளுக்குக் கற்பித்தவர் பிள்ளைகளின் பெற்றோரை விட மரியாதைக்குரியவர்கள். ஏனெனில் பெற்றோர் வாழ்க்கையை மட்டும் வழங்குகின்றனர். ஆசிரியர்கள் வாழும் கலையையும் வழங்குகின்றனர்.

**அரிஸ்டோட்டில்**

ஒரு பாடசாலையை அதன் தற்போதைய நிலைக்கு உட்படுத்தியவர்கள் ஆசிரியர்களே. எனவே, அவர்களது திறமையின் மேலே எமது கல்வியின் தரம் தங்கியிருக்கும்.

**லெலாட் மாஷ்**

நல்ல வீட்டுக்குச் சமமான பாடசாலை இல்லை. நல்ல பண்புகள் உள்ள பெற்றோர்களுக்குச் சமமான ஆசிரியர்களும் இல்லை.

**காந்தி**

# கல்விச் சிந்தனையாளர்கள் காட்டிய கற்பித்தல் முறைகள்

## TEACHING METHODS OF EDUCATIONISTS

**மு. விஜயநாதன்**
*விஞ்ஞானப் பிரிவு*
*(விடுகையாண்டு)*

கற்பித்தல் முறைகள் வரலாற்றுத் திருப்பங்களையொட்டி அவ்வப் போதுள்ள சமுதாயத் தேவைகளுக்கு ஏற்றவாறு மாறுபடுகின்றன. பண்டைய போதனா முறைகளை உற்று நோக்குங் கால் நமக்கு இவ்வுண்மை புலப்படுகின்றது. கல்வியின் பணி குழந்தைகளைச் சமுதாய வாழ்க்கைக்குத் தயார்படுத்துவதே ஆகும். ஆகையால் இத்தகைய சமுதாயத் தேவைகளுக்கு அல்லது அறைகூவல்களுக்கு ஏற்றவாறு ஆசிரியர்கள் தம் போதனா முறைகளையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

பண்டைய கல்வி முறையினை நாம் நோக்கும் போது அது குருகுலவாச முறையாகவே அமைந்திருந்தது. அந்த வழிமுறையின்படி மாணவன் குருவினிடத்தில் சென்று வாழ வேண்டும். குருகுலவாசத்தில் பெரும்பாலும் மனப்பாடமாகக் கற்றல் (Rote Lea-rning) முறை இருந்தது. குரு கற்றுக் கொடுக்கும் விடய ஞானங்களையெல்லாம் மாணவன் மனப்பாடம் செய்ய வேண்டும். இது வழி முறையாக அல்லது சடங்கு முறையாக நிலவி வந்துள்ளது. குருகுலவாசத்தில் தர்க்கம் இருந்தது. குறிப்பாக இது குருவிற்கும் சீடனுக்கும் நிகழும். மேலும் குருவிற்குப் மற்றவர்களுக்கும் நிகழும் தர்க்கத்தையும் சீடன் உற்று நோக்க வேண்டும். பின், அவன் தான் மேற்கொள்ளும் தர்க்கத்தில் குருவைப் பின்பற்ற வேண்டும். கருத்துச் செறிவோடு எவ்விதம் தர்க்கம் மேற்கொள்வது என்பதைக் குரு மற்றவர்களிடத்தில் தர்க்கம் செய்கின்ற பொழுது உற்று நோக்கித் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த முறை சொல்லணிக்கலையின் அடிப்படையில் அமைந்த பழைய கிரேக்க ஆசிரியர்கள் ஏற்படுத்திய நெறியான பின்பற்றுதல் வழியைச் சாரும்.

இவ்வாறு கற்பித்தல் முறை பன்னெடுங் காலமாக நம்மிடையே இருந்து வருகின்ற போதிலும் அதனைப் பற்றி அறிவியல் ரீதியில் வகைப்படுத்தப்பட்ட விளக்கக் கோட்பாடுகளை காலத்துக்குக் காலம் அறிஞர்கள் முன்வைத்திருப்பதைக் காணலாம். ஸ்பென்சரின் (Spencer) கூற்றுப்படி 'குழந்தைகளுக்கு முடிந்த வரையில் வாய்மொழிப் போதனையை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைத்துச் கூடிய மட்டும் அவர்கள் தாங்களே உண்மைகளைக் கண்டறியும்படி செய்ய வேண்டும்' என்பதாகும். போராசிரியர் ஆம்ஸ்ட்ராங் (Armstrong) அவர்களும் மற்றவர்களும் உருவாக்கிய சுயமாகக் கண்டறியும் முறையில் இக்கூற்றின் உண்மையான பிரயோகம் காணப்படுகிறது. ஆங்கிலச் சொல்லாகிய ஹியூரிசம் (Heurism) என்பது கிரேக்க ஹியூரியோக்கின் (Heuriokein) என்ற சொல்லில் இருந்து வருகிறது. அச்சொல்லுக்குக் கண்டுபிடித்தல் என்பது பொருளாகும். ஆகவே இம்முறையை ஒரு கண்டு பிடிக்கும் முறை எனலாம்.

கல்வியாளர்கள் பலரினதும் கருத்தின்படி சுயமாகக் கண்டறியும் முறை முக்கிய இடம் பெறுகின்றது. சுயமாகக் கண்டறியும் முறையில் மாணவன் ஒரு புதிய கண்டுபிடிப்பைத் தரும் விஞ்ஞானியின் நிலையில் வைக்கப்படுகிறான். இதனை ஆக்கிமிடீஸ் (Archimeds) என்ற அறிவியல் அறிஞர் வித எடைமானத் (Specific Gravity) தத்துவத்தைக் கண்டு பிடிக்கும்போது எந்த முறையைக் கையாண்டாரோ அதுவே இது எனலாம். அவர் ஹெய்ரோ ( Heiro ) மன்னனது மணிமுடியில் உள்ள உலோகக் கலவையை ஆராய்ந்து அறியுமாறு பணிக்கப்பட்டார். இம் முயற்சியில் ஈடுபட்ட அவர் மாபெரும் அறிவியல் உண்மை ஒன்றைக் கண்டு பிடித்துத் தந்தார்.

ஆகவே இது போன்ற நிலையில் மாணவர்கள் வகுப்பறைச் சூழ்நிலையில் வைக்கப்பட்டால் மட்டுமே அவர்களின் சிந்தனைத் திறனும், ஆற்றலும் பூரண வளர்ச்சியைப் பெற்றுச் செயல்படும் என்பது சிந்தனையாளர்கள் பலரினதும் கருத்தாக அமைந்து விடுகின்றது.

அறிவியல் அறிஞரான ரூசோ (Rousseau) 1962ம் ஆண்டில் வெளியிட்ட எமிலி (Emile) என்ற நூல் அவரின் கல்விக் கருத்துக்களை தெளிவாகக் கூறுகின்றது. எமிலி என்னும் கற்பனைச் சிறுவனது வாழ்க்கை அவனது கல்வி முறை ஆகியவை பற்றி ரூசோ விளக்குகிறார். இந்நூல் ஐந்து பாகங்களையுடையது. அதில் குழந்தைப்பருவம் (Infancy) பிள்ளைப்பருவம் (Child Hood) முன் கட்டிளமைப்பருவம் (Boy Hood) கட்டிளமைப்பருவம் (Youth) ஆகிய பருவங்களுக்கான கல்வி முறை பற்றியும், ஐந்தாவது பாகத்தில் எமிலியின் மனைவியாகப் போகு பெண் எவ்வாறு பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பது போன்ற விளக்கங்களையும் ரூசோ தருகிறார். வளரும் குழந்தைகளின் இயல்புகளையொட்டி அவர்களுக்குரிய சுதந்திரம், புலப்பயிற்சி (Sense Training) தானே முயன்று கற்றல் (Auto Education), செய்து கற்றல் (Learning By Doing) ஆகியவை பற்றி ரூசோ வற்புறுத்திக் கூறுகிறார்.

கல்வியில் சமூகப் போக்கு (Sociological Tendency in Education) மிக முக்கியமான ஒரு நிலையாகும். சமூகவியல் கோட்பாடுகளை வற்புறுத்த வந்த கல்வியலாளர்களின் வரிசையில் முக்கிய இடத்தை ஜான்டூயி (John Dewey) பெறுகின்றார். இவர் படைத்துத் தந்த முற்போக்குக் கருத்துக்களின் விளைவாகப் பாடசாலைச் செயல்கள் உண்மை வாழ்க்கைச் செயல்களுடன் இணைக்கப்பட்டன. வெளிச் சமூகத்தைப் பிரதிபலிக்கும் பாடசாலையில் செய்து கற்றல். வாழ்ந்து கற்றல், செயல் முறைகள் (Activity Methods) ஆகியவை சிறப்பான இடம் பெறலாயின. செயல் திட்ட முறைகள் (Project Method) டூயியின் கல்விக் கருக்களின் நேரடிப் பயனாக அமைந்தது 'ஒரு குழந்தை நான் கற்கிறேன் என்று கூறுவதைக் காட்டிலும், நான் அனுபவங்களைப் பெறுகிறேன் என்று கூறும் போதுதான் பயனுள்ள கல்வியை அது பெறுகிறது'' என்று வற்புறுத்திக் கூறுகின்றார். பிரச்சனைகளைக் கொடுத்து அதற்கான தீர்வை நாடிச் செல்லச் செல்வதே ஆசிரியர்களது கடமையாகும். செயல் அமைவுக் கலைத் திட்டம், செய்முறைக் கலைத் திட்டம் என்பவற்றை நடைமுறைக்கு கொண்டுவந்ததும் யோன்டூயி ஆவார். சமூகத்தின் புனரமைபுக்கான கல்வி, சமூகத்தின் குறைகளைத் தீர்க்கும் சாதனமாகவும் அமைதல் வேண்டும் எனக் கூறும் இவர் கல்வியைப் பிரிக்கக் கூடாது, பிள்ளைகள் நம்பிக்கையுடன் நல்ல உள்ளம் கொண்டவர்களாக வாழக் கல்வித்திட்டம் அமைய வேண்டும் எனக்கூறி தனது செயல் முறை அனுபவங்களுடன் கூடிய கருத்தினை முன்வைத்தவராவார்.

கல்வியில் விஞ்ஞானப் போக்கின் சிறந்த ஒரு பிரதிநிதியாக ஹெர்பட் ஸ்பென்சர் (Herbert Spencer) விளங்கினார். சிறந்த கல்வியியலாளராகவும், தத்துவ ஞானியாகவும் விளங்கிய இவர் புதிய பல கல்விக் கருத்துக்களை வழங்கியுள்ளார். முழுமையின் நிறைவு பெற்ற வாழ்க்கைக்கு ஆயத்தமாக்குவதே (Preparation For Complete Living) கல்வியின் நோக்கமாகும். என்பது ஸ்பென்சரின் தலையாய கருத்தாகும். முழுமை பெற்ற வாழ்க்கைக்கு ஆயத்தம் தரக் கூடிய கல்விப் பாடங்களை அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஐந்து பகுதிகளாகப் பிரித்தார்.

1. தற்காப்புக்கு (Self Preservatiou) நேரடியாக உதவக்கூடிய பொருளறிவைத் தரக் கூடிய உடல் நலவியல், பௌதீகம், இரசாயனம் போன்ற பாடங்கள்.
2. தற்பாது காப்புக்கு மறைமுகமாக உதவக் கூடிய உணவு தேடுதல் உடை உடுத்தல், உறைவிடம் அமைத்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய அறிவியல் பாடங்களும் அவை சம்பந்தமான கலைப் பாடங்களும்.
3. குழந்தை வளர்ப்பிற்கு உதவக் கூடிய பொருளறிவு.
4. குடிமை அறிவைத் தரக்கூடிய சமூக, அரசியல் வாழ்க்கை பற்றிய அறிவுப் பாடங்கள்.
5. ஓய்வு நேரப் பொழுது போக்கிற்குகந்த இலக்கியம், நுண்கலை போன்ற பாடங்கள்.

ஸ்பென்சரின் முயற்சியால் கல்வி ஏற்பாட்டில் அறிவியல் பாடங்கள் முக்கிய இடத்தைப் பெற்றன. இந்நிலை இன்றும் மாறாமல் பின் பற்றப்படுவதைக் காணலாம்.

சரியான முறையில் கற்பிக்கப்பட்டவர்கள் பொதுவாக நல்ல மனிதர்கள் ஆகின்றார்கள் என கல்விச் சிந்தனையாளரான பிளற்றோ ( Plato ) கூறுகின்றார். இவரின் கல்வி முறை இரண்டு கூறுகளையுடையது. ஒன்று உடற் கல்வி, மற்றையது மனக்கல்வியாகும். உடல் வளத்திற்குத் தேகப்பயிற்சியும், மனவளத் திற்கு கலைப்பயிற்சியும் அளிப்பது தான் பிளேற்றோ கூறும் கல்வி முறையாகும். உலகத் திலேயே தலைசிறந்த கல்விப்பரிசீலனை என பிளேற்றோவின் கல்வித் திட்டத்தை நவீன சிந்தனையாளரான ரூசோவும் புகழ்ந்துள்ளார் ''கல்வியின் மூலம் உளம் ஓங்கி உடல் ஓங்கு தல் வேண்டும்'' எனும் திருமூலரின் கருத் திற்கிணங்க பிளேற்றோவின் ஒன்றிணைந்த கல்வித் திட்டம் உளவளர்ச்சிக்கும், உடல் வளர்ச்சிக்கும் இடமளிப்பதாக அமைந்துள்ளது இன்றைய ஒன்றிணைந்த பாடத்திட்டமும் பிளேற்றோவின் வகுத்த கல்வி நெறியுடன் இணைந்து செயல் படுவதைக் காணலாம்.
மொண்டிசோரி ( Montessori ) அம்மையார் தமக்கு முன் வாழ்ந்த கல்வி அறிஞர்களின் கருத்துக்களை ஒன்றிணைத்து ஒரு முழுமை யான கல்வி முறையை குழந்தைகளுக்கு அளித்தவராவார். பிள்ளைகளின் புலன் உணர்ச்சிகளை பயிற்சி மூலம் விருத்தியாக்கு வதில் இவர் பெரும் நம்பிக்கை கொண்டி ருந்தார். பிள்ளைகள் அடக்கு முறையோ, தண்டனையோ இல்லாமல் சுதந்திரமாக அன்பின் வழியில் கல்வி அளிக்கப்பட வேண் டும் என்பது இவரின் சிறந்த கருத்தாக அமைந்திருந்தது. மேலும் சிறந்த கல்விக் கருத் துக்கள் சிலவற்றையும் இவர் கூறியிருந்தார்.

1. குழந்தைகள் சுதந்திரமாக எவரின் குறுக் கீடும் இல்லாது தாம் விரும்பியவாறு கற்க வேண்டும், குழந்தையின் தனித் தன்மைக்கு மதிப்பளிக்க வேண்டும்.
2. தமது சுயமுயற்சியின் மூலமே குழந்தை கள் கற்கவேண்டும். அதற்குரிய துணைக் கருவிகளை பாடசாலைகள் வழங்க வேண்டும்.
3. அறிவுக்கு வழிதிறக்கும் வாசல்களாக புலன்களுக்கும் தசைகளுக்கும் நன்கு பயிற்சி அளிக்க வேண்டும்.
4. சமூக வளர்ச்சிகளை பிள்ளைகளிடம் ஏற் படுத்தக் கூடிய குழுக்களாக அவர்களைப் பிரித்துக் கொள்ளல்.
5. ஆசிரியரின் பணி கற்பித்தலல்ல, இயக்கு டையாராக இருந்து வழிகாட்டலும் ஊக்கம் அளித்தலுமே அவரது பணி யாகும்.

என்பதே அம்மையாரின் சிறந்த கருத்துக்க ளாகும்.

பிற்றாஸ் (Pittas) என்பவரின் கருத்துப்படி அறிவு அதனூடான விளக்கம் பெற்ற விழுமி யங்களினூடாக உளவளர்ச்சியை மேம்படுத் துவதே கல்வி எனக் கருதுகிறார். காந்திமகா னின் ஆதாரக் கல்வி முறை தத்துவஞானிக ளாகிய றஸ்கி(Ruskl), ரோல்ஸ்ரோய்(Tolstov) போன்ற பேரறிஞர்களின் கருத்துக்களை உர மாகக் கொண்டு தமது கல்விக் கருத்துக்களை முன்வைத்தார். உடல், உளம், ஆன்மா ஆகிய மூன்று பண்புகளையும் வளர்க்க கூடியதாக கல்வி முறை அமைய வேண்டும் என்பது இவரது கருத்தாகும். இவரது தாய்மொழி யிலே கல்வி கற்றல் வேண்டும் என்பது தற் போதும் பின்பற்றப்பட்டு சிறப்படைவதைக் காணலாம்.

மேற் கூறிய கல்விச் சிந்தனையாளர் களின் கல்விக் கருத்துக்கள் வரையறுக்கப் பட்டு போதனை முறைகளும் உருவாக்கப் பட்டது. இன்றைய சமுதாயத்தில் கல்வியின் பயன்கள் முன் எப்போதையும் விட அதிக அக்கறையோடு எதிர்பார்க்கப் படுகின்றன. எந்த ஒரு துறையிலும் நாட்டு முன்னேற்றம் மாணவர்களுக்கு அளிக்கப்படும் கல்வியின் தரத்தைப் பொறுத்தே அமைகிறது. ஆகவே அறிவியல் கணணோட்டத்தில் கல்விக் கூறு களை ஆராய்ந்து உண்மைகளைக் கண்ட றிந்து சிறந்த கல்வியை வழங்குவதன் மூலமே நாட்டிற்கு உகந்த சிறந்த குழந்தைகளை உருவாக்க முடியும்.

---

கல்வி, பயிற்சி எல்லாம் மனிதரை உருவாக்கவே அமைதல் வேண்டும்.

—சுவாமி விவேகானந்தர் —

சிறுகதை

# ஊமையாகும் உண்மைகள்

ஆ. புட்கரன்
ஆரம்பநெறி
(விடுகையாண்டு)

பரீட்சை நெருங்கிக் கொண்டு வருவதால் பாடங்களைச் செம்மையாக கற்பித்து முடிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் கற்பித்துக் கொண்டு நின்ற சுந்தரிடம் பியூன் வந்து "சேர்... உங்கள... அதிபர் வரச்சொல்லிச் சொன்னாரு..." என்றான். ஏன் வரச் சொல்கிறார்? என்று புரியாமலே அதிபரின் காரியாலயத்தை நோக்கி நடந்தான் சுந்தர். அங்கு 'குட்மோனிங் சேர்' என்றவனுக்கு 'குட் மோனிங்' என்று அதிகாரத் தோரணையில் கூறிய அதிபர் 'ம்... பிடியுங்க.....' என்று ஒரு கடிதத்தை நீட்டினார். அதனை வாங்கிப் பிரித்துப் பார்த்த சுந்தர் அதிர்ந்து நின்றான். 'சேர்... எ... என்ன சேர் திடீரென்று...' என்று அவன் முடிக்கும் முன்பே 'மிஸ்டர்... சுந்தர்' 'இது இன்று நேற்று எடுத்த முடிவல்ல. எப்பவோ எடுத்தாயிற்று. ஆமா! நீங்க தற்காலிகமா வேற பாடசாலைக்கு மாற்றப்படுறீங்க. அதற்கான கட்டளதா இது...' என்று தொடர்ந்தார் அதிபர். அப்போது சேர்.. நா...' என்று சுந்தர் தொடங்கும்போது 'இந்தா பாரு தம்பி! காதலிக்கிறது தப்பு என்று நா சொல்லவரல்ல. ஆனா இதே பாடசாலையில படிக்கிற மாணவியை இதே பாடசாலையில் கற்பிக்கிற நீங்க காதலிக்கிறீங்க பாருங்க...' 'அதத்தா நான் தப்பு என்கிறேன்...' என்றவரைப் பார்த்து 'சேர்...... நா...... நானா நோ... .நோ... ... எனக் கத்தினான் சுந்தர். 'ஐ ஆம் வெரி சொறி. மிஸ்டர் சுந்தர் இனி நீங்க எதச் சொல்லியும் என்ன பிரயோசனம். நீங்க இன்றைக்கே அந்தப் பாடசாலையில போய்ச் சேர்ந்து கொள்ளுங்க...' என்று திட்ட வட்டமாகக் கூறி முடித்தார் அதிபர். அவனால் தொடர்ந்து எதுவுமே பேசமுடியவில்லை. கையில் கட்டளையுடன் வெளியே வந்த சுந்தரைப் பார்த்து 'சேர்... என்று ஏதோ சொல்ல முனைந்த கிருஷ்ணாவைத் திரும்பிப் பார்த்தவன் கையால் சைகை செய்து விட்டு நடக்கத் தொடங்கினான். இத்தனைக்கும் அவன் செய்தது என்ன? அவன் தவறு செய்தானா?

நாட்டின் பல்வேறு பிரச்சினைகளுக்கும் மத்தியில் ஓர் வறுமை நிறைந்த குடும்பத்தில் படித்துப் பட்டதாரியானவன் தான் சுந்தர். தான்பட்ட துன்பங்களை ஏழை மாணவர் படக்கூடாது என்ற வைராக்கியம் கொண்டவனாக ஆசிரியத் தொழிலையே தேர்ந்தெடுத்தான். முதல் நியமனம் பெற்று அந்தப் பாடசாலைக்கு வந்தவனுக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது.

அன்று புதன்கிழமை மணியடித்ததும் தனது நேரசூசியைப் புரட்டிப் பார்த்தான். 13ம் ஆண்டுக்குப் பாடம். இந்த ஒகஸ்டில் பரீட்சை எடுக்கும் வகுப்பு என்பதால் மிகுந்த அக்கறை கொண்டு கற்பித்து வந்தான் சுந்தர். அவன் வகுப்பறையை நோக்கிச் சென்றபோது வெளியே அழுது கொண்டு நின்றாள், அவளை நெருங்கிய சுந்தர் "ஏன் கிருஷ்ணா அழுறீங்க...? என்று கேட்ட அவள் பதில் எதும் கூறாமல் அதிபரின் அலுவலகத்தை நோக்கிச் சென்றவள் மீண்டும் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினாள். "கும் இவரும் அவரைப் போல ஒரு ஆசிரியர் தானே. இவரிடம் சொல்லி எமக்கு என்ன பயன் என்று எண்ணியபடியே வீட்டைச் சென்றடைந்தாள் கிருஷ்ணா. அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டு நின்றபின் சுந்தர் வகுப்பினுள் நுழைந்தான். நடந்ததை விசாரித்தான். ஆம அவர்களின் வகுப்பாசி

ரியை பரீட்சைக் கட்ட ணம் செலுத்தும் படி கூறியதாகவும் ஆனால் இது வரை கிருஷ்ணா மட்டுமே பரீட்சைக் கட்டணம் செலுத்த வில்லை என்றும் அதற்கு அவள் இரண்டு நாட்கள் அவகாசம் தரும்படி கேட்டதாகவும் கூறினார்கள். அதற்கு வகுப்பாசிரியை 'சே... எக்ஸ்சாம் பீஸ் கட்டிக்க வக்கில்லாத உனக் கெல்லாம் எதுக்கிடி படிப்பு... போய் எங் காவது வீட்டு வேல செய்து வயிற்றக் கழு விக்க ' என்று திட்டி விட்டார். ஆனால் கிருஷ்ணாவோ சிறந்த கெட்டிக்காரி. ஏன் அவளால் பரீட்சைக் கட்டணம் செலுத்த முடியவில்லை என்பதை அறிய வேண்டும் என எண்ணினான் சுந்தர். ஒரு மாணவனின் உதவியுடன் அவள் வீட்டுக்குச் செல்வதெனத் தீர்மானித்தான். ஆராயாமல் முடிவெடுப் பது ஆபத்தில் முடியுமல்லவா?

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் சுந்தர் ஒரு மாணவனின் உதவியுடன் கிருஷ்ணாவின் வீட்டை நோக்கிச் சென்றான். வயல் சூழ இளந் தென்னை மரங்களுக்கிடை யில் அமைந்திருந்தது அந்த வீடு. வழியில் வரும்போது காலில் ஒட்டிக் கொண்ட சேற்றை வயல் வாய்க்காலில் கழுவி விட்டு வீட்டை நோக்கி நடந்தார்கள். அங்கு தனது தாய்க்கு மருந்து கொடுத்துக் கொண்டு இருந்த கிருஷ்ணா எழுந்து பழைய பாய் ஒன்றை எடுத்து விரித்தாள். 'சேர்... நீங்க...' என்று அவள் முடிக்கும் முன்பே 'உன்னத் தேடித்தா கிருஷ்ணா வந்தேன். ஏன் இப்ப ஸ்கூக்கே வாறதில்லை...'? என்று தெரியாத வன் போல் வினாவினான். அவளுக்குத் துக் கம் தொண்டையை அடைத்தது. அவள் சுந்தரிடம் சொல்லாமல் வீட்டுக்கு ஓடிவந் தது ஞாபகம் வந்தது. தன்னைச் சுதாகரித் துக் கொண்டவள் நடந்ததைச் சுருக்கமாகக் கூறி முடித்தாள். 'ஆமா... சேர் என் னட அப்பாவோ அண்ணனோ இருந்திருந்தா இல்ல அம்மாவுக்கு மட்டும் உடல் நில நல்லா இருநதிருந்தா நான் தான் சேர் முதலில எச்ஸ்சாம் பீஸ் கட்டியிருப்பேன் ' என்றவளி டம் அவனது குடும்ப நிலையை அறிய வேண் டும் என்ற ஆவல் சுந்தருக்கு ஏற்பட்டது.

ஆம்! அவளுடைய அப்பா கூலி வேலை செய்து குடும்பத்தைப் பாதுகாத்ததுடன் கிருஷ்ணாவினதும் அவளது அண்ணனினதும் படிப்பையும் கவனித்து வந்தார். ஒரு நாள் அவர் வேலைக்குச் சென்று வரும் போது அவர் வந்த வீதியில் பாதுகாப்புப் படையின ரின் ரக்வண்டி ஒன்று கண்ணி வெடி வைத் துத் தகர்த்தப்பட்டது. அப்போது ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி அவளது தந்தை மரணமானார். ''ஆமா தம்பி அவ ரோட உடலக்கூட கண்ணால பார்க்கக் கொடுத்து வைக்கல்ல...' என்று கூறி அழுத கிருஷ்ணாவின் அம்மாவை ஒருவாறு தேற்றி னான் சுந்தர். சிறிது நேரத்தில் மீண்டும் தமது சோகக் கதையின் அடுத்த அத்தியா யத்தைத் தொடர்ந்தாள் கிருஷ்ணா.

தந்தை இறந்த பின் குடும்பப் பொறுப்பு கிருஷ்ணாவின் அண்ணனின் தலையில் வந்தது அவன் கஸ்ரப்பட்டு உழைத்தான். ஆனால் ஒரு நாள் அக்கிராமம் பாதுகாப்புப் படையி னரால் சுற்றிவளைக்கப்பட்டது. அப்போது விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட அவளது அண்ணன் இன்றுவரை எங்கே இருக் கின்றான் என்பது கூடத்தெரியாது. 'ஆமா ...சேர்...அப்பாதா அப்படிப் போயிட்டாரு என்று பார்த்தா அண்ணனும் ' என்ற வளுக்கு மேலே தொடர முடியாமல் அழத் தொடங்கினாள். அவளுக்கு ஆறுதல் கூறித் தேற்றினான் சுந்தர். சிறிது நேரத்தில் 'இந்த' நிலமையில நான் படிப்ப விட நினைச்சேன். ஆனா அம்மாதா விடல. அப்பம் விற்று அதில வருகின்ற வருமானத்தில என்னப்படிப்பிச்சா' ஆனா... என்றவள் மேலே தொடர முடியா மல் நின்றாள். சுந்தருக்கு மீதி விளங்கியது. ஆம் அவள் தாய் சுகயீனமுற்றிருக்கிறாள். அதனால் பணம் சம்பாதிக்க முடியவில்லை. பரீட்சைக் கட்டணம் செலுத்தவும் முடிய வில்லை. இவற்றை அறிந்த சுந்தரின் கண்க ளில் கண்ணீர் மல்கியது. நீண்ட மௌனத் தின் பின் 'கிருஷ்ணா நீ நாளையில இருந்து ஸ்கூலுக்கு வாரா. பரீட்சைக் கட்டணத்த நான் செலுத்துறேன்'' என்று சுந்தர் கூறிய போது கிருஷ்ணாவின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சுரந்தது. நீண்ட நேரத்தின் பின் விடை பெற்றுச் சென்றான் சுந்தர் இந்தக் காலத்தில் இப்படியொரு ஆசிரியரா? எனத் திகைத்து நின்றாள் கிருஷ்ணாவின் தாய்.


கிருஷ்ணாவின் பரீட்சைக் கட்டணம் செலுத்தியது முதல் கிருஷ்ணாவின் நலம் விசாரிப்பதிலும் அக்கறை செலுத்துவதை

அவதானித்த வகுப்பாசிரியை இருவரையும் இணைத்து மெதுவாகக் கதையைக் கட்டி விட்டாள். அது விசுவரூபம் எடுத்தது தான் உழைப்புக்காக நடாத்தி வந்த பகுதிநேர வகுப்புக்களை இலவச வகுப்பு வைத்துக் கெடுத்த சுந்தரைப் பழிவாங்க இதனைப் பயன் படுத்தினாள் அவளது வகுப்பாசிரியை. முடிவு சுந்தரின் கைக்கு மாறுதல் கடிதம் கிடைத்தது. அவன் அந்த வகுப்பு மாணவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு நடந்தான். கிருஷ்ணா ஒரு மூலையில் அழுது கொண்டு நின்றாள். நல்ல ஆசிரியனை இழந்த ஏக்கத்தில் அவனையே பார்த்துக் கொண்டு நின்றார்கள் மாணவர்கள். ஏன் அவன் செய்தது குற்றமா ..? குடும்ப நிலையறிந்து உதவியது குற்றமா ...?ஒரு ஆசிரியருடன் மாணவிகதைப்பது குற்றமா...? இலவச வதப்பு வைத்து ஏழை மாணவர்களை வளர்த்தது குற்றமா... ? அதைப் பழிவாங்க இதுதானா வழி ..?இதற்கு மற்றவர்களும் உடந்தையா...? ஆம்! உண்மைக்கும் சத்தியத்திற்கும் மாணவரின் நன்மைக்கும் உழைக்கின்ற சுந்தரைப் போன்ற ஆசிரியர்கள் இருக்கும் நாட்டிலே கிருஷ்ணாவின் வகுப்பாசிரியை போன்ற சுயநலத்துக் குழைக்கும் புல்லுருவி ஆசிரியர்களும் இருக்கத்தானே செய்கிறார்கள். இவர்களின் சதிக்குச் சுந்தர் மட்டுமென்ன விதிவிலக்கா...? அவனது நற் சேவையை என்றோ அவர்கள் உணரத்தான் போகிறார்கள். அப்போது இவர்களால் என்ன செய்ய முடியும். உண்மைகள் ஏன் ஊமையாகி விட்டன. அவை வெளிச்சத்துக்கு வருமா?


கலைச்செல்விக்கு எமது நல்வாழ்த்துக்கள்

நதியா ஜுவலர்ஸ்

WASTE GOLD, CARAT GOLD, AND SILVER
AT HIGHEST PRICE
ORDERS ARE PROMPTLY EXECUTED



NADIYA JEWELLERS
280/7A (Upstair) SEA STREET,
COLOMBO - 11

# உலக கிண்ண கிரிக்கட் போட்டி - 1992

| நாடுகள் | 1987 தலைவர்கள் | 1992 தலைவர்கள் |
|---|---|---|
| 1) அவுஸ்திரேலியா | — அலன் போடர் | அலன் போடர் |
| 2) நியுசீலண்ட் | — ஜெவ் குறோ | மார்ட்டின் குறோ |
| 3) இங்கிலாந்து | — மைக் கட்டிங் | கிறகாம் கூச் |
| 4) பாகிஸ்தான் | — இம்ரான்கான் | இம்ரான்கான் |
| 5) இந்தியா | — கபில்தேவ் | மொகமட் அசாருடீன் |
| 6) இலங்கை | — துலிப் மெண்டீஸ் | அர்ஜுனா ரணதுங்க |
| 7) மேற்கிந்தியதீவு | — விவ் ரிச்சட்ஸ் | ரிச்சி ரிச்சட்சன் |
| 8) சிம்பாப்வே | — யோன் ரெகோஸ் | யோன் ரெகோஸ் |
| 9) தென்னாபிரிக்கா | — | கெப்லர்வெ:சல்ஸ் |

*21 - மார்ச் - 91* அரை இறுதி ஆட்டம் (ஒக்லண்ட்) இங்கிலாந்து எதிர் தென்னாபிரிக்கா

*22 - மார்க் - 92* அரை இறுதி ஆட்டம் (சிட்னி) பாகிஸ்தான் எதிர் நியுசிலண்ட்

*25 - மார்ச் - 92* இறுதி ஆட்டம் (மெல்பேர்ன்) இங்கிலாந்து எதிர் பாகிஸ்தான்

1992 உலக கிண்ண கிரிக்கட்டில் **பாகிஸ்தான்** உலகக் கிண்ணத்தைத் தட்டிக் கொண்டது.

1987 உலகக் கிண்ணத்தை **அவுஸ்திரேலியா** பெற்றது.

தொகுப்பு: **என். வன்னியசிங்கம்**
ஆரம்ப நெறி
(விடுகையாண்டு)

✲

---

உழைப்பது கேவலம் என்ற எண்ணத்தைப் போக்கி உழைப்பது உயர்வு என்ற எண்ணத்தை உருவாக்குவது கல்வி.

காந்தி

---

# ஆசிரியன்

பெ. தணிகாசலம்
ஆரம்பப்பிரிவு
இரண்டாம் வருடம்

PUBLIC LIBRARY
31 - 1992
BATTICALOA

கல்விதரும் நல்(ல) ஆசான்களே!
காணக்கிடைக்கின்ற தெய்வங்களே,
சொல்லித்தரும் அந்தக் கூடங்களே
சொர்க்கத்தில் ஏற்றிடும் ஏணிகளே!
மாணவ மனதினுட் புகுந்து,
மாண்புடன் கல்வியைப் புகட்டிடுவான்
ஆணவமனதை ஆட்கொண்டே
ஆரம்பபாடத்தை தொடக்கி வைப்பான்!
படித்த பாடத்தை அழகாக,
பதியும்படி செய்வான் தெளிவாக,
படித்த மாணவன் பேர் விளங்க
பின்னணியாகவே செயற்படுவான்,
கற்கை புகட்டிடும் ஆசிரியன்
கடவுள் படைத்திட்ட தெய்வமகன்
என்னைப் படைத்திட்ட ரட்சகனே!
என்றும் குருவாய்ப் படைத்திடடா! - சமூகம்
ஏற்கும் குருவாய் வளர்த்திடடா!

## வேறுசீர்

கற்பூரம் ஒளிபரப்பும்,
- காய்ந்துவிடும்.

மெழுகு உருகி நிற்கும்,
- சாய்ந்து விடும்.

சந்தணம் மணம் கொடுக்கும்
- தேய்ந்து விடும்.

மல்லிகை மணம் வீசும்,
- உதிர்ந்து விடும்.

தியாக தீபங்கள் ஓயாது,
- திக்கெட்டும் அவர்கள் புகழ்சாயாது.

வாழ்வுக்கு வழிகாட்டும்,
- வள்ளல்களே!

நற்சமூகத்தை உருவாக்கும்,
- தெய்வங்களே!

## கலாசாலை

ஏட்டுடன் பல பேர்கள்
எட்டுக்கு கூடுகின்றோம்.
பற்பல வித்தைகளை
பரிவுடன் கற்கின்றோம்,
கடமைதனை நெஞ்சிருத்தி
கண்ணியமாய் நடக்கின்றோம்,
நாலரையானவுடன்
நாற்திசையாய் பிரிகின்றோம்.

**
**

## வர்க்க பேதம்

உடல் ரத்தம் குடித்த
மூட்டைப் பூச்சிகளை
நசிக்கியே அழித்து விட்டோம்.

ஆனால்,
தொழிலாளர் உதிரத்தை உறுஞ்சும்
முதலாளிகளை
உரமிட்டு வளர்க்கின்றோம்/வளர்த்துக் கொண்டோம்.

அதனால்,
தொழிலாளி குடிசையிலே......
முதலாளி மாடியிலே......

விளைவு,
தொழிலாளி கண்ணீரில்......
முதலாளி பன்னீரில்......

**
**

## வித்தியாசமானவர்கள்

ஓர் உயிரைக் கொன்ற அவன்
பயங்கரக் கொலைகாரன்
பல உயிரைக் கொன்ற அவர்
பெயர் பெற்ற வைத்தியன்.

# வாழ்வில் ஊழ்

தில்லை நடராஜா
ஆரம்ப நெறி
(விடுகையாண்டு)

தமிழரின் தனிப்பெருஞ் செல்வமாம் சிலப்பதிகாரத்தில் அரசியல் அறங்கள் பேசப்படுவதையும், உயர்சார் பெண்டிரை உயர்ந்தோர் போற்றும் பண்பையும், ஊழின் வலிமையைக் காட்டி நிற்பதையும் நாம் காண்கின்றோம்.

உள்ளத்தோடு ஒன்றிக் கலந்துவிடும் உயிர்ப்புள்ள கதாபாத்திரங்களாகக் கண்ணகியும், கோவலனும், மாதவியும் சிறப்பாக இதனில் அமைத்துத் தந்துள்ளார் இளங்கோவடிகள் அவர்கள். இதில் சின்மொழிச் செல்வி கண்ணகியின் உள்ளம் 'அறவோர்க் களித்தலும், அந்தணரோம்பலும், துறவோர்க் கெதிரலும். விருந்தெதிர் கோடலுமே'. ஒழுக்கந்தழகினையே உயிரின் உண்மை வடிவமாகக் கண்டு அதன் வடிவையே உலகமும் அடைய வேண்டும் எனப் பெரும் புரட்சி செய்து தெய்வமாகின்றாள். கோவலனோ ஆரவாரங்களைப் பெரிதும் விரும்பிக் கலையார்வம் கொண்டு, கற்பின் வடிவான தன் மனைவி கண்ணகியை விட்டு மாதவி பாற் கவரப்பட்டு, குன்று போன்ற தன் செல்வமெல்லாம் இழந்து, வறுமை தந்த காரணத்தால் கண்ணகியின் காற்சிலம்பை விற்கச் சென்ற போது காலனுக்குப் பலியானான். மாதவி கலையின் விளக்கமாக நின்று கோவலனால் கவரப்பட்டு 'கோவலன் பிற கன்னியரை அணைந்து வந்தாலும் மாதவியாகிய நான் புலத்தலாகாது' எனக் கோவலன் தன் தனித்திறத்தை விளக்கித் தன் உரிமையை வேண்டிப்பாடி உடையானை இழந்து நிற்கின்றாள். ஆக இவைகளை வைத்து நோக்கும் போது ஊழின் செயற்பாடு ஓங்கி நிற்பதனை நாம் உணர்கின்றோம். இவ்வூழ் ஆரம்பிக்குமிடமாக, திருப்பு முனையாக கானல்வரி அமைந்துள்ளது.

கானல்வரியில் சமுதாயச் சூழலில் யாழ் பெரு விளக்கம் பெறுகின்றது. இவ்யாழின் விளக்கமே ஊழின் பெரு விளக்கமாகக் கானல் வரியில் விளங்குகின்றது. அத்தோடு சமுதாயத்தில் பெண்கள் கலைமகள், விலைமகள் என இரண்டாகக் காணப்பட்டனர். சில பெண்கள் கற்புடன் வாழப் பிற பெண்களை அது பரத்தையர் ஆக்கியது. இவர்கள் வாழ்வில் கலை பொருளாகிற்று. இக்கலையோடு விளங்கிய கலைமகள் விலை மகளானாள். கலையுள்ளம் படைத்த ஆடவன் கலையினத்தேட விலை மகளை நாடினான். கற்பைத்தேட குலமகளைத் தேடினான். இவ்விரு மகளையும் நாடியவன் கோவலன். இவனது இவ் இரண்டாட்டம் ஊழிற்குக் கொண்டாட்டமாகியது.

கடலாடுகாதை காட்டும் இந்திரவிழாவில் மாதவி இமையவர் இதயமும் ஆட நடனமாடினாள். பலர் முன் நடனமாடியமையால் கோவலன் அவளோடு ஊடல் கொண்டிருந்தான். அன்று ஆடற்றொழில் புரியும் போது ஆயிரத்தெட்டு பொற்களஞ்சி பெற்றுப் பெற்ற மாதவி இன்று நடனமாடும் போது கோவலன் ஊடல் கொண்டது நியாயமில்லை. இவ்வூடலுக்குக் காரணம் அவனுக்கு வறுமை தந்த தாழ்வுணர்ச்சியே. இதைக் கோவலன் கண்ணகியிடம் மீண்டபோது கூறும் பின்வரும் கூற்றிலிருந்து அறிந்து கொள்ளலாம். 'கடல் வாணிபத்தில் தமிழருக்கு ஈடில்லை என்ற புகழ் என்னாலே பெருகிற்று...... இன்றோ உடல் வாணிபத்தில் ஈடுபட்ட ஒருத்தியிடம் அறிவிழந்தேன், அளவிட முடியாத பொருள் இழந்தேன்; புலம்புகின்றேன் ஏழையாக' - எனக் கூறுகின்றான். இங்கு அவன் வறுமைக்குக் காரணம் ஊழ்,

காதலன் விரும்புவதையே காதலியும் விரும்ப வேண்டும் இது மாதவி எண்ணம். கோவலன் ஊடல் கொள்ளும் போதெல்லாம் அவனின் ஆரவாரத்திற்குரித்தான, அவன்

மனம் மகிழக் கூடிய செயல்கள் செய்து கூடலானாள். பலர்முன் நடனமாடியதனால் ஊடற் கோலமோடிருந்த கோவலன் உவக்கும் வண்ணம் மாதவி பலவகை ஆடை ஆபரணங்களை அணிந்து தன்னை அலங்கரித்துக் கூடுகின்றாள். இதனைத் தவிர அவளுக்கு அப்போது வேறு வழி எதுவும் தோன்றவில்லை. இதுவும் அவன் உள்ளத்தில் திருப்தியாய் அமையவில்லை. அவன் வறுமை மாதவி மனதை உணரத் தடுக்கின்றது. இத்தடையும், அவன் விரும்பிய ஆரவாரத்தை அவள் அளித்தமையும் இங்கு மாதவி கோவலன் பிரிவிற்கும் ஒரு காரணமாகியது. இக்காரணத்தை ஏற்படுத்தியது ஊழ்.

ஊடல் கோலமோடு இருந்த கோவலனை உவக்கச் செய்து கடலாட வந்த மாதவி தன் அருமைத் தோழி வயந்தமாலை ஏந்தி நின்ற யாழைத்தொழுது வாங்கி 'பாணியாது?' எனக் கூறிக் கோவலன் கையில் நீட்டினாள். கோவலன் காவிரியைக் கண்ணகியிடத்து வைத்துப் பெரு மதிப்பும் கொண்டு பாடுகிறான். மாதவி, 'மன்னுமோர் குறிப்பு உண்டு; இவன் தன் நிலை மயங்கினான், எனக் கருதிக் 'கலவி' யான் மகிழ்ந்தாள் போல் புலவியால் யாழ் வாங்கிப் பாடத் தொடங்கினாள். இங்கு ஊழ்வினை உறுத்த யாழிசைத்துக் கோவலனும், மாதவியும் குறிப்புப்பொருள் வைத்துப் பாடுகின்றனர். கோவலன் மாதவிக்கு ஊடலும் கூடலும் புதியவையல்ல. இங்கு மாதவி ஊடிக்கூட விரும்பிப் பிறிதோர் ஆடவன் பால் தனக்குக் குறிப்பு உண்டு. எனக் கோவலன் பொருள் விளங்கும் வண்ணம் பாடுகின்றாள் இதனை உண்மை எனத் துணித்த கோவலன் 'மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள்' என மாதவியைக் கருதுகின்றான். இருவர் வாழ்விலும் விதி விளையாடுகின்றது.

'நீ படைக்கப்பட்டவளல்ல!... உன்னை யாரும் படைக்க முடியாது!... தங்கநிற ஒளி காட்டும் மேனியிலே தவழ்கின்ற பேரழகை.. சேற்கெண்டை செவுள் போல நிறங் காட்டும் இதழ்களிலே ஊறுகின்ற பாலமுதை... கண்ணாடிப் பேழைக்குள் சிறைப்பட்ட கருவண்டு அலைவது போல் காட்சி தரும் விழியிரண்டை - கருவுற்ற மேகம் போல் இருண்டு கண் பறிக்கும் விதத்தினிலே சுருண்டு -கால் வரையில்எட்டுகின்ற மயில்த்தோகை போன்ற மழைக் கூந்தல் அழகை..... தேனாற்றில் புலாச்சுளை போல் மிதக்கின்ற நாக்கில் படுகின்ற காரணத்தால் சுவை பெற்றுச் சிந்துகின்ற மொழி வளத்தைப் படைப்பதற்கு பாரினிலே யாருமில்லை...! உனைப் பார்த்துத்தான் இனிமேல் பாவையர்க்கு அழகைப் படைக்க வேண்டும். எனத் திட்டமிடுவான் படைப்புத் தலைவன்'!...... என மாதவியை அன்று வர்ணித்த கோவலன் இன்று-'கானல் வரியான் பாடத் தானொன்றின் மேல் மனம் வைத்து மாயப் பொய் பல கூட்டு மாயத்தாள் பாடினாள், என்று மாதவியைப் பற்றி முடிவு செய்யுமளவிற்கு ஊழ் இங்கு செயற்படுகின்றது.

முழுமதி போன்ற முகத்தாளாகிய மாதவியின் பற்றிய கரம் நெகிழ்ந்தது. 'பொழுது போயிற்று போவோம்' என்று கூற மாதவியுடன் எழாமல், தன் ஏவலாளருடன் வீறு நடை போட்டான் கோவலன். வெண்மணற் குன்றுகளும், தாழை மலர்களையும், புன்னை மரங்களையும் உடைய அக்கடற்கரை எவருக்குமே காதலை வளர்க்கும் இயற்கை நிறைந்த இடம். அக் கடற்கரையிடத்து தன்னந்தனியளாய் மாதவியை விட்டுக் கோவலன் சென்றானென்றால் ஊழின் வலிமை இவர்களின் வலிமையை வெற்றி கொண்டு விட்டதென்பதே பொருள்.

இடியுண்ட மயில் போலத் துயருண்ட மாதவி, விளையாத துயரம் விழைந்து வீடு சேர்ந்த நேரத்திலும், தன் துயரை மறந்து- நாட்டின் வேந்தனை நினைந்து - காவிரி நாடனைப் போற்றி உலகில் உள்ள அரசர்களையெல்லாம் தலைவணங்கச் செய்யும் சோழ வேந்தன் நீடு வாழ்க - என்று பாடுகிறாள். இப்படியான மனம் படைத்தவளைக் கூட ஊழ் வென்றுவிட்டதே!

இதனோடு ஊழ் தனது வேலையை முடித்துக் கொள்ளவில்லை. கற்பரசி கண்ணகி இல்லத்தையடைந்த கோவலன் மாயப்பொய் பல கூட்டும் மாயத்தாளிடம் உறவு கொண்டு மலை போலும் பொருட் குவையெல்லாம் பாழாயிற்று! எனக் கூற, கண்ணகி ''தன்னிடம் இரண்டு சிலம்புகள் இருக்கின்றன பெற்றுக்கொள்ளுங்கள்'' எனக் கூறிக் கொடுக்க 'இதனை முதலாகக்கொண்டு வாணிகம் புரிந்து தொலைந்த பொருளை

யெல்லாம் மீண்டும் திரட்டுவேன்' எனக்கூறி பாண்டி நாட்டிற்கு விற்கச் செய்கின்றான். அங்கு 'அரசனது கோயிலில் இருந்த அழகிய சிலம்பை அரவம் சிறிதுமின்றிக் கவர்ந்த கள்வன்' என்று குற்றஞ்சாட்டப்பட்டு பாண்டிய மன்னனால் கொலை செய்யப்பட்டான். இங்கு ஊழ் பல வகையில் செயற்படுகின்றது. கோவலன் கள்வன் எனக் கண்டு கொலையுண்டது ஊழ், பாண்டி மன்னனின் செங்கோல் வழுவக்காரணமாகியதும் ஊழ்.

கோவலன் இறந்த செய்தி கேட்ட கண்ணகி இருளின் முன் ஒளி போலப் பாண்டியன் முன் சென்று நீர் வாரும் கண்களோடு நின்றாள்.

மன்னன் - 'மடக்கொடியே! நீர் சொரியும் கண்களோடு என் முன்னே வந்த நீ யாரோ? என வினவ கற்பரசி ஆத்திரம் பொங்கும் குரலில்... 'அறப்பெருமை சான்ற பூம்புகாரில், புகழ் பொருந்திய பெரும் குடியில் மாசாத்துவான் என்ற மாபெரும் வணிகரின் மகனாய்ப் பிறந்து, வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்ப, உன் நகரில் நுழைந்து, என் காற்சிலம்பை விற்கக் கருதிய நேரத்தில் உன்னால் கொலை செய்யப்பட்ட கோவலரின் மனைவி நான்; கண்ணகி என் பெயர்' என்றாள். மேலும் என்னுடைய பொற்சிலம்பின் உள்ளே இருப்பது மாணிக்கப்பரல் என்றாள். மன்னன் தன் தேவியின் உள்ளே இருப்பது முத்துப்பரல் என இருவரும் வாதாடிய வண்ணம் ஆத்திரம் பொங்கி எழ தன்னொற்றைச் சிலம்பைக் கணிரென உடைத்தாள் கண்ணகி. தெறித்தன மாணிக்கப்பரல்கள்.

''பொன்செய் கொல்லன் தன்சொல்கேட்ட
யானோ அரசன்! யானே கள்வன்!
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது! கெடுகவென்
னாயுள்''!

எனக் கூறிய மன்னன் சிம்மாசனத்திலிருந்து இறந்து வீழ்ந்தான். மனைவி கோப்பெருந்தேவியும் தன்னுயிர் மாய்த்தாள், பாண்டி நாடே எரிந்தது. அரசியல் பிழைத்ததனால் நிகழ்ந்த அனர்த்தங்களை ஊழ் சிறப்பாக செய்தும் முடித்தது. இத்தோடு சமுதாயத்தில் ஆழ்ந்து வேர் கொண்ட புற்றுப்புண்ணும் எரிந்தது. கண்ணகி தெய்வமானாள். உருவாகும் சமுதாயம் நற்சமூகமாக வேண்டுமென அவள் தாழ் வணங்கி வளம் பல பெற்று வாழ்தல் நம் சிறப்பு.

## தெரிந்தும் தெரியாதவை

| | |
|---|---|
| பத்துப் பாட்டுள் முத்தமிழ் விரவிய நூல் | - பொருனராற்றுப்படை |
| நிலையாமையைக் குறித்துப் பாடிய நூல் | - மதுரைக் காஞ்சி |
| தமிழரின் இசைக் கருவிகளைக் கூறும்நூல் | - மலைபடுகடாம் |
| தமிழரின் வீரம், அறம், கொடை பற்றிய நூல் | - புறநானூறு |
| தமிழில் மூவகைத்தொகை நூல்கள் | - எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு |
| தமிழில் ஐம்பெரும் காப்பியம் | - சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி |
| தமிழில் ஐஞ்சிறுங் காப்பியம் | - யசோதர காப்பியம், சூளாமணி, உதயண குமார காவியம், நாககுமார காவியம், நீலகேசி |

# விடிவு

எஸ். ரவிநாதன்
ஆரம்பக்கல்வி
இரண்டாம் வருடம்

கனலி வெயிற் காய்ந்து
கடும் உழைப்பால் உடல் சோர்ந்து
தினமும் உழைக்கின்ற
தீரமுடை உழைப்பாளி
தனமும் தனதின்றி தடுமாறும்
நிலைகள் நிலையாது போகாதோ?

அண்ணனுக்குத் தம்பி பகை
அன்று பாரதத்தில் படித்தகதை - இன்று
திண்ணமென திழைத்ததனால்
திணறி விட்ட சமுகநிலை - இவ்
மண்ணகன்று மரணித்து
மாலையிது விடிந்திடுமோ?

குலங்களிடை குடிப்பிரிவு
கூடிவாழ் வோரிடையே பிரிவு - தினம்
கலங்கி வரும் மனிதறிவால்
கண்டு விட்ட விளைவொருநாள்
விலக்கியொரு நல்லறிவாய்
விடிவு வரும் எந்நாளோ?

வாழையடி வாழை யென
வளர்ந்து வரும் வாரிசுகள்
வேளைக் கொரு பயிராய்
வீதியிலே வீழ்வதனால்
நாளைக் கொரு சமுகம்
நலிந்து விடும் நடுவிரவாய்.

# கீதை கூறும் ஒழுக்கம்

வே. பாலசுப்பிரமணியம்
ஆரம்பநெறி
(விடுகையாண்டு)

இந்திய மெய்யியல் நூல்கள் அனைத்தும் கடவுள், ஆன்மா, உலகு என்ற கருப்பொருளை மையப் புள்ளியாகக் கொண்டு தம் அறிவியல் கருத்துக்களை எடுத்துக் கூறுவதை நாம் காண முடிகின்றது. இந்த வகையில் கீதையும் அவற்றின் பாற்படும். இது இந்து சமயக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு மத சார்பான நூல் என்றும் கொள்ளலாம். இருந்த போதிலும் இதன் கருப்பொருளும் இந்திய மெய்யியலின் அடிப்படைக் கருத்துக்கு முரணில்லாது சார்ந்து செல்வதையே காணக் கூடியதாக உள்ளது. இது பதினெட்டு அத்தியாயங்களையும் எழுநூறு சுலோகங்களையும் கொண்டது. குருசேத்திரம் என்னும் போர்க்களத்தில் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்குமிடையில் போர் நடை பெறுவதாகவும் அந்தப் போர்க்களத்தில் கிருஷ்ணன் கூறும் உபதேசமும் அதற்கு அவர்களுக்கு இடையில் நடைபெறும் சம்பாஷணைகளும் இங்கு தொகுத்துக் கூறப்படும் உள்ளடக்கத்தைக் கீதை தன்னகத்தே கொண்டுள்ளது.

இங்கு வர்ணிக்கப்படும் குருசேத்திரம் என்னும் போர்க்களம் உலகிற்கு வர்ணிக்கப் படுகின்றது. உலகானது ஒரு போர்க்களம் என்றும் அதில் எப்பொழுதும் தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் எதிராகப் போராட்டம் நடந்து கொண்டிருக்கும். எப்பொழுதும் அதர்மம் நீண்டு கொண்டிருக்க முடியாது. உண்மைக்கும் பொய்மைக்கும் நடக்கும் போராட்டத்தில் முடிவில் உண்மை ஜெயம் பெறும் என்றும் எடுத்துக் காட்டப் படுகின்றது.

பகவத்கீதையில் கூறப்படும் பல்வேறு யோகங்களில் கர்மயோகம் முக்கியமானவற்றுள் ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது: மனிதனாகப் பிறந்தவன் சமூகத்தை விட்டு மறைந்து துறவு பூண்டு வாழ்தல் கூடாது என்றும் அவ்வாறான ஒரு வாழ்க்கையால் மானிடப் பிறவியின் பிறப்பின் உண்மைப் பயனைப் பெற முடியாது. என்றும் கூறப் படுகின்றது. எனவே மானிடராய்ப் பிறந்தவர்கள் எல்லோரும் ஏதேனும் ஓர் வழியில் செயலில் ஈடுபட வேண்டும் என்று கூறப் படுகின்றது.

போர்க்களத்திலே அருச்சுனன் நிலை தளர்கின்றான். இங்கு நான் செய்யும் உயிர்க் கொலை எல்லாம் நீதியானதா? அவ்வாறு கொல்வதால் நான் அடையப் போகும் பலன்தான் என்ன? இங்கு நான் கொல்பவர்கள் ஒரு வகையில் எனது இரத்த வழி உறவினர்கள் தானோ போன்ற பல்வேறு வினாக்கள் தன்னுள் எழுந்து நிலை தடுமாறுகின்றான். இவ்வேளையில் கிருஷ்ணர் உபதேசிக்கின்றார். ஆன்மா அழிவில்லாதது. இங்கு கொல்லப்படுபவை வெறும் சடங்களேயன்றி ஆன்மாக்கள் அல்ல. இங்கு நீ ஒதுங்குவதால் தர்மம் தலை தூக்காது மாறாக அதர்மமே தலைதூக்கும். எனவே கட்டாயம் நீர் போர்க்களத்தில் போராடியே ஆகவேண்டும். எப்பொழுதெல்லாம் தர்மம் அழிந்து அதர்மம் தலை தூக்குகின்றதோ அப்போதெல்லாம் நான் தோற்றமளிப்பேன். இங்கு நீ அடையும் தடுமாற்றத்திற்குக் காரணம் உன்பற்றுத் தான் என்று உபதேசிக்கிறார்.

கருமயோகம் கூறும் இச் செயற்பாடானது நிஸ்காமிய கருமம் என்னும் விருப்பு வெறுப்பு அற்ற செயலையே கூறுகின்றது. அதாவது கருமத்தை செய் ஆனால் பலனில் பற்றுவையாதே. இப்பற்றுக்குக் காரணம் உனது மயக்க உணர்வுதான். எனவே மயக்க உணர்வைக் கலைத்து செயலில் ஈடுபடும் போது இப்பற்றற்ற நிலை காணப்படும். இதனையே செயலில் துறவு என்று கூறப் படுகின்றது.

இன்று மானிடரிடம் கோபம் ஆசை மயக்கம் தடுமாற்றம் போன்ற குணாதிசயங்

கள் காணப்படுவதைக் காணலாம். இச் செயற்பாட்டிற்குக் காரணம் அவன் நிஸ்காமிய கருமகொள்கையைக் கடைப்பிடியாமைதான். அதாவது செயலில் பற்று வைத்து வாழ்க்கை நடாத்துவதுதான். இதனால் இவன் தோல்வி, துன்பம், சோகம், இழப்பு போன்ற சோர்பு மனப்பான்மைகளுக்கு ஆளாகின்றான். சதா குழப்பநிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

கீதை கூறும் விருப்பு வெறுப்பற்ற செயற்பாட்டில் ஈடுபடும்போது நிலையான மயக்கமற்ற உண்மையான பேரின்பத்தை அடைய இவனால் முடியும். ஆகையால் எந்தக் காரியத்தைச் செய்யும் போதும் நடுநிலை போக்கு கடன் செயலில் பற்றற்ற நிலையில் ஈடுபடவேண்டும். அப்போது அவனுக்கு அங்கு நீதி செய்வதில் சிரமம் ஒன்றும் இராது அவனது கண்முன் அரசனும் அடிமையும் ஒன்று. அதேபோல் தாய், சகோதரன், நண்பன், செல்வந்தன் என்ற வேறுபாடு தோன்றுவதில்லை. அவ்வாறு தோன்றாத போது நீதி அங்கு நேர்மையில் பேண முடிகின்றது. எனவே அன்றாடம் வாழ்க்கையில் நிஸ்காமிய கர்மமுறையைப் பின்பற்றுபவன் தான் ஆட்சி செய்யவும் நீதி செலுத்தவும் உரியவனாகிறான். வேறுவிதமாகக் கூறுவதானால் நீதி செலுத்துபவனும் ஆட்சி செய்பவனும் தனது வாழ்க்கை முறையில் கீதை கூறும் நிஸ்காமிய கர்ம முறையைப் பின்பற்றுபவர்களானால் அங்கே அறம் செழிக்க வாய்ப்புண்டாகும்.

நிஸ்காமிய கர்மத்தைப் பலர் பிழையாகப் பொருள் கொள்வதும் உண்டு. அதாவது கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்று இங்கு பலனை எதிர்பாராதே என்பதல்ல விடயம் பலனில் பற்று வையாதே என்பதுதான். இதனைப் பலர் விளங்குவதில்லை. கீதை கூறுவது பலனில் பற்று வையாதே என்பதுதான். அதாவது செயலில் துறவு வேண்டும். அப்போது தான் அச்செயல் தூய்மை உடையதாக இருக்கும்.

இந்த உலகின் அமைப்பானது சாதாரணமாக மனிதனால் நிலையற்றது. என்பதை உணர்ந்து கொள்ள முடியாதவாறு அமைந்து காணப்படுகிறது அவன் காண்பவை அவனுக்கு நிலையானவை போல் தோன்றுகின்றன. ஆனால் அவன் தன்னை உணர்கிறான் இல்லை. அவன் நிலையில்லாதவன் என்பதை உணரும் போது இந்த நிலையற்ற வஸ்துக்களில் பற்றுவைப்பதினின்றும் விடுபடுவான். இவை அனைத்தும் ஒரு மாயைத் தோற்றம் என்பதை உணர்வான். ஆகையால் பற்றற்ற செயற்பாடு ஒருவனிடம் தோன்ற வேண்டும். என்றால் அவன் பற்றுக் கொண்டுள்ளவை அனைத்தும் வெறும் போலித் தோற்றங்களே என்றும் உணர்வைப் பெறவேண்டும். உலகில் காணப்படும் சடத் தோற்றங்கள் அனைத்தும் மாறி மாறி நாம ரூபங்கள் எடுக்கக் கூடியவையே எனவே இவற்றில் பற்றுக் கொள்வது பயனற்றது என்பதே கீதை கூறும் அறிவுரையாகும்.

ஒருவன் தனது அன்றாட வாழ்க்கையில் விருப்பு வெறுப்பற்ற செயல் முறையில் வாழும் போது அவனது ஆன்மா பரிசுத்தம் அடைகின்றது. பரிசுத்தம் அடைந்த ஆன்மாவில் பக்தி யோகம் குடிகொள்கின்றது. அப் பக்தி யோகமானது அவனை இன்னும் ஒருபடித்தரம் மேலே இட்டுச் சென்று உண்மையில் மானிடப் பிறவியில் அடைய வேண்டிய இலட்சிய நோக்கை அடையச் செய்கின்றது. அவன் பெறும் இன்பமானது இந்த உலக இன்பங்களில் இருந்தும் வேறுபட்ட ஒன்றாகக் கூறப்படுகிறது. அவன் பேரின்பத்தை அடைகின்றான். கலப்பற்ற களங்கமற்ற தூய ஆன்மாவில் இறைவன் குடி கொள்கிறான் என்று கூறப்படுகிறது. அப்போது அவன் இறைவனுடன் கலப்பற்ற நிலையில் சங்கமமாகின்றான்.

கீதை ஒரு இந்துசமய நூல் என்று கூறப்பட்ட போதிலும் அது எல்லாக் காலத்திற்கும் எல்லா மக்களிற்கும் எல்லா தேசத்திற்கும் பொதுவான ஒரு கருத்தையே கூறுவதால் அதை ஒரு மத சார்பான நூல் என்பதிலும் பார்க்க ஒரு பொது நூல் என்பது சிறப்புடையது. அதன். அடி நாதமாகக் காணப்படுவது செயலில் துறவுதான். இந்த செயலில் பற்றுவையாமை என்பது இன்ன சாதி மனிதனுக்கு மட்டும் உரியதல்ல. மானிடப்பிறவி அவனது பிறப்பின் நோக்கை அடைய வேண்டுமானால் இந்த செயலில் துறவு மிக மிக இன்றியமையாதது.

---

உசாத்துணை நூல் ; இந்திய மெய்யியல் தத்துவங்கள்

# கல்வி உளவியல்

## உளவியல் ஆய்வாளர்கள்

உளவியற்றுறையை ஆரம்பித்தவர் — அரிஸ்ரோட்டில் *(Aristotle)*

உள்ளத்தைப்பற்றி முதன் முறையாக விஞ்ஞான அடிப்படையில் சிந்திக்கத் தொடங்கியவர் — டெஸ்காட்டேஸ் *(Descartes)*

உளவியலில் பரிசோதனை முறைகளை முதலில் அறிமுகஞ் செய்தவர் — வெபர் *(Weber)*

உளவியல் ஆய்வுகளுக்கென முதன்முதலில் ஆய்வுகூடத்தை நிறுவி ஆய்வுசெய்தவர் — வில்லியம் வூண்ட் *(William Wundt)*

ஊக்கல் பற்றிய உளப்பகுப்புக் கொள்கையை முதலில் அறிமுகஞ் செய்தவர் சிக்மன் பிராய்ட் *(Sigmund Freud)*

புலக்காட்சி, அகக்காட்சி, பிரச்சினை விடுவித்தல் ஆகிய துறைகளில் பரிசோதனை நடத்தியோர். கோலர், கொவ்கா, வேதிமர், லிவீன் (Kohler, Koffka, Wertheimer, Lewin)

மனனஞ் செய்வதைப்பற்றி முதன் முதல் ஆய்வு செய்தவர் — எபிங்கோஸ் (Ebbinghaus)

ஞாபகம், சிந்தனை, கவனம் போன்ற உயர் உளத் தொழிற்பாடுகளில் பரிசோதனை நடத்தியோர் — எப்பிங்கோஸ், குல்பே, பியாஜே *(Ebbinghaws, Kulpe, Piaget)*

நடத்தை பற்றிய ஆய்வில் ஈடுபட்டோர் — மக்டூகல், தோண்டைக், ஹல், ஸ்கின்னர்.

### மக்டூகலின் இயல்பூக்கத்தில் மனவெழுச்சியும் தொழிற்பாடும்.

| இயல்பூக்கம் | மனவெழுச்சி | தொழிற்பாடு |
|---|---|---|
| 1. உணவு தேடுக்கம் | பசி | உண்ணுதல் |
| 2. ஆராய்வூக்கம் | ஆச்சரியம் | புலக்காட்சி பெறுதல் |
| 3. போரூக்கம் | கோபம் | எதிர்த்தல் |
| 4. வெறுப்பூக்கம் | வெறுப்பு | விலக்குதல் |
| 5. ஒதுங்கலூக்கம் | அச்சம், பீதி | ஓடுதல் |
| 6. திரட்டூக்கம் | உடமை | திரட்டுதல் |
| 7. ஆக்கவூக்கம் | படைப்புணர்ச்சி | ஆக்குதல் |
| 8. பாலூக்கம் | காதல், காமம் | கூடல் |
| 9. மகவூக்கம் | அன்பு, ஆதரவு | பராமரித்தல் |
| 10. குழுவூக்கம் | சமூகக்காப்பு | குழுச்செயல்கள் |
| 11. தன்னெடுப்பூக்கம் | மேம்பாட்டுணர்வு | ஆதிக்கம் செலுத்துதல் |
| 12. பணிவூக்கம் | தாழ்வுணர்வு | பின்பற்றல் |
| 13. தன்னிழிவூக்கம் | ஆதரவின்மை | அழுதல், முறையிடுதல் |
| 14. சிரிப்பூக்கம் | மகிழ்ச்சி | சிரித்தல் |

மானிட உடலியல், உளவியல் தேவைகள் பற்றி மாஸ்லோ (Maslo) அறிமுகப்படுத்திய படிமுறை.

1. உடலியல் தேவை *(Physiological need)*
2. காப்புத்தேவை (Safety need)
3. அன்பு உறவுத்தேவை *(Love and belongingness need)*
4. கணிப்புத்தேவை *(Esteem need)*
5. சுயதிறனியல் நிறைவுத்தேவை *(Self actualisation need)*

| நுண்மதி ஈவு | மொத்த சனத்தொகையில் சதவிதம் | தொழில்கள் |
|---|---|---|
| 145க்கு மேல் - மேதைகள் | 0 · 2 | பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்ட நிபுணர்கள், விஞ்ஞானிகள், கலைஞர்கள். |
| 130 - 144 - மிகவுயர்ந்த நுண்மதி | 1 · 8 | |
| 115 - 129 - உயர்ந்த நுண்மதி | 10 | தொழில் நுட்பவியலாளர்கள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள். |
| 100 - 114, 85 - 99 சாதாரணம் | 38 | எழுதுவினைஞர்கள், பொலிஸ் அதிகாரிகள், பொறிதிருத்துவோர், விவசாயிகள். |
| 70 - 84 - மந்தபுத்தி | 10 | முட்டாள் அல்லது எடுபிடி வேலைசெய்வோர், கூலிவேலை செய்வோர் முதலியோர். |
| 55 - 69 - நலிமனமுடையோர் | 1 · 8 | பிறரின் மேற்பார்வையின்றி வாழ முடியாதவர்கள். |
| 55க்கு கீழ் - உளக்குறைபாடுடையோர் | 0 · 2 | |

பியாஜே அறிமுகஞ்செய்த பிள்ளையின் சிந்தனை அடிப்படையிலான உளவளர்ச்சிப் பருவங்களும், இப்பருவங்களில் பிள்ளையின் சிந்தனையில் காணப்படும் சிறப்பியல்புகளும்.

| பருவம் | காலம் | சிந்தனை சிறப்பியல்பு |
|---|---|---|
| 1. புலன் இயக்கப் பருவம் Sensor - motor period | பிறப்பு முதல் 18 மாதங்கள் அல்லது 2 வயது வரை | சிந்தனையின் பின் திரும்பும் இயல்பு காணப்படும். (தாம் சிந்திக்க ஆரம்பித்த நிலைக்குப் பின்னோக்கிச் செல்லும் ஆற்றல்) |
| 2. தூலச் சிந்தனைக்கு முற்பட்ட பருவம் Period of pre-operational thinking | 2 வயது முதல் 7 வயது வரை | சிந்தனை குறியீட்டு அமைப்பைப் பெறும். |
| 3. தூலச் சிந்தனைப்பருவம் அல்லது பருப்பொருட் சிந்தனைப் பருவம் Period of Concrete operations | 7 வயது முதல் 11 அல்லது 12 வயது வரை | பரும்பொருட் சிந்தனைகள் தர்க்க முறையில் செயல்படும். |
| 4. நியமச் சிந்தனைப்பருவம் Period of formal operation | 11 அல்லது 12 வயது முதல் 15 வயது வரை | கணித முறைகளைக் கருத்து நிலையில் தொகுத்தறிதல், உய்த்தறிதல் போன்ற உளத் திறன்கள் வளர்ச்சியடையும். |

(தொகுப்பு-பயஸ்)

# உண்மை நட்பு

செல்வி து. பிரதிபா
ஆரம்ப நெறி
(விடுகையாண்டு)

1. உண்மை நட்பு உறுதி போன்றது.
2. உண்மை நண்பன் உன் பிழைகளையும், குறைகளையும் நேரில் கூறுவான்.
3. உண்மையான நட்புரிமையுள்ளவனுக்கு உயர்ந்த நண்பர்கள் வருவார்கள்.
4. நண்பனைத் தேடுவதில் மிகவும் ஆறுதலாக இருக்க வேண்டும்.
5. உடன் பிறந்தானின்றி வாழலாம் உண்மை நண்பன் இன்றி வாழ முடியாது.
6. உண்மை நண்பர் தொடர்பு நல்ல நூலாராய்ச்சி போன்றது.
7. உண்மை நட்பு அன்பால் உள்ளத்தை மலர்விக்கும்
8. நண்பனை தளரவிடாமல் தாங்கிக் கொள்வது நட்பு.
9. உண்மை நண்பரை ஒரு போதும் விட்டு விட முடியாது.

*With Best Compliments*
*from*

**T. M. M. Farmacy**

**34, MAIN STREET,**
**KALMUNAI.**
067 - 2329

# ஞான விநாயகனே

சா. புண்ணியமூர்த்தி
விடுகை வருடம்
ஆரம்பநெறி

மீன் பாடுமெம் தேனாட்டின்
மீதிலொரு ஒளி விளக்காய்
மேன்மை பல கொண்டு
மிளிரும் கலைக் கூடமதில்
கோனாம் சிவ மைந்தன்
குடி கொண்டான் கண்டோமே
கானம் நாம் பாடிக்
கணபதியே வேண்டுகிறோம்.

தொல்லை சூழிவ் வுலகில்
தொடர்கின்ற துயர்களதால்
அல்லல் பலவுமுற்றோம்
அரன்மைந்தா கண்டிலையோ?
எல்லை தான் மீறிநிதம்
எத்தர்கள் செய்துயரால்
இல்லையையா எமக்கு
இன்பம். எலாம் துயரோ?

ஞான விநாயகனே
ஞாலத்தின் முதற்பொருளே
வான வரும் வணங்கும்
வாரண முகத்தவனே
ஆன நல்லறிவு தந்து
அகில மதிற் சிறப்பாய்
ஈனமெதுவுமின்றி
இருந்திட வழி தருவாய்.

சங்கத் தமிழ் கொடுத்தாய்
சங்கரனின் புதல்வா
துங்கக் களிறே யுந்தன்
தூய அருளை ஈந்தால்
பங்கங்கள் எதுவுமின்றிப்
பாரினில் உன்னை நிதம்
அங்கை தொழுதெழுவோம்
ஆனந்த வாழ்வருள்வாய்.

எங்கும் நல்லமைதி தந்து
ஏற்றமெம் வாழ்விலீந்து
மங்கும் தமிழினத்தின்
மாண்பலைத் துலங்க வைப்பாய்
பொங்கும் துயரவெள்ளம்
போகும் வழிபிறக்கும்
ஏங்குமெம் உள்ளமதில்
எல்லாம் நலம்திகழும்.

# இன, மத. அரசியல் வேறுபாடுகளைக் கடந்த "ஒலிம்பிக்"

உலக விளையாட்டரங்கில் மிகவும் முக்கிய மானதும், உயரிய அந்தஸ்தினைக் கொண்டதும், எல்லாவற்றிக்கும் மேலாக புனிதத் தன்மை கொண்டதுமாகக் கருதப்படும் ஒலிம்பிக் போட்டிகள் இன, மத, அரசியல் வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமை, சிநேக பூர்வம், புரிந்துணர்வு, நல்லெண்ணம் ஆகிய வற்றை வலுவடையச் செய்யும் ஒரு காரணியாக இருக்கிறது. நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் ஒலிம்பிக் தனது (XXV) வது களத்தை ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரில் காணுகின்றது

## புராதன ஒலிம்பிக்

கிரேக்க நாடு சுத்த வீரத்திற்கும், கடவுள் வணக்கத்திற்கும் பேர்போனது. முதன் முதலில் இங்குள்ள புனித நகரான 'ஒலிம்பியா' என்னுமிடத்தில் பந்தயம் ஆரம்பமானதால் ஒலிம்பிக் என்ற பெயர் ஏற்பட்டதென லாம். மேலுமொரு கதை உள்ளது. ஒலிம்பியாவிலுள்ள 'பிசா' எனும் நாட்டை 'ஒனாமஸ்' என்பவன் ஆண்டு வந்தான். அவனுக்கு 'ஹிப்போடோமியா' எனும் அழகும் அறிவும் நிறைந்த மகள் ஒருத்தி இருந்தாள் அவளுக்கு திருமணஞ் செய்ய எண்ணி 'இளவரசியின் அந்தப் புரத்தில் வைத்து அவளைக் கவர்ந்து சென்று நாட்டின் எல்லையைத் தாண்ட வேண்டும். கடத்திச் செல்லும் போது பிடிபட்டால் உடன் மரண தண்டனை வழங்கப்படும்.' என விசித்திரமான கட்டளையை பிறப்பித்தான். அதில் பலர் தோற்றுப் போய் மரணமானார்கள் இறுதியாக 'பிலாப்ஸ்' என்ற இளைஞன் வெற்றி பெற்றான் இந்த வெற்றியைக் குறிக்குமுகமாக 'பிலாப்ஸ்சால்' தொடக்கப்பட்ட விழாவே ஒலிம்பிக்காகும். என ஓர் கதையுண்டு.

போட்டிகள் (கி. மு. 776 - கி. பி. 394)

ஆரம்பத்தில் ஓட்டப் போட்டி மாத்திரம் ஒரே நாளிலேயே நடத்தப்பட்டது. அதில் 'கரேபஸ்' என்ற வீரன் வெற்றி பெற்றிருந்தான். அங்கு கலந்து கொள்வோர் நிர்வாணமாகவே கலந்து கொள்ள முடியும். இருப்பினும் பெண்கள் பங்குபற்றவோ பார்வையாளர்களாகவோ இருக்க முடியாது. அப்படிப் பார்ப்போருக்கு மலையுச்சியில் இருந்து தூக்கியெறியப்பட்டு மரண தண்டனை வழங்கப்படும். தற்போது வழங்கப்படும் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களைப் போலல்லாது வெற்றி பெற்றோருக்கு 'ஒலிவ் மலர் வளையமே வழங்கப்படும். அவ்வீரனுக்கு மிகப் பெரிய கௌரவமும் மதிப்பும் கிடைத்தது.

## நவீன ஒலிம்பிக்

1500 வருடங்கட்குப் பிற்பாடு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 'பியரே கூபேட்டின்' பிரபு ஒலிம்பிக்குக்கு புத்துயிர் கொடுக்குமுகமாக 1888 தொடக்கம் 1896 வரை பலவித முயற்சிகள் எடுத்திருந்தாராயினும் கைகூடாமல் போயிற்று. எனினும் கிரேக்கர்கள் துருக்கியர்களிடம் இருந்து சுதந்திரம் பெற்ற 75 வது சுதந்திர தினமாக 1896 ஏப்பிரல் 06ல் புதிய ஒலிம்பிக்கை மன்னர் முதலாம் ஜோர்ஜ் ஆரம்பித்து வைத்தார். அத்தருணம் கிரேக்க மாபெரும் வீரன் 'பீடிப்பைட்ஸ்' இன் தியாக சேவைக்காக மரதன் ஓட்டமும் சேர்த்துக் கொள்ளப் பட்டது. (1896) இல் 09 நாடுகள் மட்டுமே கலந்து கொண்டன.

## ஒலிம்பிக் நடைபெறும் விதம்

அகில உலக ரீதியாக ஒலிம்பிக் பந்தயத்தின் தலைவரே (இம்முறை சமரான்சே) வரவேற்றுப் பேசுவார். ஒலிம்பிக் நடக்கும் நாட்டின் அரசர் அல்லது ஜனாதிபதி பிரதம அதிதியாக அழைக்கப்படுவார். இசை முழங்க அணிவகுப்பில் வீர வீராங்கனைகள் கிரேக்க நாட்டவர் முதலிலும் அகர வரிசைப்படி மற்ற நாட்டினரும் விழா நடக்கும் நாட்டினர் இறுதியிலும் நிற்பர். அமைதி சமாதா

னத்தை வெளிக் கொணரும் முகமாக வெண் புறாக்களும், பலூன்களும் பறக்க விடப்படும். அந்த நாட்டு வீரர் ஒருவரால் ஒலிம்பிக் தீபம் ஏற்றப்படும். உலகின் 5 கண்டங்க ளைக் குறிக்கும் நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை, சிவப்பு ஆகிய வர்ண வளையங்க ளைக் கொண்ட வெள்ளைநிற ஒலிம்பிக் கொடி ஏற்றி வைக்கப்படும். விழாத் தலை வர் போட்டியை ஆரம்பித்து வைக்க தொடர்ந்து 16 நாட்கள் நடைபெறும். போட்டி முடிவில் அணிவகுப்பு நடைபெற் றுக் கொடியும் இறக்கப்பட்டு அடுத்த ஒலிம் பிக் நடைபெறவுள்ள நாட்டின் பெயரையும் தலைவர் அறிவித்து நன்றி கூறி முடித்து வைப்பர்.

**ஒலிம்பிக் ஏதென்ஸ் முதல் அட்லாண்டா வரை**

*1896* - ஏதென்ஸ் - (கிறீஸ்)
*1900* - பாரிஸ் (பிரான்ஸ்)
*1904* - செயின்ட் லூயி (வட அமெரிக்கா)
*1908* - லண்டன் (இங்கிலாந்து)
*1912* - ஸ்டொக்ஹோம் (சுவீடன்)
*1916* - பேர்லின் (ஜேர்மனி)
(1 ம் உலகயுத்தம் காரணமாக போட்டிகள் நடைபெறவில்லை)
*1920* - அன்ட்வர்ப் (பெல்ஜியம்)
*1924* - பாரிஸ் (பிரான்ஸ்)
*1928* - ஆம்ஸ்டர்டாம் (ஒல்லாந்து)
*1932* - லொஸ் ஏஞ்சல்ஸ் (வட அமெரிக்கா)
*1936* - பேர்லின் (ஜேர்மனி)
*1940* - டோக்கியோ (ஜப்பான்)
(2 ம் உலகயுத்தம் -போட்டிகள் நடைபெறவில்லை.)
*1948* - லண்டன் (இங்கிலாந்து)
*1952* - ஹெல்சயின்கி (பின்லாந்து)
*1956* - மெல்பர்ன் (அவுஸ்ரேலியா)
*1960* - ரோம் (இத்தாலி)
*1964* - டோக்கியோ (ஜப்பான்)
*1968* - மெக்ஸிகோ (வட அமெரிக்கா)
*1972* - முனிச் (ஜேர்மன்)
*1976* - மொன்ட்றீல் (வட அமெரிக்கா)
*1980* மொஸ்கோ (சோவியத் யூனியன்)
*1984* - லொஸ் ஏஞ்சல்ஸ் (வட அமெரிக்கா)
*1988* - சியோல் (தென் கொரியா)
*1992* - பார்ஸிலோனா (ஸ்பெயின்)
*1996* - அட்லாண்டா (அமெரிக்கா)

*1896* இல் 9 நாடுகளுடன் ஆரம்பித்த ஒலிம்பிக் இம்முறை *171* நாடுகளுடனும் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட வீரர்களுடனும் *28* போட்டி நிகழ்ச்சிகளுடனும் நடைபெறு கிறது.

*1992* ஒலிம்பிக்கில் பல விசேட அம்சங் கள் பொதிந்திருப்பதுடன் நவீன தொலைத் தொடர்பு சாதனங்களும் பொருத்தப்பட்டி ருப்பது வெள்ளிடை மலை. இன வெறி ஆதிக்கக் கொள்கை காரணமாக மூன்று தசாப்த கால இடைவெளியின் பின்னர் ஒலிம்பிக் நீரோட்டத்தில் தென்னாபிரிக்கா வின் மறுபிரவேசமும், 2ம் உலகப் போரின் விளைவாக பிளவுபட்டிருந்த கிழக்கு -மேற்கு ஜேர்மனியின் இணைந்த ஐக்கிய ஜேர்மனி யின் பங்கேற்பும், 'பெரஸ்ரொய்கா' 'கிளஸ் நோட்' என் விளைவாக எழுந்த சுதந்திர உணர்ச்சியின் பலனாக பிரிந்த சோவியத் யூனியன் சுதந்திர நாடுகளின் பொதுநலவா சின் பிரசன்னமும் பார்சிலோனாவின் 25வது ஒலிம்பிக் போட்டிகளுக்கு புதுப் பொலி வைத் தந்ததெனலாம். இம்முறை இலங் கையணி மரதனோட்ட வீரர் திரு. கே. ஏ. கருணாரெட்ண தலைமையில் *11* பேர் கொண்ட குழு கலந்து கொண்டது சிறப்பா னதாகும். முதன் முதலில் இலங்கை சார் பாக ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் பெற்ற பெருமை திரு டங்கன் வைட்டைச் சாரும். அமெரிக்கா இதுவரை (*1992*) *866* தங்கப் பதக் கங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இம்முறை மொத்தமாக *257* தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. *1992* ஒலிம் பிக்கில் பெற்ற பதக்க விபரங்கள் (முதல் 5 நாடுகள்)

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத் பதக் |
|---|---|---|---|---|
| 1. சுதந்திர நாடுகளின் பொதுநல அரசு, (EUN) | 45 | 38 | 29 | - 112 |
| 2. ஐக்கிய அமெரிக்கா (USA) | 37 | 34 | 37 | - 108 |
| 3. ஜேர்மனி | 33 | 21 | 28 | - 82 |
| 4. சீனா | 16 | 22 | 16 | - 54 |
| 5. கியூபா | 14 | 06 | 11 | - 31 |

சிறுகதை

# ஒரு பசுஞ்சோலை பாலைவனமாகிறது

செல்வி. மா. பாக்கியலெட்சுமி
(விடுகையாண்டு)
ஆரம்பநெறி B

கோடை காலத்து வெயில் சுள் என்று எறித்தாலும் சுற்றியுள்ள அருவிகளை ஆரத் தழுவி இதமாக வீசிக் கொண்டிருந்தது தென்றல். வண்டியை விட்டு இறங்கிய காஞ்சனா சுற்றும் முற்றும் பார்த்தாள். ஆள் அரவமே இல்லை. சற்றுத் தள்ளி ஒரு சிறிய பெட்டிக்கடை மாத்திரம் இருந்தது. கடைக்குச் சென்று நல்லையா மாஸ்டரின் வீட்டை விசாரித்தாள். கடைக்காரர் நெற்றியைச் சுருக்கியவாறே காஞ்சனாவை ஆழம் பார்த்தார். 'நீர்... யார்... பிள்ளை?' அதற்கு காஞ்சனா 'நான் இங்குள்ள பாடசாலைக்கு புதிதாக நியமனம் கிடைத்து வந்திருக்கின்றேன்' 'நல்லையா மாஸ்டர் வீட்டில்தான் தங்க வேண்டும். ஒருக்கா வீட்டைச் காட்டுவீர்களா...?' என்று கேள்விக் குறியுடன் நின்றாள்.

கடைக்காரர் உள்ளம் சந்தோஷத்தால் துள்ளி நின்றது. தங்கள் பிள்ளைகளை படிப்பித்து பார்க்க அந்த கிராமத்து மக்களின் உள்ளத்தில் ஆசை இருந்தாலும் கிராம பாடசாலை ஆரம்ப வகுப்புக்களை கொண்டிருந்தும் அதைக் கூட ஒழுங்காக கற்பிப்பதற்கு ஒரு பரந்த மனப்பான்மையுள்ள ஆசிரியர் நல்லையா மாஸ்டருடன் உதவிக்கு இல்லாமையினால் பிள்ளைகளின் படிப்பு ஒழுங்கீனமாயிருந்தது. பட்டணத்திற்கு அனுப்பிப் படிப்பிப்பதற்கு பெற்றோரிடம் போதிய வசதியின்மையும், பிள்ளைகளுக்கு தூர இடங்களுக்குச் சென்று படிக்க முடியாத அனுபவப் பற்றாக் குறையும் இருந்ததால் கிராமத்தினுள்ளே முடங்கிக் கிடந்தார்கள். இதனையெல்லாம் உணர்ந்திருந்த கடைக்காரர் புதிய ஆசிரியையின் வரவால் அகமகிழ்ந்தவராக தனது பையனின் தலையில் காஞ்சனாவின் பெட்டியை ஏற்றி நல்லையா மாஸ்ரரின் வீட்டில் கொண்டு விட்டுவருமாறு அனுப்பினார்.

பிரதான பாதையை அடுத்த ஒற்றையடிப்பாதை வழியாகச் சிறிது தூரம் சென்றதும் நான்கைந்து வீடுகளுக்கப்பால் ஒரு பச்சையை அடித்த வீட்டின் முன்னால் நின்றான் பையன். முற்றத்தில் பவளமல்லிகை மணம் பரப்பிக் கொண்டிருந்தது. தயங்கித் தயங்கி உள்ளே சென்றாள் காஞ்சனா. முன் வராந்தாவில் சாய்மனையில் இருந்து கொண்டு வாரமலரில் மூழ்கியிருந்த நல்லையா மாஸ்ரர் ஆள் அரவம் கேட்டு கண்ணாடியை உயர்த்தி விட்டு நிமிர்ந்து பார்த்தார். காஞ்சனாவின் அப்பாவும், மாஸ்ரரும் ஒன்றாகப் படித்தவர்கள். ஆதலால் காஞ்சனாவின் அப்பா மகளின் நியமனம் பற்றி ஏற்கனவே மாஸ்ரருக்கு அறிவித்திருந்தார். காஞ்சனா வணக்கம் கூறிக் கொண்டு அருகே சென்றதும் வாயெல்லாம் பல்லாக வரவேற்றார் நல்லையா மாஸ்ரர்.

அந்த பின்தங்கிய கிராமத்தில் மாணவர்களின் நலனுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் அயராது உழைத்தாள் காஞ்சனா. பின்னேர வகுப்புகளும் இலவசமாக வைத்தாள். மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் காஞ்சனாவின் மேல் அன்பும், அபிமானமும் தனிமதிப்பும் ஏற்பட்டன. நாட்கள் உருண்டோடின. விடுமுறை நாட்களிலும் காஞ்சனா தனது ஊருக்குச் செல்வதை நிறுத்தி கிராமத்திலே தங்கத் தொடங்கி விட்டாள். அன்று ஒரு திங்கட்கிழமை வழமை போல் காஞ்சனா பாடசாலை விட்டு வந்ததும் சிறிது களைப்பாறி தனது வகுப்புக்களை ஆரம்பித்தாள். அங்கேவந்த நல்லையா மாஸ்ரர் தந்தி ஒன்றைக் காஞ்சனாவிடம் நீட்டினார். அதைக் கண்டதும் காஞ்சனாவிற்கு உள்ளூர நடுக்கம் ஏற்பட்டது. பிரித்

துப் பார்த்தாள். அம்மாவிற்கு சுகயீனம் உடன் வரவும் என்றிருந்தது. அப்பா தான் தந்தி கொடுத்திருந்தார். காஞ்சனாவிற்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. கண்களில் முட்டிய கண்ணீர் தன் வழியே ஓடிக் கொண்டிருந்தது நல்லையா மாஸ்ரர் கூறிய ஆறுதலில் கண்ணீருக்கு அணை போட்டு காத்திருந்தாள் புலரும் பொழுதிற்காக.

அடுத்தநாள் பஸ்ஸைப் பிடித்து வீட்டை அடைந்ததும் அப்பாவும், அம்மாவும் முற்றத்தில் சேர்ந்து நின்று அவளை வரவேற்றனர். காஞ்சனாவிற்கு ஒரே அதிர்ச்சி எதற்காக இப்படி பொய்த் தந்தி கொடுத்து நம்மை ஏமாற்றினார்கள் என்று மனதிற்குள் புலம்பினாலும் வெளியில் கேட்கவில்லை. எதுவாக இருந்தாலும் அவர்களே கூறட்டும். என்று மௌனமாக இருந்து விட்டாள். அப்பா அவளின் கையிலிருந்த பெட்டியை வாங்கிக் கொண்டு உள்ளே செல்ல, அம்மா காஞ்சனாவை பாசத்தோடு அரவணைத்தபடி தொடர்ந்து சென்றாள்.

அன்று இரவுச் சாப்பாட்டிற்காக மூவரும் வந்து அமர்ந்தனர். அப்பா மெதுவாக பேச்சை ஆரம்பித்தார். காஞ்சனா புதன் கிழமை உன்னைப் பெண் பார்க்க வருகிறார்கள். உண்மையைச் சொன்னால் வர மாட்டாய் என்றுதான் அம்மாவிற்கு சுகயீனம் என்று தந்தி கொடுத்திருந்தேன் என்றார். காஞ்சனாவிற்கு எல்லாம் புரிந்து விட்டது. அம்மா சொன்னார். 'நல்ல இடம் பிள்ளை. கை நிறையச் சம்பளம் தங்கமான மாப்பிள்ளை எங்களுக்கென்றால் நன்றாகப் பிடித்து விட்டது.' காஞ்சனா பேச்சை வெட்டினாள். 'அம்மா...... கல்யாணம் என்பது வெறும் சம்பிரதாயச் சடங்காக இருக்கக் கூடாது. அது உடலால் ஏற்படும் உறவாகவும் இருக்கக் கூடாது. மனதாலும், கருத்தாலும் ஒன்றுபட்டு ஓர் உயரிய உன்னத இலட்சிய தம்பதிகளாக இருக்க வேண்டும் என்பதே அவர் அவா! கல்யாணம் என்ற போர்வையில் சாக்கடையில் என் எதிர்காலம் கழியக் கூடாது. நான் எந்த வகையிலும் உங்களுக்குப் பாரமில்லை. என் வாழ்க்கை வெறும் செல்லாக் காசாகக் கழிவதை விரும்பவில்லை. இருண்டு கிடக்கும் ஓர் மாணவ சமூகத்துக்கு ஒளிவிளக்காய் இருக்க வேண்டும் என்ற என் இலட்சியத்துக்கு உயிர் ஊட்டுங்கள் அம்மா. கல்யாணம் என்ற தளையை ஏற்படுத்தி என் நோக்கத்தைச் சாகடிக்காதீர்கள். கல்யாணத்தின் பின் கணவனோடு சேர்ந்து வாழ பட்டணத்தில் இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமானால்..? அம்மா... என் சேவையை சேவைப் படுகின்ற இடத்தில் வழங்க முடியாமல் போய்விடும்.'

அம்மா காஞ்சனாவை தடுத்தாள். காஞ்சனா... எங்கள் கண்ணுக்குப் பிறகு பற்றுக் கோடில்லாமல் நீ அல்லலுறப் போவது உனக்குப் புரியாது. நீ நினைப்பது போல கல்யாணம் வெறும் பந்தமில்லை. ஆயிரம் காலத்துப் பயிர் இம்மண்ணிலே வேர் விட்டு கிளைவிட்டு மரமாகி பூத்துக் குலுங்கி செழித்து வளர வேண்டிய பயிர். உன்னைப் புரிந்து கொண்டவர்கள் நாங்கள். உன் வளமான வாழ்வும், வாழ்வின் மலர்ச்சியுமே எங்கள் சந்தோஷம். அப்படியிருக்க உனக்குப் பொருத்தமில்லாத ஒரு துணையை ஒரு நாளும் உனக்குச் செய்து வைக்க மாட்டோம் பார்த்திருக்கும் மாப்பிள்ளை உனக்குச் சகல விதத்திலும் பொருத்தமானவரே எனப் பலவாறு கூறி ஒருவாறு காஞ்சனாவை சம்மதிக்க வைத்தார்கள்.

அடுத்து வந்த மாதத்தில் மிகவும் கோலாகலமாக காஞ்சனாவின் கல்யாணம் நடந்தேறி நாட்களும் பல கழிந்து விட்டன காஞ்சனாவிற்கோ மனம் குடும்ப வாழ்க்கையில் லயிக்கவில்லை. அன்றிரவு பெட்டியில் தனது உடுப்புக்களை அடுக்கி காலையில் கிராமத்திற்குச் செல்வதற்கு ஆயத்தமானாள். இதைக் கண்ட அம்மா அப்பாவிடம் சொல்ல, அவர் அவளுக்கு முன் வந்து மிகவும் கடுகடுப்புடன் விசாரித்தார். ஆனால் காஞ்சனா, லீவு நாளையுடன் முடிகின்றது. எதற்கும் ஒருதரம் போயிற்று உடனே வந்து விடுவேன். ப்ளீஸ் அப்பா' என்று கெஞ்சினாள். கெஞ்சலில் மனம் தளர்ந்தவர் 'மாப்பிள்ளைக்கு தெரியுமா போவது?' எனக் கேட்டார். 'இல்லையப்பா... அவரை எப்படியாவது சம்மதிக்க வையுங்களப்பா' என்று பொறுப்பை அவரிடம் விட்டு காஞ்சனா விலகினாள்.

அந்தி வானத்து மஞ்சள் சூரியன் அருவியில் பட்டு மஞ்சள் வண்ணம் பொங்கிக்

கொண்டிருந்தது. வயல வெளிகளில் நெற் கதிர்கள் பாரம் தாங்காமற் தலை சாய்த் திருந்தன. வண்டுகளின் ரீங்கார ஒலியுடன் பட்டுச் சிறகடித்துப் பறக்கும் பட்டாம் பூச்சிகளின் அழகிலும் மனதைப் பறிகொடுத்த காஞ்சனா ஏதோ ஒரு புதிய உலகில் சஞ்ச ரிப்பது போன்ற பிரேமையில் நடந்தாள். கடைக்காரரின் பையன் தலையில் பெட்டியு டன் முன்னால் சென்று கொண்டிருந்தான். கிராமத்திற்கு வந்து சேர்ந்ததுமே தன்னை முற்றுமுழுதாக கிராமத்து மாணவ சமுதா யத்திற்கே அர்ப்பணித்துக் கொண்டாள். இடையில் ஒரு தடவை அப்பா வந்து எவ்வ ளவோ முயன்றும் பலன் கிடைக்கவில்லை.

வழமை போல் பாடசாலை விட்டுவந் ததும் உணவை முடித்துக் கொண்டு சற்றுக் களைப்பாறி வகுப்புக்கள் நடாத்திக் கொண் டிருந்தாள்... காஞ்சனா. வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தவள் அதிர்ந்தாள். காரிலிருந்து இறங்கி அவளது கணவன் புன்னகையுடன் வந்து கொண்டிருந்தான். நல்லையா மாஸ்ரர் மகிழ்ச்சி பொங்க வரவேற்று உபசரித்தார். இருவரும் கொஞ்ச நேரம் அளவளாவிய பின் மாஸ்ரர் உள்ளே சென்று விட்டார். நிலத் திலே பார்வையை பதித்துக் கொண்டிருந்த காஞ்சனா கணவனின் குரல் கேட்டு மெல்ல நிமிர்ந்தாள். 'நான் எதற்காக இங்கு வந் தேன். தெரியுமா...? 'என்ன?' என்று மெது வாக வினாவினாள் 'உனது சுதந்திரத்தில் என்றும் நான் குறுக்கே நிற்கமாட்டேன். ஆனால் எங்கள் அலுவலகத்தில் எல்லோரும் தங்கள் தங்கள் குடும்பத்தோடு பிக்னிக் போவதாக திட்டமிட்டிருக்கிறார்கள். ஆனால் நானோ கல்யாணம் பண்ணியும் தனியாக வாழ்கிறேன். எல்லோரும் என்னை ஏளனத் தோடு பார்க்கிறார்கள். பிக்னிக் செல்வதற் காகவாவது என்னுடன் வரமாட்டீரா...'? கெஞ்சும் குரலில் கேட்டானே, காஞ்சனா விற்கோ கணவனின் நிலைகண்டு மனமுருகி கண்கள் பனித்து விட்டன. அன்று மாலையே இருவரும் புறப்பட்டுச் சென்றனர்.

நண்பர்களோடு கூடி ஆடிப்பாடி இயற் கையழகின் வனப்பை ரசித்து மகிழ்ச்சியில் திளைத்துப் போனாள் காஞ்சனா எல்லோ ரும் புறப்பட்டுச் சென்றனர். சற்றுத் தாம தமாகவே காஞ்சனாவும் கணவனும் புறப் பட்டனர் வழியில் தூறலாக ஆரம்பித்த மழை சோவெனக் கொட்டியது. பேய்க் காற்றும் இடியும் மின்னலும் கண்ணைப் பறித்தது. பயத்தில் ஒடுங்கி விட்டாள். காஞ்சனா காரைத் தொடர்ந்து செலுத்த முடியாமல் கணவன் தத்தளிப்பதை அறிந் தாள். தொடர்ந்து வந்த இடியையும் மின்ன லையும் தாங்கிப் பிடிக்க முடியாமல் கண் களை இறுக மூடிக் கொண்டாள். அதுவே அவளது பார்வையின் கடைசி ஒளி என்பதை அவள் எப்படி அறிவாள் ? கட்டிலின் அரு கில் அம்மாவின் குரல் கேட்டு மயக்கம் தெளிந்த நிலையில் கண் திறந்தாள். ஆனால் எவ்வித காட்சியுமே அவளுக்கு புலப்பட வில்லை. 'அம்மா... அப்பா' என்று அலறி யடித்துக் கொண்டு எழுந்தாள். டாக்டர் ஓடிவந்து அவளை ஆசுவாசப்படுத்தினார். பின்புதான் அறிந்தாள் தானும், கணவனும் பயணம் செய்த கார் இடிமின்னலுக்கு தாக் குப்பிடிக்காமல் அருகிலிருந்த மரத்தில் மோதி ஸ்தலத்திலேயே கணவன் இறந்து விட்டதை யும் தான் பார்வை இழந்து விட்டதையும் துடிதுடித்தாள். ஆனாலும் என்ன பயன் விதி அவளின் வாழ்வை இருளாக்கி விட்டது. அவள் வாழ்வை மட்டுமா...? இல்லை! ஒளி யுடன் திகழ வேண்டிய ஒரு மாணவ சமு தாயத்தையுமே இருள் கவ்விக் கொண்டது. கண்ணிழந்த அவள் முன்னே கதியிழந்த நிலையிலே கிடந்தது பாடசாலை.

---

## நோபெல் தந்த பரிசு

'டைனமற்' ஐக் கண்டுபிடித்த அல்பிறட் நோபெல் (Alfred Nobel) என்பவர் இதன் மூலம் பெருஞ்செல்வத்தை ஈட்டினார். அவர் ஈட்டிய பணத்தில் 175,000 பவுணை வங்கி யில் முதலீடு செய்து இதனால் வரும் வட்டிப் பணத்திலிருந்து பௌதிகம், இரசாயனம், மருத்துவம், இலக்கியம், சமாதானம் எனும் ஐந்து துறைகளிலும் திறமை காட்டுவோருக்கு ஆண்டு தோறும் பரிசளிக்குமாறு இவர் ஒழுங்கு செய்தார். இவர் சுவிற்சலாந்து நாட்டின் ஸ்ராக்கோம் நகரத்தில் 1833ல் பிறந்தார்.

---

# இராமன் வாலிமீது மறைந்திருந்து பாணந்தொடுத்தது நீதியா?

செ. முருகுப்பிள்ளை
(விடுகையஃடு)
ஆரம்பப்பிரிவு

எந்தவொரு காவியம் எடுப்போர் மனதை எளிதில் தொட்டு இரசனையைத் தூண்டக் கூடியதாக அமைகின்றதோ அக்காவியமே காலத்தைக் கடந்து நிற்கிறது. அவ்வாறு காலத்தைக் கடந்து நிற்கும் காவியம் இராமாயணமாகும். வான்மீகி முனிவர் வடமொழியில் இயற்றிய இராம காதையை தமிழ் மக்களும் உணர்ந்து அதன் இரசனையை நுகர வேண்டும் என்ற மனப்பாங்கோடு தமிழர் பண்பாட்டுக்கேற்ப கற்பனை நயத்தோடு கம்பன் படைத்துள்ளான்.

இக்காவியத்திலே வருகின்ற கிட்கிந்தா காண்டத்தின் வாலி வதைப்படலம் ஒரு சிறு சம்பவமாகவே இராமாயணத்தில் சித்தரிக்கப் பட்டுள்ளது. கம்பன் அதனை இன்று வரை இலக்கிய சர்ச்சைக்குரிய விடயமாகப் படைத்துள்ளான். மனித தர்மம் மற்றைய உயிர்களுக்குப் பொருந்தாது என்பதை மையமாக வைத்து விலங்கினத்தின் இயல்பான நடத்தைகளுக்கேற்ப செயற்பட்ட வாலியை இராமன் மறைந்து நின்று பாணம் தொடுத்தமை நீதிக்குப் புறம்பான செய்கை மட்டுமன்று தன் காவியத் தலைவனுக்கு கற்பிக்கப் படும் மாசாகவும் அமைந்துவிடும் என்பதைக் கருத்தில் கொண்டு தன் காவியத்திலே வாலியை உருவில் குரங்காகவும், உள்ளுணர்வில் மனிதனாகவும் காட்டுகிறான் கம்பன்.

நீதிப்படி குற்றமிழைத்தவர் தண்டிக்கப் படுவது இயல்பானதொன்றே. அதே நேரம் அக்குற்றத்தின் விதம் நடந்த நேரம், நியாயமானதா? நீதிக்குப் புறம்பானதா? என்பன போன்ற விடயங்களும் அங்கு நோக்கப்பட வேண்டியவைகளாகும். கம்பன் முன் வைக்கின்ற வாலி குற்றமிழைக்காத நிலையில் தண்டிக்கப்பட்டானா? அல்லது நிரபராதியான நிலையில் குற்றவாளியாக்கப்பட்டானா? என்பதனை தக்க சான்றுகள் மூலம் முன் வைக்கின்ற போது தான் இவ்வாய்வுரை பூரணத்துவம் பெறுவதோடு கம்பன் தன் காவியத்திலே வென்றானா? அன்றி தோற்றானா? என்பதையும் அறிய முடியும். கதையை நடத்திச் செல்வதற்கு இராமனைக் கொண்டு இரண்டு குற்றங்களை வாலி மீதும் பதிலுக்கு வாலியைக் கொண்டு இரண்டு குற்றங்களை இராமன் மீதும் முன் வைத்துச் செல்வதில் இருந்தே சர்ச்சை ஆரம்பமாகிறது.

இராமன் வாலிமீது சுமத்திய குற்றச் சாட்டுக்கள் முறையே தம்பி சுக்கிரீவனை கொடுமைப்படுத்தியமை, அவன் மனைவி உருமையை கவர்ந்தமை என்பவைகளாம். வாலியோ குற்றமற்ற தன்மீது பாணம் தொடுத்தமை, தொடுத்தபோது மறைந்திருந்து தொடுத்தமை ஆகிய இரு குற்றச்சாட்டுக்களையும் பதிலுக்கு முன்வைக்கின்றான். இளையோன் தவறிழைக்கின்றபோது அதனை மூத்தோன் தண்டிப்பதும் நியாயமானதொன்றே ஒருமுறை வாலி மாயாவியோடு போர் செய்கிறான். இருவருக்குமிடையே பேசர் வலுப்பெற்றதன் விளைவாக மாயாவி பிலாத்துவார வழியாக உட்சென்றுவிட்ட நேரம் பின் தொடர்ந்த வாலி தன் தம்பி சுக்கிரீவனை பிலாத்துவார வழியில் பாதுகாப்புக்கு வைத்துவிட்டு உட்சென்று மீண்டும் மாயாவியோடு கடும் போர் செய்கிறான். இருபத்திநான்கு மாத காலம் வரை தன் தமையன் திரும்பி வராமையால் மனம் சோர்வடைந்த சுக்கிரீவன் தன் தமையனை மாயாவி கொன்று விட்டானோ என்ற மன நிலையோடு தமையனுக்காகத் தான் உயிர் துறப்பதே மேல் என்ற முடிவுக்கு வந்தவனாக பிலா துவார வாயினுட் சென்று மாயாவியோடு போர் செய்ய எத்தனிக்கிறான்.

இந்த வேளை அவன் குலப்பெரியோர் 'நீயும் உன் அண்ணனுடன் சென்று உயிர்

நுறப்பின் எங்கள் குலத்துக்கு இனியார்துணை'? என்று வேண்டி நிற்க. தன் முடிவை மாற்றிக் கொண்டு மாயாவி மீண்டும் வெளிவராத வாறு பெரிய பாறாங்கற்களைக் கொண்டு மூடிவிட்டு அரசபதவியையும் ஏற்றுக்கொள்கிறான். இதற்கு மராமரத்துப்படலத்தின் (கூ0, கூ௯, கூ௪, கூ2, க00) பாடலடிகள் சான்று கூறுகின்றன. இந்த இடத்தில் இருந்து வாதிடுவோர் கூறுகின்ற கருத்தை நோக்கும் போது வாலி ஒருபோதும் இறந்திருக்க முடியாது. காரணம் இறைவனிடம் அழிக்கமுடியாத வரம் பெற்றிருந்தவன், அத்தோடு எதிரியின் பலம் அவனுக்கு வந்து விடும் என்பதை அறிகிறோம்.

இவ்வாறு இருக்கும்போது அவன் எவ்வாறு அழிந்திருக்க முடியும்? எதிர்வாதிகளின் நியாயப்படி வாலி இறந்துவிட்டான். அவ்வாறாயின் என் வழியைப் பாறாங்கற்களைக் கொண்டு மூடவேண்டும்? அதற்குக்காரணம் தமையன் மாயாவியால் தப்பி வந்தானேயாகின் தன்னையும் கொன்றுவிடுவான் எனனின் அவன் இட்ட கட்டளையை மீறிச் செயற்பட்டமை, வழியை மூடியமை, அத்தோடு அங்கதன் அரசனாக வேண்டிய இடத்தில் தான் அரசபதவியை ஏற்றமை. வாலியின் வீரத்தை பிறர் நகைக்கும் வண்ணம் இகழ்ந்து பேசியமை, இந்த இடத்தில் சுக்கிரீவன் மீது வாலி நடந்து கொண்ட விதம் சரியானதென்ற நியாயத்தை முன் வைக்கின்றனர்.

இன்னுமொரு சாரார் தன்தமையனைக் கொன்ற மாயாவி தன்னையும், தன்படைகளையும், வந்து அழிக்கத் திட்டம் தீட்டுவான் என்பதைக் கருத்தில் கொண்டே வழியை மூடியதாகவும், தந்தை இறக்கின்றபோது தனயன் வழியாக தோன்றுகின்ற அரச அந்தஸ்து தமையன் தம்பி முறையாகவும் தோற்றம் பெறலாம்தானே அங்கதன் அரசனாகக்கூடிய வயதுப்பக்குவத்தை அடையாத காரணத்தாலேயே அவ்விடத்தை தமையன் தம்பி என்ற உறவு முறையோடு குலப்பெரியார்களின் வேண்டுதலுக்கமைய சுக்கிரீவன் ஏற்றுக் கொண்டான் அந்த அதிகார மோகம் இருந்தால் ஏன் வாலி மீண்டு வந்தமையைக் கண்டு அவனிடம் சென்று கழுவாய் கேட்கவேண்டும்? தன் குற்றத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் இருபத்தி நான்குமாதம் தமையனின் கட்டளைக்கு செவிமடுக்க வேண்டும்? என்ற நியாயத்தை முன்வைக்கத் தவறவில்லை. இதற்கு எதிர்வாதம் செய்வோர் வாலி இராமனின் கணைக்கு இலக்காகி இறந்தவேளை இராவணனுக்கு தூதுச் செய்தி கொண்டுபோய் அதற்கும் பதில் எடுத்து வரும் அளவு பக்குவப்பட்ட வயதிலிருந்த அங்கதன் அரசனாகத்தகுதியற்றவனா? அனுமான் சுக்கிரீவனைப் பற்றிக் குறிப்பிடும் போது கூட கிட்கிந்தா காண்டம் நட்புக் கோட்படலத்தில் வரும் எழுபத்தோராம் பாடலில் ' இருமையும் இழந்து இவன் இருந்தனன்'' என்பதில் இருந்து அரசாட்சியை முன்னிலைப் படுத்தி இரண்டாம் இடத்திலே அவன் மனைவி உருமையை குறிப்பிடுவதோடு சுக்கிரீவன் வாலியிடம் தோற்று தன் உயிருக்கு உத்தரவாதம் தேடி இராமனிடம் அடைக்கலம் கேட்பதோடு நடந்த சம்பவத்தையும் இராமனிடம் விளக்கிக் கூறுகிறான். அதற்கு இராமனோ?''தலையோடு நின் தாரமும் உனக்கின்று தருவேன்'' என்று தாரத்தை இரண்டாம் நிலைப்படுத்தி அரச தலைமையையே முன்னிலைப்படுத்துகிறான். இதிலிருந்து சுக்கிரீவன் அதிகார மோகம் கொண்டே அரச பதவியை ஏற்றான் என்பது வெள்ளிடைமலையாகிறது என்று நியாயம் கூறப்படுகிறது.

சுக்கிரீவன் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டு வாலியிடம் அடிதொழுது மன்னிப்புக் கேட்டவேளை அவனை புரட்டிப் புரட்டி அடிக்கின்றான். இவ்வாறு வாலி நடந்து கொண்டமைக்கும் காரணம் சுக்கிரீவன் நடந்து கொண்ட விதத்தில் அவனுக்கேற்பட்ட தாக்கமே தன் வாக்கைக் காப்பாற்றாமை தொடக்கம் அவன் வீரத்தை இகழ்ந்து பேசியமை ஈறாக ஒன்றன் பின் ஒன்றாக நான்கு குற்றங்களை ஒருவன் தொடர்ந்து செய்கின்றபோது ஏற்பட்ட மனத்தாக்கத்தின் அடிப்படையிலேயே சுக்கிரீவனை வாலி கொடுமைப்படுத்தினான் என்று வாலி சார்பாக நியாயம் கூறி அவன்சுக்கிரீவனைத்தண்டித்தமை சரியென்ற கருத்தையும் முன்வைக்கின்றனர். இது போன்றே சுக்கிரீவன் மனைவி உருமையைக் கவர்ந்து சென்றமையை இரண்டாவது குற்றச்சாட்டாக முன்வைக்கிறான் இதற்கு இராமனோ வாலி நன்மை தீமை நன்கு தெரிந்தவன், கேள்விச் செல்வம் மிக்கவன் விலங்குக் குலத்திலே பிறந்தவனாகினும் வாலி மனித நடத்தைகளும், உணர்வுகளுமுடையவன். எனவே அவன் மனிதவர்க்கத்தோடு நோக்

கப்படவேண்டியவன்என்றகருத்தைமுன்வைக் கிறான். இதனை மறுத்த வாலி, மனித நடத்தைகளையும், கற்பொழுக்கங்களையும் தம் குலத்தோடு பொருத்தமுடியாது தமது குலம் எந்த இடத்தில் எப்படி நடக்க வேண்டுமோ அந்த இடத்தில் அப்படியே நடக்கும், அவற்றுக்குவரையறை கிடையாது; யாரும் யாரையும் காதலிக்கலாம் கவர்ந்து செல்லலாம் இதற்கு எத்தடையிடும் இல்லை இதனடிப்படையில் தான் உருமையைக் கவர்ந்துசென்றமை தமது குலமரபுக்கேற்ப நியாயமானதே என்ற காரணத்தை முன்வைக்கிறான். அத்தோடு கம்பன் சீதையின் கடத்தல் சம்பவத்தை மேம்படுத்திக் கூறும் அளவுக்கு ஏன் உருமையின் கடத்தலைமேம்படுத்தவில்லை? இதற்குக் காரணம் மனிதகுலக் கற்பொழுக்கம் பேசப்படும் அளவுக்கு விலங்குக் கற்பொழுக்கம் நோக்கப்பட முடியாமையே என்ற கருத்தும் முன் வைக்கப்படுகிறது. சுக்கிரீவனும், வாலியும்போர் செய்து கொண்டிருந்தபோது இராமன் மறைந்து நின்று கணை தொடுக்க எத்தனிக்கின்றான். இதனைக் கண்ணுற்ற இலட்சுமணன் தமையனின் தவறான கொள்கையை எடுத்துக்கூற முயற்சிக்கும் போது இராமன் மனிதர்களின் ஒழுக்கத்தைக் குறித்து இது நியாயம், அது அநியாயம் எனக் கூறுவதனைப் போன்று இந்த வெறிபிடித்த மிருகங்களின் செய்கைக்கு நீதி நியாயம் கூறமுடியுமா'? என்கிறான். சுக்கிரீவன் வாலிவதையில் நல்லவனாக காட்சிப்படுத்தப்படுகின்றான். அவ்வாறாயின் அவன் தமையன் எவ்வாறு விலங்காகக் கொள்ளப்பட முடியும்?

இதை நோக்கும் போது வாலி தன் குலமரபுக்கேற்ப நடந்து கொண்டது குற்றமா? அல்லது விலங்குக்குல மரபுக்கேற்ப நடந்து கொண்ட வாலியை இராமன் தண்டித்தது குற்றமா? மனித குலத்தின் நீதி நியாயங்களை வெறிபிடித்த மிருகங்களுக்குப் பொருத்த பார்க்க முடியாது என்று கூறிய இராமன் எவ்வாறு வாலியை மனிதன் என்று கொள்ள முடியும்? இதிலிருந்து இராமன் தன் குற்றத்தை மறைப்பதற்காக மேற்கொண்ட சதி அவனை முன்னுக்குப் பின் முரணான சங்கடத்தில் மாட்டிவிடுகின்றது என்பது தெளிவு. வாலி தன் செயலை நியாப்படுத்தும்போதும் எதிர்வாதம் பேசும்போதும் தன்குலமரபைக் காரணம் காட்டியே தன் கருத்தை வெளிப்படுத்துகின்றான். இவ்வாறு குலமரபைப் பேணி நடந்த வாலி சுக்கிரீவன் மனைவி உருமையைக் கவர்ந்து சென்றமை அவன் மரபுக்கு ஏற்றதொன்றே: வாலி சிவனின் வரத்தால் அழிக்கமுடியாதவன் அடுத்து அவன் மீது மறைந்து நின்று இராமன்பாணம் தொடுத்த குற்றச் சாட்டை நோக்கும்போது அவன் அழிக்கப்படுகின்றபோது இறைவனின் வரத்திற்கும் மாசு கற்பிக்கப்பட்டு விடும் அதுமட்டுமன்றி இராமனின் வீரத்திற்கும் இழிவு ஏற்பட்டு விடும் என்பதையுணர்ந்துதான் அவ்வாறு நடந்தான் என்ற நொண்டிச்சாட்டை முன்வைக்கின்றனர். அப்படியாயின் இராவணனை "இன்று போய் நாளை வா" என்றதுபோல, வாலிக்கும் திருந்துவதற்கு ஒரு சந்தர்ப்பம் அளித்திருக்கலாமே? ஏன் அளிக்கவில்லை.

அதற்குரிய காரணம் இராவணனுக்கு எத்தனை முறை சந்தர்ப்பத்தைக் கொடுத்தாலும் அவன் ஒருபோதும் திருந்தமாட்டான் என்பதாகும். அதே சந்தர்ப்பத்தை வாலிக்கு கொடுத்திருப்பின் வாலி இராமனைச் சரணடைந்திருப்பான். அப்போது நிரபராதியை எக்காரணம் கொண்டும் கொல்ல முடியாது. சுக்கிரீவனுக்கு தான் கொடுத்த வாக்கையும் காப்பாற்ற முடியாது போய்விடும் என்பதையுணர்ந்தே வாலிக்கு அவ்வாறான சந்தர்ப்பங்களைக் கொடுக்க அவன் விரும்பவில்லை. சுக்கிரீவனைத் தன் மனைவி சீதையைத் தேடுவதற்கு துணைவனாக கொண்ட இராமனுக்கு வாலி கொடியவனாகவும், தீயவனாகவுமே காட்சி கொடுக்கிறான் கவுந்தகன் அனுமான் போன்றோரும் சுக்கிரீவனை நல்லவனாகவே ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் வாலிவதைப் படலத்தின் முப்பத்தி நான்காம் பாடலில் இக் கருத்து பொய்யாக்கி விடப்படுகிறது. இராமன் மேற்படி பாடலில், வெறிபிடித்த விலங்குகளுக்கு எது நீதி, எது அநீதி என நோக்கக் கூடாது என்று தன் தம்பியின் கூற்றை ஆட்சேபித்து நிற்கிறான் இப்படிப்பட்ட இராமன் எவ்வாறு சுக்கிரீவனை நல்லவனென ஏற்றுக் கொள்ள முடியும்? இப்படிப்பட்ட இராமன் வாலியையும் தன் துணைவனாக ஆக்கியிருக்கலாந்தானே இவையனைத்திற்கும் காரணம் இராமன் சுக்கிரீவனுக்கு அவசரப்பட்டுக் கொடுத்த வாக்குறுதியே எனலாம்.

வாலி தான் உயிர் துறக்கும் தறுவாயில் கூட இராவணனைத் தன் வாலிலே கட்டி

இராமன் முன் கொண்டு நிறுத்தும் பாக்கியம் தனக்குக் கிடைக்கவில்லையே என ஏங்கித் துடிக்கிறான். (வாலிவதை நூற்றிப்பத்தொன்பதாம் பாடல்) இதன்படி வாலி உருவில் குரங்காகவும், உணர்வில் மனிதனாகவும் காட்சிப் படுத்தப்படுகிறான். இதிலிருந்து இராமன் குற்றமிழைத்தவனாகவே கொள்ளப்படுகின்ற நிலை தோன்றிவிடுகிறது. தெய்வீகத்தன்மை, அறநீதி வழுவாத பண்பு, அடைக்கலம் புகுந்தோரை ஆதரித்துக் காக்கின்ற தன்மை கொண்ட ஒரு மகாவீரன் ஏன் இவ்வாறான ஒரு இழிவுப் பழியைச் சுமந்தான் என்பதை நோக்கும் போது அவன் சுக்கிரீவனுக்கு அவசரப்பட்டுக் கொடுத்த வாக்கே காரணம் எனத் தோன்றுகிறது. சீதையைப் பறிகொடுத்த மனோ நிலையில் சுக்கிரீவனை நோக்கினான். இராமன் ஆத்திரம் அவன் அறிவை மயக்கியது. இராவணன் நிலையில் வாலியை வைத்தான். சீதையின் மனநிலையோடு உருமையை ஒப்பு நோக்கினான். பின்விளைவை எதிர்பாராது வாலியை கொல்லத் துணிந்தான்.

வாலி இறக்கும் தறுவாயில் இராமனை நோக்கி (வாலி வதைப்படலம் எழுபத்தெட்டாம் பாடலில்) 'உன்னுடைய 'உயிர் போன்றவளும் அமிர்தத்தை ஒத்தவளுமாகிய சனகனின் மகள் சீதையை இழந்த மனத்தடுமாற்றத்தில் தானா நீ எனக்கு இத்தீங்கினை செய்தாய்' என்கிறான். ஆராயாது கொடுத்த வாக்கு இராமன் காப்பாற்றிய விதமும் நீதிக்குப் புறம்பானதே கம்பன் தன் காவியத்திலே தன்னிகரற்ற தலைவனாக இராமனைப் படைக்க முனைந்தான். ஆயின் அந்த இராமனை சாதாரண மனிதனிலும் கீழ்ப்பட்டவனாக ஆக்கி, அவன் தெய்வீகத் தன்மைக்கும் மாசு கற்பித்து விடுகின்றான். வாலி இறந்து கிடக்கும் நிலையில் அவன் மனைவி தாரை, 'எந்தவொரு ஆண்மகனும் செய்ய முடியாத செய்கையே இராமனின் செய்கை' என இகழ்ந்து பேசுவதில் இருந்து இதை அறிந்து கொள்ள முடிகிறது.

இவ்வாறு கம்பன் வாலியைக் கொண்டு பதில் கூறமுடியாத கேள்விகளை இராமன் சார்பாக கேட்டமைக்கு அவன் கவித்திறனும் நுண்ணறிவுமே காரணமாகின்றன. எவ்வாறெல்லாம் கேள்விகளை எழுப்ப முடியுமோ அவ்வாறெல்லாம் எழுப்பி தான் உலகோர் பார்வையில் இருந்து தப்பித்து விடுவதோடு தெய்வாம்சம் உடையவனாக இராமனைக் காட்டி வாலியை சரணடைய வைக்கிறான். இதிலிருந்து கம்பன் ஒரு அபிநவ கவிநாத வம்பே! என்பது பொருந்தும் என உணர்கிறோம்.


கலைமணம் பரப்பும் கலைச்செல்விக்கு வாழ்த்துக்கள்

S. K. DESIGN CENTRE

JEWELS ENGRAVING AND SANGEETHA DESIGNING
[PRESSING & BENDING]

162/3, SEA STREET,

COLOMBO - 11

# பயிர்களைப் பாதுகாக்க ஒன்றிணைந்த பூச்சி புழுக் கட்டுப்பாட்டு முறை

த. காராளசிங்கம்
*விரிவுரையாளர்*

பஞ்ச பூதங்களின் இயற்கை நியதிகளினாலும், அவைகள் ஏற்படுத்தும் இயற்கைச் சூழலினாலும், பூச்சி புழுக்கள் ஓரளவுக்கு இயல்பாகவே கட்டுப்படுத்தப்பட்டு சமநிலையில் வைக்கப்பட்டுள்ளன. மலை அதன் உயரம், கடல், காடு, ஆறு, போன்றவற்றின் அமைப்பினாலும், அவற்றின் திசை ஓட்டங்களினாலும், அவற்றின் தூர இடைவெளிகளினாலும் இவை மட்டுப்படுத்தப் படுகின்றன. மழை, நீராவி, வெப்பம், சூரியஒளி, நீண்ட குறுகிய பகல் மானம், குளிர், பனி, பனிக்கட்டி, வெள்ளப்பெருக்கு காற்று, இடிமின்னல், பூகம்பம், கிரகணம்' நச்சு, வாயுக்களின் வெளியேற்றம் முதலிய வற்றினாலும் பூச்சி புழுக்களின் பெருக்கம் தடைப்பட்டுள்ளது. மக்களின் பழக்க வழக்கங்களினாலும் அவர்களின் சமய சமூக பொருளாதார வாழ்க்கை முறைகளினாலும் கூட பூச்சி புழுக்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படுகின்றது. பூச்சி புழுக்களின் எதிரிகளான ஊண் சூறையாடிகளினால், இவற்றின் கட்டற்ற பெருக்கம் தடுக்கப்பட்டு நிலை நிறுத்தப்படுகிறது. இத்துடன் நில்லாது இயற்கையாகவே பற்றீரியா, பங்கசு, வைரசு நோய்களும் பூச்சி புழுக்களினால் தொற்றி இவற்றினை அழித்து குறைந்த எண்ணிக்கையில் வைத்திருக்கின்றன.

தற்பொழுது அதிகரித்து வரும் சனத் தொகைக்கு உணவும், உடையும், உறைவிடமும், தொழிலும் வழங்குவதற்காக இச்சமநிலையிலுள்ள இயற்கைச் சூழலை வரையறையின்றி ஒரு தலைப்பட்சமாக அத்துமீறிச் சூறையாடி வருகின்றோம். இதன் பயன் தீங்கு விளைவிக்காத சிறிய தொகையில் இருந்த பூச்சி புழுகக்ள் இன்று பெருந்தொகையில் பெருகி, பெரும் தீங்கினைத்தரத் தொடங்கியுள்ளன. இப்பேராபத்திலிருந்து பயிர்களைப் பாதுகாக்க நாம் என்ன செய்ய வேண்டும்.?

இன்று பயிர்களைப் பூச்சி புழுக்களிலிருந்து காப்பாற்றுவதற்கு நாம் ஒன்றிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை மேற்கொள்ள வேண்டும். ஒன்றிணைந்த பயிர் பாதுகாப்பு முறை என்றால் என்ன? பயன்பாட்டுமுறை, பொறியியல்முறை, உயிரியல் முறை, இரசாயனமுறை, சட்டத்துணை முறை, நவீனமுறை, ஆகிய முறைகளும் மிகவும் உகந்த இணையக்கூடிய முறைகளை ஒன்றிணைத்து ஒரு திட்டமிட்ட அட்டவணையில் கையாண்டு பயிருக்குப் பீடைகளினால் ஏற்படும் நட்டத்தை பொருளாதார மட்டத்தின்கீழ் வைத்திருக்கும் ஒரு முறையினை ஒன்றிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறை எனலாம். ஒரு தனிமுறையை மட்டும் கையாண்டு பயிர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பது மலிவானதாகவும், சுலபமானதாகவும், இருக்க முடியாது. எடுத்தவுடனேயே இரசாயன முறையைக் கைக்கொள்ளாமலும் அத்தியாவசியம் ஏற்பட்டால் மட்டுமே தேவைக்கேற்ப தெரிந்தெடுத்து இரசாயன முறையைக் கைக்கொண்டு பூச்சி புழுத்தொகையை மட்டுப்படுத்தும் அடிப்படையைக் கொண்டதாக இது அமைய வேண்டும். தெரிந்தெடுக்கும் இரசாயன பூச்சி நாசினி நன்மையுண்டாக்கும் பூச்சி புழுக்களை அழிக்காமல் இருக்கப் பார்த்துக் கொள்வதும் இதன் அடிப்படை நோக்கமாகும். சுருக்கமாகக் கூறினால் பூச்சி புழுக்களைக் கட்டுப்படுத்தப் பூச்சி நாசினியை ஆகக் குறைந்தளவில் விசிறுதலை அடிப்படையாகக் கொண்டதே ஒன்றிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறையாகும்.

பலமுறை ஒரே பூச்சி நாசினியை ஒரே இனப் பூச்சி புழுக்களைக் கட்டுப்படுத்த

விசிறினால் அப்பூச்சி நாசினிக்குப் பூச்சி புழுக்கள் கட்டுப்பட்டு அழியாமல் எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கும். 1908 ம் ஆண்டு பழமர செதில் பூச்சிகள் சுண்ணக் கந்தகத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கின, நாளடைவில் எதிர்ப்புத் தெரிவிக்கும் பூச்சி புழுக்களின் எண்ணிக்கை பெருகி இன்று 228 வெவ்வேறு இன பூச்சி புழு வருக்கங்கள் பூச்சி நாசினிக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றன. பூச்சி நாசினிகளுக்கு கட்டுப்படாத பூச்சி புழுக்களின் எண்ணிக்கை மேலும் வளர்ந்து கொண்டே போகின்றது. இத்துடன் நின்று விடாது, ஒரு குறிப்பிட்ட பூச்சி நாசினியைத் திரும்பவும், திரும்பவும் ஒரு குறிப்பிட்ட இனப்பூச்சிகளுக்கு விசிறி வரும் போது முன்பு ஒரு பொழுதும் பூச்சி புழுக் கட்டுப்படுத்தலுக்குப் பயன்படுத்தப்படாத ஒரே தொழில் முறை கொண்ட ஒரே இனத்தைச் சார்ந்த ஏனைய பூச்சி புழு நாசினிகளுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. இதனைக் குறுக்கு எதிர்த்தல் எனலாம். பூச்சி புழுக்களில் பல ஒத்த தொழில்படு முறைகளைக் கொண்ட இரண்டு வெவ்வேறான பூச்சி நாசினிகளுக்கோ அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பூச்சி நாசினிகளுக்கோ பூச்சி புழுக்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்ற போது இதனைப் பன்முறை எதிர்ப்பு எனவும் அழைக்கலாம்.

பூச்சி புழுக்கள் பூச்சி நாசினிகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கத் தொடங்கியதும் விவசாயிகள் சிபார்சு செய்யப்பட்ட அளவான பூச்சி நாசினிக்குப் பதிலாக கூடிய அளவு கொண்ட பூச்சி நாசினியை விசிறலுக்குப் பயன்படுத்தத் தொடங்குவர். சிலர் சிபார்சு செய்த அளவுக்கு மேலாகப் பாவிப்பதுடன் நின்று விடாது இரு அடுத்தடுத்த விசிறல்களுக்கிடையே நிர்ணயிக்கப்பட்ட கால அவகாசத்தை கைவிட்டு குறுகிய கால அவகாசத்தில் பூச்சி நாசினிகளைத் திரும்பத் திரும்ப விசிறுகின்றனர்.

ஒழுங்கற்ற இப்படியான விசிறல் முறைகளினால் பயிர்கள் மேலதிக இரசாயனத் தாக்கத்திற்கு உட்படுகின்றன. பயிர்களின் இயற்கையான ஆரோக்கியமான வளர்ச்சி தடைப்படுகின்றது. ஆகவே அவற்றிலிருந்து எதிர்பார்த்த உச்ச விளைச்சல் கிடைப்பதில்லை. இத்துடன் அறுவடையான உற்பத்திப் பொருட்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அளவுக்கதிகமான இரசாயனப் பொருட்கள் தங்கி இருக்கக் கூடிய சாத்தியக் கூறுகளும் ஏற்படுகின்றன. இதன் முடிவு உற்பத்திப் பொருட்களைப் பயன்படுத்தும் ஜீவராசிகளுக்கு இனம் கண்டு கொள்ள முடியாத நோய்கள் உண்டாகின்றன. நிலத்தில் விழும் பூச்சி நாசினிகள் மேல் மண்ணிலுள்ள நுண்ணுயிர்களைப் பாதிக்கக் கூடும் இதனால் நன்மண் தரம் குன்றுகிறது. விளைச்சல் பாதிக்கப்படுகின்றது. நீரில் கலக்கும் இரசாயனப் பொருட்கள் ஒரு நீர்க்கரையில் உள்ள புல்பூண்டுகள் மூலம் உறிஞ்சப்பட்டு அப்புல் பூண்டுகளை உணவாக்கும் கால்நடைகளின் பாலில் சேருகின்றன. மறுபுறம் நீரில் வாழும் உயிர்களில் நஞ்சினை ஏற்படுத்துகின்றன. டீ.டி.ரி. யால் தாக்கப்பட்ட நுளம்புகளை உணவாக்கும் மீனினம் நஞ்சினால் பாதிக்கப்படுகின்றன. இந்த மீன்களை உணவாக்கும் ஏனைய ஜீவராசிகளும் நஞ்சடைகின்றன. இந்த நஞ்சுணவு சங்கிலித் தொடர் போலத் தொடரும் தன்மை கொண்டது மைனா, மரங்கொத்தி, பருந்து, வல்லூறு, செண்பகம் போன்ற பறவையினமும் இனப்பெருக்கம் தடைப்பட்டு அழிகின்றன. சிறிதளவு நஞ்சு கூடப் பறவையினத்தை வலுவுடன் தாக்கும் தன்மை கொண்டது. என்பதை யாவரும் அறிவர். வயலில் விசிறும் போது வயலிலுள்ள நீர் எலிகளை இயற்கையாகவே கட்டுப்படுத்தும் பாம்பு இனம் அழிகின்றது. இதன் விளைவு நீர் எலிகளும் நண்டு, கிளி, போன்றவையும் கட்டுக்கடங்காது பெருகி விவசாய உற்பத்திப் பொருட்களை அழிக்கின்றன.

பூச்சி புழுக்களைப் பிடித்துண்ணும் நன்மை தரும் ஒட்டுண்ணிகளும் கூட அழிந்து போகின்றன. இதன் பலனாகக் கட்டுப்பாட்டின்கீழ் இருந்த முக்கியமற்ற சிறிய பூச்சி புழுக்கள் பெருகிப் பெரும் தீங்கு விளைவிக்கின்றன. மேலதிகப் பூச்சி நாசினிப் பிரயோகத்தினால் நல்ல ஆரோக்கியம் தரும் ஒட்சிசன் வாயுவும், வளிமண்டலமும், பூகற்பச் சூழலும் கூட நச்சுத் தன்மை அடைகின்றன. பூச்சி புழுக்கள் ஒரு பூச்சி நாசினிக்கும் கட்டுப்படாது. எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கியதும், புதிய பூச்சி நாசினியை உற்பத்தியாக்கவும், ஆராயவும் ஏராளமான பணமும், காலமும்

விரயமாகின்றது. புதிய பூச்சி நாசினியைத் தயாரிப்பதற்கான மூலப் பொருட்களின் வளம் தற்போது குன்றி வருவதைக் காணலாம். புதிதாக உற்பத்தியாக்கப்பட்ட பூச்சி நாசினிகளை விவசாயிகள் பழகிக் கொள்ளக் காலதாமதமாகும். இக்கால தாமதத்தினால் பருவகாலப் பயிர்கள் பெருகி வரும் பூச்சி புழுக்களினால் முற்றாகவே அழிந்து விடவும் கூடும். ஆகவே பூச்சி புழுக்கள் பூச்சி நாசினிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் இடங்களில் பொருளாதார வளம் குன்றக் கூடிய சூழல் ஏற்படுகின்றது. விவசாயிகள் நல்ல உச்ச விளைச்சலையும், தரமான உற்பத்திப் பொருட்களையும் குறைந்த செலவில் பெற வேண்டின் பொருளாதார வளத்தை உயர்த்த வேண்டின் பூச்சி புழுக்கள் பூச்சி நாசினிக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தன்மையை ஒழிக்க வேண்டும். அதற்கான ஒரே வழி இன்று ஒன்றிணைந்த பயிர்பாதுகாப்பு முறைகளைக் கைக்கொள்வதாகும்.

சட்டத்துணை முறை:-

இந்த முறையினால் பிற நாடுகளிலிருந்து நம் நாட்டிற்குள் ஆகாய மார்க்கமாகவோ அல்லது கடல் மார்க்கமாகவோ பூச்சி புழுக்கள் பொருட்களுடன் வந்து சேருவதைத் தடை பண்ண முடியும். பூச்சிகளையும், ஊர்திகளையும் குறிப்பிட்ட காலத்திற்கு தடுப்பு முகாம்களில் தடுத்து வைத்து பரீட்சித்து, பரிகரித்து தக்க நடவடிக்கை எடுக்க இந்த முறை அனுகூலமாக இருக்கின்றது. உள் நாட்டிற்குள்ளும் கூட சில குறிப்பிட்ட பகுதியில் பூச்சி புழுக்கள் உற்பத்தியாகி விளை பொருட்களைப் பாதித்தால் பாதிக்கப்பட்ட விளை பொருட்களை ஏனைய தொற்றற் பகுதிகட்கு எடுத்துச் செல்லப்படுவதைத் தடுத்திடச் சட்டம் உதவுகின்றது. இந்நாட்டின் 1924ம் ஆண்டு 10ம் இலக்கச் சட்டத்தில் கூறப்பட்ட எல்லா முறைகளையும் அனுசரித்தால் பூச்சி புழுப் பெருக்கத்தைத் தடை செய்யமுடியும். பூச்சி புழுக்கள் வந்த பின்பு தடுப்பதிலும் பார்க்க வரமுன்னர் தடுக்கும் முறைக்கு இந்த முறை மிகவும் அனுகூலமாக இருக்கின்றது.

புதிய முறை:

இந்த முறையில் பெண் பூச்சிகளின் இன விருத்திக்கான சுரப்புகளை உபயோகித்து ஆண் பூச்சிகளைக் கவர்ந்து அழித்தல் அல்லது கதிர் இயக்கமுறை. இரசாயன முறைகளைக் கையாண்டு ஆண் பூச்சிகளை மலடாக்கி விடமுடியும். இதனால் பூச்சி புழுப் பெருக்கம் கட்டுப்பட்டு விடும். பருவமடைந்த பெண் பூச்சி தனது பாலினச் சுரப்பியினால் இரண்டு மைல் சுற்றாடலுக்குட்பட்ட ஆண் பூச்சிகளைக் கவர்ந்திழுக்கும் ஆற்றல் கொண்டதென்பது அறியக்கிடக்கிறது. பருத்தியில் சேதம் விளைவிக்கும் செங்காய்த் துளைப்பான் பூச்சியைக் கட்டுப்படுத்த இதன் பெண் பூச்சியின் பால் சுரப்பை ஒத்த செயற்கைப் பால் சுரப்பை நிலத்தில் விசிறி விட்டார்கள். போலிப்பால் சுரப்பியினால் கவரப்பட்டுவந்த பல்லாயிரக்கணக்கான ஆண் பூச்சிகள் சுரப்புகளினால் நனைந்த கல்லுகளுடனும், மண் கட்டிகளுடனும் பாலியல் சேர்க்கையில் ஈடுபட்டுத் தமது பால் உறுப்புக்களை இழந்தன. இதனால் இப்பூச்சி இனப் பெருக்கம் தடைப்பட்டது. இதே போன்று வேப்பம் புண்ணாக்கையும், வேப்பம் பொருட்களையும் பயன்படுத்தி புகையிட்டால் கூட சில பூச்சி புழுக்களை பயிருக்கு அருகில் வராமல் தூரத்திற்குக் கலைத்துவிட முடியும்.


சில இரசாயனப் பசைகளினாலும் ஒட்டுந் தன்மையான மேற்பரப்புப் பரம்பிகளினாலும் கவர்ந்து இழுக்கும் பதார்த்தங்களினாலும் கூட பூச்சி புழுப் பெருக்கத்தை மட்டுப்படுத்த முடியும். பனம் பழத்தின் மெல்லிய கழிவைப் பயிர்களுக்குத் தெளிப்பதன் மூலம் கத்தரிப் பயிருக்கு வரும் தண்டுதுளைப்பான் புழுக்களை கிராமங்களில் வயது முதிர்ந்த கமக்காரர் இன்னும் கட்டுப்படுத்துவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இத்துடன் காலத்திற்குக் காலம் குறிப்பிட்ட இடங்களில் சில பூச்சி புழுக்கள் உற்பத்தியாகிப் பெருகுவதையும் அல்லது இவ்விடத்திற்கு வந்து சேர்ந்து சேதம் ஏற்படுத்துவதையும் அவதானித்து கணக்கெடுப்பதுவும் நன்று. ஏனெனில் இந்த முறையைக் கொண்டு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட பயிருக்கு, குறிப்பிட்ட பூச்சி புழுக்கள் தான் வரக்கூடும் என்று எமக்குத் தெரியுமாகில் அதற்கேற்ப நாம் தக்க முறையில் உரிய நடவடிக்கைகளை முன் கூட்டியே திட்டமிட்டு முன் எச்சரிக்கையாக இருக்க முடியும். வெண்காயப் பயிரில் வெண்காயப்புழு ஒரு குறிப்பிட்ட மாதத்தில் நடும் பயிருக்குத்

தான் வரும் என்று தெரிந்திருந்தால் அதற்கேற்ப ஒன்றிணைந்த தடுப்பு நடவடிக்கைகளை முன் கூட்டியே எடுத்துக் கொள்ள முடியும்.

**இரசாயன முறை:**

இந்த முறையினால் பூச்சி புழுக்களைக் கட்டுப்படுத்த முயலும்போது சரியான பூச்சி நாசினியைத் தெரிந்து சிபார்சு செய்த காலத்தினுள் சரியான தெளிகருவி பீச்சு முறையினால் சரியான அளவு மருந்தினைச் சிபார்சு செய்த அளவு நீரில் கலந்து சிபார்சு செய்த அளவு கரைசலை விசிறி விடல் வேண்டும். தெரிவு செய்யப்படும் இரசாயனப் பூச்சி கொல்லி மருந்து சேதம் விளைவிக்கும் பூச்சி புழுக்களை மட்டும் உடன் கட்டுப்படுத்தும் தன்மை உடையதாக இருத்தல் வேண்டும். இப்படியான பூச்சி, புழு நாசினியைத் தெரிவு செய்து கொண்டால் இந்த நாசினிகள் பயிரில் தங்கி நின்று நன்மை பயக்கும் பூச்சி புழுக்களின் பெருக்கத்தை தடைபண்ணமாட்டாது. அல்லது பயிரிடும் வயலில் தீமை செய்யும் பூச்சி புழுக்களைக் கவர்ந்து இழுக்கும் ஒட்டும் தன்மையான இரசாயன கொல்லிகளை சில குறிப்பிட்ட பயிரில் மட்டும் தெளித்துக் கட்டுப்படுத்துவதன் மூலம் நன்மை பயக்கும் பூச்சி புழுக்களைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும். இந்த முறை பழத் தோட்டங்களில் கையாளப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே.

இப்படியான ஒன்றிணைந்த பூச்சி புழுக் கட்டுப்பாட்டு முறைகளை நாம் உடன்மேற்கொண்டால் அதிக செலவில்லாமல் கூடிய தூய விளை பொருட்களை நாம் உற்பத்தி செய்யமுடியும் விளை பொருட்கள் நஞ்சற்றதாகவும், மலிவானதாகவும் இருப்பதனால் நுகர்வோரும் கூடிய அளவு விளை பொருட்களை வாங்குவர். ஆகவே விளை பொருட்களுக்கு ஏற்ற சந்தைமானம் எப்பொழுதும் இருக்கும். கமக்காரர்கள் தொடர்ந்தேர்ச்சியான இலாபத்தைப் பெறமுடியும். விவசாயிகளுக்கும், அவர்களுடைய விவசாய உபகரணங்களுக்கும் எப்பொழுதும் தொழில் வாய்ப்பு ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். பூச்சி, புழு நாசினிக்கு நாளுக்கு நாள் விலை ஏற்றம் அதிகரித்துக்கொண்டு போனாலும் அவ்விலை ஏற்றம்நாட்டுக் கமக்காரர்களைப் பொறுத்த மட்டில் ஒரு பெரும் பொருளாதாரத் தாக்கத்தை ஏற்படுத்த முடியாததாகவே இருக்கும். நம் நாடு ஒருங்கிணைந்த விவசாய முயற்சியைப் பன்னெடுங் காலம் தொடக்கம் கைக்கொண்டு வருவதால் இங்கு ஒருங்கிணைந்த பூச்சி புழு கட்டுப்பாட்டு முறையை மிக எளிதில் மேற்கொண்டு பெருந்தொகையான விளை பொருட்களை உற்பத்தியாக்கி தன்னிறைவு கண்டு மிகுதியைப் பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியைப் பெரிதும் சம்பாதிக்க இந்த ஒன்றிணைந்த பூச்சி புழுக் கட்டுப்பாடு முறை உதவுவதாகும்.



## மகாவலித் திட்டமும், உதவும் நாடுகளும்

| திட்டம் | நோக்கம் | உதவும் நாடு |
|---|---|---|
| விக்டோறியா | நீர்ப்பாசனம் - மின்சாரம் | இங்கிலாந்து |
| கொத்மலை | நீர்ப்பாசனம் - மின்சாரம் | சுவீடன் |
| ரந்தெனிகல | நீர்ப்பாசனம் - மின்சாரம் | ஜேர்மனி |
| மாதுறு ஓயா | நீர்ப்பாசனம் | கனடா |
| மொறக்காகந்தை | நீர்ப்பாசனம் | ஐக்கிய அமெரிக்கா |

# மானிடரும், சிரிப்பும்

தொகுப்பு; செல்வி. பி. விமலாவதி,
விடுகையாண்டு.
ஆரம்பநெறி, A.

| | | |
|---|---|---|
| 1. கண் பார்த்துச் சிரிப்பவன் | — | காரியவாதி |
| 2. காணாமல் சிரிப்பவன் | — | கஞ்சன் |
| 3. கற்பனையில் சிரிப்பவன் | — | கவிஞன் |
| 4. கோபத்தில் சிரிப்பவன் | — | வெறியன் |
| 5. மோகத்தில் சிரிப்பவன் | — | சிந்தனையாளன் |
| 6. தெரியுமென்று சிரிப்பவன் | — | பசப்பாளன் |
| 7. தெரியாதென்று சிரிப்பவன் | — | நடிகன் |
| 8. இடம் பார்த்து சிரிப்பவன் | — | சந்தர்ப்பவாதி |
| 9. இருக்குமிடமெல்லாம் சிரிப்பவன் | — | கோமாளி |
| 10. ஓயாமல் சிரிப்பவன் | — | பைத்தியக்காரன் |
| 11. ஓடவிட்டு சிரிப்பவன் | — | வஞ்சகன் |
| 12. நீதியோடு சிரிப்பவன் | — | அறிஞன் |
| 13. நிலைமறந்து சிரிப்பவன் | — | காதலன் |
| 14. செயல் கெட்டுச் சிரிப்பவன் | — | பச்சோந்தி |
| 15. அருளுக்கு சிரிப்பவன் | — | ஆண்டி |
| 16. துன்பத்தில் சிரிப்பவன் | — | மனிதன் |
| 17. மகிமையில் சிரிப்பவன் | — | மன்னன் |
| 18. மாண்பில் சிரிப்பவன் | — | பண்பாளன் |
| 19. குழைந்து சிரிப்பவன் | — | எத்தன் |
| 20. கொடுக்கும்போது சிரிப்பவன் | — | சூழ்ச்சிக்காரன் |
| 21. இன்பத்தில் சிரிப்பவன் | — | ஏமாளி |
| 22. அறியாபல் சிரிப்பவன் | — | மடையன் |

(ஆதாரம் : 'விபுலம்')

**பதினாறு பேறுகள்:-**

அறிவு, இளமை, துணிவு, நோயின்மை, நுகர்ச்சி, புகழ், கல்வி, ஆற்றல், வெற்றி, நன்மை, பொன், நெல், அழகு, பெருமை, ஆயுள், நல்லூழ்.

பசிவந்திடப் பத்தும் பறக்கும் என்பார்கள்.

இதோ அந்தப் பறக்கும் பத்து!

மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடமை, தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை, காமுறுதல்.

# ஞாபகமும் மறதியும்

திரு. ச. சரவணமுத்து
ஆரம்பநெறி
விடுகையாண்டு

ஞாபகம் என்பது உளவியலில் இடம் பெறும் முக்கிய எண்ணக் கருக்களில் ஒன்றாகும். 'கற்றல்' கற்றதை நிலை நிறுத்தல்' மீட்டறிதல் பார்த்தறிதல், இவையனைத்தும் சேர்ந்தே ஞாபகமாகும். அதாவது புலக் காட்சி மூலம் உள்ளத்தினுள் உருவாகும் அமைப்புக்களை மீட்டறியும் சக்தியே ஞாபமாகும். மேலும் கற்ற ஒரு பொருளானது கால அளவில் அதை மீட்டறியும் தன்மையிலோ அல்லது பார்த்தறியும் தன்மையிலோ குறையும்போது அதனை மறதி எனக் கூறுகின்றனர். கற்ற பொருளைப்பற்றி விபரிக்கும்போது ஒருவன் அதில் எவ்வளவு பகுதியை நினைவில் வைத்திருக்கின்றான் அல்லது மறந்திருக்கின்றான் என்பதை அறியமுடியும்;

ஞாபகத்தைப் பற்றி அறிவதற்கு முதன் முதலாக ஆய்வு கூடங்களில் பரிசோதனை செய்து உண்மைகளை வெளியிட்டவர் 'எபிங்கோஸ்' என்பவராவார். ஒருவன் ஒரு செய்யுளை தவறின்றி மனப்பாடம் செய்தான் எனக்கொண்டால் 06மாதங்கள் கழிந்த பின் அவனை அதே செய்யுளை எழுதவோ அல்லது வாய்மூலம் சொல்லவோ வைக்க முடியும். இதில் அவன் தவறில்லாமல் ஒப்புவிற்கும் பகுதி 75% என்றால் அது அவனது ஞாபகத்தின் அளவானது. மிகுதி 25% மறதியைக் குறிக்கும்.

ஒன்றை விளங்கி பகுத்தாராயும் போது ஞாபகம் அதிகம் இருக்கும். பார்த்து ஞாபகப்படுத்துவது சிறந்தமுறையாகும். கீழ் வகுப்பினருக்கு பார்த்து ஞாபகம் வைத்திருக்கும் முறையும், மேல் வகுப்பினருக்கு விளங்கிக் கற்கும் முறையும் சிறந்ததாகும். உபகரண முறையில் கற்பிக்கும் போதும் பயிற்சிகள் செய்து கற்பிக்கும் போதும் ஞாபகம் விரைவில் ஏற்படும். மனம் படிக்கும் போது ஒருநிலைப் பட்டதாகவும் தெளிவானதாகவும் இருக்க வேண்டும். மீட்டல் பயிற்சி அடிக்கடி நிகழ்ந்தாலும் ஞாபகம் விரைவில் ஏற்படும். அதிகமான ஓய்வு கற்றலிடையே இருத்தல் வேண்டும். விளங்காமல் மனனம் செய்தால் மறதி ஏற்படும்.

ஒரு குறிப்பிட்ட விடயத்தை மனனம் செய்து அதனைக் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் ஒப்படைக்கின்றோம். இவ்வாறு செய்யும் போது மூன்று நிலைகள் உண்டு. முதலில் அவ்விடயத்தை படித்து மனனம் செய்ய வேண்டும். அதன் பின்பு அவ்விடயத்தை மனதில் நிறுத்த வேண்டும். இறுதியில் அதை மீட்டறிந்து அல்லது ஞாபகத்தில் வரவழைத்துக் கூற வேண்டும்.

இம் மனனம் செய்யும் திறமை அவனது நுண்மதியில் பெருமளவு தங்கியுள்ளது. மனனம் செய்பவன் குறிப்பிட்ட விடயத்தை கற்பதன் நோக்கத்தைத் தெளிவாக அறிந்திருத்தல் வேண்டும். அதாவது எதைக் கற்க வேண்டும் என்று நாம் தெளிவாக அறிந்திருந்தால் மனனம் செய்வது இலகுவாகும். மேலும் மனனம் செய்யும் பொழுது விடயத்தின் பொருளை அறிவோமானால் நாம் அதனை இலகுவில் மனனம் செய்யலாம். பொருளற்ற விடயத்தை நாம் மனனம் செய்வது கடினம். ஏதோ ஒரு விடயத்தை எமக்கு புரியக்கூடிய ஏதெனும் ஒரு முறையில் அமைத்து அவற்றில் ஒரு ஒழுங்கை கண்டு பிடித்து விட்டால், அவ்விடயத்தை இலகுவாக மனனம் செய்து விடலாம். மேலும் ஒரு பந்தியை மீண்டும் மீண்டும் மௌனமாக வாசிப்பதைவிட அவ்விடயத்தை உரத்து வாசித்தல், அதை இன்னொருவருக்குக் கூறுதல் அல்லது பார்த்து எழுதுதல் முதலியன மனனம் செய்ய உதவுகின்றன. அத்தோடு ஒரு விடயத்தை பலமுறை மீட்பதனால் இலகுவாக மனனம் செய்து கொள்ள முடியும். ஒரு பொருளை இடைவெளை

இன்றி மீட்டலை விட இடைவேளை விட்டு மீட்பதால் இலகுவாக மனனம் செய்ய முடியும் என எபிங்கோஸ் (Ebbinghaus) கூறுகின்றார். தொகுதி முறை மூலமும் பகுதிமுறை மூலமும் இலகுவாக மனனம் செய்ய முடியும். அதாவது ஒரு பாடலை மனனம் செய்ய வேண்டுமானால் அதனை ஒவ்வொரு வரியாக மனனம் செய்வதை விட அதனைத் தொகுதியாகப் படித்து மனனம் செய்வதே சிறந்ததாகும். ஆனால் மனனம செய்யும் விடயம் ஒருவனின் திறமைக்கும் அனுபவத்திற்கும் அப்பாற்பட்டதாக இருக்குமானால் பகுதிமுறைக் கற்றலே கூடிய பயனளிக்கும். அத்தோடு இரண்டு முறைகளை இணைத்துப் பயன்படுத்தல் நல்ல பயன் தருமென கருதப்படுகின்றது. முதலில் தொகுதி முறையில் முழு விடயத்தையும் சில தடவைகள் திரும்பத் திரும்ப படித்து அதன் அமைப்புக்களையும் பொருள்களையும் கிரகித்துக் கொள்ள வேண்டும். பின் கருத்துக்களின் அமைப்புக்கு ஏற்ப சிறுபகுதிகளாகப் பிரித்து ஒவ்வொன்றையும் மனனம் செய்தல் வேண்டும். இறுதியில் பகுதிகளை இணைத்து தொகுதியாகப் படிப்பதன் மூலம் முழுவதையும் மனனம் செய்து கொள்ளலாம்.

நிலை நிறுத்தல் என்ற அம்சத்தை நோக்கும் போது, இது நனவு நிலையில் நிகழ்வதொன்றாகும். மனனம் செய்யும் போது மூளையின் கலன்கள் ஒருங்கமைக்கப்படுகின்றன. பின்பு குறிப்பிட்ட தூண்டி அளிக்கப்படும் போது அக்கலங்கள் மீண்டும் தொழிற்படுவதனால் மனனம் செய்யப்பட்ட விடயம் ஞாபகத்திற்கு வருகின்றது. எனவே நிலை நிறுத்தல் உடல் சார்ந்த ஒரு நிகழ்ச்சியாகும். ஒழுங்கமைப்புப் பெற்ற கலங்கள் அழிக்கப்படாமல் இருக்கும் வரை மனனம் செய்யும் விடயம் நினைவில் நிற்கும். இறுதியாக ஞாபகப்படுத்தல் என்ற விடயத்தை நோக்கும்போது இது மீட்டறிதல் இன்னதென்று அறிதல் அல்லது இனங்காணல் என இரண்டு முறைகளில் நிகழும். மீட்டறிதல் என்பது குறித்த விடயம் கண் முன்னால் இல்லாத போதும் அதனை சிந்தனையில் வரவழைத்தலாகும். ஒரு குறித்த வினாவுக்கு விடையெழுதுதல், இதற்குச் சிறந்த உதாரணமாகும். இன்னதென்று அறிதல் என்பது முன்னால் இருக்கும் பொருளை அல்லது விடயத்தை இதற்கு முன்பு அறிந்ததொன்று என உணர்தலாகும்.

ஆசிரியர் மாணவர்களின் ஞாபகத்தை வளர்ப்பதற்கும் கற்க வேண்டியவற்றை அவர்கள் மனதில் நிலை நிறுத்துவதற்கும் பல வழிகளிலும் உதவலாம். அவையாவன:

1. கற்பதற்கு ஒரு நோக்கம் இருக்க வேண்டும். நோக்கம் இன்றி கற்பவை எவையும் நிலை நிற்கமாட்டாது. நாம் பரீட்சைகளில் சித்தியடையும் நோக்கத்துடனேயே பாடங்களை நினைவில் நிறுத்துகின்றோம் தேவையான ஒருவரின் பெயரை நினைவில் வைத்திருப்போம். ஆனால் தேவையற்றவரின் பெயரை நினைவில் வைத்திருக்கமாட்டோம். நாடகத்தில் நடிப்பதற்காகவும் பேச்சுப் போட்டியில் பங்குபற்றுவதற்காகவும் வசனங்களை மனனம் செய்கின்றோம்.

2. எமது உரு வெளிப்பாட்டுத் திறனை (imagery) நாம் கூடிய வகையில் பயன்படுத்த வேண்டும். ஒருவரை ஞாபகப்படுத்த வேண்டுமெனில் அவரின் நிழற்படத்தை உள்ளத்தில் பதித்தல் வேண்டும். உதாரணமாக அவருடைய முகம், உருவம், உடுப்பு, பேசும் முறை, குரல் முதலியவற்றை அவதானித்தல் வேண்டும்.

3. கற்றவற்றை எமது அனுபவங்களுடன் இணைத்து வைத்துக் கொள்ள வேண்டும். எவ்வளவுக்கு அதிக தொடர்புகள் ஏற்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டுமோ அவ்வளவுக்கு ஞாபக சக்தி அதிகமாக வளர்ச்சியடையும்.

4. எதுகை மோனை போன்ற அமைப்பு (rhythm) நிலைநிறுத்த உதவும். பாடல்கள், பெருக்கல் வாய்ப்பாடுகள், வானொலி விளம்பரப்பாடல்கள் இவ்வகையான அமைப்புக்கள் உடையன.

5. பரீட்சைக்கு சொற்ப நாட்களின் முன்பு ஓய்வு இன்றி கற்றல் பரீட்சைக்கு மாத்திரம் தான் பயன்படும். பரீட்சையின் பின்பு மறக்கப்பட்டு விடும். நீண்ட காலம்வரை ஞாபகத்தில் இருக்க நீண்டகால இடைவெளி விட்டுப் படித்தல் நன்று.

6. முடிந்தவரையில் கற்றவற்றை மீட்டுக் கூறிப்பார்த்தல் வேண்டும் அல்லது இன்னொருவருக்குக் கூற வேண்டும். இதுவே தொழிற்பட்டுக் (active) கற்கும் முறையாகும்.

தொழிற்படா (passive) முறையை விட இது சிறந்தது.

7. கற்றபின் ஓய்வெடுத்தல் அல்லது நித்திரை செய்தல் நல்லது. தொடர்ச்சியாக கற்றல் கூடாது. ஒரு விடயத்தை கற்றபின் ஓய்வெடுக்கும்போது பிறவிடயங்களைக் கற்றல் கூடாது.

8. அளவுக்கு மிஞ்சிக் கற்றலும் (overlearning) ஞாபகத்தை அதிகரிக்கும். மாணவர் ஒரு விடயத்தைப் புரிந்து கொண்ட பின்பும் அதைத்தொடர்ந்து கற்கும்படி ஊக்குவித்தல் வேண்டும்.

9. ஒரே அமைப்புடைய விடையங்களை ஒன்றன் பின் ஒன்றாக கற்பது நன்றன்று.

மறதியை நாம் ஆழமாக நோக்கும்போது மறதி என்பது ஞாபகத்திற்கு எதிரான ஒன்றாக அல்லது சொல்லாகக் காணப்படுகின்றது: கற்ற ஒரு பொருளானது, கால அளவில் அதை மீட்டறியும் தன்மையிலோ அல்லது பார்த்தறியும் தன்மையிலோ குறையும்போது அது மறதி எனப்படும். இங்கு காலத்திற்கும் மறதிக்கும் இடையில் தொடர்புள்ளதை நாம் அறிய முடியும். காலம் செல்லச் செல்ல மறதியின் அளவு கூடும்.

கற்றலில், கற்றலை நிலை நிறுத்தல் நினைவு கூருதல் என்பன முக்கிய இடத்தைப் பெறுகின்றன. எனவே கற்ற விடயத்தை நினைவு கூரத் தவறுவதை மறதி என்கின்றோம். இந்த மறதி என்பது கற்றல் என்ற அம்சத்தில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. கற்றலின் தரத்தை உயர்த்த மறதியை நீக்க வேண்டும். மறதியை நீக்க பரிசு தண்டனை என்பன முக்கிய விடயம் பெறுகின்றன. மறதியை நீக்க தண்டனை முக்கியமாகும், எனினும் தண்டனையை விட பரிசு சிறந்த முறையாகும்:

கற்ற ஒரு பொருள் மறப்பதற்கு பின்வரும் முக்கிய காரணங்கள் உள்ளன. அவையாவன:

1. சூழ்நிலைத் தூண்டல்கள் தொடர்ந்தும் இடம் பெற்றுக் கொண்டு இருப்பதனால் மனிதன் பல்வேறு நடத்தைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறான். எனவே நாளடைவில் ஒரு நடத்தை மற்றொரு நடத்தையைப் பாதிப்பதால் அதன் திறன் குறைந்து மறதியை உண்டு பண்ணுகின்றது.

2. மனித உயிரணுக்கள் புதிதாக உற்பத்தியாக்கப்படுகின்றன; அல்லது அழிக்கப்படுகின்றன. எனவே உயிரணுக்களின் உற்பத்தி அல்லது அழிவின் காரணமாக கற்றல் திறன் மாறுகின்றது.

இங்கு முதலாவதின்படி பயிற்சி பெற்ற ஒரு ஆற்றல் அடிக்கடி பயன்படாது விட்டால் அடிக்கடி பயன்படும் மற்றொரு ஆற்றல் அதை அழித்து விடுகின்றது. அல்லது புது அனுபவம் பழைய அனுபவம் ஆகிய இரண்டுக்கும் இடையே போட்டி ஏற்பட புது அனுபவங்கள் பழைய அனுபவங்களை அழித்து விடுகின்றன.

3. பின்னியக்கத்தடையும் ஞாபக மறதிக்குக் காரணமாகுமென்று பெரும் பாலான உளவியலாளர்கள் கருதுகின்றனர். முதலில் கற்கும் தூண்டல் ஒன்றும் துலங்கல் ஒன்றும் ஆகியவற்றை பின்னர் கற்கும் தூண்டல் இரண்டும் துலங்கல் இரண்டும் பாதிப்பதால் தூண்டல் ஒன்றையும் துலங்கல் ஒன்றையும் நினைவுக்குக் கொண்டு வர முடியாதுள்ளது.

4. தூக்கமும் மறதியின் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. விழித்திருப்பவரின் மறதியை தூக்கத்திலிருப்பவரின் மறதியுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தூக்கத்திலிருப்பவர்கள் மிகக் குறைந்தளவு மறதியையே கொண்டிருப்பர். இதற்குக் காரணம் சூழலால் பாதிக்கப்படவில்லை என்பதாகும்.

5. மெய்ப்பாட்டு உணர்வும் மறதியில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. அதாவது கற்கும் பொருள் மீது அருவருப்பு, அச்சம் போன்ற மெய்ப்பாடுகள் அமைந்து காணப்பட்டால் அவை இலகுவில் மறந்து போய் விடுகின்றன. எனவே மெய்ப்பாட்டிற்கும் மறதிக்கும் இடையே நெருங்கிய தொடர்புண்டு.

6. மூளையில் ஏற்படும் அதிர்ச்சிக்கும் மறதிக்கும் இடையேயும் தொடர்புண்டு என்பதை வேறுசில உளவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். தற்செயலாக விழுந்து தலை அடிபட்டால் அதற்குள் நிகழ்ந்த சம்பவங்களை மறந்து விடுகின்றனர்.

7. சூழ்நிலைக்கும் ... க்கும்
யுள்ள தொடர்பு ... அவதானிக்க
குறித்த ஒரு செய்தினை மனப்பாடம் செய்து
வகுப்பில் கூறும் ஒரு குழந்தை வேறான
சூழ்நிலை அமைப்புடைய வீட்டில் கூறும்
போது பல பிழை விடுவதை ஆய்வு மூலம்
அவதானித்துள்ளனர்.
8. ஒன்றைக் கற்கும்போது அதனை பூர
ணமாக விளங்கிக் கற்காமல் விட்டால் மறதி

...டும். பயம் இன்ப உணர்ச்சி ... மறதி
... தன்மை போன்ற நிலை ... மறதி
ஏற்படும். உள நோயாளிக்கு ... மறதி
ஏற்படும்.

9. பலாத்காரமான ... கற்பித்தலினாலும்
சூழலின் பாதிப்பினாலும் அதிர்ச்சி போன்ற
வற்றினாலும் மறதி ஏற்படக்கூடியதாகவுள்
ளது.

---

உசாத்துணை நூல்கள்: கல்வி உளவியல் (ச. முத்துலிங்கம்)
உளவியல் ஓர் அறிமுகம் (சண்முகம்)

## தமிழ்த் தினப் போட்டிகள் 1992.

வடக்கு கிழக்கு மாகாண தமிழ்த்தின இறுதிப் போட்டிகள் கடந்த ஜூன் 20ம் திகதி மட்டக்களப்பில் நடைபெற்றது. ஜூன் 21ல் மட்/இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்தில் மகாவித்துவான் F.X.C. நடராசா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். மேற்படி போட்டிகளில்.

| | | | | |
|---|---|---|---|---|
| மட்டக்களப்பு | கல்வி | மாவட்டம் | 22 | முதலிடங்களையும் |
| திருகோணமலை | ,, | ,, | 14 | ,, |
| வவுனியா | ,, | ,, | 03 | ,, |
| கல்முனை | ,, | ,, | 04 | ,, |

பெற்றன.

அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டிகள் ஜூலை 19ம் திகதியன்று கண்டி புனித அந்தோனியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன. பிரதம விருந்தினராக அதிமேதகு ஜனாதிபதி பிரேமதாசா அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

அகில இலங்கை ரீதியில் மட்டக்களப்பு மாவட்டம் 8 தங்கப்பதக்கங்களைப் பெற்றுள்ளது.

## கொஞ்சம் சிரியுங்களேன்........

பேனாட்ஷா ஒல்லியானவர். செஸ்ரேட்டன் நன்றாகக் கொழுத்தவர். ஒரு நாள் செஸ்ரேட்டன் ஷாவைப் பார்த்து ''ஐயா உங்களை யாரேனும் பார்த்தால் நாட்டில் பஞ்சம் நிலவுகிறது என்று சொல்லப் போகிறார்களே'' என்றார். அதற்கு ஷா பதிலாக ''ஆமாம், உங்களைப் பார்த்தால் நாட்டின் பஞ்சத்திற்கு நீங்களே தான் காரணம் என்றல்லவா சொல்லப் போகிறார்கள்'' என்றாரே பார்க்கலாம்.

# இந்து மத தத்துவத்தின் சிலதுளிகள்

தொகுப்பு: வே. யோகராசா
விடுகையாண்டு
ஆரம்பநெறி B

1) சர்வ வல்லமை மிக்க சர்வ வியாபியான, முற்றும் உணர்ந்த ஒரு இறைவன் இருக்கிறான்.

2) ஒவ்வொரு உயிரும் இறைவனை நோக்கிய பயணத்தை மேற் கொள்கிறது. அங்ஙனம் இறைவனுடன் இரண்டறக் கலக்கும் நிலையை மோட்சம் என்கிறோம்.

3) கர்மவினைகளை முற்றாகத் தொலைக்கும்வரை மறுபிறவிகள் தொடர்ந்து கொண்டிருக்கும் என இந்துமதம் தெட்டத் தெளிவாக வலியுறுத்துகிறது.

4) எமது சிந்தனை, சொல், செயல் என்பவற்றை புனிதப்படுத்திக் கொள் வதற்காகவே கோயிற் பூஜை, யாகம், தியானம், யோகம் போன்ற பல் வேறு முறைகளை நாம் மேற்கொள்கிறோம்.

5) மனக் கட்டுப்பாடு, ஒழுக்கமுள்ள நடத்தை போன்றவற்றோடு ஒரு சற் குருவின் வழிகாட்டலிலே எமது எண்ணங்களை நாம் தூய்மை செய்து கர்ம பலன்களைக் குறைத்துக் கொள்ளலாம்.

6) அனைத்தும் இறைவனின் படைப்புக்களே, எனவே, பேதம் பாராட்டாது, மனிதர்கள் மீதும் ஏனைய படைப்புக்கள் மீதும் அன்பு செய்யும் போது நாம் இறைவனுக்கு உகந்தவர் ஆகிறோம்.

7) ஒரே உண்மையை பல மதங்களும் பலவாறு உரைக்கின்றன. கருணை உணர்வுடன் பிறருக்கு, நினைப்பாலோ, செயலாலோ தீங்கு செய்யாத எவரும் இறைவனின் அருட்குழந்தைகள். இறைவன் சந்நிதியில் பேதங் கள் எதுவுமே இல்லை.

8) ஞானத்தினாற் சற்குணங்களும், அச் சற்குணங்களினால் ஞானமும், தடா கமும் தாமரையும் போல நன்றாய் வளரும்.

9) ஒழுக்கமாய் இருந்து கொள். எல்லாம் சரியாக நடைபெறும். ஒழுக்கமே உயர்வு தரும்.

10) மற்றவர்களுக்கு உதவ வேண்டின் இறைவனை நோக்கி பிரார்த்தனை செய். உன்னால் வேறென்ன செய்ய முடியும்? யாவும் அவன் செயல். இதுவே உத்தமமான உண்மையாகும்.

11) பூகம்பம் கெடுதி செய்தால் நாம் திருப்பிக் கெடுதி செய்கிறோமா? பேசாமல் இருப்போம். அதேபோல் அவரவர் வேலையைப் பார்த்துக் கொள்ள வேண்டும். எல்லாம் கடவுளே.

12) நாங்கள் எங்கள் சிறுமைக் குணத்தினால் இயல்பிழந்து தரும வழியி னின்று தவறுகிறோம். தவறுதல் நீங்கித் திடமுண்டாகச் சிவத்தியா னமே சிறந்த கருவியாகும்.

ஆதாரம்! 'கோபுரம்'

# ஆளுனர் பேரவை - 1991 - 1992

காப்பாளர்: திரு. வ. கனகசிங்கம் முதல்வர்

### 1991

| முதலாம் பருவம் | இரண்டாம் பருவம் | மூன்றாம் பருவம் |
|---|---|---|
| திரு. வே. யோகராஜா | திரு. பொ. நடராசன் | திரு. த. சகாதேவராஜா |
| செல்வி. ச. ருத்திரானந்த ராணி | செல்வி. தி. சசிலதா | செல்வி. க. லா. நிமாலினி |

### 1992 2ம் வருடம்

| | | |
|---|---|---|
| திரு. செ. ரவிநாதன் | திரு. ச. சரவணமுத்து | திரு. தி. நடராஜா |
| செல்வி. த. சந்திரிகா | செல்வி. பொ. விமலாவதி | திருமதி. எல். ஜீ. யேசு தாசன் |

### 1992 1ம் வருடம்

| | | |
|---|---|---|
| திரு. செ. மோகனதாசன் | திரு. கே. இராசசேகர் | திரு. ம. உதயகுமார் |
| செல்வி. ந. நர்மதா | செல்வி. க. புஷ்பராணி | செல்வி. கா. நாகேஸ்வரி |

## பயிற்சி நெறித் தலைவர்கள்

| 1ம் பருவம் | 1991 | 1992 |
|---|---|---|
| ஆரம்பக்கல்வி A | திரு. பயஸ் ஆனந்தராஜா<br>திருமதி. சோ. மோகனராஜா | திரு. நா. புட்பமூர்த்தி<br>செல்வி. நா. அமலேஸ்வரி |
| ஆரம்பக்கல்வி B | திரு. கி. ரவிச்சந்திரன்<br>செல்வி. தி. சசிலதா | திரு. வே. பாலசுப்பிரமணியம்<br>செல்வி. மா. பாக்கியலெட்சுமி |
| விஞ்ஞானம்/கணிதம் | திரு. பொ. நடராசன்<br>செல்வி. சி. சாந்தினி | திரு. செ. சண்முகநாயகம்<br>செல்வி. வி. விஜயகுமாரி |
| **2ம் பருவம்** | | |
| ஆரம்பக்கல்வி A | திரு. ஸ். கீதபொன்கலன்<br>செல்வி. ஐ. மீராளினி | திரு. சா. புண்ணியமூர்த்தி<br>செல்வி. கி. ஜெகதீஸ்வரி |
| ஆரம்பக்கல்வி B | திரு. ச. சரவணமுத்து<br>திருமதி. தே. ரவீந்திரன் | திரு. சி. சிவனருள்<br>செல்வி. நா. சந்திரிகா |
| விஞ்ஞானம்/கணிதம் | திரு. த. சகாதேவராஜா<br>செல்வி. ம. றோகினி | திரு. த. கணேசன்<br>செல்வி. த. வசந்தினி |

| 3ம் பருவம் | 1991 | 1992 |
|---|---|---|
| ஆரம்பக்கல்வி A | திரு. இ. சோமசுந்தரம்<br>செல்வி. வே. நளினி | திரு. பூ.நவரெட்ணராஜா<br>செல்வி. சி. கோமளா தேவி |
| ஆரம்பக்கல்வி B | திரு. ம. லதாகரன்<br>திருமதி. ம. தட்சணா மூர்த்தி | திரு. பெ. நல்லரெட்ணம்<br>செல்வி. க. புனிதவதனம் |
| விஞ்ஞானம்/கணிதம் | திரு. வீ. செம்பொற் சோதி<br>செல்வி. இ. மேகலாவதி | திரு. மு. விஜயநாதன்<br>செல்வி. தா. சித்திரா தேவி |

## முதலாம் வருடம் 1992

| முதலாம் பருவம் | இரண்டாம் பருவம் | மூன்றாம் பருவம் |
|---|---|---|
| | ஆரம்பக்கல்வி | |
| திரு. தா. சித்திரவேல்<br>செல்வி. வி. சாந்தினி | திரு. ம. உதயகுமார்<br>திருமதி. சு. நிர்மலேஸ் வரன் | திரு. பொ. சின்னத்துரை<br>செல்வி. பூ. யோகேஸ்வரி |
| | விஞ்ஞானம் | |
| திரு. ப. தேவரஞ்சன்<br>செல்வி. அ. கிறிஸ்ரபெல் | திரு. மா ஜீவரெட்ணம்<br>செல்வி அ. சந்தான லெட்சுமி | திரு. செ. மோகனதாசன்<br>செல்வி. த. இராஜேஸ்வரி |
| | கணிதம் | |
| திரு. இ. பாஸ்கர்<br>செல்வி. க. அன்னநேசம் | திரு. பெ. ந. சிவலிங்கம்<br>செல்வி. க. புஸ்பகுமாரி | திரு. பெ. மு. இளங்கோ வேல்<br>திருமதி. ச. பாலசுப்பிர மணியம் |

## விடுதித் தலைவர்கள் 1991 - 1992

| முதலாம் பருவம் | இரண்டாம் பருவம் | மூன்றாம் பருவம் |
|---|---|---|
| | 1991 | |
| திரு. பொ. நடராசன்<br>செல்வி. சா. சாந்தராணி | திரு. நா. புட்பமூர்த்தி<br>செல்வி. த. சந்திரிகா | திரு. ந. வன்னியசிங்கம்<br>செல்வி. சி. சூரியகலா |
| | 1992 | |
| திரு. தி. நடராஜா<br>திரு.வீ.செம்பொற்சோதி<br>செல்வி. த. நேசரஞ்சினி | திரு. பெ. நல்லரெட்ணம்<br>செல்வி. சு. சசிகலா | திரு. செ. ரவிநாதன்<br>திருமதி. ப. தர்மதாச |
| | முதலாம் வருடம் | |
| திரு. பெ. மு. இளங்கோ வேல்<br>செல்வி. சி. சாந்தமலர் | திரு. பொ. சின்னத்துரை<br>திருமதி. த. மயில் வாகனம் | திரு. த. வை. சுப்பிர மணியம்<br>செல்வி. செ. முல்லைமலர் |

# சார்க் - சாவ் (SAARC & SAF)

இன்று உலகத்தில் எந்தவொரு மனிதனோ, குடும்பமோ, கிராமமோ, நாடோ தனித்து இயங்கவும், வாழவும், முடியாது. ஒவ்வொன்றும் ஒன்றை யொன்று சார்ந்து இருக்க வேண்டும். இதற்காகவே இன்றைய உலகில் சில கூட்டு அமைப்புக்கள் உருவாகின. அவற்றில் ஒன்றே

## பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய அமைப்பு

இதற்கு விருத்திட்டவர் முன்னைநாள் பங்களாதேஷ் ஜனாதிபதி ஷியா உர் ரஹ்மான் ஆவார்.

SAARC - South Asian Association of Regional Corporation

அங்கம் வகிக்கும் நாடுகள் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ் தான், மாலைதீவு, நேபாளம், பூட்டான்,

இதுவரை நடைபெற்ற சார்க் மகாநாடுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 வது | மகாநாடு | 1985 | — பங்களாதேஷ் | — டாக்கா |
| 2 வது | ,, | 1986 | — இந்தியா | — பெங்களூர் |
| 3 வது | ,, | 1987 | — நேபாளம் | — காத்மண்டு |
| 4 வது | ,, | 1988 | — பாகிஸ்தான் | — இஸ்லாமாபாத் |
| 5 வது | ,, | 1990 | — மாலைதீவு | — மாலே |
| 6 வது | ,, | 1991 | — இலங்கை | — கொழும்பு. |

நடைபெறப் போவது

| | | | | |
|---|---|---|---|---|
| 7 வது | ,, | 1992 (டிசம்பர்) | — பங்களாதேஷ் | — டாக்கா |

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பின் (சார்க்) நாடுகளுக்கி டையே பரஸ்பரம் புரிந்துணர்வு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, வெற்றி தோல்வியை ஏற்கும் பனப்பான்மையை வளர்க்க ஏற்படுத்தப்பட்டதே.

## தெற்காசிய சம்மேளன விளையாட்டு விழா

இதன் ஸ்தாபகர் - நேபாளத்தைச் சேர்ந்த சாரத் சுந்தர் சா ஆவர்.

SAF - South Asian Federation Games

இதுவரை நடைபெற்ற சாவ் விளையாட்டுக்கள்;

| | | | |
|---|---|---|---|
| 1 வது | 1984 — காத்மண்டு | — நேபாளம் |
| 2 வது | 1985 — டாக்கா | — பங்களாதேஷ் |
| 3 வது | 1987 — கல்கத்தா | — இந்தியா |
| 4 வது | 1989 — இஸ்லாமாபாத் | — பாகிஸ்தான் |
| 5 வது | 1991 — கொழும்பு | — இலங்கை |

(ஆ—ர்)

# "கலியுகத்தின் காலன்"

செல்வி. த. சுமித்ரா
ஆரம்பநெறி
2ம் வருடம்

தற்கால உலகில் வளரும் சமுதாயம் தன்னிலை மறந்து சுய இன்பம் பெறப் பல வழிகளை நாடுகிறது. அதில் ஒன்றுதான் போதை வஸ்து. போதைப் பொருள்கள் தரும் இன்பத்தைப் பெறுவதற்கு தமது வீட்டுப் பொருட்களையே அடகுப் பொருட்களாக்கித் தடுமாறுவோர் பலர். போதைப் பொருள்கள் எவ்வாறு தயாரிக்கப்படுகின்றன?

போதை வஸ்துகள் மாத்திரை L. S. D. (லைசர்ஜிக் அசிட் டை எதிலமைட்) ஹெராயின் (Brown Sugar) ஒபியம், (அபின்), மார்ஃபின் (Morphine) என பல வகைப்படும். அமிலம் (acid) என்று செல்லமாக அழைக்கப்படும் L. S. D. ஒருவித காளானிலிருந்து தயாரிக்கப்படும் போதை மாத்திரை ஆகும். விழுங்கிய இருபது தொடக்கம் முப்பது நிமிடங்களுக்குள் நேரடியாக மத்திய நரம்பு மண்டலத்தைப் பாதித்து உண்மை நிலையை உடைத்து பங்கப்படுத்தும் ஆற்றல் இதற்கு உண்டு. இல்லாததை இருக்கிற மாதிரி கற்பனை செய்வதில் இது ராஜா.

ஐம்புலன்களும் ஒன்றாகி யதார்த்தநிலை பாதிக்கப்படும்போது உண்டாகும் கற்பனைகள் ஆளுக்காள் மாறுபடும். மாத்திரையை விழுங்கிக் கொண்டு ஆறு தொடக்கம் எட்டு மணி நேரங்கள் இருக்கும் அனுபவத்தை பயணம் (Trip) என்பார்கள். இது ஆனந்தப் பயணமாகவும் அமையலாம். அல்லது பயங்கர அனுபவமாகவும் அமையலாம். L.S.D உலகம் எங்கும் ஆங்காங்கு மட்டமான சுகாதாரமில்லாத சூழ்நிலையில் மனிதாபிமான மற்ற வியாபாரிகளால் தயாரிக்கப்பட்டு ஒன்றுமேயறியாத இளைய தலைமுறையினரிடையே அறிமுகப்படுத்தப்படுகிறது.

L. S. D. இன் பயங்கர வீரியத்தை விபரிக்க ஒருமுறை ஸ்கொட்லாண்ட் யார்ட் பொலிஸ் படை ஒரு பரிசோதனையை நடத்தியது. 1 கிராமில் 1/50 பங்கு L.S.D. ஐ ஒரு ஓவியருக்குக் கொடுத்து விட்டு கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்து வரையச் சொன்னார்கள். முதலில் சாந்தமாக வெகு முழுமையாக இருந்த படம் ½ மணி, 1 மணி 2 மணி 4 மணி நேரங்களின் பின் சிறிது சிறிது உருமாறி கடைசியில் உருவமே இல்லாது சம்பந்தமில்லாத ஒரு பயங்கர ரூபமாய்க் குலைந்து விட்டது.

இந்த நிலைகளைத் தாண்டி பரவச உணர்வு 'கடவுளை நான் பார்த்தேன், பேசினேன்.' என்று சொல்பவர்களும் உண்டு.

மாத்திரைகளை (Pills) 1. பொதுவாகத் தூண்டுவது (Stimulant) 2. விரும்பக்கூடிய மனச்சோர்வை உண்டாக்குவது (Depressant) 3. அமைதிப்படுத்துவது (Tranquillizer) என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம். வைத்தியரால் ஒருவரது உடல் அல்லது மனநோய்களைத் தீர்க்கும் பொருட்டு இம்மூன்று மருந்துகளும் உபயோகப்படுத்தப்படலாம். வேறு எந்த சமயத்திலும் தேவையற்று இம் மருந்துகளை உபயோகிப்பது நாளடைவில் பாதகமான விளைவுகளையே தரும். மனமும் உடம்பும் இந்த மாத்திரைகள் உண்டாக்கும் பிரமைக்கு அடிமையாகிப் போவதில் தன்னிலை மறந்து, சுயகட்டுப்பாட்டை இழந்து, மனிதாபிமானத்தை இழந்து ஒருவித மிருக வெறியில் சம்பந்தப்பட்ட நபர்கள் ஈடுபட்டு விடுவது உண்மை.

நியூயோர்க்கில் நடந்த சம்பவம்: பார்பரா 18 வயதுப் பெண். தெரிந்தவர் வீட்டில் பெரியவர்கள் வெளியே போக நேர்ந்தபோது இவள் குழந்தையைப் பராமரிக்கப்போனாள். அந்த வீட்டின் ஆறுமாதக் குழந்தையும் இவளும் தனியாக இருப்பார்கள் என்று தெரிந்து பார்பராவின் காதலன் அங்கு சென்றான். குழந்தையைத் தூங்க வைத்து மடி மீது கிடத்தியபடியே மாத்திரைகளைப்போட்

டுக் கொண்டிருக்கிறார்கள் கொஞ்ச நேரத்தில் போதை வெறியில் என்ன செய்கிறோம் என்ற சுய நினைவு இல்லாமல் உரித்த கோழியை வறுப்பதற்குப் பதிலாக குழந்தையை வறுத்தெடுத்தார்கள் இரண்டு மணி நேரங்கழித்து குழந்தையின் தாயார் வீடு திரும்பியபோது அடுப்பில் கருகிய குழந்தை. வேறு உலகத்தில் சஞ்சரித்தபடி பார்பரா.

மாத்திரை ஒரு சாதுவை, ஒரு நல்லவனைக் கூட மூர்க்கத்தனமாக மாற்றும் வல்லமை படைத்தது என்பதை எல்லோரும் உணரவேண்டும். இது மிகமிக முக்கியம். மாத்திரை, கஞ்சா, ஹெராயின் வஸ்துகள் நரம்பு மண்டலங்களைத் தாக்குவதில் உடனே இல்லாவிட்டாலும் காலப் போக்கில் பயங்கர விளைவுகளை உண்டாக்கக் கூடியன. இதை அதில் ஈடுபடும் ஒவ்வொருவரும் கட்டாயம் சந்தித்தே தீருவார்கள்.

சுத்தமான ஹெராயின் வெள்ளைப் பொடியாக இருக்கும். கலப்படம் செய்யப்பட்ட ஹெராயின் பார்ப்பதற்கு ஊதுபத்தியின் சாம்பல் மாதிரி இருக்கும். இதனையே (Brown Sugar) என்கிறார்கள். 1983ம் ஆண்டு வரையில் கறுப்புச் சந்தையில் மட்டுமே இது கிடைத்து வந்தது. இப்போது பெரிய நகரங்களில் தண்ணீர் பட்டபாடாகச் சீரழிகிறது. இதனை நான்கு விதமாக உபயோகிக்கலாம்.

1. மூக்குப் பொடிபோல் உபயோகிப்பது.
2. சிகரெட்டில் அடைத்து புகை பிடித்தல்.
3. தண்ணீரில் கலந்து ஊசி மூலம் ஏற்றுதல்.
4. நெருப்புத் துண்டங்களில் பொடியைத் தூவி சுவாசித்தல்.

Brown Sugar இல் உள்ள கலப்படம் காரணமாக எடுத்துக் கொண்ட உடனேயே விஷத்தின் தாக்குதலால் இறப்பவர் அநேகம். உபயோகிக்க ஆரம்பித்த நான்கு நாட்களில் ஒருவரைத் தன்வயப்படுத்தி விடும் இந்த வஸ்து விரைவிலேயே சளி, சளியில் இரத்தம், நுரையீரலில் ஓட்டைகள், காசநோய் போன்றவற்றை தாராளமாக அள்ளித் தருகிறது. திடகாத்திரமான பிள்ளைகள் கூட சீக்கிரம் நோயாளிகளாவதும் பல சந்தர்ப்பங்களில் நிலமை கட்டுக்கடங்காமல் போய் சாவைத் தழுவுவதும் இப்போது அதிகரித்து வருகிறது என மனோதத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

கசகசா செடியின் காயைத் தக்க பருவத்தில் லேசாகக் கீறிவிட்டு அதிலிருந்து வடியும் கறுப்புப் பிசினை 'அபின்' என்பார்கள். முதலில் இப்பயிரை வியாபார அளவில் பயிரிடுவதற்கான முயற்சிக்கு பட்டுமே வித்திடப்பட்டது. குறிப்பிட்ட சில மருந்துகள் தயாரிக்க அபின் தேவைப்பட்டாலும் இன்று உலகம் முழுவதையும் பரவலாக, வேகமாக பயங்கரமாக ஆட்சி செய்து வரும் ஹெராயினுக்கு அபின் நெருங்கிய தோழன்.

புத்தியை வெகு சுலபமாக தன்வசப்படுத்தும் சக்திபடைத்த அபினை வெந்நீரில் கரைத்து உருண்டையாக உருட்டி இனிப்புகளில் கலந்து சாப்பிடுவதும் தாது புஷ்டி லேகியம் போலத் தயாரித்து விற்பதும் உலகத்தின் பல பாகங்களிலும் சகஜமாகி விட்டது. ஹெராயின் என்னும் வஸ்துவுக்கு அபினைக் காட்டிலும் நூறு மடங்கு வீரியம் அதிகம் என்பதால் ஹெராயினை இன்றைய ஆலகால விஷம் என்பது மிகமிகப்பொருத்தம்.

போதைப் பொருட்களோடு உறவாடுவது நெருப்புடன் விளையாடும் சமாச்சாரம். இவை இல்லாத கற்பனையைத் தருவதன் மூலம் தற்கொலை செய்து கொள்ளவும் மாடியிலிருந்து குதிக்கவும் பலரைத் தூண்டியிருக்கிறது என நிபுணர்களின் ஆராய்ச்சிப் புள்ளிவிபரம் அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறது. போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்கள் இன்று இல்லாவிட்டாலும் நாளை அந்தக் கொடுமைகளில் மாட்டிக் கொண்டு மானம், மரியாதை நிம்மதி, ஆரோக்கியம் எல்லாவற்றையும் இழப்பதும் பலர் மனச்சோர்வு மனநோய்க்கு ஆளாவதும் உறுதி. போதை வஸ்துவை ஒரேயொரு தடவையே உபயோகித்திருந்தாலும் மாதக் கணக்கில் ஏன் வருடக் கணக்கில் அனுபவித்த பயங்கரத்தின் ஞாபகம் மீண்டும் மீண்டும் வர பலரை மனநோயாளிகளாக மாற்றி இருக்கிறது என்றால் அதை உங்களால் நம்ப முடிகிறதா?

---

உசாத்துணைகள்: 1992 ஆனந்தவிகடன் பத்திரிகை (தொடர்)
போதை வஸ்துக்களின் பயங்கரத்தாக்கம் S. N. ஜாய்ஸ்

சிறுகதை

# நிர்க்கதி



க. மயில்வாகனம்
எழுதுவினைஞர்

''ரஞ்சி'' ஒரு அனாதைப் பெண். அவள் இளமை வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், பாவம். அரசாங்க வைத்தியசாலையில் அவதரித்து. தாய் தந்தையரை இழந்து யாருமற்ற தனிப்பிறவியாய் இருந்தபோது குழந்தைப் பேறு இல்லாத கணநாத தம்பதிகளால் எடுத்து வளர்க்கப்பட்டாள். இப்போது பருவப் பெண்ணானாள். அவள் சிரித்துச் செழித்த சிங்கார முகத்தில் குழிவிழுந்த கன்னம் மேலும் அழகுக்கு மெருகூட்டியது. கோடி உலகைக் கூட்டிவரும் விழிகள் இவளுக்குத்தான் சொந்தமானதோ? அள்ளிச் செருகி அழகுபட நடந்து வந்தால்கொள்ளை வனப்பைக் கொண்ட அவளைத் தாய் தந்தையர், விசு என்ற வாலிபனுக்கு வதுவை செய்து கொடுத்தார்கள். காலமோ உருண்டோடியது. பின்னர் வளர்ப்புப் பெற்றோரையும் இழந்து விட்டாள். இப்போது அவளுக்குத் துணை கணவன்தான்.

''கண்மணி அக்கா, கண்மணி அக்கா'' என்று அழைத்தாள் ரஞ்சி.

''என்ன ரஞ்சி'' என்றாள் கண்மணி.

'உங்களைப் பார்த்துப் போகலாம் என்றுதான்' என்றாள் ரஞ்சி.

'அது சரி ஏன்? உன்முகம் வாடி இருக்குது' என்றாள் கண்மணி.

'எல்லாம் கஷ்டம்தான்' என்றாள் ரஞ்சி.

'அது எல்லாருக்கும் பொதுவானதுதானே' என்று கண்மணி சொல்ல,

''என்னைப் பொறுத்தமட்டில் அது எனக்குச் சொந்தமும்கூட'' என்றாள் ரஞ்சி.

''ஏன்டியம்மா மனம் வெதும்பிச் சலிக்கிறாய்'' என்றாள் கண்மணி.

''பின்ன என்னக்கா, கஞ்சிக்கும் வழியில்லை. இரண்டு நாள் பட்டினி'' என்றாள் ரஞ்சி.

''அப்போ உன் வீட்டுக்காரர் தொழில் துறைக்குப் போவதில்லையா?'' என்று கேட்டாள் கண்மணி.

''அவருக்குத் தெரிந்த தொழில் வாவியில் மீன் பிடிப்பது, பயங்கரவாத பிரச்சினை காரணமாக தொழிலில் தடையேற்பட்டால் எங்கள் நிலமை என்னவாகும் என்று நீங்கள் யோசித்துப் பாருங்கள் அக்கா. சில நாட்களில்கூட தொழிலுக்குப் போனால், மீனையும் பறி கொடுத்து, அடி உதை வாங்கிக் கொண்டு வெறுங்கையோடு திரும்புவதும் உண்டு. இந்த அடாவடித்தனங்களின் மத்தியில் எவ்வாறக்கா, தொழிலுக்குப் போகும்படி பணிப்பது'' என்றாள் ரஞ்சி. மேலும் ''படும் துயரை யார் யாரிடம் சொல்வது, மனம் ஆறுவது. நமது கிராமத்து மக்கள் படும் துயரை, எவரிடம் போய் கூறுவது. பயங்கரவாதம் காரணமாக தொழிலிழப்பை அடைந்த குடும்பங்களுக்கு நிவாரணம் கொடுத்து வந்தார்கள். அப்போது எங்கள் வயிறு ஓரளவுக்கு அரை வயிறாவுதல் நிறைந்தது. பலபடித்த பிரமுகர்கள் எங்கள் கிராமத்தின் நிலையை உணராது அதைக் கூட நிறுத்தி விட்டார்கள். ஏழ்மைதான் நமது தலைவிதியென்றால் அதை மாற்றி அமைக்க யாராலும் முடியாது'' என்று கண்மணியிடம் கூறிக் கொண்டிருக்கும்போது அவள் கணவன்.

'ரஞ்சி, ரஞ்சி' என அழைத்தான்.

'ஓய், ஓய்' என்று பதில் அளித்தாள் ரஞ்சி.

'அப்போ போயிற்று வாறன் எங்கடஅவர் கூப்பிடுகிறார்' என்று கண்மணியிடம் விடை பெற்றுச் சென்றாள். ரஞ்சியின் கணவன்,

'நான் இப்போது வாவியில் மீன் பிடிப் பதற்குப்போக இருக்கிறேன். ஆனால் எனது வழமையான கூட்டாளி இன்று வரமாட் டான். நமது பக்கத்து வீட்டுச் சின்னப்பிள்ளை அக்காவின் மகனைக் கூப்பிட்டுப்பார். என் றான். அதைக்கேட்ட அவள். 'தகப்பன் இல் லாத குடும்பம் தொழிலுக்குப் போனால் ஏதும் கிடைத்தால் சந்தோஷப்படுவார்கள்' என்றவாறு. 'சின்னப்பிள்ளை அக்கா, சின் னப்பிள்ளை அக்கா' என்று குரல் கொடுத் தாள்.

'என்ன பிள்ளை ரஞ்சி' என்றாள் சின் னப்பிள்ளை.

'எங்கட அவர் உங்கள் மகனை வாவி யில் மீன் பிடிக்கப் போவதற்குக்' கூப்பிடுறார் என்றாள்.

அதற்குச் சின்னப்பிள்ளை.

'இப்பதான் இங்கே நின்றவன் எங் கையோ போயிற்றான் போல் இருக்கு. கொஞ்சம் பொறுபுள்ள' 'குணா! குணா! தம்பி குணா,' என்று சத்தமாக தன்மகனை அழைத்தாள். தாயின் குரல் கேட்ட குணா.

'ஓய், ஓய்' என்று பதில் அளித்ததுடன் 'எதற்காக அழைத்தீர்கள்' என்று வின வினான். அதற்குத்தாய் 'ரஞ்சி அக்காவின் கணவன் வாவியில் மீன் பிடிக்கப் போவதற்கு அழைக்கிறார். உனக்குச் சம்மதமா? என்று கேட்டார். 'ஆம்', அம்மா. 'ரஞ்சி அக்கா, ரஞ்சி அக்கா இதோ! வருகிறேன்' என்று சத்தமிட்டான். பின் விசுவும், குணாவும். தமது வலைப் பண்களை எடுத்துக் கொண்டு வாவிக்கரையை அடைந்தார்கள்.

தங்களுக்குரிய தோணியிலே தமது மீன் பிடி உபகரணங்களை வைத்துக் கொண்டு தங்களது தொழில் பயணத்தை ஆரம்பித் தார்கள். மூன்று நான்கு மைல்களுக்கப்பால் தமது தொழிலைத் தொடங்கினார்கள். பல மணி நேரமாக மீன் பிடித்துக் கொண்டிருக் கும்போது 'டுமீர், டுமீர்' என்று ஒன்றன்பின் ஒன்றாகக் குண்டு வெடிச்சத்தம் கேட்டது. அப்போது குணா,

'விசு அண்ணா நமது ஊர் பக்கம் இரண்டு குண்டு வெடிச்சத்தம் கேட்டதை உணர்ந்தீர்களா'? என்றான். அதற்கு விசு,

'ஆம் தம்பி என்ன புதினமோ தெரிய வில்லை, எதுக்கும் நாம் கரையே போவது தான் நல்லது' அதற்குக் குணா, 'அது அப் படித்தான் அண்ணா. அதுவும் நடக்கிறது தான். அதையெல்லாம் போய் யோசிக்கத் தொடங்கினால் நாம் வாழவே முடியாது' என்றான். இவ்வாறு பல விடயங்களைப் பேசிக்கொண்டே வேலையைத் தொடர்ந்த னர். ஒரு மணித்தியாலத்தின் பின் சிவப்பு, பச்சை சுவீற்றரும் அரைக்கால் சட்டையும் அணிந்த இருவர் தம் தோணியை நோக்கி வருவதைக் கண்டார்கள். அவர்கள் தோணிக் கருகில் வந்தனர். 'ஏய் மீன் இருக்கா?' என் றான் ஒருவன். 'ஓம் கொஞ்சமாகத் தான் இருக்கு' என்றான் விசு. அப்படிக் கேட்டுக் கொண்டிருந்த தோணிக் காரனில் ஒருவன் திடீர் எனத் துப்பாக்கியை எடுத்து விசுவைப் பார்த்து நீட்டினான். அதற்கு விசு 'நீங்கள் மீன் தானே கேட்டீர்கள் இதோ மீன்களை எடுத்து விட்டு எங்களை விட்டு விடுங்கள். நாங்கள் ஏழைகள். மூன்று பிள்ளைக்குத் தந்தை என்று நாக்கு தளர கண்ணீர் மல்க, அலறினான். அதற்கு அந்த கொடியவர்கள் செவிசாய்க்க வில்லை. விசுவுக்கு வேட்டுத் தீர்த்தார்கள். வேட்டை வாங்கிக் கொண்ட விசு.

'ஐயோ! அம்மா! அப்பா! என்ற அலற லுடன் தோணிக்குள் சாய்ந்து விட்டான். அடுத்து குணாவுக்கு வேட்டைத் தீர்த்தார் கள். அவனும் அதேபோன்று ''ஐயோ! அம்மா, அப்பா என்ற சத்தத்தோடு வாவி நீரில் மூழ்கி விட்டான். பின் அந்த நாச காரர் தோணியில் திரும்பிச் சென்று விட் டார்கள்.

இந்தக் காட்சியைச் சற்றுத் தூரத்தில் உள்ள மீன்பிடியாளர்கள் கண்ணுற்றனர். கொலைகாரர்கள் போய் விட்டார்கள். என் பதையுணர்ந்த அவர்கள் அந்த இடத்துக்கு விரைந்து வந்து பார்த்தபோது ஒருவர் தோணியிலே பிணமாய் கிடந்தார். மற்ற வரின் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. இருவரும் கரைமீட்டு வரப்பட்டு குற்றுயி ராய்க் கிடந்தவர் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இதையறிந்த ரஞ்சுவும், சின்னப்பிள்ளை

யும் 'இந்த ஏழைகளின் தலையிலே இடி விழுந்ததோ! அப்பா' என்று தலையில் அடித்துக் கொண்டு வாவிக்கரைக்கு ஓடி வந்தார்கள். விசுவைக் கண்ட மனைவி கதறியழுதாள். புழுவாய் துடித்தாள். 'இந்த அனாதைகளைக் காப்பாற்ற இனி யார்தான் இருக்கிறார்கள்? கடவுளே உனக்கு இரக்கமில்லையா? இன்னுமேன் இந்தப் பாவிகளை உயிருடன் வைத்திருக்கிறாய். எங்களையும் கொன்று விடேன்' என்று இறைவனை நொந்தழுதாள். அதே கண்ணீர் வற்றவில்லை. குணாவும் வைத்தியசாலையில் இறந்து விட்டான் என்ற செய்தி கேட்ட அவள் அடியற்ற மரம்போல் மயங்கி நிலத்தில் வீழ்ந்து விட்டாள். இவள் கதியென்ன? நடுத்தெருவா?

## விரும்பினால்

எழுத விரும்பினால் — உன் பிழைகளை எழுது
பேண விரும்பினால் — உறுதிமொழிகளைப் பேண்
பண்படுத்த விரும்பனால் — பழக்கங்களைப் பண்படுத்து
வாசிக்க விரும்பினால் — நல்ல நூல்களை வாசி
கொல்ல விரும்பினால் — அகந்தையைக் கொல்
விதைக்க விரும்பினால் — அன்பை விதை

— குரு தே. பகதூர்


நல்வாழ்த்துக்கள்
தரமான ஜவுளி வகைகளுக்கு

VARIETIES

11, Ampagamuwa Road,
Gampola

*With Best Compliments From:*

**Manamagal Book Depot**

Dealers in Books, Stationaries & Oilman Goods
29, Main Street,
KALMUNAI
067 - 2187

# இறைவன் படைப்பு

தா. சித்திரவேல்
முதலாம் வருடம்
ஆரம்பப்பிரிவு

மண்ணில் காணும் உயிரெல்லாம்
மலர்வதும் மறைவதும் யாராலே?
விண்ணில் காணும் ஒளியெல்லாம்
விளங்க நிற்பது யாராலே?

கண்ணில் தெரியும் பொருளெல்லாம்
கண்டு களிப்பது யாராலே?
உண்ணும் உணவு(ப்) பொருளெல்லாம்
உழவர் உழைப்பது யாராலே?

தாகம் தீர்க்கும் நீர் எமக்கு
தரையில் கிடைப்பது யாராலே?
தேகம் எங்கும் குறைகளின்றி
தெளிவாய் இருப்பது யாராலே?

கல்வி அறிவை பெற்று விட
கருணை கிடைப்பது யாராலே?
செல்வம் எமது இல்லம் எல்லாம்
செழித்து(க்) காண்பது யாராலே?

எண்ணிப் பார்த்தால் இவையாவும்
இறைவன் படைத்த படைப்புக்களே.
எண்ணம் யாவும் அவன் மேலே
என்றும் இருக்கச் செய்திடுவோம்.

எல்லாம் வல்லவர் அவரேதான்
எமக்கு மேலே இருக்கின்றார்
அல்லும் பகலும் அவர்நாமம்
அன்பாய்ச் சொல்லி நிற்போமே.

''உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது''

# முத்தமிழ் மன்றம்

அரசினர் ஆசிரியர் கலாசாலை, மட்டக்களப்பு.

# MUTHTHAMIL MANTRAM

☎ 065 - 2368 GOVT. TEACHERS' COLLEGE, BATTICALOA.

31 -07 - 1992

காப்பாளர்:
திரு. வ. கனகசிங்கம்
(முதல்வர்)

ஆலோசகர்கள்:
திரு. தி. பொன்னம்பலம்
(துணை முதல்வர்)
திரு. சி. கிருஸ்ணபிள்ளை
(பிரதி முதல்வர்)
திரு. செ. வினாசித்தம்பி
திரு. ந. நடராஜா
(விரிவுரையாளர்கள்)

தலைவர்:
திரு. த. சகாதேவராஜா
செயலாளர்:
திரு. பெ. தணிகாசலம்
நிதிச் செயலாளர்:
திரு. பயஸ் ஆனந்தராஜா
துணைத் தலைவர்:
திரு. மா. ஜீவரெட்ணம்
துணைச் செயலாளர்:
திரு. க. நவரெட்ணம்

உறுப்பினர்கள்:
திரு. மு. விஜயநாதன்
திரு. செ. முருகுப்பிள்ளை
திரு. இ. மேகாம்பிகைராஜா
திருமதி. தே. ரவீந்திரன்
செல்வி த. சுமித்ரா
செல்வி ஐ. சுனீத்திரா
செல்வி கு. கலைச்செல்வி
திருமதி. ல. தங்கராஜா

## செயற்பாடுகள்:

★ இவ்வருடம் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் நூற்றாண்டாகும். இதையொட்டி கீழ்வரும் சிறப்புச் செயற்பாடுகளை எமது மன்றம் செயற்படுத்தியது.

- அடிகளாரின் நூற்றாண்டு விழாவைப் பெரு விழாவாக அகில இலங்கை ரீதியாக முதன் முதல் மூன்று நாட்கள் (கடந்த பங்குனித் திங்கள் 26. 27, 28 ஆகிய தினங்களில்) சிறப்புறக் கொண்டாடியமை.
- கலாசாலை வளவில் அடிகளாரின் உருவச் சிலையை நிறுவியமை.
- மட்டக்களப்பு விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச்சபையினரின் விஷேட நடவடிக்கைகளில் முழு ஒத்துழைப்பு அளித்து பங்கு பற்றியமை.

★ மாவட்ட தமிழ்மொழித்தின விழாவில் நடுவர்களாகப் பணிபுரிந்தமை.

★ ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு, கதை சொல்லுவதில் உள்ள நுட்பங்களையும், திறன்களையும் வளர்க்குமுகமாக மாஸ்டர் சிவலிங்கம் அவர்களின் ''கதை சொல்லுவது எப்படி'' என்ற கருத்தரங்கை கடந்த 4-6-92 அன்று நடாத்தியமை.

மன்றச் செயற்பாடுகளுக்கு ஆலோசனைகள் வழங்கி உதவிய விரிவுரையாளர்களுக்கும், எல்லாவகையிலும் ஒத்துழைப்பு நல்கிய மன்ற உறுப்பினர்களுக்கும் நன்றிகள்.

பெ. தணிகாசலம்
செயலாளர்

# சிந்தித்து வாழ்ந்தால் சிறப்படையலாம்

நா. புட்பமூர்த்தி
ஆரம்பநெறி
விடுகையாண்டு

உலகப் படைப்புக்களில் உயர்ந்தவன் மனிதன். எதனால் உயர்ந்தவன்? என்ற கேள்விக்கு நாம் விடை காண முயன்றால் மற்றப் பிராணிகளைவிட ஓரறிவினால் உயர்ந்தவன். அவைகளிடத்தில் இல்லாத பகுத்தறிவு மனிதனிடத்தில் தான் உள்ளது. பகுத்தறிவு என்பது எது நல்லது எது கெட்டது என்று விதிமுறை அமைத்துக் கொண்டு வாழ்வதாகும். அந்த உடன்பிறந்த அறிவை நாங்கள் நாளடைவில் பெருக்கிக் கொள்வதற்குச் சிந்திக்க வேண்டும். சிந்தித்துச் செயற்பட்டால் செவ்வனே வாழ்வை அமைத்துக் கொள்ளலாம். வாழ்க்கைப் பாதையில் குறுக்கிடும் தடைகளைத் தகர்த்து விடலாம்.

எத்தனையோ மனிதர்கள் வயதில் முதிர்ந்தவர்களாக இருந்தும் அறிவில் குழந்தைகளாகக் காணப்படுகிறார்கள். எத்தனையோ மனிதர்கள் கல்வியில் உயர்ந்தவர்களாக, படித்தவர்களாக, பட்டங்கள் பெற்றவர்களாக இருந்தும் பண்பிழந்து போவதற்குக் காரணம் இந்த பகுத்தறிவைப்-பயன்படுத்தாமையே. இன்றைய அமைதியற்ற நிலைக்குக் காரணமும் இதுவேயாகும். அறிவுடையவர் யார்? கற்றவர்கள் அறிவாளிகளா? அறிவாளிகள் எல்லோரும் கற்றவர்களா? என்ற பல கேள்விகளுக்கு நாம் விடைகாண வேண்டும். எவன் தனது வாழ்க்கையில் வரும் இன்னல்களை எதிர்கொண்டு அதை இலகுவாக நீக்கி வாழ்கின்றானோ! அவனே அறிவு படைத்தவன் எனலாம். அதாவது தனது வாழ்க்கையில் எதிர் கொள்கின்ற பல்வேறுபட்ட குண, நலம் படைத்த மனிதனோடு பொருந்தி நேர்மையாகவும், நிதானமாகவும், பிறருக்கு இன்னல் விளைக்காது வாழ்பவனே அறிவுடையவன் எனலாம். இதனையே வள்ளுவரும் தமது குறளில்:

''எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு

என்று கூறியுள்ளார்.

மனிதன் எவனும் அறிவில்லாதவனல்லன், அவன் தனது அறிவை வளர்த்துக் கொள்வதிலும், பயன்படுத்திக் கொள்வதிலும் பேதம் காணப்படுகிறது. கல்வியில் உயர்ந்தவர்களாக, உயர்பதவி வகிப்பவர்களாகக் காணப்படும் சிலர் அறிவில் குறைந்தவர்களாகக் காணப்படுவதை நாம் காணக் கூடியதாக உள்ளது. கல்வி கற்றவர்கள் எல்லோரும் அறிவாளிகள் என்று கூறுவதற்கில்லை. அறிவாளிகள் எல்லோரும் கல்வி கற்றவர்கள் என்று கூறுவதற்குமில்லை. கடந்தகால வரலாற்றில் படியாத மேதைகளும் இருந்தது உண்டு. இருந்தும் கல்வியானது பகுத்தறிவை வளர்த்துக் கொள்வதற்கு உதவுகிறது எனலாம். எனவே எவனொருவன் தனக்கும் பிறருக்கும் இன்னல் கொடுக்காமல் உலக நடைமுறைக்கேற்ப நடந்து கொள்கிறானோ, அவனே அறிவு படைத்தவன் எனலாம். ஒருவன் தன்னைத் தானே அறிவுடையவன் என்று சொல்லக் கூடாது. பிறரால் அறிவுடையவன் எனச் சொல்லப்பட வேண்டும்

சிந்திக்கும் ஆற்றல் படைத்த அறிவுடைய ஒருவன் வெள்ளம்போல் அளவற்றதான துன்பம் வந்தாலும் உள்ளத்துறுதியினால் அதைக்கண்டு அஞ்சமாட்டான். அஞ்சவும் கூடாது என வள்ளுவர் கூறியுள்ளார் இதனைக் கீழ்வரும் குறட்பா காட்டுகிறது.

''இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்''

மனிதன் ஒரு சமூகப் பிராணி. அவன் தனித்து வாழமுடியாது. பிறருடன் சேர்ந்து தான் வாழவேண்டும். இவ்வாறு மற்றவர்களுடன் சேர்ந்து வாழும்போது பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்

ளது. பல பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து வாழும்போது எல்லா மனிதனும் ஒரே விதமான குணநலம் படைத்தவனாக இருப்பான் என நாம் எதிர்பார்க்க முடியாது. அவ்வாறு பல்வேறுபட்ட குண, நலம் படைத்தவர்களுடன், அவரவர் குணங்களுக்கும் நடைமுறைகளுக்கும் ஏற்ப அவர்களுடன் பிரச்சினை ஏற்படாமல் நடப்பவனே உண்மை பகுத்தறிவு படைத்தவன் என நாம் கொள்ளலாம்.

வாழ்வுப் பாதையில் சந்திக்கும் மனிதப் பிராணிகளுடன் சேர்ந்து ஒழுங்குற வாழ்வை நடாத்துவதற்கு பகுத்தறிவுடைய ஒருவன் ஒருபடி கீழ் இறங்கிச் சிந்திக்க வேண்டும். சிந்திக்கும்போது மாசற்ற மனம் வேண்டும். மனம் சுத்தமாக இருந்தால்தான் எந்த ஒரு பிரச்சினையையும் இலகுவாகத் தீர்த்துக் கொள்ளலாம் மனத்தைச் சுத்தப்படுத்தினால் வார்த்தைகள் தெளிந்து காணப்படும். மனம சுத்தமாக இருந்தால் செயலும் நல்லதாகக் காணப்படும். இவ்வாறு மனம், வாக்கு காயத்தால் சிந்தனை, பேச்சு, செயல்கள் தெளிவுபடும்போது பிரச்சினைகள் குறைகின்றன. மனத்தூய்மை மாசற்று வாழ்ந்து காட்டிய மகான்கள் மூலம் நாம் இதை அறிந்து கொள்ளலாம். அகிலத்தையே ஆண்ட பிரித்தானியரை காந்திமகான் அடிபணிய வைத்ததற்குக் காரணம் காந்தியின் மாசற்ற மனமேயாகும்.

மனிதன் வளமான வாழ்வு பெற ஒவ்வொரு மனிதனும் தனது மனச்சாட்சிக்கு மாறாக நடக்கக்கூடாது. நல்லவை, கெட்டவை எவையென உணரும் பகுத்தறிவு படைத்த நாம் நமது மனச்சாட்சிக்கு நல்லதென்று கருதியதையே செய்யவேண்டும். அவ்வாறு செய்யும்போது அச்செயலால் இடையூறு ஏற்படாமல் இருந்தால் அவை நல்லவையே. காந்தி கூட 'மனச்சாட்சியே சத்தியத்தின் வடிவான ஆண்டவனின்குரல்' என்றார். உலகத்தில் உயர்ந்த உத்தமர்கள், மனச்சாட்சியை மதித்தவர்களேயாவர்.

ஒரு மனிதன் தவறான வழியில் செல்லும்போது அவனை மற்றவர்களால் திருத்தவே முடியாது. திருத்த முற்படும்போது நல்லவனாக நடித்துவிட்டு கெட்ட வழியில் செல்லலாம். ஆனால் அவன் உணர்ந்தால் மட்டுமே அவன் தன்வழியை மாற்றி நல்லவனாக மாறமுடியும். ஒரு திருடனின் திருட்டுத் தொழிலை எத்தனை சட்டங்கள் போட்டுத் தடுத்தாலும் அவன் திருட வேண்டும் என்று நினைத்தால் சட்டத்திற்கேற்ப திட்டம் தீட்டித் திருடியே தீருவான். ஆனால் அவன் சிந்தித்து உணர்ந்தால் மட்டுமே அவனைத் திருத்த முடியும். இதற்கும் சிந்தனையே அவசியம்.

நமது வாழ்க்கையில் நாம் நற்சிந்தனையுடனும் நற்செய்கையுடனும் வாழ வேண்டும். அவ்வாறான செய்கைகள் உண்மையின் வெளிப்பாடாக அமைய வேண்டும். அவ்வாறன்றி வெளிவேஷத்திற்காகச் செய்யப்படும் செய்கைகள், பிறரிடம் நன்மதிப்பைப் பெற வேண்டும் எனச் செய்யும் செயல்கள் எல்லாம் அறிவுடைய செயல்களன்று எனவே பிறருக்காக எதையும் செய்யாதே, நீயே சிந்தித்துச் செய், செய்யும்போது நல்லதைச் செய், நல்லதைச் செய்ய முடியாவிட்டால் நல்லதையே விரும்பு. செய்ய வேண்டுமென்ற கட்டாயமில்லை. ஔவையார் கூட 'அறம் செய்ய விரும்பு' என்றுதான் சொல்லியிருக்கிறார். செய் என்று உத்தரவிடவில்லை. விரும்பி நல்லதையே செய்து நல்லவனாக வாழ்வாயாக.

இவ்வாறு மனிதன் சிந்தனை படைத்தவனாக நடக்க வேண்டும். அவ்வாறு அவன் சிந்திக்கவில்லையானால் ஐயறிவு படைத்த மிருகத்திற்குச் சமன் என ஒப்பிடும் வள்ளுவர் மேலும் நுட்பமான ஆராயவல்லதான மாண்புபடைத்த அறிவு இல்லாதவனுடைய அழகான தோற்றமானது மண்ணினால் செய்யப்பட்ட பாவைக்குச் சமனாகும் எனவும் கூறுகிறார்.

'நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில் நலம்
மண்மாண் புனை பாவையற்று'

ஒரு மனிதன் வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டுமானால் நல்ல சிந்தனை படைத்தவனாக, பகுத்தறிவு படைத்தவனாக அதைப் பயன்படுத்துபவனாக வாழவேண்டும். அவ்வாறு வாழ்ந்தால் வீட்டில், நாட்டில் பிரச்சினை குறைந்து வாழ்க்கை ஒளி பரப்பும். இவ்வாறான சிந்தனை யாவருக்கும்

அவசியமாக இருந்தாலும் ஆசிரியர்களுக்கே மிக அவசியம் ஆகும். எதிர்கால சமுதாயத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பை ஏற்று நடப்பவர்களாகிய இவர்கள் தங்களது சிந்தனை, பேச்சு, செயல், என்பவற்றில் நேர்மையாகவும், நிதானமாகவும் நடக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். ஒரு சிறந்த ஆசிரியரின் நற்பண்புகளில் சிந்தித்து சுயமான முடிவு எடுத்தலும் ஒன்றாகும். இவ்வாறு சுயமான முடிவு எடுப்பதற்கு சிந்தனை அவசியமாகும். எனவே ஆசிரியர்கள் சிந்தனை உடையவர்களாகத் தொழிற்பட வேண்டும்.

இவ்வாறு நாம் நமது சிந்தனையை வளர்த்துக் கொள்ள பெரியோரின் அறிவுரைகள், ஆன்றோர்களின் வாக்கு, நல்லநூல் என்பன துணை புரியும். இவ்வாறு அறிவை வளர்த்தால் நாம் நல்ல மனிதனாக வாழலாம்.

## ஸ்ரீமுக வருடமே வருக!

**அறுபது (60) ஆண்டுகளுள் நீயும் ஒன்று. எமது வாழ்வு செழிக்க வாராய்? அறுபது ஆண்டுகளின் விபரங்களையும் திரட்டி இங்கு தருகிறோம்.**

1. பிரபவ 1927
2. விபவ
3. சுக்ில
4. பிரமோதூத
5. பிரசோற்பத்தி
6. ஆங்கிரச
7. ஸ்ரீமுக
8. பவ
9. யுவ
10. தாது
11. ஈசுர
12. வெகுதானிய
13. பிரமாதி
14. விக்கிரம
15. விஷு
16. சித்திரபானு
17. சுபானு
18. தாரண
19. பார்த்திய
20. விய
21. சர்வசித்து
22. சர்வதாரி
23. விரோதி
24. விகிர்து
25. கர
26. நந்தன
27. விஜய
28. ஜய
29. மன்மத
30. துர்முகி
31. ஏவிளம்பி
32. விளம்பி
33. விகாரி
34. சார்வரி
35. பிலவ
36. சுபகிருது
37. சோபகிருது
38. குரோதி
39. விசுவாசு
40. பராபவ
41. பிலவங்க
42. கீலக
43. சௌமிய
44. சாதாரண
45. விரோதிகிரு
46. பரிதாபி
47. பிரமாதீச
48. ஆனந்த
49. இராட்சத
50. நள
51. பிங்கள
52. காலயுக்தி
53. சித்தார்த்தி
54. ரௌத்திரி
55. துர்மதி
56. துந்துபி
57. ருத்திரோற்காரி
58. இரத்தாட்சி
59. குரோதன
60. அட்சய

# எயிட்ஸ் எயிட்ஸ் எயிட்ஸ்

சர்வதேச ரீதியில் அரசியல், பொருளாதார சமூக கலாசார துறைகளுக்கு பெரும் சவாலாக இன்று எயிட்ஸ் என்னும் பயங்கர ஆட்கொல்லி நோய் இருந்து வருகிறது. தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் இந் நோயின் ஆபத்துக் குறித்து பல்வேறு வழிகளில் எடுத்துரைக்கப்பட்டு வருகிறது. எனினும் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்படுவோரின் அல்லது பாதிக்கப்பட்டு மரணமடைவோரின் தொகை நாளாந்தம் அதிகரித்துக் கொண்டே போகிறது. இதற்கு நமது நாடும் விதிவிலக்கல்ல. இந்த நோயின் அபாயம் குறித்தும், இது பரவாமல் தடுப்பது பற்றியும் அனைவருமே அறிந்திருத்தல் அவசியம்.

**எயிட்ஸ் சம்பந்தமான சில தகவல்கள்**

எயிட்ஸ் என்றால் என்ன?

எயிட்ஸ் என்பது எமது உடலில் உள்ள நோய் எதிர்ப்புச் சக்திக் குறைபாட்டினால் உண்டாகும் பல்வேறு நோய்க்குறிகளின் தொகுப்பு என்பதாகும்.

இன்னும் விரித்துக் கூறினால், ''பெற்றுக் கொண்ட நீர்ப்பீடனக் குறைபாட்டு நோய்த் தொகுதி'' எனலாம்.

இந்நோயை உண்டாக்குவது எச். ஐ. வி. (H. I. V.) என்ற வைரஸ் கிருமியாகும். விஞ்ஞானத் தமிழில் மனித நீர்ப்பீடனக் குறைபாட்டு வைரஸ் என இதைக் கூறலாம் இவ்வகை வைரசுகள் ரெட்ரோ வைரஸ் இனத்தைச் சேர்ந்ததாகும்.

1980ல் எயிட்ஸ் நோய் இனங்காணப் பட்டது. எனினும் 1983ம் ஆண்டில் தான் அதை உண்டாக்கும் HIV கிருமியை விஞ்ஞானிகளால் பிரித்து அறிய முடிந்தது.

எயிட்ஸ் நோய் பரவுவதற்குரிய வளமான பூமியாக எமது மண் இருக்கிறது. எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டு இறந்த முதலாவது இலங்கையர் ஒரு தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை இலங்கையில் இந் நோயால் இறந்தவர்கள் 12 பேர். அதில் 4பேர் தமிழர்கள். (இதிலிருந்து இலங்கைத் தமிழர்களாகிய நாம் எமது இன விகிதாசாரத்தை மீறிய முனைப்புடன் இந்நோயால் பாதிக்கப்படுவது தெளிவாகிறது.

முழு இலங்கையையும் எடுத்துக் கொண்டால் இதுவரை எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் 56பேர் (48ஆண்கள், 8பெண்கள்) இதில் வெளிநாட்டவர் 11 பேர் தவிர்ந்த மீதி 45 பேரும் இலங்கையர்களே.

இதை இன்னுமொரு முறையில் கூறினால் இலங்கையில் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்ட வர்கள்:

| | 1990 | 1992 |
|---|---|---|
| வெளிநாட்டவர் | 70% | 20% |
| இலங்கையர் | 30% | 80% |

எனவேஎயிட்ஸை வெளிநாட்டவர் நோயென்று சொல்லி நாம் வாளாதிருக்க முடியாது.

இதுவரை கண்டு பிடிக்கப்பட்ட எயிட்ஸ் நோயாளர் 56 மாத்திரமேயானாலும், இந் நோயை உண்டாக்கும் எச். ஐ. வி. கிருமி தொற்றுக்கு 2000 பேர் வரை ஆளாகியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு எயிட்ஸ் நோய்க்கான அறிகுறிகள் வெளிப்படையாகத் தெரிய 5 முதல் 10 வருடங்கள் வரை எடுக்கலாம். அந்த நீண்டகால இடைவெளியில் இந்த 2000 பேரும் இன்னமும் எத்தனை ஆயிரம் பேருக்கு எச். ஐ. வைரஸ் கிருமியைப் பரப்பப் போகிறார்கள் என்பதைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.

எயிட்ஸ் மிக அண்மைக் காலத்தில் வெளிப்பட்ட ஒரு நோய். உலகின் முதலாவது எயிட்ஸ் நோயாளி அமெரிக்காவில் 1980ம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டார். இலங்கையில் முதல் எயிட்ஸ் நோயாளி 1986ல் கண்டு பிடிக்கப்பட்டார்.

12 வருட கால வரலாற்றைக் கொண்ட இந்நோய் உலகெங்கும் 1 கோடி (10 மில்லியன்) மக்களுக்கு மேலாக பரவியுள்ளது. இதில்

5 இலட்சம் பேர் ஏற்கனவே மரணத்தைத் தழுவி விட்டார்கள். 2000 ஆண்டளவில் 4 கோடி (40 மில்) மக்களுக்கு மேல் இந் நோய்த் தொற்றுக்கு ஆளாகலாம் என எதிர்பார்க் படுகிறது.

எயிட்ஸ் நோயை உண்டாக்கும் எச்.ஐ.வி. கிருமிகள் மற்ற நோய்கள் தொற்றுவது போல் இலகுவில் தொற்ற மாட்டாது. ஏனெனில் எச்.ஐ.வி. கிருமி வீரியமானது அல்ல. மனித கலங்களுக்கு வெளியே அதினால் நீண்ட காலம் வாழ முடியாது.

எச் ஐ.வி. கிருமிகள் பின்வரும் நான்கு முக்கிய வழிகளில் தொற்றுகிறது.

1. எச்.ஐ.வி தொற்றியவருடன் உடலுறவு
2. எச்.ஐ.வி. தொற்றிய இரத்தம் ஏற்றல்
3. எச்.ஐ.வி. தொற்றிய தாயிலிருந்து குழந்தைக்கு
4. எச்.ஐ.வி. தொற்றிய இரத்தத்தினால் மாசடைந்த ஊசி, ஊசி ஏற்றும் குழாய் மற்றும் ஏனைய மருத்துவ உபகரணங்கள் மூலம்
5. எச்.ஐ.வி. கிருமி எச்சில், கண்ணீர், சிறு நீர், இரத்தம், இந்திரியம், பெண் பாலுறுப்பில் இருந்து சுரக்கும் நீர், தாய்ப் பால் போன்ற எல்லா உடற்திரவங்களி லும் காணப்படுகிறது. ஆயினும் இந்திரி யம். பெண் பாலுறுப்பில் இருந்து சுரக் கும் நீர், இரத்தம் ஆகியவை மூலமே ஒருவரிலிருந்து மற்றவருக்குத் தொற்று கிறது.

ஆண்குறி, பெண் பாலுறுப்பு, வாய் மல வாசல் ஆகியவற்றை மூடியிருக்கும் மிரு துவான மென் சவ்வினூடாகச் சாதாரண மாக எச்.ஐ.வி. கிருமிகள் பரவலாம். இவற் றில் காயம், புண், அழற்சி போன்றவை காணப்பட்டால் இது விரைவில் தொற்றும். எனவே தான் கொனரியா, சிபிலிஸ், ஹெர்பீஸ் போன்ற பாலியல் நோய்கள் உள்ளவர்களுக்கு மிக விரைவாகத் தொற்றுகிறது.

எயிட்சும் முக்கியமாகப் பாலியல் நோயே. 80% பரவுதல் பாலுறவினாலேயே நடைபெறு கிறது. பாலுறவு எனும் போது ஆண்-பெண் பாலுறவு மாத்திரமல்ல, முறைதவறான ஆண் - ஆண், பெண் - பெண் ஆகியோருக் கிடையிலான தன்னினப் பாலுறவாகவும் இருக்கலாம். தற்பொழுது இந்நோய் 98% ஆண் - பெண் பாலுறவாலும் 1% முதல் 2% மாத்திரமே தன்னினச் சேர்க்கையாலும் பர வுகிறது எனக் கணிக்கப்பட்டுள்ளது.

எயிட்ஸ் நோயை உண்டாக்கும் எச். ஐ வி. கிருமிக்கு எதிராக AZT என்று சொல் லப்படுகின்ற சிடோவுடீன் என்ற மருந்து 1987ல் கண்டுபிடிக்கப்பட்டது. எச். ஐ. வி மனித கலங்களில் பெருகுவதற்கு ரிவேர்ஸ் ரான்ஸ் கிரிப்டேஸ் என்ற நொதியத்தின் செயற்பாட்டைத் தடுப்பதன் மூலம் சிடோவு டீன் மேற்படி வைரசுக்கு எதிராகச் செயற் படுகிறது. மேலும் செயற்கை C.D 4 என்ற புரதத்தை நோயாளிகளுக்குச் செலுத்தினால் இந்த செயற்கை C.D 4 புரதத்துடன் வைரஸ் இணைந்து விடுவதன் மூலம் மனித கலங்க ளைத் தாக்காது என்றும் நம்பப்பட்டது. ஆயினும் இவை வெற்றியளித்ததாகத் தெரி யவில்லை

இன்னும் பல மருந்துகள் பரீட்சிக்கப் பட்டாலும் எந்த ஒரு மருந்தும் எயிட்ஸ் நோயைப் பூரணமாகக் குணப்படுத்தக் கூடி யதாக இல்லை எயிட்ஸ் நோய் தொற்றா மல் தடுப்பதே அவசியமானது.

எயிட்ஸ் தொற்றாமல் தடுத்தல்:

- ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்வான நம்பிக்கையான நெறியை வழுவாமல் கடைப்பிடித்தல் வேண்டும்.
- ஒருவர் தனது கணவன் அல்லது மனை விக்கு எச். ஐ. வி. தொற்றி இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்தால் உடலுற வின் போது கட்டாயம் கருத்தடை உறை களை உபயோகிக்க வேண்டும். கருத் தடை உறைகள் ஏனைய பாலியல் நோய்களையும் தொற்றாமல் தடுக்கும்.
- பலருடன் உடலுறவு வைக்கும் எவருட னும் ஒரு போதும் உடலுறவு வைக்கக் கூடாது. விபசாரிகளுடனும் அவர்களு டன் செல்பவர்களுடனும் உறவு வைக்கக் கூடாது. விபசாரிகள் ஆண்களாகவோ, பெண்களாகவோ இருக்கக் கூடும் என்ப தையும் மனதில் வைத்திருக்க வேண்டும்.
- ஊசிபோட வேண்டிய அவசியம் நேர்ந் தால் நன்கு பயிற்றப்பட்ட நம்பிக்கை யான சுகாதார சேவையாளர் மூலமே

ஏற்றுவிக்க வேண்டும். முறையாகக் கிருமி நீக்கம் செய்யப்பட்ட அல்லது புதிய ஊசிகளையே அவர்கள் உபயோகிக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

● அக்யூபங்சர் சிகிச்சை, பச்சை குத்துதல், காது குத்துதல் போன்ற செய்கைகளின் போது நன்கு கிருமி நீக்கப்பட்ட உபகரணங்களே உபயோகிக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

● இரத்தம் ஏற்றப்பட வேண்டிய அவசியம் நேர்ந்தால் அதை அறியாதவரிடம் இருந்து விலைக்கு வாங்க எண்ணக் கூடாது. நன்கு அறிமுகமான நம்பிக்கையான உறவினர் அல்லது நண்பரின் இரத்தத்தையே கொடுக்க வேண்டும். மிக அவசியமானால் மாத்திரமே இரத்தம் ஏற்றவேண்டும்.

இப்போதைக்கு எயிட்ஸ் பரவுவதைத் தடுக்கக் கூடிய ஒரே வழி மேற்படி தடுப்பு முறைகளை அனுசரிப்பதுதான். அவற்றை அனுசரிப்பது பலவழிகளிலும் பாதுகாப்பானது. ஏனெனில் எயிட்ஸ் நோய் பரவுவதை மாத்திரமின்றி ஏனைய பல நோய்கள் பரவுவதையும் அவை தடுக்கும்.

எனவே எமது நாட்டின் வாசற்படியைத் தாண்டி உள்ளே நுழைந்து விட்ட கொடிய நோயாகிய எயிட்ஸைப் பற்றி இன்னும் நாம் உணராது இருக்க நியாயமில்லை. எயிட்ஸ் சவாலை எதிர்கொள்ள ஒன்றிணைவோம். பயங்கர எதிரியாகிய எயிட்ஸைஅகற்றுவோம். வரவிடாமல் தடுப்போம்.

(தொகுப்பு- பயஸ்)



| | | |
|---|---|---|
| கௌரவிக்கப்பட வேண்டியவை | — | முதுமை, சட்டம் |
| கட்டுப்படுத்த வேண்டியவை | — | நாக்கு, உணர்ச்சி, ஆவேசம் |
| கவனமாயிருக்க வேண்டியவை | — | பேச்சு, நடவடிக்கை, செயல் |
| பண்படுத்த வேண்டியவை | — | வீரம்,உற்சாகம்,போதுமென்ற மனம் |
| பாதுகாக்கப்பட வேண்டியவை | — | வாக்குறுதி, நட்பு,அன்பு |
| தடுக்கப்பட வேண்டியவை | — | சோம்பல்,பொறாமை,குற்றம்புரிதல் |
| தவிர்க்கப்பட வேண்டியவை | — | புகை, மது, சூதாட்டம் |
| விரும்பப்பட வேண்டியவை | — | தூய்மை, கடின உழைப்பு, நாணயம் |

## ஆசிரியர்களது புதிய சம்பள விபரம் வரவேற்கத்தக்கது.

(I) 10 வருட சேவைக்குக் குறைந்த பயிற்றப்படாதவர்கள்:- ரூ 2750/-

(II) 10 வருட சேவைக்குக் கூடிய பயிற்றப்படாதவர்கள்
06 வருட சேவைக்குக் குறைந்த பயிற்றப்பட்டவர்கள் } ரூ 3000/-

(III) 06 வருட சேவைக்குக் கூடிய பயிற்றப்பட்டவர்கள்
07 வருட சேவைக்குக் குறைந்த பட்டதாரிகள் } ரூ 3500/-

(Iv) 12 வருட சேவைக்குக் கூடிய பயிற்றப்பட்டவர்கள்
07 வருட சேவைக்குக் கூடிய பட்டதாரிகள் } ரூ 4600/-

(v) 20 வருட சேவைக்குக் கூடிய பயிற்றப்பட்டவர்கள்
14 வருட சேவைக்குக் கூடிய பட்டதாரிகள் } ரூ 6000/-

# சக்தி வழிபாடு

செல்வி. க. புனிதவனம்
ஆரம்பக்கல்வி
இறுதியாண்டு

சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் சாக்த சமயமாகும். சக்தியின் திருவருளினாலேயே அனைத்து உயிரினதும் வாழ்க்கை அமைப்பும் இயக்கமும் இடம் பெறுகின்றதென்பது அதன் மூலாதாரமான கோட்பாடுகளைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

ரிக் வேதத்தில் அதிதி என்னும் பெண் தேவதையைப் போற்றி பல சூக்தங்கள் இருக்கின்றன. சங்க இலக்கியங்களில் கொற்றவை வழிபாடு கூறப்படுகிறது. கலித்தொகையில் 'உமை ஒரு பாகத்தான்' எனக் கூறி அர்த்த நாரீஸ்வரர் வடிவம் காட்டப்படுகிறது. திருமுருகாற்றுப்படையில் உமை, கொற்றவை எனும் பெயர்களால் சக்தி அழைக்கப்படுகிறாள். பரி பாடலில் வைகை பற்றி பாடல்கள் உள்ளன. சிலப்பதிகாரத்தில் 'வெய்யவாள் தடக்கைப் பாய் கலைப் பாவை' என கொற்றவை பற்றி கூறப்படுகிறது. நந்திக்கலம்பகம், பெரும்பாணாற்றுப் படை என்னும் நூல்களில் கொற்றவை முருகனின் தாய் எனக் கூறப்படுகிறாள். சிந்து வெளியில் தலைகீழான பெண் வடிவம் காணப்பட்டது. மார்க்கண்டேய புராணத்தில் சக்தி மகிடாசுரன் என்னும் அசுரனை அழித்ததாக கூறப்படுகிறது. பகவத்கீதையில் கிருஷ்ணன் அருச்சுனனை நோக்கி துர்க்கையை வணங்கி யுத்தம் செய்யுமாறு வேண்டுகிறான். குப்தர் காலத்தில் 'தேவி சந்திர குப்தம் என்ற நூல் சாக்த சமயக் கருத்துக்களை விளக்குகிறது. ''தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தரும் சக்தி'' என திருவருட்பயன் கூறுகின்றது. கலிங்கத்துப்பரணியில் காளியின் சிறப்புபற்றி கூறப்படுகிறது. இவ்வாறு சக்தி வழிபாடு வேதகாலம் முதல் இன்றுவரை இருந்து வருகிறது.

காஸ்மீரத்தில் சக்தியை அம்பாள் என்றும், ராஜபுதனத்தில் பவானி என்றும், கூர்ஜரத்தில் கல்யாணி என்றும், மிதிலையில் உமை என்றும் ஒவ்வோர் இடங்களிலும் ஒவ்வோர் பெயரால் சக்தி அழைக்கப்படுகிறாள். சிவத்தினின்றும் சக்தியைப் பிரிக்க முடியாது. அதனால் தான் உமாமகேஸ்வரன் என்றும், லக்ஷ்மி நாராயணன் என்றும் பரம்பொருளை அழைக்கின்றோம்.

உலகத்தைப் பற்றிய உண்மையை விளக்குவது மாயையாகும். பரம்பொருளைச் சார்ந்திருக்கும் ஆற்றலுக்கு சக்தி அல்லது மாயை என்று பெயர். அது சிவத்தைச் சார்ந்த திரு அல்லது விபூதியாகும். சக்தியின் திருவிளையாட்டை அணுமுதல் அண்டபகிரண்டம் வரை எங்கும் காணலாம். சடப்பொருளில் இயங்குகின்ற சக்தி ஒன்றுக்கொன்று உடன்பாடாயிருக்கும்போது அதற்குக் கவர்ச்சி (attraction) என்று பெயர். எதிர்மறையாய் இருக்கும்போது அதற்கு விலக்கு (repulsion) என்று பெயர். ஜீவிய தத்துவத்தில் இதே சக்தி விருப்பு, வெறுப்பு என்ற பெயர்களைப் பெறுகிறது. இவை இரண்டையும் கடந்தது அன்பு. பராசக்தி அன்பில் சம்பூரணமடைகிறாள். அன்பே சிவம் என பெரியோர்கள் கூறியிருக்கின்றனர்.

பிறவி எடுத்ததின் நோக்கும் முத்தியடைதல் ஆகும். இதற்கு காரணமாய் இருக்கும் அன்னைக்கு முக்திப் பிரதாயினி என்று பெயர். பத்துத் திக்குகளும் அவள் பரந்திருப்பதால் திகம்பரி என்றும் பெயர். வெட்டிய தலைகளை மாலையாக அணிந்திருப்பதால் முண்டமாலினி என்றும் பெயர் பெற்றுள்ளாள்.

துன்பத்திற்கு முடிவில்லை என்பதற்காக காளிதேவி இடது கரங்களில் ஒன்றில் வாளை ஏந்திக் கொண்டிருக்கிறாள். ஆணவத்தோடு மனிதன் செய்யும் பிரயத்தனங்களை எல்

லாம் அவள் காலக்கிரமத்தில் பாழ்படுத்து கிறாள். இயற்கை நடைமுறைச்கு விரோத மான மனிதனே இயற்கைத் தாயின் வாளுக் குப் பலியாகிறான். உலகில் சுயநலப்பற்றும் பேராசையும், ஆணவத்தடிப்பும், வன்குண மும், பட்சபாதமும் இருக்கும் வரை இக் கோரக் காட்சியும் இருந்தே தீரும். நெறி தவறுபவன் அன்னையின் கூரிய வாளிலிருந்து தப்பமுடியாது. மரணத்தைக் கண்டு மருளா திருக்கும் வீரனுக்கே சக்தி அருள் புரிகிறாள்.

கிருதயுகத்திலே வாழ்ந்து வந்த சுகேது மன்னனும், சுதேவி என்ற அவன் மனை வியும் தாயாதிகளுடனான போரில் நாடு நகர் இழந்து வனம் புகுந்தனர். இவர்களை ஆங்கிரச முனிவர் கண்டு ஆறுதல் கூறி நவராத்திரி விரதத்தை உபதேசித்தார் இவர்கள் இவ் விரதத்தை முறைப்படி அனுஷ்டித்து வந்ததன் பயனால் சூரிய பிரதாபன் என்ற மகன் பிறந்தான். அவன் கல்வியறிவிலும் போர்ப்பயிற்சியிலும் சிறந்து விளங்கி படைதிரட்டிச் சென்று பகை வரை வென்று தந்தையின் ஆட்சியை மீண்டும் கைப்பற்றி பெற்றோரை மகிழ்வித் தான்.

தேவி விரதங்களாக உமாசுக்கிரவார விரதம், ஐப்பசி உத்தர விரதம், நவராத்திரி விரதம், கருட பஞ்சமி விரதம், சாவித்திரி விரதம், வரலக்ஷ்மி விரதம், காமாட்சி விர தம், ஸ்வர்ண கௌரீ விரதம் போன்ற பல விரதங்கள் உள்ளன.

நவராத்திரி விரதமே தேவி விரதங்களுள் சிறப்பானது. நவராத்திரி விரதத்துடன் விஜய தசமியும் சேர்ந்த பத்து நாட்களை யும் சில இடங்களில் 'தசரா' என்றும் உத் தர பிரதேச மக்கள் 'ராம் லீலா' என்றும் வங்காளிகள் 'காளி பூஜை'யாகவும், துர்கா பூஜையாகவும் கொண்டுகின்றனர்.

ஆதிசங்கரர், இராமகிருஷ்ணர், கம்பர், பாரதியார், ஒட்டக்கூத்தர், குமரகுருபரர், அபிராமிப்பட்டர் போன்றோர் சக்தி வழி பாட்டின் மூலம் அருள் பெற்றவர்கள். அம்பி கையால் எமக்குத்தரமுடியாதது எதுவுமில்லை. அவளை உள்ளம் நெக்குருக வழிபாடு செய்து எல்லாப் பேறுகளையும் பெற்று இறுதியில் அவள் திருவடி நிழலை அடைவோமாக.

எண்களும் அவற்றிக்கான
எழுத்துக்களும்:

1 - A, I, J, Q, Y

2 - B, K, R

3 . C, G, L, S

4 - D, M, T

5 - E, H, N, X

6 - U, V, W

7 - O, Z

8 - F, P

அழகிற்கு மேலும் மெருகூட்டுவது
ஆர்த்தியின் தங்க நகைகள்

நம்பிக்கை!

நாணயம்!!

நேர்மை!!!

இன்றே நாடுங்கள்

ஆர்த்தி ஜுவலர்ஸ்

22, மெயின் வீதி மட்டக்களப்பு

☎ - 065 - 2305

ஓடர் நகைகள் குறித்த காலத்தில்
உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்

உ
என் கடன் பணி செய்து கிடப்பதே.

# இந்து மாமன்றம்

## ஸ்ரீ ஞான விநாயகர் ஆலய பரிபாலன சபை

அரசினர் ஆசிரியர் கலாசாலை, மட்டக்களப்பு.

065 - 2368

காப்பாளர்:
திரு. வ. கனகசிங்கம் (முதல்வர்)

ஆலோசகர்கள்:
திரு. தி. பொன்னம்பலம் (துணை முதல்வர்)
திரு. சி. கிருஸ்ணபிள்ளை (பிரதி முதல்வர்)
திரு. செ. வினாசித்தம்பி
திரு. ந. நடராஜா
திரு. கு. காரானசிங்கம் (விரிவுரையாளர்கள்)

தலைவர்:
திரு. நா. புட்பமூர்த்தி
செயலாளர்:
திரு. ச. சரவணமுத்து
பொருளாளர்:
திரு. பா. வரதராஜன்
துணைத் தலைவர்:
திரு. பொ. கு. சிவசர்மா
துணைச் செயலாளர்:
திரு. பொ. சின்னத்துரை

உறுப்பினர்கள்:
திரு. என். வன்னியசிங்கம்
செல்வி ரி. சுமதி
செல்வி எஸ். அன்னபூரணம்
செல்வி எஸ். விஜயகலா
திரு. கே. இராஜசேகரன்
திருமதி. எம். தியாகராஜா
செல்வி எம்.பாக்கியலெட்சுமி
செல்வி கே. நாகேஸ்வரி
செல்வி வி. சாந்தினி
செல்வி ஏ. சந்தானலெட்சுமி

28 - 07 - 1992

### செயற்பாடுகள்:

1. கலாசாலை வளவில் குடிகொண்டிருக்கும் ஸ்ரீ ஞான விநாயகர் ஆலயத்தில் தினமும் பூசை செய்வதற்கு ஒழுங்குகள் செய்தமை.
2. வெள்ளிக்கிழமைகளில் வகுப்புரீதியாக விசேட பூசைகள் செய்ய ஒழுங்குகள் மேற்கொண்டமை.
3. வெள்ளிக்கிழமை தோறும் காலையில் கலாசாலையிலும் பிற்பகலில் ஸ்ரீ ஞான விநாயகர் ஆலயத்திலும் கூட்டுப் பிரார்த்தனை செய்ய ஒழுங்குகள் செய்தமை.
4. தைப்பொங்கல் தினத்தன்று ஸ்ரீ ஞான விநாயகர் ஆலயத்தில் விசேட பூசை செய்தமை.
5. மகா சிவராத்திரி விழாவினையொட்டி ஆலயத்தில் நான்கு ஜாமப் பூசைகளுடனும் மேடையில் இயல், இசை, நாடகக் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற ஒழுங்குகள் செய்தமையோடு அன்றைய தினத்தை முன்னிட்டு தோத்திரத் திரட்டினை இலவச வெளியீடாக வெளியிட்டமை.
6. பிரதி சனிக்கிழமை தோறும் மட்டக்களப்பு சிவனெறி மன்றத்துடன் இணைந்து வீடுகளில் கூட்டுப் பிரார்த்தனையில் கலந்து கொண்டமை.
7. சமய குரவர்களின் குருபூசைகள் அவ்வப்போது ஆலயத்தில் நடாத்தியமை.
8. இந்து சமய பாடக் கருத்தரங்கினை ஒழுங்கு செய்து நடாத்தியமை.
9. சமய விசேட தினங்களில் விசேட பூசைகள் செய்ய ஒழுங்குகள் செய்தமை.

ச. சரவணமுத்து
செயலாளர்.

# இந்து மாமன்றம்



முன்வரிசை (இடமிருந்து வலம்)
திரு.பா.வரதராஜன் (பொருளாளர்), திரு.நா.புட்பமூர்த்தி (தலைவர்),
திரு.வ.கனகசிங்கம் (முதல்வர்), திரு.தி.பொன்னம்பலம் (துணை முதல்வர்),
திரு.கு.காராளசிங்கம் (விரிவுரையாளர்), திரு.ச.சரவணமுத்து (செயலாளர்)

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)
செல்வி.அ.சந்தானலெட்சுமி, செல்வி.கா.நாகேஸ்வரி, செல்வி.வி.சாந்தினி,
திரு.பொ.சின்னத்துரை, செல்வி.சி.விஜயகலா, திரு.ந.வன்னியசிங்கம்,
செல்வி.மா.பாக்கியலெட்சுமி, திருமதி.ம.தியாகராஜா, செல்வி.த.சுமதி.

படத்தில் இல்லாதோர்
செல்வி.எஸ்.அன்னபூரணம், திரு.பொ.கு.சிவசர்மா, திரு.கே.இராஜசேகர்.

# கிறிஸ்தவ ஒன்றியம்



முன்வரிசை (இடமிருந்து வலம்)
திரு.எஸ்.கீதபொன்கலன் (தலைவர்), திருமதி.ஜே.ஜே.யோகேந்திரன் (விரிவுரையாளர்), திரு.தி.பொன்னம்பலம் (துணை முதல்வர்), திரு.வ.கனகசிங்கம் (முதல்வர்), சகோ. எஸ்.டி.தங்கத்துரை (விரிவுரையாளர்), திரு.பயஸ் ஆனந்தராஜா (செயலாளர்).

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)
செல்வி.கா.சாந்தா (பொருளாளர்), செல்வி.க.லாறிஸ் நிமாலினி, செல்வி.ஜே.யுவராஜினி, திருமதி.வி.ஞா.யேசுதாசன், திரு.சா.பிலிப், திரு.இ.சோமசுந்தரம், திரு.இ.பாஸ்கர், திரு.செ.ஜோன் திருச்செல்வம், திரு.த.சந்திரகுமார், திருமதி.சு.நிர்மலேஸ்வரன், செல்வி.கி.ஜெனற் ஜெயசாந்தினி, செல்வி.சூ.உதயதேவி.

தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே, எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த இயேசுகிறிஸ்து அவரே. - 1 தீமோத்தேயு 2: 5, 6.

# கிறீஸ்தவ ஒன்றியம்

☎ 065 - 2368 அரசினர் ஆசிரியர் கலாசாலை, மட்டக்களப்பு.

காப்பாளர்:
திரு. வ. கனகசிங்கம்
(முதல்வர்)

ஆலோசகர்கள்:
திரு. தி. பொன்னம்பலம்
(துணை முதல்வர்)
திரு. பி. கிருஸ்ணபிள்ளை
(பிரதி முதல்வர்)
சகோ. எஸ். டி. தங்கத்துரை
திருமதி.
ஜே.ஜே. யோகேந்திரன்
(விரிவுரையாளர்கள்)

தலைவர்:
திரு. எஸ். கிதபொன்கலன்
செயலாளர்:
திரு. பயஸ் ஆனந்தராஜா
பொருளாளர்:
செல்வி. கே. சாந்தா
துணைத் தலைவர்:
திரு. எஸ்.
ஜோன் திருச்செல்வம்
துணைச் செயலாளர்:
திருமதி.
எஸ். நிர்மலேஸ்வரன்

உறுப்பினர்கள்:
திரு. ச. சோமசுந்தரம்
திரு. சி. பிலிப்
திரு. ரி. சந்திரகுமார்
திரு. பி. தேவரஞ்சன்
திரு. ஆர். பாஸ்கர்
செல்வி.எம். சுகிர்தமலர்
செல்வி. ஜே. யுவராஜினி
திருமதி.எஸ்.ஜீ. யேசுதாசன்
செல்வி. ஜீ.ஜே.ஜெயசாந்தினி
செல்வி. எஸ். உதயதேவி

25 - 07 - 1992

## செயற்பாடுகள்:

★ நம் ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறீஸ்துவின் பிறப்பினை நினைவு கூறும் 'ஒளிவிழா' கடந்த வருடம் (27-11-91) சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பாடல்கள், தேவ செய்தி, நடனம் என்பன இறைவார்த்தையின் அடிப் படையில் நடந்தேறின.

★ வாராந்த ஜெப ஆராதனை பிரதி வெள்ளிதோறும் காலை 7-45 முதல் 8 - 15 வரை ஒழுங்கு செய்யப்பட்டு நடை பெற்று வருகிறது. நம் அனைவருக்கும் ஆசீர்வாதமானதாக இருக்கும் இந்த ஜெப வேளையில் பல சபைகளின் போத கர்கள் வருகைதந்து தேவ வார்த்தையைப் பகிர்ந்து கொள் கின்றனர்.

★ கடந்த 1-4-92 மட்டக்களப்பு முதியோர் இல்லத்திற்கு விரிவுரையாளர்கள் சிலருடன் எமது அங்கத்தவர்கள் அனை வரும் சென்று தபசுகாலக் காணிக்கையாக எம்மால் சேக ரிக்கப்பட்ட பணத்தைக் கையளித்ததோடு, அங்கு ஆற்றப் படும் சேவைகளையும் அவதானித்தோம். அன்றே, வலது குறைந்த பிள்ளைகளின் பராமரிப்பிடமான புகலிடத்திற்கும் சென்று அப்பிள்ளைகளுடனும் எமது அன்பைப் பகிர்ந்து கொண்டோம்.

எமது அங்கத்தவர்களுக்கென கடந்த 18-7-92 அன்று கிறீஸ்தவ ஆத்மீகக் கருத்தரங்கு ஒன்று முழு நாள் நிகழ்ச்சி யாக ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது. ஆத்மீக வாழ்வுக் கும், ஆசிரியப் பணிக்கும் உதவக்கூடிய பல உரைகளும், குழுக் கலந்துரையாடல்களும் இடம்பெற்ற இக்கருத்தரங்கு பயனுள்ள தாக அமைந்திருந்தது.

ஒன்றியச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு நல்கும் அனை வருக்கும் எமது அன்பான நன்றி.

நமது கர்த்தர் இயேசுவின் கிருபை அனைவரோடும் இன்றும் என்றும் இருப்பதாக.

பயஸ் ஆனந்தராஜா
செயலாளர்.

# வேதாகமம் கூறும் இல்லற வாழ்க்கை

செல்வி க. சாந்தா
ஆரம்பநெறி - A
விடுகையாண்டு

தேவனின் சிருஷ்டிப்பில் மனிதன் முக்கிய மானவன். முக்கியமான இடத்தைப் பெற்ற மனிதன் எவ்வாறு தனது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும், இறைவனுடன் எத்தகைய தொடர்பினை வைத்துக் கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி பரிசுத்த வேதாகமத்திற் கூடாக தேவன் தெளிவான விளக்கத்தைக் கொடுத்துள்ளார் இதன் அடிப்படையில் தேவன் இல்லற வாழ்க்கை பற்றி என்ன கூறியுள்ளார் என்பதனை நோக்குமிடத்து இல்லற வாழ்க்கைக்குத் தேவையான இலட்சணங்களை நாம் இலகுவாக அறிந்து கொள்ளலாம்

ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சகல ஜீவராசிகளையும் சிருஷ்டித்த பின்னர் இறுதியாக மனுஷனை சிருஷ்டித்தார். மனுஷன் தனிமையாக இருப்பது நல்லதல்ல என்று கூறிய தேவன் அவனுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணி அவனது விலா எலும்பில் ஒன்றை எடுத்து அதனை மனுஷியாக உருவாக்கி அவளை அவனிடத்தில் கொண்டு வந்தார். அவளை ஆணுக்குத் துணையாக தேவன் கொடுத்தார் இங்கு தான் முதல் திருமணம் நடந்தது. அதுவும் தேவனால் நடத்தப்பட்டது. திருமண பந்தத்திற்குள் நுழையும் ஒரு ஆணும் பெண்ணும் எவ்வாறு இல் வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பதை வேதம் தெளிவாகக் கூறுகிறது. எனவே கணவனுக்கும், மனைவிக்கும் இடையில் எத்தகைய உறவு நிலவ வேண்டும் என்பதை வேதத்தை ஆதாரமாகக் கொண்டு நோக்கின் இல்லற வாழ்வை நாமும் சிறப்பாக, சிக்கலற்றதாக அமைத்துக் கொள்ளலாம். பெண் உருவாக்கப்பட்டதை நாம் அறிந்துள்ளோம். அப்படைப்பில் ஒரு தனித்துவம் விளங்குவதை நாம் அறியக் கூடியதாக உள்ளது. அத் தனித்துவம் யாதெனில் பெண், ஆணின் எலும்பில் எலும்பும் மாமிசத்தில் மாமிசமுமானவள். ஆணின் விலா எலும்பு சம உரிமையைப் பிரதிபலிக்கிறது. அதாவது பெண் ஆணுக்கு அடிமையல்ல துணைவியானவள் என்பதையும், ஆண் எவ்வாறு மதிக்கப்படுகிறானோ அவ்வாறே சமமாக பெண்ணும் மதிக்கப்பட வேண்டும் என்பதையும் காட்டுகிறது. ஆகவே கணவனும், மனைவியும் உறுதியான இல்லற வாழ்க்கையினை நடத்துவதற்கு உறு துணையாக விளங்க வேண்டும் என்பதும் தெளிவாகிறது.

இல்லற வாழ்வில் அதிக நேரத்தை இல்லத்தில் செலவிடுபவள் மனைவி. அவளிடமே குடும்பத்தைச் சிறப்பாக நடத்துவதற்குரிய பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது. வீட்டின் தலைவி இறைபக்தி உடையவளாக விளங்க வேண்டும். இறைவனின் கட்டளைகளுக்கும், கற்பனைகளுக்கும் எவ்வாறு கீழ்ப்படிந்து நடக்கிறாளோ அவ்வாறே தனது புருஷனுக்கும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது. ஆகவே கணவனின் வார்த்தைக்கு மதிப்பளித்து அவனின் விருப்பு, வெறுப்பிற்கு ஏற்ப தன்னை சீர்படுத்தி வாழக் கூடிய பக்குவத்தினை மனைவி அடைந்தால் குடும்பத்தில் வீணாக ஏற்படக் கூடிய சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். மேலும் கிறிஸ்து திருச்சபைக்குத் தலையாக இருப்பது போல், புருஷனும் மனைவிக்குத் தலையாய் இருக்கிறான். அவனே சரீரத்திற்கும் சொந்தமாய் இருக்கிறான் என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது. (எபேசியர் 5:23) ஒரு சரீரத்திற்குத் தலையே பிரதானமானது. தலையில் தான் சகல புலன் உறுப்புக்களும் இருக்கிறது. சரீரத்திலிருந்து தலையை நீக்கி விட்டால் முண்டமாகிய அந்த சரீரத்தால் எந்த வித பயனும் இருக்காது. அவ்வாறே பிரதானமானவனாக கணவன் மனைவிக்கு இருக்கிறான். திருச்சபையை கிறிஸ்து தலையாயிருந்து வழி நடத்துவது போல் கணவன் மனைவியை வழி நடத்துபவனாக விளங்க வேண்டும். மனைவியானவள் ஒரு போதும் கணவனுக்குத் தலையாக மாறி அவனது தலையின் மேலேறி அமர்ந்து விடக் கூடாது. இவ்வாறு நடக்க மனைவியர் புறப்படும் போதே பிரச்சனைகள் தோன்றுகின்றன. அத்துடன் மனைவியின் சரீரத்திற்குச் சொந்தமாயிருப்பவன் கணவனே

எனவே அவரது விருப்பு வெறுப்புக்கு ஏற்பவே மனைவி தனது சரீரத்தைப் பேண வேண்டும். சிகை அலங்காரம் தொட்டு உடை அலங்காரம் வரை கணவனின் விருப்பமே ஆதிக்கம் செலுத்த வேண்டும். கணவனின் விருப்பத்தை நிறை வேற்றுபவளாக மனைவி நடந்து கொண்டால் வீணான கருத்துமோதல்களைத் தவிர்க்கலாம்.

இல்லறவாழ்க்கை இனிதாக அமைவதற்கு மனைவி குணசாலியான பெண்ணாக விளங்க வேண்டும். அப்படிப்பட்ட பெண் முத்துக்களைப் பார்க்கிலும் உயர்வானவளாக மதிக்கபடுவாள். மனைவியானவள் புருஷனின் இதயம் எப்போதும் அவளையே நம்பும் வகையில் வாழ வேண்டும். தீமையயல்ல நன்மையையே எப்போதும் செய்பவளாகவும் திகழ வேண்டும். சோம்பல் உடையவளாக விளங்காமல் வீட்டுக்காரியங்களை ஒழுங்காகச் செய்வதில் கண்ணோக்கம் உடையவளாக இருக்க வேண்டும். அத்துடன் அவளது பிள்ளைகள் அவளைப் போற்றவும், கணவன் அவளைப் பார்த்து எல்லாப் பெண்களையும் விட நீ மேன்மையானவள் என்று புகழக் கூடியவகையில் இல்லற வாழ்க்கையினை நடத்துபவளாகவும் மனைவி விளங்கவேண்டும். அப்பொழுது தான் குடும்பம் குதுகலமானதாக அமையும்.

இவ்வாறான இலட்சணங்களுடன் மனைவி மட்டும் வாழ்ந்தால் இல்லறம் இனிதாக அமைந்து விடுமா? இல்லை. கணவனும் அவருக்குரிய குண இயல்புகளுடன் வாழும் போதே இல்லறம் சிறப்பாக இருக்கும். மனைவிக்குத் தலையாக விளங்கும் கணவன் சர்வாதிகாரியாக மாறக் கூடாது. 'புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்' (எபேசியர் 5:25) என்று வேதாகமம் கூறுகிறது. அன்புதான் இல்லறத்திற்கு அத்திவாரமானது; அன்பு இல்லாத குடும்பம் தண்ணீர் இல்லாத கிணற்றுக்குச் சமானம். சில குடும்பங்களில் கணவனின் சர்வாதிகாரப் போக்கு அக்குடும்பத்தையே நாசமாக்கியுள்ளதைக் காணலாம். நான் தான் குடும்பத்திற்குத் தலைவன் என்று கூறி மனைவியை அடித்துத் துன்புறுத்தும் கணவன்மார்களை இன்றும் நாம் காணலாம். அன்பு செலுத்தாமல் மனைவியை அடக்கி ஒடுக்குவதை வேதாகமம் கண்டிக்கிறது. கணவன் மனைவியை நேசிக்க வேண்டும். அவளில் அன்பு கூரவேண்டும். இரும்புக் கோட்டைகளைத் திறக்கக் கூடிய வல்லமையைப் பெற்றது அன்பு. அந்த அன்பைப் பயன்படுத்தி மனைவியை அடிமைப்படுத்த வேண்டுமே தவிர அட்டகாசம் மூலம் அடிமைப்படுத்தக்கூடாது. வீட்டுக் கருமம் முதல் பிள்ளையின் கருமம் வரைக்கும் இரவு பகலாக கஷ்டப்படும் மனைவியை அன்பான வார்த்தை கூறி பண்பாக நடத்துவதன் மூலமே இல்லற வாழ்க்கை சீரானதாகத் திகழ முடியும். 'புருஷன் தன் மனைவியைத் தனது சொந்த சரீரமாகப் பாவித்து அவளில் அன்பு செலுத்த வேண்டும். 'தன் மனைவியில் அன்பு கூருகிறவன் தன்னில் தான் அன்பு கூருகிறான்' (எபே 5:28) என்று வேதம் கூறுகிறது. ஒரு கணவன் தனது சரீரத்தை அழகுபடுத்தி நேரத்திற்கு உணவருந்தி, நோய் வராமல் பாதுகாத்து எவ்வாறு கவனிக்கிறானோ அதே கவனிப்பை மனைவியிடத்திலும் காட்ட வேண்டும். தனது சரீரத்தைப் போன்று உயர்வானதாக தனது மனைவியையும் நினைக்க வேண்டும். அந்த நினைப்பு அன்பாக மாற வேண்டும். உன்னை நேசிப்பதற்கு முதல் உன் மனைவியை நேசிக்கும் போது அச்செயல் உன்னை நீ அன்பு செய்வதாக மாறுகிறது.

இல்லற வாழ்வில் கணவனையும், மனைவியையும் அன்பு இணைத்து வைத்திருக்கும் போது ஏனைய உறவுகள் மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்படுகிறது. கணவனுக்கு மனைவியும் மனைவிக்கு கணவனும் முதன்மையைப் பெறும் போதே இல்லறம் சீராக நடைபெறும். ஒரு பெண்ணைத் திருமணம் செய்தபின் அந்த ஆண் தன் தகப்பனையும் தாயையும் விட்டுதன் மனைவியுடன் இசைந்து இருவரும் ஒரே மாமிசமாய் இருப்பார்கள், (எபே 5: 31) என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது' திருமணத்தின் பின் ஆண் முழுவதும் மனைவிக்கே உரிமையானவன். மனைவிக்குப் பிறகே ஏனைய உறவுகள், இந்த விதி முறையில் குடும்பம் நடத்தப்படும் போது அக்குடும்பம் ஆசீர்வாதமுள்ளதாக விளங்கும். அன்பால் இணைக்கப்பட்ட ஆணும், பெண்ணும் இல்லற வாழ்க்கைக்குரிய இப்பண்புகளைக் கைக்கொண்டு தமது வாழ்க்கையை சீர்படுத்திக் கொண்டால் என்றும் புதிதாக மலர்ந்த மலர்களைப் போல் மணம் பரப்பி இல்வாழ்வில் இனிமை காணலாம்.

# மனிதனின் உள்ளம் இதுதானா?

செல்வி த. கெங்கேஸ்வரி
ஆரம்பக்கல்வி
விடுகையாண்டு

மனிதனின் உள்ளம் இதுதானா? - அவன்
மடியும் வரையது மாறாதா?
ஏனோ தானோ அவன் போக்கு - என
இருப்பதும் அவனுக்கு அழகாமோ?

-O-

இறைவன் ஒருவன் இருப்பதையும் - இவன்
ஏன் தான் நினைக்க மறக்கின்றான்
ஏளனம் செய்தே வாழுகின்றான் - பிறர்
ஏளனத்தை யவன் ஏற்கின்றான்

-O-

வெற்றியை மட்டும் மனதில் கொண்டு
வேண்டிய பாவம் தினம் செய்து
ஆசையை மனதில் வளர விட்டே
அழிவுக்கும் அவனே வழிவகுப்பான்.

-O-

புனிதம் நிறைந்த வாழ்வுதனில்
புழுதியைக் கிளப்பி அதில் குளித்து
உவகை காணும் அவன் உள்ளம்
ஊனம் என்பதை அறியானோ?

# யாழும் அதன் மகிமையும்

என். இராஜேஸ்வரன்
ஆரம்பநெறி
விடுகையாண்டு

மனித உள்ளங்களுக்கு இனிமை தருகின்ற பல்வகையான இசைக்கருவிகளுள் யாழும் ஒன்றாகும். இந்த பன்நெடுங்காலமாக மனித உள்ளங்களை கவர்ந்த யாழின் பெருமை மிக வரலாற்றினைப் பல சான்றுகள் மூலம் உணரக்கூடியதாக வுள்ளது. சிலப்பதிகார காலத்து எழில் மிக்க கல்லோவியம் ஒன்றிலே யாழின் உருவம் காணப்படுகிறது. இதைக் கண்ணுற்ற ஈழத்துப் பேரறிஞரான கலா யோகி ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள் 'யாழானது சிலப்பதிகார காலத்திலும் அதற்கு முன்னும் தமிழ் நாட்டிலும் ஏனைய நாடுகளிலும் வழங்கி வந்துள்ளது, என உலகப் பேரறிவாளர்கட்கு எடுத்துக் கூறினார். முன்னாளிலே பாணர் கையிலும், பாடினி கையிலும், காணப்பட்ட யாழானது இளங்கோவடிகளது காலத்திலே இசையாசிரியர்களிடத்தும் நாடகமேதைகள் கையிலும் போய்ச் சேர்ந்தது. அது முதற் கொண்டு சிறப்பும், வனப்பும் பெறத் தொடங்கி விட்டது. பின்னர் ஆளுடைப்பிள்ளையார் காலத்திலே தெய்வமீந்த அருட்கருவியாயிற்று. கொங்குவேளும், திருத்தக்க தேவரும் நூல் எழுதிய காலத்திலே அரசிளங்குமரிகளது கையில் தவழ்ந்து தாம் விரும்பும் ஆடவரை அடைய உதவும் கருவியாக புதுப் பொலிவும், சிறப்பும், சீரும், வளர்ச்சியும் காணலாயிற்று.

சரித்திர காலத்துக்கு எட்டாத காலத்திலே 'வில்யாழ்' எனப் பெயர் பெற்று இடையர், இடைச்சியரை மகிழ்வித்த யாழ் ஆனது பின்னர் 'சீறியாழ்' எனும் பேதைச் சிறுமியாகி பாணர்களதும், பாடினிகளதும் இதயம் களிப்பெய்தச் செய்தது. அதன் பின் 'பேரியாழ்' எனும் பெயரோடும் பெதும்பைப் பருவம் எய்தியது. இதனை அடுத்து மடந்தைப் பருவம் எய்தி நீலகண்டப் பெரும்பாணரோடும், மதங்கசூளாமணியாரோடும் அம்மையும், அப்பனுமாகிய சிவனும் உமையும் உறைகின்ற திருக்கோயில்கள் பலவற்றை வலம் வந்து அன்பர்களது உள்ளத்தை உருக்கியது. இவ்வாறு முத்தமிழ் வித்தகர்களால் பாராட்டப்பட்டு சீரும், சிறப்பும் பெற்று யாழ் எனும் பொன் நங்கை சிறப்படைந்தாள்

இத்தகைய பொன்னங்கை பன்னெடுங் காலமாக பல்வேறு நாடுகளிலும் எல்லோராலும் வரவேற்கப்பட்டுள்ளாள் என்பதனை பல்வேறு ஆதாரங்கள் மூலம் அறிய முடிகிறது. எகிப்து நாட்டிலே இறந்த மன்னர்களது உடலினைப் புதைத்து பாதுகாக்கும் பிரமிட்டுக்களிலே யாழ் வரையப்பட்டுள்ளது என அறிஞர்கள் கூறுகின்றனர். இது 'நங்கா' என அழைக்கப்பட்டது. இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த எகிப்திய யாழ்கள் சிலவற்றை பிரித்தானிய அரும் பொருட்காட்சிச் சாலையிலே நாம் இன்றும் காணலாம். அத்துடன் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் மொசப்பத்தேமியாவில் கண்டெடுக்கப்பட்ட யாழ்க்கருவியொன்று பக்தாத் அரும்பொருட் காட்சிச் சாலையிலே வைக்கப்பட்டுள்ளது. இலண்டன் பழம் பொருட்காட்சிச் சாலையிலே அமராபதி நகர்காலத்து கல்லோவிய 'சகோட யாழ்' ஒன்று உள்ளது. இத்தகைய ஆதாரங்கள் மூலம் யாழ்க்கருவியானது எல்லோராலும் கையாளப்பட்ட ஒரு புனித இசைக் கருவி என்பதனை யாராலும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

தமிழ் இலக்கிய ஆதாரங்களை நோக்குகையில் கடைச்சங்க காலத்திலும் அதற்கு முன் தோன்றிய நூல்களிலும் வில்யாழும், சீறியாழும், பேரியாழுமே கூறப்பட்டுள்ளன. ஆனால் சகோடயாழும், மகரயாழும், செங்கோட்டியாழும் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, சீவகசிந்தாமணி, ஆகிய நூல்களில் கூறப்பட்டுள்ளன. இதற்கான ஆதாரங்களாக,

1. 'அருளா யாதலோ கொடிதே யிருள்வரச் சீறியாழ் செவ்வழி பண்ணி யாழநின் காவிரதிர் கானம் பாடினே மாக என வரும் புறநானூற்றடிகளும்

2. 'தகரக் குழலாள் தன்னொடு மயங்கி மகர யாழின் வாள்கோடு தழீஇ' என வரும் மணிமேகலைப் பாடலும்

3. 'யாணர்க் கூட்டத் தியவனக் கைவினை மானப் புணர்ந்தோர் மகரவீணை' என வரும் பெருங்கதை அடிகளும்

4. 'புழந்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில்யாழிசைக்கும் விரலெறி குறிஞ்சி' என வரும் பெரும்பாணாற்றுப்படை அடிகளும்,

5. 'குழல்வழி யாழெழீஇத் தண்ணுமைப் பின்னர்,
முழவியம்ப லாமந்திரிகை' எனவரும் சிவகசிந்தாமணிப் பாடலடிகளும் அமைகின்றன. இவற்றால் தமிழ்இலக்கியங்களிலும், தமிழர்கள் பண்பாட்டிலும் யாழ்க்கருவி கையாளப்பட்டுள்ளமையை உணர முடிகிறது.

இத்தகைய பல பெயர்களைப் பெற்ற யாழின் இசையில் வசமாகாத உயிரினங்களே இல்லை எனலாம். பெருங்கதையிலே வத்தவர் கோமகனாகிய உதயணன் கோடபதி எனும் யாழிசையினாலே தெய்வயானையினை வசப்படுத்தியதாக கூறப்பட்டது. இதே போலவே நற்றிணைச் செய்யுளிலே குதிரை இசை கேட்பின் முனிவு கொள்ளும் எனக் கூறப்படுகிறது.

'கொண்டு செல் பாணநின் தண்டுறை யூரனைப்
பாடுமனைப் பாடல் கூடாது நீடுநிலைப்
புரவியும் பண்ணிலை முனிகுவ
விரகில மொழியல்யாம் வேட்டதில் வழியே'

மேலும், பாலைக்கலியினுள்ளேயுள்ள ஒரு பாடலில் தொழிகூற்றாக வரும்

'காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்குத் தாழ்புநின்
தொல்கவின் தொலைத லஞ்சியென
சொல்வரைத் தங்கினர் காதலோரே'

எனும் பாடலடியில் யானையானது யாழோசையிலே தங்கும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

பாட்டுக்குருகும் தமிழ்ச் சொக்கநாதரின் கூடலம்பதியிலே பாணபத்திரர் இசைபரப்பியபோது இவ்விசையிலே வசப்பட்ட விடவாய் நாகமும், பலமயில்களும், யானையும், சிங்கமும், மானும், புலியும் ஒன்று கூடி தம் பகைமையை மறந்து இருந்தன. என புராணம் கூறுகிறது.

இறைவன் இசையே உருவானவன் என்பது அறிஞர்களது கருத்தாகும். இவ்வுண்மையை 'முன் நல்யாழ் பயில்நூல் நரம்பின் முதிர் சுவையே' என்பதன் மூலம் அறியலாம். யாழ் நரம்பின் முதிர் சுவையாக இறைவன் இருக்கிறார். என்பது இதனால் புலனாகும். மேலும் சிவன் தமது அடியவர்களுக்கு இசைக்கருவியினைக் கொடுத்து இசைத்தமிழை வளர்க்கச் செய்தார். திருநீலகண்ட பெரும்பாணருக்கு பொற்பலகை அளித்ததும் திருஞானசம்பந்தர்க்கு பொற்றாளமீந்ததும் இதற்கு சிறந்த சான்றாகும். இதனாலேயே இறைவனது அடியவர்கள் இறைவனை இசைவடிவானவர் எனப் பல்வேறு இடங்களிலும் சுட்டிக்காட்டியுள்ளனர். இதனை,

'பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழவையும்' என ஆளுடைய பிள்ளையும் ஏழிசையாய் இசைப்பயனாய் ...ன்' என, ஆளுடைய நம்பியும், 'ஓசை ஒலியெலாம் ஆனாய்......' என ஆளுடைய அரசரும் 'இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால் என மணிவாசகரும் இயம்பிய வாக்கினாலும் அறிய முடிகிறது. இத்தகைய தெய்வீக இசைதந்த யாழ்க்கருவியானது தெய்வம் போலப் போற்றப்பட்டது. 'இத்திறத்துக் குற்றநீக்கிய யாழ்கையிற் தொழுது வாங்கி என யாழின் பெருமையை இளங்கோவடிகள் கூறியுள்ளார். இந்த யாழுக்குரிய தெய்வம் 'மாதங்கி' என நச்சினார்க்கினியர் சீவக சிந்தாமணி உரையில் கூறியுள்ளார்.

எமது நாட்டினைப் போலவே பல்வேறு நாடுகளிலும் யாழ்க்கருவியானது தெய்வமாகவே போற்றப்பட்டது. மிசிரம் என்னும் எகிப்திலும், சுமேரியாவிலும், கிரேக்கத்தி

லும், இத்தாலியிலும், ஸ்பெயினிலும், தமிழர்கள் வாழ்ந்து நாகரீகம் பரப்பினார்கள் என மேலைத்தேய அறிஞர்கள் கூறியுள்ளனர். சிந்துநதி தீரத்தினை பாண்டியர்கள் ஆட்சி செய்தபோது மீனாடு என்றும் (பக்கம் யாழ்நூல் 26) பின்னர், இறந்தோர் மேடு என்றும் அழைக்கப்பட்ட இப்பிரதேசத்திலே மிதுனராசியானது 'யாழ்' என்னும் பெயரால் வழங்கப்பட்டது. எனக் கூறப்பட்டுள்ளது. வேறுபல நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்ற உண்மை உலகபுராணம் எனும் தலைப்பின் கீழ் 'செந்தமிழ்' எனும் இதழில் காணப்படுவதாக யாழ்நூலிலே கூறப்படுகிறது. மேலை நாட்டு அறிஞரான 'சர் உவாட்டர் ஸ்கொட்' என்ற அறிஞர் தமது தாய் நாட்டிலிருந்து மறைந்து போன யாழ்க்கருவியினைப் பற்றிப் பாடிய பாடலானது உள்ளத்தை ஈர்க்கும் தன்மையுடையது என விபுலாநந்தர் அவர்கள் தமது யாழ்நூலில் கூறியுள்ளார். ஸ்கொட் எழுதிய பாடல் 'Lady of the lake' என்பதாகும். இப்பாடலின் மொழிபெயர்ப்பு 'நீர் நிலைக்கன்னி' என்பதாகும்.

இவ்வாறு பல்வேறு காலங்களிலும் நிலவி வந்த யாழின் பெருமையினை யாவரும் அறிந்து கொள்வதற்காக முத்தமிழ் வித்தகர் அவர்கள் 'யாழ்நூல்' என்னும் கிடைத்தற்கரிய நூலை எமக்களித்துள்ளார். இந்நூல் 1947ம் ஆண்டு செந்தமிழ் அன்பராகிய சி. த. சிதம்பரம் செட்டியார் அவர்களின் பொருளுதவி கொண்டு கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினால் நூல் உருவம் பெற்றது. இதன் மூலம் யாழினுடைய ஸ்வரபேதங்களையும் நுணுக்கங்களையும், தொன்மைச் சிறப்புக்களையும் அறிய முடிகிறது. இதன் மூலம் பல்வேறு இசைக்கருவிகளில் யாழின் பெருமை காலத்தால் அழியாத தன்மையுடையது. என்பது புலனாகிறது.

---


உசாத்துணை நூல்கள்:

1. யாழ்நூல்
2. புறநானூறு
3. சீவகசிந்தாமணி


## பரிசுத்த வேதாகமத்திலிருந்து....

உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்;

உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்;

உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்;

உங்களை நிந்திக்கிறவர்களுக்காவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் செய்யுங்கள்;

மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.

தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்,
தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்.

இயேசுகிறீஸ்து

சில சிந்தனைத் துளிகள்

# பெண்



திருமதி. க. ரவிக்குமார்
ஆரம்பநெறி
விடுகையாண்டு

* பெண்கள் எப்பொழுதும் சிரித்த முகத்துடன் இருக்க வேண்டும். சிடு சிடுத்த முகத்துடன் இருக்கும் பெண்களை எவருமே விரும்புவதில்லை.

* அன்பே உருவாய், பண்பே உடையாய், அடக்கமே ஆபரணமாய், பொறுமையே பூரணமாய் இருப்பது தான் பெண்மைக்குப் பெருமை தரும் மகத்தான சக்திகள்.

* ஓர் பெண் ஆணிடம் உதவி பெறுவது தன்னைத் தானே அவனிடம் அடகு வைத்துக் கொள்வதற்குச் சமன்.

* ஆணை நல் வழிக்குக் கொண்டு வரவே இறைவன் பெண்ணைப் படைத்தான்.

* ஒரு பெண்ணின் மிகப் பெரிய பலவீனம், அவள் ஒரு ஆணைப் போல் இருக்க முயல்வது தான்.

* ஒரு மனிதன் இம்மையில் சுவர்க்கத்தைக் கண்டு விட்டான் என்றால், அவன் ஓர் சிறந்த பெண்ணை மனைவியாக அடைந்து விட்டான் என்பதே பொருள்

* ஒரு பெண் ஒரு "மாடர்ன் ஆர்ட்" ஓவியத்தைப் போன்றவள். அவளைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று தீவிரமாக முயன்றால் சுவாரசியமே போய்விடும்

* பெண்களைப் பற்றிப் பலர் பல விதமாகக் கூறியுள்ளனர்; கூறி வருகின்றனர். பெண் என்பவள் இறைவனின் அற்புத சிருஷ்டியாவாள். பெண்ணை ஆண் தான் வாழவும், சுகத்தை அடையவும் உரிய கருவியாகப் பயன் படுத்துகின்றான்.

* "பெண்மை என்பது உடம்பு இல்லை அது மனது" என்பதை அனைவரும் உணர வேண்டும். அன்பையும் பரிவையும் காட்ட வேண்டிய இடத்தில் காட்டி அவளது நன்மதிப்பைச் சம்பாதிக்க வேண்டும்.

* "பெண்கள் பிடிவாதமானவர்கள், நினைத்ததை முடிக்காமல் விடமாட்டார்கள்" என்ற பழிச்சொல் இருக்கின்றதே? அது தவறு - மனிதன் பெண்ணுக்கு உரிய மதிப்புக் கொடுத்து தகுந்த இடத்தில் வைத்துப் பண்புடன் போற்றும் போதுதான், அவளால் பிரகாசிக்க முடிகிறது. உலகத்தின் சிரமம் மிகுந்த சவால்களைச் சமாளிக்க முடிகின்றது. பெண்மைக்கு இலக்கணம் வகுக்க முடிகின்றது.

சிறுகதை


# அலைகள் ஓய்ந்த பின் ..........

ஆ. பாஸ்கரன்
ஆரம்பநெறி
விடுகையாண்டு

கட்டிலில் சுருண்டு கிடந்த ரவி சூரியஒளி முகத்திலபட எழுந்து அமர்ந்து கொண்டான். மஞ்சள் பூசியது போல் தெரிந்த வான வெளியை யன்னலினூடே நோக்கிக்கொண்டு தாடியை மெதுவாகத் தடவி விட்டான். அன்று கலாசாலையில் நடந்த சம்பவத்தை அவனால் மறக்க முடியவில்லை. ஆழ்ந்த யோசனையில் அமர்ந்திருந்தவனிடம் 'குட் மோனிங் அங்கிள்......' என்றபடி ஓடிவந்து மடிமீது ஏறி அமர்ந்து கொண்டாள் அவனது மருமகள் சிந்துஜா. அவனும் 'குட்மோனிங் சிந்து' என்றபடி அவளை அணைத்துக் கொண்டான். சிந்துஜா நாட்டில் ஏற்பட்ட இனமோதல்கள் காரணமாக தாய்தந்தையரை ஒரே நேரத்தில் இழந்திருந்தாள். அம்மா அப்பாவை இழந்த சிந்துஜா, ரவி மீது தீராத பாசம் வைத்திருந்தாள். அவனும் அவ மீது உயிரையே வைத்திருந்தான். மடி மீது அமர்ந்திருந்த சிந்துஜா 'அங்கிள் அங்கிள் நீங்க இண்டைக்கு கொலிஜிக்குப் போய் வரும் போது எனக்கு என்னங்கிள் வாங்கி வருவீங்க ..?' என்று கேட்க அவனும் யோசித்துவிட்டு 'ம் ... சொக்லேட்' என்றான். 'அச்சா அங்கிள்' என்று கூறியபடி அவனது மயிரடர்ந்த மார்பின் மீது செல்லமாகத் தனது பிஞ்சுக் கரங்களால் குத்தினாள் சிந்துஜா. சிறிது நேரத்தில் தாய் கொண்டு வந்து வைத்த கோப்பியைக் குடித்து விட்டு ஏதோவொரு முடிவுக்கு வந்தவன் போல் அவசரமாகப் புறப்பட்டுக் கொண்டு கலாசாலையை நோக்கி நடக்கலானான்.

ஆம். ரவி ஆசிரியாாக பணிபுரிந்து வந்தான். தன் தொழிலைப் பட்டை தீட்டிப் பிரகாசிக்கச் செய்யவென ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்தான். சிரேஷ்ட மாணவர்களின் அன்புத் தொல்லைகளைச் சுவாரசியமாக ஏற்றுக் கொண்டு நாட்களை நகர விட்டான். கலாசாலை நண்பனாக அவனுக்குக் கிடைத்தவன் தான் நடராஜ். அவனை நடா என்றே ரவி அழைப்பான். அன்று கலாசாலையில் நடந்த முத்தமிழ் விழாவின் போது கவிதை வாசித்து விட்டு இறங்கி வந்த ரவியைப் பார்த்து 'ரவி உங்க கவிதை மிச்சம் நல்லா இருந்திச்சு... ..' என்று கூறியபடி அவனது பதிலுக்குக் கூடக் காத்திராமல் நடந்தாள் சுகந்தி. அவள் செல்வதையே பார்த்துக் கொண்டு நின்றான் ரவி. அப்போது அங்கே வந்த நடா 'என்ன ரவி போவோமா......?' என்றபடி அவனது தோளில் கையை வைத்தான். அப்போதுதான் சுய நினைவுக்கு வந்த ரவி 'சரி...' என்றபடியே நடந்தான்.

நாட்கள் நகர்ந்தன. சுகந்தி நாட்கள் தவறினாலும் ரவிக்கு 'குட்மோனிங்' சொல்லத் தவறுவதேயில்லை. ரவியும் பதிலுக்கு 'குட்மோனிங்' என்பான். இவ்வாறு ஆரம்பித்த உறவு கால ஓட்டத்தில் ஒருவருக்கு ஒருவர் நலம் விசாரிக்கும் வரையும் சென்றது. அதன் விளைவு அவர்கள் இருவரிடையேயும் காதல் அரும்பத் தொடங்கியது. ஒருவரையொருவர் அறியாத எதிர்ப்பால் உள்ளங்கள் உறவு கொள்ள முனைகின்ற போது அங்கு ஏற்படுகின்ற உறவு காதலாகத்தானே இருக்கும்? ஆம்; ரவி சுகந்தியிடையே காதலெனும் நதி ஊற்றெடுக்கத் தொடங்கியது. ஆனால் அதை நேரில் யார் யாரிடம் கூறுவது என ஒருவருக்கொருவர் அங்கலாய்த்துக் கொண்டனர்.



அன்றும் வழமைபோல் கலாசாலைக்கு வந்த சுகந்தி ரவியைத் தேடினாள். நேரம் 8.30 ஐத் தாண்டியும் ரவியைக் காணவேயில்லை என்ற ஆதங்கத்தில் வகுப்பறையின் முன்னால் நின்றவள் அங்கிருக்கப் பிடிக்காதவளாக வீட்டை நோக்கி நடக்கலானாள். வீட்டில் அன்று அவசரமான வேலை இருந்ததால் அதனை முடித்து விட்டு ரவி கலாசாலைக்கு 9.00 மணிக்குத்தான் வந்து சேர்ந்தான். வந்தவன் சுகந்தியைக் காணாது ஆழ்ந்த யோசனையில் அமர்ந்திருந்தான். அப்போது அங்கே வந்த நடாவிடம் 'டேய் இண்டைக்கு சுகந்தி வரல்லையாடா?' என்றான் ரவி. 'வந்தவள் மச்சான் ஏலியா போயிற்றாள், என்றான் அவன். அவனது எண்ணம் எங்கெல்லாமோ சுற்றி வந்தது. சிந்தனை என்பது குரங்கு போன்றதுதானே அதைக் கட்டுப்படுத்தவா முடியும்?

கலாசாலைக்கு அன்று வழமையை விட முந்தியே வந்திருந்தான் ரவி. அவனைக் கண்ட சுகந்தி 'குட்மோனிங்' என்றாள். அவளிடம் 'ஏன் நீங்க நேற்று 'ஏலியாப்' போனீங்க?' என்று கேட்டான் ரவி. 'நான் உங்கள விரும்புறன் அதனால உங்களக் காணாம திரும்பிப் போயிற்றன்' என்று கூற வேண்டும் போலிருந்தது அவளுக்கு. பின்னர் தன்னை சுதாகரித்துக் கொண்டு சிரித்துக் கொண்டே 'ஒன்றுமில்லை கொஞ்சம் தலையிடி அது தான்... ..' என்றவள் மேலே பேச முடியாமல் நின்றாள். அவனும் அதற்கு மேல் ஒன்றும் கேட்கவில்லை. இருவரும் வகுப்பறையை நோக்கி நடந்தார்கள்.

காலம் என்ன கைகாட்டி நிற்கும் பஸ்ஸா......? அது உருண்டோடிக் கொண்டே இருந்தது. அவர்களுக்கு இன்னும் பத்து நாட்களில் கலாசாலை வாழ்வு முடிவடையவிருந்தது. ஆம்; பிரிவுபசார விழா இன்னும் பத்து நாட்களில் நடைபெறவிருந்தது. இதற்கிடையில் நடராஜ் சுகந்தியுடன் அடிக்கடி கதைப்பதை ரவி அவதானித்து வந்தான். ஆனால் அவள் தன்னை விரும்புகிறாளா? நடாவை விரும்புகிறாளா? என்பதை தீர்மானிக்க முடியாமல் அவன் தவித்தான். சந்தேகம் என்னும் விஷம் விஷங்களிலே மிகக் கொடியது தானே அது யாரைத்தான் விட்டு வைத்தது?

அன்று முகத்தில் தாடியுடன் வந்து நின்ற ரவியைப் பார்த்து 'என்ன ரவி தாடியெல்லாம்...?'' என்று எதையோ அறிந்தவள் போல் கேட்டாள் சுகந்தி. 'எல்லாம் உன்னை நினைத்துத்தான்...'' என்று கூறவேண்டும் போல் இருந்தது ரவிக்கு. ஆனால் அவன் சமாளித்துக் கொண்டு வரட்டுப் புன்னகை உதிர்த்த படியே 'ஒன்றுமில்லை... '' என்றான். சிறிது நேர உரையாடலின் பின்'ரவி நான் உங்களிட்ட ஒரு விசயம் கேட்கலாமா ..? என்றபடி குனிந்து நிலத்தைப் பார்த்தாள் சுகந்தி. ரவி அவள் தன்னை விரும்புவதைத் தான் சொல்லப் போகிறாள் என்று நினைத்தான். அவனது எண்ணங்கள் சிறகு விரிக்கத் தொடங்கின. அப்போது 'என்ன ரவி ....?' என்று மீண்டும் சுகந்தி கேட்க சுய நினைவுக்கு வந்தவன் 'ஓ கேட்கலாமே ..? என்றான். அவளும் முதலில் அவனை விரும்புவதைச் சொல்லத்தான் நினைத்தாள். பின்னர் அவன் என்ன நினைப்பானோ? தன்னைத் தப்பாக புரிந்து கொள்வானோ என்று எண்ணியவள், ''ரவி'பெயாவலில'எனக்காக நீங்க ஒரு கவிதை பாடுவீங்களா?'' என்றாள். ரவியின் மனக்கோட்டை சரிந்தது. அவன் ஏதோ நடந்துவிட்டது போல் நீண்ட மௌனத்தின் பின் ''நிட்சயமாய்ப் பாடுறேன்'' என்றபடி வீட்டை நோக்கி நடந்தான். வீட்டுக்கு சென்றவனின் மனம் இருப்புக் கொள்ளவில்லை. எங்கெல்லாமோ சஞ்சரித்தது.



கலாசாலை மண்டபத்தினுள் இருந்த படியே எதிர் மண்டபத்தில் நடாவும் சுகந்தியும் கதைத்துக் கொண்டிருப்பதைக் கண்டான் ரவி, அப்போது சுகந்தியின் கைமீது நடராஜ் கையை வைத்தான் இனதக்காண சகிக்காதவனாய் மறுபக்கம் திரும்பிக் கொண்டான் ரவி ''ஆமா, சுகந்தி சத்தியமா உன்னையும் ரவியையும் சேர்த்து வைக்கிறேன் பாரு'' என்று தான் சுகந்தியின் கையில் சத்தியம் செய்யப் போனவன சட்டென்று நிறுத்திக் கொண்டான். இது ரவிக்கு எங்கே புரியப்போகிறது.

அன்று பிரிவுபசார விழா நடைபெற விருந்தது. கலாசாலைக்குச் செல்ல புறப்பட்ட ரவியிடம் 'அங்கிள் அங்கிள் நானும் உங்க கூட வரப்போகிறேன்...' என்று அடம் பிடித்தாள் சிந்துஜா. ரவியால் எதுவுமே செய்ய முடியவில்லை. தாயின் வேண்டுகோளின் படியும் அவளை அழைத்துக் கொண்டு கலா சாலைக்குச் சென்றான். மண்டபத்தினுள் சென்ற ரவி நடாவுக்குப் பக்கத்தில் சுகந்தி இருப்பதைக் கண்டவன் வெளியே வந்து நின்று கொண்டான். நிகழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக நடந்தன. அப்போது 'கவிதை வாசிப்பவர் விடுகையாண்டு மாணவன் ரவி' என்றதும் தண்ணீர் கிளாசுடன் மேடைக்கு சென்ற ரவி அதனுள் எதையோ போட்டுக் குடித்துவிட்டு கவிதையை வாசிக்கத் தொடங்கினான். சுகந்தி தன்னை மறந்து கைதட்டிக் கொண்டேயிருந்தாள். அவன் கவிதை வாசித்து முடிக்கும் போது நடா எழுந்து சென்று ஒரு காகிதத்தைக் கொடுத்தான். அதில் 'ஐ லவ் யூ ரவி' கீழே சுகந்தி என்றிருந்தது. அதைப் பார்த்த ரவி 'சுகந்தீ...' எனக் கத்தியபடியே தோளில் சாய்ந்தான். அப்போது 'ஆமாண்டா ரவி, சுகந்தி உன்னை லவ் பண்ணுறாடா...? என்று கூறியபடி அவனை நிமிர்த்தினான் நடா. அவனது தலை சரிந்து விழுந்தது. ஆம் அவன் தண்ணீரில் விஷத்தைக் கலந்து குடித்து விட்டான். அதைக் கண்ட நடா அவன் மீது விழுந்து அழுதான். அப்போது 'ரவீ...' என அலறியபடி ஓடிவந்தாள் சுகந்தி நீண்ட அழுகையின் பின்னர் கிளாசில் இருந்த மீதி நீரை எடுத்துக் குடிக்க போனாள். அப்போது அழுதபடியே ஒரு பிஞ்சுக்கரம் அவளைத் தடுத்தது. அவள் நிமிர்ந்து பார்த்தாள். சிந்துஜா இரு கண்களிலும் நீர்வடிய நின்றிருந்தாள். மாமாவ இழந்திட்டன் எனக்கு உதவிக்கு யாருமில்ல என்பது போலிருந்தது அவள் பார்வை. சுகந்தி ஏதோவொரு முடிவுக்கு வந்தவள் போல் சிந்துஜாவை அணைத்துக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தாள். இறந்தவர்கள் உயிர் பெறுவார்களா? வாழ்பவருக்குத் துணைநிற்க வேண்டாமா? ஆம் சிந்துஜாவுக்குத் துணை நிற்க சுகந்தி செல்வது சரிதானா?

---

## மந்திரிசபையில் மனித உறுப்புக்கள்

1) மூளை - பிரதம மந்திரி
2) சுவாசப்பை - உள்துறை மந்திரி
3) இருதயம் - நிதி மந்திரி
4) தோல் - பாதுகாப்பு மந்திரி
5) தலை - கல்வி மந்திரி
6) கால்கள் - போக்குவரத்து மந்திரி
7) வயிறு - உணவு, விவசாய மந்திரி
8) வாய் - செய்தி, ஒலிபரப்பு மந்திரி
9) கண்கள் - சட்ட மந்திரி
10) கைகள் - தொழித்துறை மந்திரி
11) காதுகள் - தபால் மந்திரி
12) மூக்கு - சுகாதார மந்திரி
13) பற்கள் - பொதுத் தேவை விநியோக மந்திரி
14) நாக்கு - பிரச்சார மந்திரி

# படி! படி! படி!! இது பாட்டல்ல.

அம்மா வயிற்றில் ஒருபடி,
முடிய அம்மா மடியில் மறுபடி,
அதுமுடிய அப்பா தோளில் அடுத்தபடி,
என்று பலபடி கடந்தபடி,
இன்றுனக்கு வயதோ முப்படி,
முப்படி வயதை நினைத்தபடி,
உனை வாழ்த்த எனது எண்ணப்படி,
நான் இங்கிருந்தபடி,
வாழ்த்துவது இப்படி,
எப்படி?

ஆண்டவனை எந்நாளும் நினைத்தபடி,
அம்மா அப்பா சொற்கீழ்ப்படி,
அண்ணன் மாரோடு சேர்ந்துபடி,
ஆசிரியர் தருவதையும் சேர்த்துப்படி,
வருவோர் போவோரோடு சிரித்தபடி,
வாழ்த்தி அனுப்பு மீண்டும் வரும்படி,
வாழ்வில் குறையில்லை என்றபடி.
வளமாய் வாழ்ந்து கொள் நல்விதிப்படி,

தப்பு ஒருபோதும் செய்யாதபடி,
தவிர்த்துக் கொள் அப்பாவின் பிரம்படி,
சீனி சர்க்கரை களவாய் தின்னும்படி,
திருட்டாய் போகாதே அடுப்படி,
அம்மா, அப்பா உனைத் தேடும்படி,
அங்கிங்கு அலையாதே கண்டபடி,
என்றிப்படி அக்கா கேட்டபடி,
இனிதாய் வாழ்ந்து காட்டு நல்லபடி.
என்று பலபடி வாழ்த்துக் கூறியபடி,
அன்புடன் இதைமுடிக்கும் படி (யாயிற்று).

இப்படிக்கு,
க. கணேசராஜா (திருமதி)
ஆரம்பப் பிரிவு, 2ம் வருடம்

# பாடசாலைச் சமூகத்தொடர்புகளும் கல்வி வளர்ச்சியும்

பூ. நவரெத்தினராசா
ஆரம்பக்கல்வி - A
(விடுகையாண்டு)

பாடசாலைகள் மற்றொரு அரச திணைக்களம் போன்றே பெற்றோர்களாலும்; சமூகத்தாலும் நோக்கப்படுகின்றன. சமூகத்துக்கும் பாடசாலை அலுவலர்களுக்கும் இடையில் குறைந்த அளவான சமூக உறவே காணப்படுகின்றது. பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்களில் ஒரு பிரதான குறிக்கோள் சமூகத்துடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணுவதே ஆகும். ஆயினும்; பாடசாலைகள் தமது சூழலில் இருந்து தம்மை வேறுபடுத்திக் கொண்டுள்ளன. சமூகமும் பாடசாலைச் செயற்பாடுகளில் அக்கறை காட்டுவதில்லை, என்ற கருத்தை கல்வி, உயர்கல்வி அமைச்சர் அண்மையில் கூறியிருந்தார். எனவே இன்று பாடசாலைகளை நடாத்துவதில் பெற்றோர்களும், நலன் விரும்பிகளும், பங்கு பெறச் செய்யும் வகையில் பாடசாலை முகாமைச் சபைகளை அமைக்க வேண்டும் என்ற எண்ணம் அரசாங்க மட்டத்தில் இன்று ஏற்பட்டுள்ளது. இவற்றைத் தயாரித்து அமைப்பதற்கான சட்ட விதிகளும் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளன.

இம் முகாமைச் சபைகளில் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் சமூக உறுப்பினர்கள்; மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோர் இடம் பெறுவர். இச் சபைகள் ஆரம்பத்தில் பாடசாலை நிர்வாகத்தில் நேரடியாகத் தலையிடாது ஆலோசனை வழங்கும் சபையாகவே தொழிற்படும் என்று கூறப்படுகிறது. மேலும் எதிர்காலத்தில் இச் சபைகளின் செயலாற்றல்களையும், அனுபவங்களையும் ஆராய்ந்து மேலும் அதிகாரங்களை வழங்கும் எண்ணமும் அரசுக்கு உண்டு. பாடசாலை சமூகத் தொடர்புகளை வலுப்படுத்தும் வகையில் கடந்த காலங்களில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1960 ஆண்டுகளில் ''வேலை அனுபவம்'' என்னும் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. பாடசாலை பிள்ளைகள் சமூகத்தில் பல்வேறு வேலைத் தளங்களுக்கு சென்று அனுபவம் பெறவேண்டியிருந்தது.

1972ம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட ''தொழில் முன்னிலைப் பாடமும்'' இன்று நடைமுறைப் படுத்துகின்ற ''வாழ்க்கைத் திறன்கள்'' என்ற நிகழ்ச்சித் திட்டமும் பாடசாலையை சமூகத்துடன் இணைக்கும் அம்சங்கள் கொண்டவையாக இருக்கின்றன. இன்று கல்வி, அமைச்சால் நடாத்தப்படுகின்ற ''முறைசாராக் கல்வி'' நிகழ்ச்சித் திட்டங்களால் நன்மை பெறுபவர்கள் வளர்ந்தோரும், பாடசாலையை விட்டு இடையில் விலகியோரும் ஆவர். இந் நிகழ்ச்சித் திட்டங்கள் பாடசாலைகளை மையமாகக் கொண்டவை. பாடசாலை ஆசிரியர்களுடைய உதவியுடனும் நடாத்தப்படுபவை.

பாடசாலை நிர்வாகத்தைப் பயன்படுத்தும் நோக்குடன் பாடசாலை கொத்தணிகள் அமைக்கப்பட்டன. இவ்வாறான பன்முகப் படுத்தும் நடவடிக்கைகள் பாடசாலைகளுக்கிடையே ஒரு நெருக்கத்தை ஏற்படுத்தும்; மூலவளங்களைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்புகளை ஏற்படுத்தும். அத்துடன் சமூகத்தொடர்புகளையும் ஏற்படுத்துமென்று எதிர்பார்க்கப்பட்டது 1984ம் ஆண்டுக்கு பின் பாடசாலை மட்டத்தில் அபிவிருத்தி திட்டங்களை உருவாக்க வாய்ப்புகள் வழங்கப்பட்டன. இவற்றில் ஓர் அம்சம் பாடசாலை - சமூக உறவுகளை மேம்படுத்துவதாகும். பாடசாலை அபிவிருத்தி செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது சமூகத்தைச் சேர்ந்த சகலருடைய ஆதரவும், உதவியும் பெறப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

1979ம் ஆண்டில் வெளியிட்ட பெற்றோர் சாசனமும், பாடசாலைக் கல்வியைப்

பொறுத்த வரையில் பெற்றோர்களின் கடமைகள், உரிமைகள் பற்றித் தெளிவுற எடுத்துக் கூறியது. அச்சாசனத்தின் படி முறையாக பெற்றோர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கான ஒரு கருவியாக பாடசாலை அபிவிருத்திச் சபை விளங்குதல் வேண்டும். ஆசிரியர் பயிற்சித் திட்டங்களிலும் ஆசிரியர்கள் கிராமிய சமூகத்தில் அபிவிருத்தியில் பங்கு கொள்ளும் வகையிலும் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் முகவர்களாகச் செயற்படவும் ஏற்ற வகையில் பயிற்சி நெறிகள் அறிமுகம் செய்யப்பட்டன.

1977ம் ஆண்டு முதல் ஆசிரியர் கலாசாலைகளின் பாட ஏற்பாட்டில் ''மக்கள் கல்வி'' என்ற அம்சம் சேர்க்கப்பட்டது. இக்கலாசாலைகளின் மூலவளங்களையும், வசதிகளையும் கொண்டு பாடசாலைச் சமூகத் தொடர்புகளை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் உண்மையான தாக்கம் பற்றி சரி வரத் தெரியவில்லை. ஆயினும் பல்வேறு நன்மைகளைக் கருதியே இத் தொடர்புகள் ஊக்குவிக்கப்பட்டன. பாடசாலைகளைத் திறமுடன் இயங்கச் செய்ய சமூகத்தில் காணப்படும், நிதி மனிதவள மற்றும் பல்வேறு மூல வளங்களை ஒன்று திரட்டும் நோக்குடனே இத்தொடர்புகள் ஊக்குவிக்கப் படுகின்றன. பல நாடுகளில் பாடசாலை வளர்ச்சிக்கு சமூகத்தின் நிதி உதவி வேண்டப்படுகிறது. பாடசாலைகளின் முழுச் செலவுகளையும் அரசாங்கம் வழங்க முடியாத நிலையில் உள்ளது. சமூகத்தின் நிதி வாரியாகப் பயன்படுத்தும் போது பாடசாலை வழங்கும் கல்வியின் பெறுமதியும் அதிகரிக்கின்றது. பாடசாலை-சமூக ஒத்துழைப்பின் காரணமாக பெற்றோர்கள், பாடசாலை நிர்வாகத்தில் பங்கு கொள்ளும் வாய்ப்புகளும் கிட்டுகின்றன. அவர்கள் பாடசாலை தொடர்பான தீர்மானங்களை மேற் கொள்வதிலும் பங்கு கொள்ள முடிகின்றது. இதனால் பாடசாலைக் கல்வியின் பரந்த நோக்கங்கள் அவற்றினை அடையும் செயற்பாடுகளில் பாடசாலை நிர்வாகமும் பெற்றோரும் ஒத்த கருத்தைக் கொள்ள முடிகின்றது. இதனால் பெற்றோர்கள் கல்வியின் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வையும் பெறுகின்றனர். பாடசாலை - சமூகத்தொடர்பு மாணவர்களின் கற்றல் செயல்பாட்டையும் பல்வேறு வழிகளில் மேம்படுத்துகின்றது. பாடசாலைகள் எவ்வளவு உயர்தரமான கல்விப் பயிற்சியை வழங்கினாலும் பிள்ளைகளின் வீட்டுச் சூழல் கல்வி அறிவு வளர்ச்சிக்கு பொருத்தமாக அமையவேண்டும்.

பிள்ளைகள் நன்கு படிப்பதற்கு எவ்வாறு பெற்றோர் உதவலாம்? எவ்வாறு வீட்டில் தகுந்த சூழ் நிலையை உருவாக்கலாம் என்பது பற்றி பாடசாலைகள் பெற்றோருக்கு அறிவுறுத்த முடியும். ஆசிரியர் மாணவர்களின் குடும்பச் சூழலை அறிந்து அதற்கு ஏற்ப தமது கற்பித்தல் முறைகளை திருத்தி அமைத்துக் கொள்ளமுடியும். அத்துடன் ஆசிரியர்களுடன் பெற்றோர்கள் தொடர்பு கொள்வதனால் ''கல்விக் கொள்கை'' பாடசாலை ஏற்பாடு பற்றியும் அறிந்து கொள்ளமுடியும். பாடசாலை-சமூகத் தொடர்பின் காரணமாகபாட ஏற்பாட்டை, மக்களின் தேவைகளுக்கும் பிரச்சினைகளுக்கும் ஏற்ப திருத்திக் கொள்ளமுடியும். பாடசாலைகள் சமூகத்தை அறியும் போது சமூக நோக்கங்களை நிறைவு செய்யும் வகையில் பாட ஏற்பாட்டை உருவாக்க முடியும் பாடசாலைகள் சமூகத்தில் உள்ள வளர்ந்தோருக்கும் பாடசாலையை விட்டு விலகியோருக்கும் கல்வி வழங்கமுடியும்.

தன்சானியாவில் சகல ஆரம்பப் பாடசாலைகளும் ஆரம்பக்கல்வி வழங்குவதுடன் வளர்ந்தோர் கல்வி நிலையங்களாகவும் விளங்குகின்றன. லண்டனில் சில பாடசாலைகள் மாலை நேர வகுப்புக்களை வளர்ந்தோரின் கல்வி மேம்பாட்டுக்காக நடாத்துகின்றன. பாடசாலைகள் சமூகத்தின் வளர்ச்சியில் அக்கறை செலுத்தும் போது அவை சமூகத்தின் தீவிரமான ஆதரவைப் பெறமுடியும். மலேசியாவில் சமூகமேம்பாட்டுக்கான செயற்றிட்டங்களில் மாணவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். சமூகத்தின் தேவைகளை விளங்கிக் கொள்ளக் கூடிய ஒரு நிறுவனம் பாடசாலையாகும். இப் பாடசாலைக் கட்டிடமே பல்வேறுபட்ட வழியில் சமூகத்துக்கு உதவலாம். கூட்டங்கள், விழாக்கள், வைபவங்கள் என்பவற்றை நடத்தவும் இவை பயன்படும்.

உலகின் பல்வேறு பட்ட நாடுகளில் பாடசாலையைக் கட்ட சமூகம் நிலத்தை வழங்குகின்றது. அத்துடன் இலவசமாக தமது உடலுழைப்பை வழங்குகின்றனர். ஆயினும் பாட

சாலைகளை முற்றாக சமுதாயத்தில் தங்கியிருக்கச் செய்துவிட்டு அரசாங்கம் ஒதுங்கி விடமுடியாது. அவ்வாறு செய்வது தவறானது என்பது கல்வியாளர்கள் கருத்து. எனினும் பாடசாலை சமூகத் தொடர்புகளும் வெற்றிகரமாக இடம் பெறுவதைப் பல காரணிகள் நிர்ணயிக்கும்.

★ நடைமுறைச் செலவுகளுக்கு சமூகத்தில் உதவியை நாடுவதை விட கட்டட நிர்மானச் செலவுகளுக்கு உதவியை நாடுவது இலகு.

★ பாடசாலைகள் சமூகத்தின் பொருளாதார, சமூக கலாச்சார வாழ்வில் பங்கு கொள்ளும் போது சமூகம் பாடசாலைக்கு உதவ விரும்புகிறது.

★ பாடசாலை - சமூக ஒத்துழைப்பினது வெற்றி ஆசிரியர்களிலும் தங்கியுள்ளது. ஆசிரியர்கள பாடசாலைச் சமூகத்தை சேர்ந்தவர்களாயின், சிறந்த பாடசாலைத் தொடர்புகள் ஏற்பட முடியும். மேலும் ஆசிரியர்களின் இடமாற்றம் பெறாது தொடர்ந்து நீண்ட காலமாக பணியாற்றும் போது சிறந்த பாடசாலை சமூகத்தொடர்புகள் ஏற்படமுடியும்.

★ சில ஆய்வுகளின் படி இத் தொடர்புகளைச் சிறப்புற ஏற்படுத்துவதில் பாடசாலை நிர்வாகத்திற்கும் முக்கிய பங்குண்டு. நிர்வாகத்தின் ஒத்துழைப்பு நேர்மையாகவும், நம்பிக்கைக்கு பாத்திரமாகவும் சிநேக பூர்வமான முறையில் நடக்குமிடத்தும் பாடசாலைச் சமூகத்தொடர்புகளும் மேம்பட இடமுண்டு என்பது அறியப்பட்டுள்ளது.

பாடசாலையும் சமூகத் தொடர்புகளும் சிறந்த முறையில் இயங்குவதற்கு சில பிரச்சினைகளும் உண்டு. ஆசிரியர்களுக்கு போதிய பயிற்சியும் நேரமும் இல்லாதவிடத்தும், அவர்களுக்கும் பெற்றோருக்கும் இடையே சமூக ரீதியான, உளவியல் ரீதியான இடைவெளி காணப்படுகின்றவிடத்தும் அது ஒரு தடையாக அமையும். ஆசிரியர்கள் சமூகத்தின் பல்வேறு செயற்பாடுகளில் பங்கு கொள்ளாதவிடத்து பாடசாலை சமூகத்தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளமுடியாது. பெற்றோர், ஆசிரியர்களிடம் யதார்த்த பூர்வமற்ற எதிர்பார்ப்புகளை கொண்டிருந்து பின்னர் ஏமாற்ற நிலையை அடைவதும் இவ்வாறான தடைகளில் ஒன்று.

சில சந்தர்ப்பங்களில் கல்வி நிர்வாகமும் இதற்கான ஒரு தடையாக அமையும். கல்வி நிர்வாகிகள் சிலவேளைகளில் பாடசாலை சமூகத் தொடர்புகளின் முக்கியத்துவத்தை கருத்திற் கொள்வதில்லை. நிதி தொடர்பான விடயங்களில் பல்வேறு சிக்கலான விதிமுறைகள் இருப்பது சமூகம் பாடசாலையின் முன்னேற்றத்தில் பங்கு கொள்வதைத் தடுக்கின்றது. வெளியார்கள் பாடசாலை வசதிகளைப் பயன்படுத்துவதைச் சில நிர்வாகிகள் விரும்புவதில்லை.

---


**உசாத்துணைகள்**

தினகரன் பத்திரிகை, கல்வியியல் 1ம் பாகம்



கல்முனையில் புதுப்புது டிசைன்களில் நகைகள் உற்பத்தி செய்பவர்கள்



சொர்ணம் நகை மாளிகை

இல: 214 பிரதான வீதி, கல்முனை

# வாழ்க்கை நீடித்த கல்வி

செல்வி வி சின்னத்தம்பி
ஆரம்பநெறி - A
(விடுகையாண்டு)

மனிதன் பாடசாலை சென்றாலும் செல்லாவிட்டாலும் வாழ்நாள் முழுவதும் எதையோ கற்றுக் கொண்டே இருக்கின்றான். குழந்தைகள் பாடசாலை செல்லுமுன்னரே மொழியைக் கற்றுப் பயின்று கொள்கிறார்கள் உணவு உண்ணவும், விளையாடவும் கற்கின்றார்கள். பாடசாலை செல்லாதவர்கூட பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, செய்திப்படம், சஞ்சிகைகள், பட்டிமன்றம், சொற்பொழிவுகள் போன்ற வழிமுறைகள் மூலம் நாட்டு நடப்புப் போன்ற பல விடயங்களைக் கற்கின்றார்கள். ஒரு பரந்த பொருளில் இவை அனைத்தும் கல்வி என்றே இன்று கொள்ளப் படுகின்றன. இவ்வாறான முறையில் கல்வியைப் பெறுபவர்கள் தாங்கள் தெரிந்தும் தெரியாமலும் தமது அறிவை வளர்த்துக் கொள்கிறார்கள். ஆயினும் இவ்வாறான கற்றலில் ஒரு தொடர்ச்சியும் அமைப்பும் இருப்பதில்லை என்பது உண்மையே.

''வாழ்க்கை நீடித்த கல்வி'' என்ற நவீன கோட்பாடு இவ்வாறான இயல்பான கற்றலுக்கு ஒரு புதிய பரிமாணத்தை வழங்குகின்றது. அத்துடன் கல்வி கற்றலுக்கான புதிய குறிக்கோள்களையும் ஏற்பாடுகளையும் வழங்கி வாழ்நாள் முழுவதும் மனிதன் கல்வி கற்பதை இலகுபடுத்துகின்றது. இது இரண்டு வகையாக இடம் பெறலாம்.

1. ஆசிரியர் பாடங்களைத் திட்டமிட்டு மாணவர்களுக்குப் பாடசாலை போன்ற நிலைமைகளில் கற்பித்தல்.
2. ஆசிரியரின் தலையீடும் உதவியும் இன்றி மாணவன் கற்றலில் ஈடுபடல்.

எடுத்துக் காட்டாக வீட்டுத் தோட்டத்தை எப்படி அமைப்பது என்பது பற்றி ஒரு போதனாசிரியர் மாணவர்களுக்கு விரிவுரையாற்றலாம். அல்லது இவ்விடயம் பற்றிய ஒரு கைநூலைக் கவனமாகத் தயாரித்து சமூக நூல் நிலையங்களுக்கு விநியோகிக்கலாம். அத்துடன் ஒரு கைநூலைக் கொண்டு எப்போது வேண்டுமானாலும் பயின்று கொள்ளலாம்.

இன்று விஞ்ஞான, தொழிநுட்ப அறிவு நாளாந்தம் பெருகி வருவதை யாவரும் அறிவர். இந்நிலையில் முன்னர் பெற்ற பாடசாலைக் கல்வியை மட்டும் வைத்துக்கொண்டு நவீன உலகில் வாழ்ந்துவிட முடியாது. வாழ்க்கை நீடித்த கல்வி ஏற்பாடுகள் வளர்ந்து வரும் புதிய அறிவுத்துறைகளில் பயிற்சிபெற வாய்ப்புகளை வழங்குகின்றன. இன்றைய இளந்தலைமுறையினரின் அறிவாற்றல் நிலையை எட்டிப்பிடிக்கவும் இன்று மாற்றமடைந்துள்ள பொருளாதார சமூக சூழ்நிலைக்குப் பொருந்தி வாழவும், புதிய அறிவினைப் பெறவும் வாழ்க்கை நீடித்த கல்வி ஏற்பாடுகள் உதவுவன. இவை தலைமுறை இடைவெளியைக் குறைப்பதற்கான ஒரு வழிமுறை என்று கல்வியாளர்கள் கருதுவர்.

தனியாட்கள் தமது வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு புதிய விருப்புகளுக்கும் ஆர்வங்களுக்கும் அமைய செயற்படுவதற்கான வாய்ப்புகளை வாழ்க்கை நீடித்த கல்வி வழங்குகின்றது. இவ்வழிமுறையினூடாகப் பெற்றோருக்கான கல்வியையும் வழங்க முடியும். பெற்றோர்கள் வயது வந்த பிள்ளைகளை வளர்ப்பதற்கும் அவர்களின் நடத்தைகளையும் பிரச்சினைகளையும் விளங்கிக் கொள்வதற்கும் தேவையான அறிவினைப் பெற வேண்டியுள்ளது. நூல்கள், சஞ்சிகைகள், நாளேட்டுக் கட்டுரைகள், விரிவுரைகள், கலந்துரையாடல்கள் மற்றும் தொழில்நுட்பத் தொடர்பு சாதனங்கள் போன்ற பல்வேறு வழிமுறைகள் மூலம் பெற்றோருக்கு உதவக் கூடிய அறிவையும் கருத்துக்களையும் பரப்ப முடியும். வளர்முக நாடுகளில் ஒன்றான எமது இலங்கையில் கூட வாழ்க்கை நீடித்த கல்வி

தம் பணியைத் தொடர்கின்றது. பிள்ளை வளர்ப்பு, வாலிப வயதில் ஏற்படும் சிக்கல்கள், அவற்றைத் தீர்க்கும் வழிமுறைகள் என்பன பற்றிய பல கட்டுரைகள் தினசரி செய்தித்தாள்கள், சஞ்சிகைகளில் வலம் வந்து கொண்டிருக்கின்றன. மேலும் வானொலி, தொலைக்காட்சியிலும் இவை சம்பந்தமான கருத்தரங்குகள், அறிவூட்டும் நாடகங்கள் என்பன ஒலி, ஒளி பரப்பப்பட்டு வருகின்றன.

சிறந்த அறிவாற்றலையும் உளப்பாங்குகளையும் வளர்க்க 5-6 வயது தொடக்கம் எட்டு ஆண்டுகளுக்காவது பிள்ளைகளுக்குப் பாடசாலைக் கல்வி வழங்கப்படல் வேண்டும். எழுத்தறிவின்மைக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல சகல பிள்ளைகளுக்கும் ஆரம்பக்கல்வி வசதிகள் வழங்கப்படவேண்டும். அவர்கள் சிறந்த கல்விச்சித்தி பெறுவதையும் உறுதி செய்ய வேண்டும். முக்கியமாக ஆரம்பக்கல்வி நிலையில் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். பேச்சாற்றல், எழுத்தறிவு போன்ற திறன்களைப் பெறுகின்ற அதே வேளையில் கல்வியினூடாக மாணவர்கள் போதிய தகவல்களை அறிந்தவர்களாக ஆக்கப்படல் வேண்டும். இதற்காகவே தான் இலங்கையில் ஆரம்பப் பாடசாலைகளுக்கு முக்கியமளிக்கப்படுகின்றது. கல்வியின் அவசியம் உணர்த்தப்பட்டு வறியவர்களுக்கான வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. உணவு முத்திரை, புலமைப் பரிசில்கள் வழங்கி கல்வி ஊக்கப்படுத்தப்படுகின்றது. மாணவர் தொகைக்கேற்ப ஆசிரியர் நியமனங்கள் அண்மையில் அதிகம் வழங்கப்பட்டதுடன், ஆசிரியர் பயிற்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன் மூலம் சிறந்த மாணவ சமுதாயத்தை, எதிர்காலத் தலைவர்களை உருவாக்கமுடியும்என அரசாங்கமும் ஏன் எம் சமுதாயமும் எதிர்பார்க்கின்றது.

அபிவிருத்திச் செயற்பாடுகளை இலகுபடுத்தும் நோக்குடன் வழங்கப்படுகின்ற வாழ்க்கை நீடித்த கல்வி ஏற்பாடுகளைப் பொறுத்த வரையில் இன்னும் 2 கல்விச் செயற்பாடுகளைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

1. பல்வேறு தொழில்களிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றவர்கள் தமது தொழில் தகுதிகளையும், திறமைகளையும் வளம் படுத்திக் கொள்வதற்கான கல்வி.
2. தொழில் இல்லாதவர்கள் தமது தொழிற் திறன்களை வாழ்க்கை நீடித்த கல்வியின் ஊடாக மேம்படுத்திக் கொள்வது

ஒரு நாட்டினுடைய தொழில் வகுப்பினரின் திறமைகளை மேம்படுத்துவதன் மூலமே அந்நாட்டின் அபிவிருத்தி துரிதப்படுத்தப்படுவதை உறுதி செய்யமுடியும். தொழிற்திறன்களை ஆகக் கூடியளவுக்கு உயர்த்துவது என்பது வாழ்க்கை நீடித்த கல்வியின் முக்கியத்துவம் வாய்ந்த பணியாகும். தொழிற்திறமைகளை உயர்த்துவதற்குத் தேவையான அறிவு, திறன்கள், உளப்பாங்குகள் என்பவற்றை இனங்கண்டு அவை விருத்தி செய்யப்படுதல் வேண்டும். விருத்தி செய்யும் நோக்குடனேயே தொழில்நுட்பக் கல்லூரிகள், திறந்த பல்கலைக்கழகம் என்பன இலங்கையில் இயங்கி வருகின்றன. மேலும் சிறு கைத்தொழில் வாய்ப்புகள், பயிற்சிகள் என்பவற்றையும் வழங்கி நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளை இலகுபடுத்துகின்றனர். தொழிற் திறமைகளை வளம்படுத்திக் கொள்ள தொழில்நுட்பக்கல்லூரிகள், திறந்த பல்கலைக்கழகம் என்பன துணைபுரிகின்றன. தொழில் இல்லாதோர் தொழிற்திறன் பெற்றுக்கொள்ள சிறு கைத்தொழில் நிலையங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் என்பன துணை புரிகின்றன.

வாழ்க்கை நீடித்த கல்வி ஏற்பாடுகளை செவ்வனே செய்து கொள்ள ஒரு முக்கிய வழி பரந்தரீதியில் சமூக நூல் நிலையங்களை நிறுவுவதாகும். இவை சமூகத்தில் அறிவுவள நிலையங்களாக விருத்தி செய்யப்படுதல்வேண்டும். எம்நாட்டிலும் கிராமங்கள் தோறும் நூல்நிலையங்கள், வாசிகசாலைகள் நிறுவப்பட்டுள்ளன. இங்கு புராணக் கதைகள், அறிவுசார் கருத்துக்கள் என்பனவும் வாரந்தோறும் சிறார்களுக்கு புகுத்தப்படுகின்றன. மேலும் ஞாயிறு வகுப்புக்கள், வளர்ந்தோர்க்கான மொழிசார் வகுப்புக்கள், சுகாதாரப் பழக்கவழக்கங்கள், நோய்த்தடுப்பு முறைகள் என்பனவும் கிராமங்கள் தோறும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நூல் நிலையங்கள் எனும்போது அவை ஏராளமான நூல்கள், சஞ்சிகைகள், ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு நாடாக்கள் போன்றவற்றைக் கொண்டனவாக இருத்

தல் நலம். விரிவுரைகளையும், கலந்துரையாடல்களையும் நடாத்தவும், வானொலி, தொலைக்காட்சி, ஒளிப்பதிவு நிகழ்ச்சிகளைப் பார்க்கவும் தேவையான வசதிகள் செய்யப்பட வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் தொழிற்றிறன்களை உயர்த்தி நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளை மேன்மையுறச் செய்யலாம். கல்வி என்பது அறிவை மட்டும் மேம்படுத்தும் திறவுகோல் அல்ல. அது நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் திறவுகோலும் கூட. எனவே வாழ்க்கை நீடித்த கல்வியின் பயன்களை நாமும் பெற்று நாட்டிலுள்ளோரும் பெற வழி சமைப்போமாக.

கொழும்பில்

இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சு நடாத்திய

தமிழ் சாகித்திய விழா ( மே 7 - 10 ) 1992

நான்கு நாட்களாக பற்பல கலை நிகழ்ச்சிகளுடனும், கண்காட்சிகளுடனும் நடைபெற்ற சாகித்திய விழாவிலே பரிசும் பாராட்டு விருதுகளும் பெற்றோர் விபரம் வருமாறு:

இலக்கியச் செம்மல் விருது பெற்றோர்:

1) திரு. ஆர். சிவகுருநாதன்
2) திரு. எல். டி. சிவநாயகம்
3) ஜனாப் சுபைர் இளங்கீரன்
4) ஆத்மஜோதி நா. முத்தையா

இலக்கிய வித்தகர் விருது பெற்றோர்:

1) திரு. எஸ். அகஸ்தியர்
2) திரு. பி. சத்தியசீலன்
3) திரு. காரை எஸ். சுந்தரம்பிள்ளை
4) மேமன் கவி
5) திருமதி. தனபாக்கியம் குணபாலசிங்கம்
6) ஏ. ஆர். எம். சலீம்
7) குமாரலிங்கம் ரஞ்சகுமார்

தமிழ் மணி விருது 25 பேருக்கு வழங்கப்பெற்றது. மொத்தம் 36 விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.

# ஆத்திசூடியும் புதிய ஆத்திசூடியும் ஒரு ஒப்பியல் நோக்கு

பா. வரதராஜன்
ஆரம்பப்பிரிவு 2ம் வருடம்

உலகத்திலே காலத்துக்குக் காலம் மக்களுக்குத் தேவையான ஒழுக்க விதிகளையும், நீதி நெறிமுறைகளையும் எடுத்து விளக்குமுகமாக பல்வேறு புலவர்களால், பல்வேறு மொழிகளில், பல்வேறு நீதி இலக்கியங்கள் தோற்றம் பெற்று வந்துள்ளன. அந்த வகையில் தமிழ் மொழியில் பன்னிரெண்டாம் நூற்றாண்டில் ஒளவையாரால் ஆத்திசூடி என்னும் நீதி நூலும் இருபதாம் நூற்றாண்டில் பாரதியாரால் புதிய ஆத்திசூடி என்னும் நீதி நூலும் இயற்றப்பட்டுள்ளன. அவை இரண்டுக்குமிடையே கருத்து ரீதியில் காணப்படும் வேறுபாட்டையும், எடுத்துரைக்கும் வகையில் காணப்படும் வேற்றுமையையும் சுட்டிக்காட்டி அவற்றுக்கான காரணத்தையும் ஆராய்தலே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

ஒளவையின் ஆத்திசூடியில் நூற்று எட்டு நீதிக்கருத்துகள் கூறப்படுகின்றன. இதில் ஐம்பது கருத்துக்கள் இதை இதைச் செய் என்று சொல்வனவாகவும், ஐம்பத்தெட்டுக் கருத்துக்கள் இதை இதை இப்படிச் செய்யக் கூடாது என்று சொல்வனவாகவும், காணப்படுகின்றன. பாரதியின் புதிய ஆத்திசூடியில் நூற்றுப்பத்து நீதிக் கருத்துக்கள் உள்ளன. அவற்றுள் எண்பத்தேழு கருத்துக்கள் உடன்பாட்டு முறையில் நீதியை வற்புறுத்துவனவாகவும், இருபத்து மூன்று கருத்துக்கள் எதிர்மறையாக இடித்துரைப்பனவாகவுமுள்ளன. இருவரது பாடல்களும் சிறு சிறு தொடர்களாக இப்படி இப்படிச் செய், இப்படி இப்படிச் செய்யாதே என்று போதிப்பனவாக அமைந்து இருப்பதைக் காணலாம்.

உலக மாந்தரின் நலனுக்கு உகந்த சில கருத்துக்களை ஒளவையும், பாரதியும் ஒரே மாதிரியாகக் கூறினாலும் இவ்விரண்டு நூல்களுக்குமிடையில் கருத்தியல் ரீதியாக பல ஒற்றுமை வேற்றுமைகளைக் காணலாம். ஆத்திசூடி என்னும் ஒரே பெயரைக் கொண்ட இவ்விரு நூல்களின் கடவுள் வாழ்த்துக்களும் உருவத்திலும் உட் பொருளிலும் ஒரே விதமாக அமையவில்லை.

''ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே''

என்ற ஒளவையின் பாடல் இரண்டு அடிகளைக் கொண்டதாகவுள்ளது. இக்கடவுள் வாழ்த்தானது ''திருவாத்திமாலையை அணிந்தவனாகிய சிவன் விரும்பிய விநாயகக் கடவுளை நாம் துதித்து வணங்குவோம் என ஒரு வழமையான வாழ்த்தாக அமைகின்றது.

ஆனால் பாரதியின் புதிய ஆத்தி சூடியின் கடவுள் வாழ்த்தானது.

''ஆத்திசூடி இளம்பிறை அணிந்து
மோனத்திருக்கும் முழுவெண் மேனியான்
கருநிறம் கொண்டுபாற் கடல் மிசை
கிடப்பேன்
முகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
இயேசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவத்தாலே உணர்ந்து உணராது
பலவகை பரவிடும் பரம்பொருள்
ஒன்றே அதனியல் ஒளிவுறும் அறிவாம்''

என்று பல அடிகளைக் கொண்டு இருப்பதோடு ஒளியுறும் அறிவு துன்பத்தை நீக்கும் கருவியாக செயற்படுதலின் அதனை வாழ்த்தி அவ்வறிவு தரும் விளக்கமாக நீதிகளைத் தருகிறார். ''திருமாலுக்கடிமை செய்'' தெய்வம் இகழேல் என்று ஒளவை சொல்வதும் ''தெய்வம் நீ என்றுணர்'' என்று பாரதி குறிப்பிடுவதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

மேலும் இவ்விருவரது நூலையும் ஒப்பு நோக்கும் போது பல்வேறுவகையான ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டு கொள்ளலாம். ஒளவையார் இப்படிச் செய்யாதே என்று எதிர்மறையாகச் சொல்லுகின்ற பலவற்றை இன்ன விதமாகச் செய் என்ற ஆக்க நெறியாலே பாரதி வலியுறுத்துவதைக் காணக்கூடியதாகவுள்ளது. ''சோம்பித்திரி

யேல்''என்று ஔவை சொல்ல''நாளெல்லாம் வினைசெய்'' என்றார் பாரதி 'சொற்சோர்வு படேல்' என்று ஔவையார் சொல்ல 'சொல்வது தெளிந்து சொல்' என்றார் பாரதி 'பிழைபடச் சொல்லேல்' என்று ஔவை கூற 'மெல்லத் தெளிந்து சொல்' என்று பாரதியார் எடுத்துக் கூறியுள்ளார்.

மேற்சொன்ன ஒப்புமைக்கப்பால் இருவருடைய கருத்துக்களுக்கிடையேயும் முற்றிலும் மாறுபட்ட சில கருத்துக்களும் காணப்படுகின்றன. 'முனை முகத்து நில்லேல்' என்று ஔவை சொல்ல 'முனையிலே முகத்து நில்' என்றார் பாரதி. 'போர்த் தொழில் புரியேல்' என ஔவை சொல்ல 'போர்த் தொழில் பழகு' என்றார் பாரதி. 'வெட்டெனப் பேசேல்' என்று ஔவை சொல்ல 'வெடிப்புற பேசு' என்றார் பாரதி. 'தையல் சொல் கேளேல்' என ஔவை சொல்ல 'தையலை உயர்வு செய்' என்றார் பாரதி. 'மீதூண் விரும்பேல்' என ஔவை சொல்ல 'ஊண் மிக விரும்பு' என்றார் பாரதி. 'தொன்மை மறவேல்' என்று ஔவை சொல்ல 'தொன்மைக்கு அஞ்சேல்' என்றார் பாரதி. இதைக் கொண்டு நாம் நோக்கும் போது புதிய காலத்திற்குத் தேவையான புதிய கருத்துக்களை வடித்துத் தருவதையே பாரதி முதன்மையாகக் கருதியுள்ளார் என்பது புலனாகின்றது.

அச்சந் தவிர், கீழோர்களுக்கு அஞ்சேல், பேய்களுக்கு அஞ்சேல், தீயோருக்கு அஞ்சேல், என்று அச்சத்தை ஒட்டியும் ஆண்மை தவறேல், தோல்வியில் கலங்கேல், மிடிமையில் அழிந்திடேல் என்று ஊக்க மூட்டியும், கேட்டிலன் துணிந்து நில், குன்றென நிமிர்ந்து நில், கொடுமையை எதிர்த்து நில், வீரியம் பெருக்கு' ஏறுபோல் நட, என்றெல்லாம் எழுச்சியூட்டியும், வையத் தலைமை கொள் என்றும் குரல் கொடுக்கிறார் பாரதி. ஆனால் ஔவையின் ஆத்திசூடியில் இவ்வாறான எழுச்சிக் குரல்களைக் காணவில்லை. இதற்குக் காரணம் ஔவையின் காலத்தில் முக்கியம் பெறாதவை பாரதியின் காலத்தில் மனித வாழ்வில் முக்கியம் பெற்றமையாகும். மேலும் புதியன விரும்பு, வேதம் புதுமை செய், பணத்தினைப் பெருக்கு, தேசத்தைக் காத்தல், செய், கிளை பல தாங்கேல், ஊண் மிக விரும்பு, என்று பாரதி கூறுவது தனது கால சமுதாயத்தின் தேவைகளை நிறைவு செய்யவே ஆகும். மூர்க்கரோடு இணங்கேல், மேன் மக்கள் சொற்கேள் போன்ற ஔவையின் அமைதியான பொது நீதிகளை ஊடுருவிக் கொண்டு 'தொன்மைக்கு அஞ்சேல், புதியன விரும்பு, சோதிடம்தனை இகழ், தீயோருக்கு அஞ்சேல், கொடுமையை எதிர்த்து நில், கோல்கைக் கொண்டு வாழ், ரௌத்திரம் பழகு, ஞேயப்புடை' என்றெல்லாம் புதிய நீதிஏர் பூட்டியுள்ளார் பாரதி.

ஔவையாரது ஆத்தி சூடி எழுந்த காலத்தில் அக்காலத்துக்குத் தேவையான கருத்துக்களை அவர் கூறியுள்ளார். அதே போன்று பாரதி காலச் சமூகத்துக்குத் தேவையான நீதிக்கருத்துக்களைப் பாரதியாரது புதிய ஆத்தி சூடியில் காணக் கூடியதாகவுள்ளது. இவ்விரு நூல்களும் தமிழகம் என்னும் ஒரே மண்ணில் தோன்றி ஒரே சமுதாயத்திற்காக எழுந்தவைகளே ஆயினும் கால வேறுபாட்டினாலும் காலத்துக்கேற்ப சமூகத்தின் தேவை வேறுபாட்டினாலும் முன்னைய நூலில் கூறப்பட்ட சில நீதிக்கருத்துக்கள் பின்னைய நூலில் புதியனவாக மாற்றம் பெற நேரிட்டது. மேலும் முன்னைய கருத்தை நேர்நின்று எதிர்த்து வெட்டுவது போன்ற குரல் பாரதியின் புதிய ஆத்திசூடியில் மிதந்து காணப்படுகின்றது.

இருவரது நூல்களும் ஆத்திசூடி என்றே பெயர் பெற்றுள்ளன. ஔவையார் தனது நூலுக்கு வேறு பெயர் இட்டு இருக்கலாம் என்றும், நூலின் தொடக்கத்தில் வரும் சொல்லை வைத்து மக்கள் வழங்கி வர அது நூலுக்குப் பெயராகி இருக்கலாம் என்றும் ஊகிக்க இடமுண்டு. கொன்றைவேந்தன் வாக்குண்டாம் என்பன போன்ற நூல்கள் முதல் தொடரால் பெயர் பெற்று இருப்பினும் வாக்குண்டாம் எனும் நூலுக்கு மூதுரை என்ற வேறு பெயர் இருப்பது இக்கருத்தை வலியுறுத்துகிறது. ஔவையாரது ஆத்திசூடியைப் போன்றதே தமது நூல் என்ற கருத்தை வெளிக்காட்டவே பாரதி ஆத்திசூடி என்ற பெயரோடு சாத்தி ஒரு நூல் செய்ய முனைந்ததற்குக் காரணமாகலாம். ஆத்திசூடி எனும் பெயரில் இருந்துவரும் நூல் மக்களுக்கு சரியான எழுச்சியைத் தந்து சரியான வழியைக் காட்டவில்லை. ஏற்கனவே இருந்து வரும் ஆத்திசூடி மக்களைப் புதிய நடைபோட வைக்கவில்லை எனபதனால் புதிய கருத்துக்களை புதிய ஆத்திசூடி மூலம் முன் வைத்தார் பாரதியார்.

இவ்வாறு இரு நீதி நூல்களும் வெவ்வேறுபட்ட கருத்தைக் கூறுவதற்குக் காரணம் கால வேறுபாடே ஆகும். எனவே நாமும் காலத்துக்குத் தகுந்த கருத்துக்களை அவற்றிலிருந்துபெற்று வாழ்ந்து சிறப்புறுவோமாக.

# ஒசோன்
# படை அழிவதால் பூமிக்கு ஏற்படும் ஆபத்து

இன்றையத் தொடர்புச் சாதனங்கள் ஒசோன் படை அழிந்து வருவதாகவும், அதனால் பூமிக்கே பேராபத்து ஏற்படப் போவதாகவும் அடிக்கடி செய்திகளை வெளியிடுகின்றன. ஒசோன் படை என்றால் என்ன? அது பூமிக்கு ஏற்படுத்தும் அழிவுதான் என்ன? அதை எப்படி அழியாமல் பாதுகாக்கலாம் என்பன போன்ற வினாக்களும் ஆங்காங்கு எழுப்பப்பட்டு வருகின்றன.

ஒட்சிசன் வாயு பற்றி நம் எல்லோருக்குமே தெரியும். உயிர் வாழ்க்கைக்கு அது இன்றியமையாததால் அதற்கு உயிர்வாயு என்ற பெயரும் நிலவுகிறது. ஒட்சிசன் வாயு இரண்டு ஒட்சிசன் அணுக்களாலான மூலக் கூறுகளாகவுள்ளது. மூன்று ஒட்சிசன் அணுக்களைக் கொண்ட மூலக் கூறுதான் ஒசோன் ஒட்சிசனின் சூத்திரம் $O_2$, ஒசோனின் சூத்திரம் $O_3$. ஒசோன் ஒரு நச்சுவாயு. விலங்குகளையும், தாவரங்களையும் அது பாதிக்கும். ஆனால் கடல் மட்டத்திலிருந்து 10 முதல் 15 k.m உயரத்தில் படையாகப் பூமியைச் சூழ்ந்திருக்கும் போது அது உயிரினங்களைப் பாதுகாக்கின்றது. ஒசோன் படை இல்லாதிருந்தால் பூமியில் உயிரினங்களே இருந்திருக்காது.

சூரியனிலிருந்து ஒளிக்கதிர்கள் பூமிக்கு வருகின்றனவல்லவா? ஒளிக்கதிர்களுடன் சேர்ந்த ஊதாக் கடந்த கதிர்களும் வருகின்றன. இவை பொல்லாத கதிர்கள். தோல் புற்றுநோய், குருட்டுத்தன்மை, தாவரங்களினதும் விலங்குகளினதும் வளர்ச்சியைப் பாதித்தல் முதலிய பல தீய விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை. ஒசோன் படையானது, இந்தத் தீய ஊதாக் கடந்த கதிர்கள் பூமிக்கு வராது தடுத்து நிறுத்துகின்றன.

ஒசோன் படை வளிமண்டலத்தின் கூரையாக இருப்பது நீண்ட காலமாக அறியப்பட்ட விடயம். அதன் தொழிற்பாட்டை ஆராய்வதில் விஞ்ஞானிகள் நீண்டகாலமாக ஈடுபட்டு வந்துள்ளனர். ஒசோன் படையை ஆராய்வதற்கு 1984ம் ஆண்டில் விமானத்தில் சென்ற இரண்டு பிரிட்டிஷ் விஞ்ஞானிகளுக்கு பேரதிர்ச்சியொன்று காத்திருந்தது. தென் துருவத்திற்கு மேலே பிரமாண்டமான ஓட்டை இருப்பதை அவர்கள் அவதானித்தார்கள். இமயமலையை நுழைக்கக் கூடிய அவ்வளவு பெரிய ஓட்டை. படிப்படியாக விரிந்து கொண்டு வருகிறது அந்த ஓட்டை. இப்பொழுது வடதுருவத்தில் வேறொரு ஓட்டை தோன்றியுள்ளது. 1989ல் இது அவதானிக்கப்பட்டது.

ஒசோன் ஓட்டைகள் தோன்றுவதற்கு மனிதன் தான் காரணம். இன்னும் சொல்லப் போனால், மனிதனின் நாகரீக வளர்ச்சி தான் காரணம். குளிர்சாதனப் பெட்டிகள். எயர் கண்டிசன்கள், றப்பர் மெத்தைகள் முதலிய பல பொருட்களில் புதிய வகை செயற்கை வாயு ஒன்று உபயோகிக்கப்படுகின்றது. அதற்கு குளோரா புளோரா காபன் அதாவது CFC என்று பெயர். அந்த வாயுவில் குளோரின் உள்ளது. பாவனைப் பொருட்களிலிருந்து தப்பும் CFC வளியுடன் கலந்து படிப்படியாக மேலே கிளம்புகிறது. ஒசோன் படையை அடைந்ததும் CFC மூலக் கூறுகளிலுள்ள குளோரின் மூலக் கூறுகள், ஒசோன் மூலக் கூறுகளுடன் தாக்கத்தில் ஈடுபடுகின்றன. அதனால் ஒசோன் மூலக் கூறுகள் அழிய ஆரம்பிக்கின்றன.

ஒசோன் படையின் சிதைவால் ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் உணரப்பட்டதும், அதைத் தடுப்பதற்கான வழிவகைகள் ஆராயப்பட்டன. CFC உற்பத்தியைப் படிப்படியாக நிறுத்த வேண்டுமென்ற முடிவுக்கு விஞ்ஞானிகளும், சூழல் பாதுகாப்பாளர்களும் முன் வந்தனர். அரசாங்கங்களின் ஒத்துழைப்பின்றி இதைச் செய்ய முடியாது.

எனவே 1987ம் ஆண்டில் கனேடிய நகரமான மொன்டிரீலில் அரசாங்கப் பிரதிநிதிகளைக் கொண்ட மகாநாடு ஒன்று கூட்டப்பட்டது. 60 நாடுகள் கலந்துகொண்ட அந்த மகாநாட்டில் CFC உற்பத்தியை 2000ம் ஆண்டிற்குள் அரைவாசியாகக் குறைக்க வேண்டுமென்ற ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆனால் பின்பு அது 85 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. இதன்படி பல நாடுகள் CFC உபயோகத்தை நிறுத்துவதில் தீவிரமாக உள்ளன.

CFC உபயோகத்தைத் திடீரென நிறுத்துவதில் கஷ்டங்கள் உள்ளன. அதற்கு மாற்றுப் பதார்த்தம் ஒன்றைக் கண்டு பிடிக்க வேண்டி நிறைய ஆராய்ச்சிகள் நடைபெறுகின்ற போதிலும் இதுவரை வெற்றி கிட்டவில்லை. CFC போன்ற மலிவான பதார்த்தத்தைக் கண்டுபிடிப்பது கஷ்டமாகவுள்ளது.

மாற்றீடுகளைக் கண்டு பிடிப்பதற்கான ஆராய்ச்சி செலவு மிக்கது. எனவே, வளர்முக நாடுகள் இந்த ஆராய்ச்சியில் இறங்கத் தயங்குகின்றன. CFC ஐத் தாங்கள் கைவிட வேண்டுமானால் வளர்ந்த நாடுகள் உதவியளிக்க வேண்டும் என்கின்றன. இன்றைய நிலமைக்கு வளர்ந்த நாடுகளே காரணம். அவை செய்த பாவத்திற்கு நாங்கள் தண்டனை அனுபவிக்க வேண்டுமா என்பது அவற்றின் வாதம்.

வளர்முக நாடுகளின் CFC உபயோகம் வேகமாக வளர்ந்து வருகின்றது. எனவே, வளர்முக நாடுகளின் ஒத்துழைப்பின்றி நிலைமையைச் சீர்செய்ய முடியாது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

ஓசோன் படையின் சிதைவால் முழு உலகமுமே பாதிப்புறும். எனவே, வளர்ந்த நாடுகளுடன் வளரும் நாடுகளும் ஒத்துழைக்கத்தான் வேண்டும். எல்லா நாடுகளும் ஒத்துழைத்தால் அடுத்த எண்பது ஆண்டுகளில் ஓசோன் ஓட்டை அடைபட்டு விடும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். எனவே உலக நாடுகள் அனைத்தினதும் ஒத்துழைப்பில் தான் ஓசோன் படை அழிவதால் ஏற்படும் ஆபத்திலிருந்து நமது பூமியைக் காத்துக் கொள்ளலாம்.

(தொகுப்பு: பபஸ்)


சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டில் வெளிவரும்

கலைச் செல்விக்கு எமது நல்வாழ்த்துக்கள்.

சகல விதமான நுகர்ச்சிப் பொருட்களுக்கும்

லொறி, கதிரைகள், கூடாரங்கள் என்பனவற்றை

வாடகைக்குப் பெறவும்

# ப. நோ. கூ. சங்கம்

## காரைதீவு (இ.மா)

# கதிரியக்கமும் - அதன் விளைவுகளும்

திரு. சா. பிலிப்
விஞ்ஞானப் பிரிவு
விடுகையாண்டு

ஆரம்ப காலத்தில் (X) எக்ஸ் கதிர்கள் உண்டாக்கப்படும் போது ஒரு வலிமை மிக்க மின்னொளிர்தல் அவசியம் தொடர வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. எனவே (X) கதிர்கள் ஒளிரும் பொருட்களில் இருந்து வெளிப்பட முடியாததென Antoine Hentry Becquerel என்பவர் ஆராய்ந்தார். இவர் ஒரு புகைப்படத் தட்டை சூரியஒளி புக முடியாதவாறு தடித்த காகிதத்தால் சுருட்டிமூடி யூரேனியம், பொற்றாசியம் கலந்த இரட்டை உப்பை அதன் மேல் வைத்து இரண்டுக்கும் இடையே ஒரு மெல்லிய கண்ணாடியையும் வைத்து இத்தட்டை சூரிய ஒளியிலும், பின் இருளிலும் வைத்து அவதானித்த போது மிகத் தெளிவான உப்பின் நிழல் வடிவம் காணப்பட்டது. இவ்வியல்பு கதிரியக்கம் என்றும், இவ்வியல்புக்குக் காரணமான மூலகம் கதிரியக்க மூலகம் என்றும் கூறப்பட்டது. இதைத் தொடர்ந்து இரத போர்ட் என்பவர் அல்பா, பீற்றாக் கதிர்களை யூரேனியம் உப்பில் இருந்தும், காமாக்கதிரை P. வில்லியட் ரேடியத்தில் இருந்தும் கண்டு பிடித்தனர்.

கதிர் தொழிற்பாட்டு மூலகங்கள் இச் செயற்பாட்டால் தேய்வடைகின்றன. எனினும் இம்மூலகங்கள் தேய்வடையும் காலம் முடிவிலியாகும் ஒரு மூலகம் அரைப்பகுதியாகப் பிரிய எடுக்கும் காலம் அம்மூலகத்துக்கு குறித்த எண்ணாகும். இது அதன் அரைச்சீவிய காலம் எனப்படும். கதிர் தொழிற்பாட்டு மூலகங்கள் பிரிந்து இன்னொரு கதிர் தொழிற்பாட்டு மூலகத்தைக் கொடுக்கும். அம்மூலகமும் பிரிந்து இன்னும் ஒரு கதிர் தொழிற்பாட்டு மூலகத்தைக் கொடுத்து இறுதியில் கதிர் தொழிற்பாடற்ற ஒரு மூலகம் தோன்றும்.

கதிர் தொழிற்பாட்டின் மூலம் நாம் எண்ணற்ற தேவைகளை நிறைவு செய்யக் கூடியதாயும் ஏராளமான விளைவுகள் உருவாகுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

### 1. அணுக்குண்டில் கதிரியக்கம்

அணுக்களில் இருந்து பிளவு முறை மூலமும் உருகல் முறை மூலமும் சக்தி பெறப்படும் அணுக்குண்டு பிளவு முறை மூலமே இயங்குகின்றது. அணுப்பிளவின் போது சக்தி ($E = mc^2$ இன்படி) வெளியேறுகின்றது. யூரேனியம் - 235 ஐ மின்னேற்றமற்ற நியூத்திரனால் மோதும் போது சக்தியும், பல நியூத்திரன்களும் வெளியேறும். இந்த நியூத்திரன்கள் மீண்டும் யூரேனியத்தைத் தாக்கி சக்தியையும், அதனிலும் பலமடங்கு நியூத்திரன்களையும் வெளியேற்றும் இது தொடரியக்கமாக தொடர்ந்து யூரேனியத்தை தாக்கி ஒரு செக்கனின் லட்சத்தில் ஒருபங்கு நேரத்தில் ராட்சத வெடி உண்டாகும். 1kg 100kg வரை எடையுடைய யூரேனியம் தொடரியக்கம் தொடர்ந்து நடக்கக் கூடியவாறு அணுகுண்டில் வைக்கப்பட்டிருக்கும். இதுவே அதன் பாதுகாப்பளவாகும். இதற்கு மேல் சேரும் போது கணப் பொழுதில் வெடித்து விடும். அணுக்குண்டில் யூரேனியத்தை இரண்டு பாகமாக பிரித்து வைத்து வேண்டிய போது ரேடார்கள் மூலம் இரு பகுதியையும் ஒன்று சேர்க்கும் போது அதன் பாதுகாப்பளவு (எடை) உயர்வடைந்த உடனேயே பிரமாண்டமான வெடி உண்டாகும். இவ்வெடிப்பால் 03 விளைவுகள் உருவாகும்.

01. வெடியால் உண்டாகும் அதிர்ச்சி அலைகள் எல்லாப் பக்கமும் பரவிச் சென்று அவற்றின் பலத்த அழுத்தத்தால் கட்டிடங்கள் உருட்டிச் செல்லப்படும்.

02. கிட்டத்தட்ட பத்துக் கோடிப்பாகை பரனைட்டு மகா வெப்பத்தால் வெடித்த பகுதியில் உள்ள காற்று விரிவடைந்து

மேலெழுவதால் ஒரு வெற்றிடத்தை உருவாக்க இந்த வெற்றிடத்தை நிரப்ப சுற்றுப்புறக்காற்று அதிவேகமாக வெற்றிடத்தை நோக்கிப் பாயும் இதனால் மீண்டும் கட்டிடங்கள் எதிர்த் திசையில் தூக்கி வீசப்படும்'

03. கடும் வெப்பமும், கட்டிட இடிவும், கதிரின் ஊடுருவலும் மக்களைக் கருக்கி விடும்.

அணுவில் இருந்து உருகல் முறை மூலமும் சக்தியைப் பெற முடியும். இச்செயற்பாட்டை ஐதரசன் குண்டில் பயன்படுத்தப்படுகின்றது. கருப்பிளவு மூலம் கிடைக்கும் சக்தியைக் கொண்டு ஐதரசன் அணுவை உருக்கி ஈலியம் அணுவாக மாற்றும்போது ($E = mc^2$) சக்தி வெளியேறுகின்றது. சூரியனிலும் இச்செயற்பாடே நடைபெறுகின்றது. சூரியனில் ஒவ்வொரு செக்கனும் 564,000,000 தொன் ஐதரசன் 560,000,000 தொன் ஈலியமாக மாறும் போது 4,000,000 தொன் சக்தியை வெளியேற்றி அதன் உட்புறத்தில் 2 கோடி டிக்கிரி வெப்பத்தை உண்டு பண்ணுகின்றது. அணுகுண்டு ஐதரசன் குண்டு என்பன கதிரியக்கச் செயற்பாடாகும்.

**அணுசக்தியில் கதிரியக்கம்!-**

இன்று அணுசக்தி மூலம் பெரும்பாலான நாடுகள் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன. ஒரு kg யூரேனியத்தை $\left(U^{235}_{92}\right)$ பிளக்கும் போது அதிலிருந்து பெறப்படும் சக்தியானது 1,350 தொன் நிலக்கரியை அல்லது 900,000லீற்றர் பெற்றோலை எரிப்பதன் மூலம் கிடைக்கும் சக்திக்கு சமனானது. அணுக்குண்டைப் போலவே இதுவும் தொடரியக்கமாகும். இன்று உலகிலேயே மிகப்பெரிய அணுசக்தித் தொழிற்சாலை (ரஷ்யா) வொல்கோதொன்ஸ்க் நகரில் உள்ள அற்றோமாஸ் தொழிற்சாலையாகும். இதன் பரப்பு 60உதைபந்தாட்ட மைதானத்தின் அளவாகும். இங்கு ஆண்டொன்றுக்கு ஆயிரம் தொன் நிறையுடைய எட்டுக் கதிரியக்கிகள் உற்பத்தி செய்யப்பட்டு தேவையான இடங்களுக்கு அனுப்பப்படுகின்றது. அணு உலைகள் மூலம் நிலரயில்களை 50,000 மைல்கள் தொடர்ச்சியாக ஓடலாம். அதுபோல் விமானங்களும் தொடர்ச்சியாக ஓடலாம். அணு உலைகள் தவறுதலாக வெடித்தால்.........

அப்ரமோவா என்னும் உளவியலாளர் 'செர்னோபில் ஓர் உளவியலாய்வு' எனும் கட்டுரையில் கூறியதன் சில பகுதிகளை உதாரணத்துக்கு இங்கு தருகிறேன்.

*1986 ஏப்ரல் 20ம் திகதி அதிகாலை 1.25 மணியளவில் (ரஷ்யா) செர்னோபில் இருந்த மிகச்சக்தி வாய்ந்த அணு உலையின் 4ம் பிரிவில் பயங்கரமான வெடிப்பு ஏற்பட்டது. இவ்வெடிப்பின்போது 50தொன நிறையுடைய கொங்றீட் தகடுகள் இறக்கைபோல் தூக்கி வீசப்பட்டன. கிட்டத்தட்ட 500தொன் நிறையுடைய கதிர் வீச்சு மூலப்பொருளான செஸியம் - 137, புளுட்டோனியம் ஸ்தோத்தியம்- 90, அயடீன் 13 போன்றவை காற்றில் செறிவாக்கப்பட்டு கரும்புகை முகில்களுடன் கூடிய ராட்சத நெருப்பு ஒன்று வானை நோக்கிமேலெழுந்தது ஹிரோசிமாவில்போடப்பட்ட அணுகுண்டைவிட பத்து மடங்குக்கும் அதிக சக்தி வாய்ந்த இந்த மரண முகிலை காற்று வடமேறகுத் திசையாக நகர்த்திச் சென்று ஐரோப்பா முழுவதையும் பீதியடையச் செய்தது. இந்நிகழ்ச்சியில் இறந்தவர்களில் கதிர் வீச்சு இருந்ததால் தடித்த நாகச் சவப்பெட்டிகளில் வைத்து காற்றுப்புகாதவாறு அடைத்து ஆழ்ந்த குழிகளில் புதைத்துவிட்டனர். இந்த வெடியால் 30,500றொட்ஜென் வேகத்தில் கதிர்வீச்சு சென்றது. 15008000km² நிலப்பரப்பு பாதிக்கப்பட்டது. இப்பிரதேசத்தில் இருந்து 116,000 மக்கள் வெளியேற்றப்பட்டு அக்கிராமம் அபாயவலயமாக்கப்பட்டது. இது நடந்து 4 வருடத்தின் பின் பார்த்தபோது தெருவெங்கும் தூசுகள் ஆங்காங்கே ஓரிரு குடும்பங்கள், நீர்நிலைகளில் அற்புதமான உருவங்களில் மீன்கள், பெரிய திராட்சைக் குலைகள், என எத்தனையோ செல்வங்கள் விளைந்திருந்தன. எனினும் இவை என்றுமே ருசிக்கப்படமாட்டாது என* உலகில் நடந்த பெரிய அணு உலை வெடிப்பொன்றை இங்கு விபரித்திருக்கின்றார். இதிலிருந்து நாம் அணு உலையின் தாக்கத்தை அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

**ஏனைய துறைகளில் கதிரியக்கம்**

விவசாயத் துறையை எடுத்துக் கொண்டால் தாவரங்கள் இயற்கையில் புதிய மாற்றங்கள் ஏற்பட நீண்ட காலம் எடுக்கும். ஆனால் கதிரியக்கத்தைப் பயன்படுத்தி 50,000 மடங்கு விரைவாகப் பெறலாம்.

தாவரங்களின் உணவூட்டம் பற்றி அறிந்து கொள்ளவும் உதவுகின்றது. எதிர்காலத்தில் நோயை உண்டாக்கும் பூச்சிகளின் ஆண் பூச்சிகளை கதிரியக்க கனிமரங்கள் மூலம், கவர்ந்து மலடாக்குவதன் மூலம் பூச்சி இனத்தையே அழிக்க முடியும்.

தாவரங்களில் பின்னடைவான இயல்புகளுக்கான பரம்பரை அலகுகளை கதிரியக்கம் மூலம் மாற்றி விட்டு புதிய ஆட்சியான இயல்புடைய தாவரங்களைப் பெறலாம். வைத்தியத் துறையை நோக்கும் போது புற்று நோய் ஏற்படும் இடங்களில் றேடியம் கதிரியக்க ஊசிகளைப் பதித்து விடும் போது அதில் இருந்து வெளியேறும் கதிர்கள் இழையங்களை அழித்து நோயை குணமாக்கும் இதேபோல் மூளையில் ஏற்படும் சிறுசிறு கட்டிகளை கதிரியக்க அயடீனை ($I^{181}$) செலுத்தி கரைத்துவிட முடியும்.

இவ்வாறு பல துறைகளில் கதிரியக்கத்தின் செயற்பாடு விரிந்து புகுந்து செல்கின்றது. நாம் அறியாத, கேள்விப்படாத எத்தனையோ எண்ணற்ற செயற்பாடுகளை இக்கதிரியக்கம் ஆற்றுகின்றது. உலகமும் அதன் உயிரினங்களும், தாவரங்களும் இன்று நிலைத்திருக்கின்றன என்றால் கதிரியக்கமே காரணமாகும். உலகில் முதலாவது கலம் தோன்றுவதற்கு இந்தக் கதிரியக்கமே காரணம் எனக் கூறப்படுகின்றது.

உசாத்துணை நூல்கள்: 'கதிரியக்கம்', 'அணுசக்தி' 'எக்ஸ் கதிர்கள்' 'சோவியத்நாடு'

| கணியம் | வாய்ப்பாடு | குறியீடு |
|---|---|---|
| பரப்பு | $A = L^2$ | $m^2$ |
| கனவளவு | $V = L^3$ | $m^3$ |
| நேர்கோட்டு வேகம் | $V = S/t$ | $ms^{-1}$ |
| நேர்கோட்டு ஆர்முடுகல் | $a = V/t$ | $ms^{-2}$ |
| அடர்த்தி | $d = m/V$ | $kgm^{-3}$ |
| நிறை | W | N |
| அமுக்கம் | $P = F/A$ | $Nm^{-2}$ |
| உந்தல் | $I = m(v-u)$ | $kgms^{-1}$ |
| வேலை | $W = F . S$ | J |


நல்வாழ்த்துக்கள்

உங்கள் வீட்டிற்குத் தேவையான பாவனைப் பொருட்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற விஜயம் செய்யுங்கள்

முருகேசு அன்ட் பிறதர்ஸ்

மத்திய வீதி,

மட்டக்களப்பு.


தவறுகளை ஒத்துக்கொள்ளும் தைரியமும் அவைகளை விரைவில் திருத்திக் கொள்வதற்கான பலமும் தான் வெற்றி பெறுவதற்கான சிறந்த அம்சம்.

லெனின்

# வாழ்க்கையில் தத்துவத்தின் பங்கு

செல்வி. ஐ. மீராளினி
ஆரம்பநெறி
விடுகையாண்டு

மனிதன் பல இன்னல்களைக் கொண்ட சமுதாயத்தில் வாழும் ஒரு பிராணி. ஆனால் சிந்திக்கும் ஆற்றல் படைத்தவன். இம்மனிதனோ தனது அன்றாட வாழ்க்கையில் பல பிரச்சனைகளை எதிர்நோக்கி, வாழ்கின்றான். சில பிரச்சனைகள் அவனால் தீர்க்கப்பட்டு விடுகின்றன. பல பிரச்சனைகளுக்கு அவனுக்கு ஆரம்ப விளக்கமே இல்லாமல் போய்விடுகின்றது. ஒரு மனிதன் பல தத்துவக் கோட்பாடுகளை அணுகி வாழ்கின்றான். எனினும் அதற்கான போதிய விளக்க அறிவு அவனிடம் இல்லையெனலாம். தத்துவம் என்றால் என்ன? அது எப்படிப்பட்டது? என்ற வினாக்களுக்கு அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் 'விதி' என்றும் 'கோட்பாடு' என்றும் விடை பகர்கின்றனர். இது எதுவாக இருப்பினும் மானிட வாழ்க்கையின் முழு நோக்கமும் தத்துவத்தை அடியொற்றி அமைந்து விடுகின்றது.

மனம் ஏன் மனிதனின் மூன்றாவது கண்ணாயிற்று? மரணம் ஏன் சம்பவிக்க வேண்டும்? அதில் கூட ஏன் இத்தனை வேறுபாடுகள்? பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருக்கும் அவசர வாழ்நாளில் மனிதப்பிறவியின் அர்த்தம் தெளிவாக்கப்பட்டு விடுகின்றதா? வாழ்வின் பின்னணியை மரணம் நிர்ணயித்து விடுகின்றதா? கடல்நீர் ஏன் உப்பாக இருக்க வேண்டும்? இனிப்பாய், புளிப்பாய்க் கூட இருக்கலாம் அல்லவா? இந்தப் பிரபஞ்சத்தின் தோற்றம் எப்போது? முடிவு எப்போது? நமது ஆத்மாவின் செயல்பாடு என்ன? நமது மூளையில் வானொலித் தொடர்பு முறை எப்படி இயங்குகின்றது? இறைவனுக்குப் பிறவியில்லையா? அப்படி என்றால் அப்பரம் பொருள் எப்படித் தோன்றியிருக்க முடியும்? ஆசை ஒன்றாகவும் அதை அனுபவிக்கும் தன்மை வேறாகவும் இருக்கக் காரணம் என்ன? இப்படி பல கேள்விகளைத் தொடராக எழுப்பக் கொண்டே போனால் அதற்குக் கிடைக்கப் போகும் விடைகள் வாழ்க்கையின் தத்துவங்களைப் புரியவைக்க ஏதுவாகிவிடும்.

மனிதன் தனது வாழ்வில் தன்னையறியாமலே தத்துவக் கோட்பாடுகளுக்கு உட்பட்டு வாழ முனைகின்றான். இது மத ரீதியாகவோ அல்லது கல்வி மற்றும் உளவியல் சார்ந்த தத்துவார்த்த அடிப்படையிலோ, விஞ்ஞானக் கோட்பாடுகளின் பின்னணியிலோ அல்லது புராணங்கள் இதிகாசங்கள் வேத விதிகள், வாழ்க்கை முறைகள் போன்றவற்றைச் சார்ந்தோ இருக்கலாம். தத்துவத்தின் நோக்கம் எத்தகையது என்பதை நாம் ஆரம்பத்திலேயே உணர்ந்து கொள்ள முற்பட வேண்டும். அது எதிர்பார்க்கப்படும் நோக்கத்திற்கு முற்றும் மாறாக காலம் தாழ்த்திக் கூட உண்மையை வெளிப்படுத்தும். இதை இங்கு ஒரு சிறு உதாரணத்தின் மூலம் விளக்கி விடலாம். ஒரு தாய் தனது குழந்தையைத் தொட்டிலிலே தூங்க விட்டு தனது கடமையில் ஈடுபடுகின்றாள். நேரமோ உச்சிப் பொழுது. குழந்தையின் அழுகுரல் அவளை இழுக்கின்றது. குழந்தைக்குப் பசி எடுத்து விட்டது என்பது அவளது குறிக்கோள். குழந்தைக்குப் பால் ஊட்டுகிறாள். பால் அருந்துவதை விடுத்து அழுகையைத் தொடர்கிறது குழந்தை. குழந்தையின் அழுகைக்குப் பசி காரணம் இல்லை என்பது தாய்க்குத் தெரிகிறது. குழந்தையின் அங்கியை உயர்த்தி அதன் முன்புறமும் பின்புறமும் புரட்டிப் புரட்டிப் பார்க்கிறாள். அதன் முதுகுப்புறத்தில் எறும்பு ஒன்று கடித்திருப்பதை அவளால் அவதானிக்க முடிகின்றது. இங்கு அவளது எதிர்பார்ப்பிற்கு மாறாக காரியம் செயல்பட்டிருக்கின்றது. இது அவளின் நோக்கத்திற்கு முற்றும் மாறுபட்டதாகும். தத்துவங்கள் கூட இவ்வாறே உண்மையை மறைத்து அவற்றை காலந் தாழ்த்தி வெளிக்காட்டும்.

சமய நெறிகள் கூட தத்துவத்தின்பாற்பட்டதே. அவை கற்பிக்கும் போதனைகள்

மறைமுகமாக தத்துவக் கருத்துக்களை வெளிக் கொணரும் தன்மையென ஒரு உயர்தர மாணவனுக்கு முருகனது வாழ்வு பற்றிப் போதிக்கின்றார் ஒரு ஆசிரியர். முருகனுடைய வரலாற்றை அவன் சிறுவனாக இருந்த போதே அறிந்து கொண்டான். வள்ளி, தெய்வானை என இருவரை முருகன் மணந்ததை அவன் அறிவான். இப்போது அவன் மனதில் புதிதாக சந்தேகம் துளிர் விடத் தொடங்குகிறது. ஒருவனுக்கு ஒருத்தி என்பதுதான் தமிழர் பண்பாடு. இக்கூற்றில் பண்பாடு தவறானதா? அன்றேல் முருக வரலாறு முரணானதா? இதைத் தான் தத்துவம் விளக்கி நிற்கின்றது. இங்கே இச்சா சக்தி, கிரியா சக்தி என இரு சக்திகளையும் பெண் வடிவில் முருகன் தன்னில் இணைத்தாரே அன்றி இரு பெண்களை மனைவியாக்கிக் கொண்டார் அல்லர். இது ஒரு பெரிய தத்துவ விளக்கமாகும். இவ்விளக்கமானது அம்மாணவனுக்கு முன்கூட்டியே உணர்த்தி வைக்கப் பட்டிருப்பின் சந்தேகத்திற்கு இடமேற்பட்டிருக்காது.

புராண இதிகாசங்களில் கூட தத்துவக் கருத்துக்களையே நாம் காண்கின்றோம். இராமகாதையிலே இராமன் மறைந்திருந்து அம்பை விட்டு வாலியைக் கொன்றது சரியான நெறிதானா? இந்த வினாவுக்கு தத்துவரீதியாகவே நமக்கு விடையளிக்கப்படுகின்றது. இங்கே வாலி மனிதச் செயலில் மாறுபட்டு மிருகக்குணம் கொண்டு நடந்தமையினால் விலங்காகக் கணிக்கப்படுகின்றான் அதர்மத்தை நிலைநிறுத்த வாலி முற்படுகின்றான். அதர்மத்தை ஒழித்து தர்மத்தை நிலைநாட்ட மானிட உருவெடுத்தவன் இராமன். விலங்கினை மறைந்திருந்து கொல்லுதல் வழக்கம். இங்கே இரண்டு வகையில் தத்துவமானது உண்மையை விளக்கி நிற்கின்றது.

அறிவியற் கோட்பாடுகள் அனைத்துமே தத்துவத்தின் பாற்பட்டவையாகும். ஆர்க்கிமிடீஸின் கோட்பாட்டினைக் கூட இதற்கு உதாரணமாகக் கொள்ள முடியும். திரவமொன்றில் ஒரு பொருளானது முழுதாகவோ அல்லது பகுதியாகவோ அமிழ்த்தப்படுகின்ற பொழுது அதனால் வெளியகற்றப்படும் அத்திரவத்தினுடைய கனவளவு அப்பொருளின் நிறைக்குச் சமமாகின்றது. இதன் காரணமாகவே உலோகத்தால் செய்யப்பட்ட கப்பல் கூட கடலிலே மிதக்கின்றது. தோணியிலிருந்து கொண்டு மீனைப் பிடிக்கின்ற மீனவனுக்குத் தோணி எப்படி மிதக்கின்றது என்பது தெரிந்திருப்பதில்லை. தோணி மிதக்கும் என்பதே அவனுக்கு விளங்கும். அதன் அடிப்படை உண்மையை அவன் உணர்வதில்லை. இதை த் தத்துவமே விளக்கி நிற்கின்றது. தத்துவமானது கல்வி உளவியல் ரீதியாகவும் வாழ்வில் பங்கேற்பதை பலவாறு விளக்கிக் காட்ட முடியும். நாய் ஒன்றிற்கு மணி அடித்து உணவு வழங்கும் செயல் பல நாட்களாகத் தொடர்கின்றது. தூரத்தே மணி ஒலிக்கும் சத்தம் நாயின் காதில் விழுகின்றது. இங்கு இடம் பெறும் புறத்தூண்டலானது நாய்க்கு அகத் தூண்டலாக்கப்படுகின்றது. நாயின் வாயில் உமிழ்நீர் சுரக்கத் தொடங்குகின்றது. மணியின் சத்தம் நாய்க்கு சாப்பாட்டு வேளையை உணர்த்தியமை தத்துவத்தின் பால் கொள்ளப்படுகின்றது. காரியம் ஒன்று செயலாக்கம் பெறும் போது அதற்கு ஏதுவாக காரணம் ஒன்று அமைவதும் கர்த்தா ஒன்று செயலூக்கம் பெறுவதும் இதன் அடிப்படைத் தத்துவமாகும்.

இன்றைய விஞ்ஞானயுகத்தின் ஆரம்பமானது தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றது. விஞ்ஞானத்தின் பிறப்பிடமே தத்துவம் என்று கூடச் சொல்லலாம். கோள்களின் தன்மை, அவை செல்லும் பாதை அதற்கான நேரம் போன்றவை வானிலை சாஸ்திரக் கணிப்புகளே. இவற்றைக் கணிக்க தத்துவங்களே உதவுகின்றன. விண்வெளி ஆய்வுகள் கூட கணித தத்துவங்களின் அடிப்படையிலே மேற்கொள்ளப்படுகின்றன. பருவகால மாற்றங்கள் அதன் பிரதிபலன்கள் அவற்றின் தாக்கங்களுக்கு ஈடு கொடுக்கும் நிலை போன்ற அனைத்துமே தத்துவங்களின் துணை கொண்டே செயலாக்கம் பெறும். மானிட வாழ்வில் பின்னிப் பிணைந்துள்ள சோதிடக்கலைகள் கூட தத்துவத்தின் உண்மையைவெளிப்படுத்துகின்றன. சாதககணிப்புகள்,கைரேகை கணிப்புகள்,எண் சோதிட முறைகள் எதுவானாலும் அவையனைத்தும் தத்துவத்தின் வெளிப்பாடே. அண்டவெளியில் சுழன்று கொண்டிருக்கும் கிரகங்களின் தாக்கமானது மண்ணில் படிவதால் அவை மனித வாழ்விலும் அகப்புறத்தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியவை. அறிவியல்

வளர்ச்சியுறாத காலத்து மனிதன் கூட இயற்கையோடு பிணைந்து தன் வாழ்வை அமைத்துக் கொண்டதும், தத்துவம் உணர்த்திய அனுபவத்தின் அடிப்படையிலேயே விஞ்ஞானமும் மதமும் வெவ்வேறு முனைகளை நாடிச் செல்வதாகக் கருதப்பட்டாலும், அடிப்படைத் தத்துவமானது ஒன்றாகவே தெரிகின்றது. ''ஒரு பொருளை ஆக்கவோ, அழிக்கவோ முடியாது'' எனும் இத்தத்துவமானது விஞ்ஞான மத கோட்பாடுகளின் பிணைப்பை வெளிக்காட்டுகின்றது அல்லவா?

ஆராய்ச்சியாளர்கள் மானிடப் பிறப்பின் பருவங்களை வயதிற்கும் உளப்பாங்கிற்கும் தக்கவாறு பிரித்துக் காட்டியுள்ளனர். பருவங்கள் பிரிக்கப்படினும் அவனது பிறப்பின் நோக்கத்தை ஆராய முடியாது. மனித வாழ்வின் நோக்கம் பலகோணங்களாக பிரிந்து சென்றாலும் இறப்பு ஒன்று நிர்ணயமாகி விடுகின்றது. தத்துவம் வெளிப்படுவதும் இங்கேயே. பிறந்த காலம் முதல் ஏதோ ஒரு வகையில் ஏற்படும் ஆசைகள் அவனது வளர்ச்சியைப் பொறுத்து பொருளாசை, உடலாசை மண்ணாசை, புகழாசை என விரிவடைந்து இறுதியில் போதும் இந்த வாழ்வு'' என அலுத்துக் கொள்கின்ற போது ''எதுவுமே நிலையாமை'' எனும் பெரியதோர் தத்துவம் இங்கே உணர்த்தப்படுகின்றது. ''எதிலுமே சமநோக்கு உள்ளவனே மரணமற்ற நிலையை எய்துகின்றான்'' என கண்ணன் கீதையிலே சொல்லுகின்றான் யமதர்மன் கூட நசிகேதனிடம் மரணம் பற்றிய தத்துவத்தை விளக்குகின்ற போது ''மனிதன் மனிதனாக இல்லாமல் சிலசமயம் மிருகமாகவும் சில சமயம் தெய்வமாகவும் வாழ முற்படுகின்றான். அவன் வாழ்வின் இன்ப துன்பங்களை சமமாககருதுகின்ற யோகநிலையை அடைய வேண்டும். இப்பேர்ப்பட்டவனின் உயிரைவிடுத்து வெறும் சக்கையையே நான் எடுத்துச் செல்கின்றேன்'' வாழ்வின் முழுமையையே இத்தத்துவம் உணர்த்தி நிற்கின்றது. இவ்வுலகத்தில் மனிதன் வாழுகின்ற போது தமிழ் மறையின் கூற்றுக்கு அமைவாக ''எதனை எதனால் எதனிடத்து என்று'' அதன் அடிப்படையில் பூரண அறிவு படைத்தவனாக வாழ்ந்து காட்டின், சங்காராச்சாரியார் போன்ற வேதாந்திகளின் கருத்துப்படி முடிவில் 'எதுவுமே இல்லாது' இருக்கும் தத்துவத்தை உணர்த்தும் ஞானத்தைப் பெறுவான். இதுவே எல்லாவற்றுக்கும் மேலான பரம தத்துவமாக வாழ்க்கையில் கொள்ளப்படுகின்றது. சுருங்கக் கூறின் வாழ்க்கையே தத்துவம் தத்துவமே வாழ்க்கை என்பதே அது.

---

வாழ்க்கை ஒரு சவால் -
சமாளியுங்கள்.

வாழ்க்கை ஒரு வெகுமதி -
ஏற்றுக்கொள்ளுங்கள்.

வாழ்க்கை ஒரு சோகம் -
தாங்கிக்கொள்ளுங்கள்.

வாழ்க்கை ஒரு போராட்டம் -
வென்று காட்டுங்கள்.

வாழ்க்கை ஒரு கடமை -
நிறைவேற்றுங்கள்.

வாழ்க்கை ஒரு விளையாட்டு -
ஈடுபடுங்கள்.

வாழ்க்கை ஒரு புதிர் -
விடுவியுங்கள்.

வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் -
நழுவ விடாதீர்கள்.

விளையாட்டு ரசிகர்களே! இது உங்களுக்கு

# விளையாட்டில் சாதனைகள்

## 100 மீற் ( ஆண்கள் )

| | | | | |
|---|---|---|---|---|
| உலக சாதனை | - 9 . 90 | லெறொய் புறல் | ஐ. அமெரிக்கா | 1991 |
| ஒலிம்பிக் சாதனை | - 9 . 92 | கார்ல் லூவிஸ் | ஐ. அமெரிக்கா | 1988 |
| ஆசிய சாதனை | - 10 . 30 | தலால் மன்சூர் | கட்டார் | 1986 |
| தெற்காசிய சாதனை | - 10 . 68 | ஆனந் நடராஜன் | இந்தியா | 1989 |
| இலங்கை சாதனை | - 10 . 01 | சிறியந்த திசாநாயக | கொழும்பு | 1990 |

## 100 மீற் ( பெண்கள் )

| | | | | |
|---|---|---|---|---|
| உலக சாதனை | - 10 . 49 | கிறிவ்த் ஜொய்னர் | ஐ. அமெரிக்கா | 1988 |
| ஒலிம்பிக் சாதனை | - 9 . 96 | கிறிஸ்டி | பிரித்தானியா | 1992 |
| ஆசிய சாதனை | - 11 . 53 | லிடியாடி வெகா | பிலிப்பைன்ஸ் | 1986 |
| தெற்காசிய சாதனை | - 11 . 59 | அஸ்வினி நஞ்சப்பா | இந்தியா | 1989 |
| இலங்கை சாதனை | - 12 . 01 | ஐ. எம். இரே | மேல்மாகாணம் | 1990 |

## 200 மீற் ( ஆண்கள் )

| | | | | |
|---|---|---|---|---|
| உலக சாதனை | - 19 . 72 | பீற்றோமெனி | இத்தாலி | 1979 |
| ஒலிம்பிக் சாதனை | - 19 . 75 | ஜோடிலோச் | ஐ. அமெரிக்கா | 1988 |
| ஆசிய சாதனை | - 20 . 71 | ஜங். ஜி கென் | தென் கொரியா | 1986 |
| தெற்காசிய சாதனை | - 21 . 01 | ராமி ரெட்டி | இந்தியா | 1985 |
| இலங்கை சாதனை | - 21 . 01 | சிறியந்த திசாநாயக்க | கொழும்பு | 1990 |

## 200 மீற் ( பெண்கள் )

| | | | | |
|---|---|---|---|---|
| உலக சாதனை | - 21 . 34 | கிறிவ் ஜொய்னர் | ஐ. அமெரிக்கா | 1988 |
| ஒலிம்பிக் சாதனை | - 21 . 34 | கிறிங் ஜொய்னர் | ஐ. அமெரிக்கா | 1988 |
| ஆசிய சாதனை | 23 . 42 | கிங்கன் | சீனா | 1990 |
| தெற்காசிய சாதனை | - 23 . 85 | அஸ்வினி நஞ்சப்பா | இந்தியா | 1989 |
| இலங்கை சாதனை | - 24 . 13 | ஜயமினிஇலேபெருமா | கொழும்பு | 1991 |

## 400 மீற் ( ஆண்கள் )

| | | | | |
|---|---|---|---|---|
| உலக சாதனை | - 43 . 29 | எச். ரெய்னோல்டஸ் | ஐ. அமெரிக்கா | 1988 |
| ஒலிம்பிக் சாதனை | - 43 . 50 | குவின்ஸி வாட்ஸ் | ஜப்பான் | 1992 |
| ஆசிய சாதனை | - 45 . 00 | சுசுமு-ராகனே | ஜப்பான் | 1986 |
| தெற்காசிய சாதனை | - 47 . 02 | மொகமட் சதகத் | பாகிஸ்தான் | 1989 |
| இலங்கை சாதனை | - 47 . 03 | ய. விமலதாசா | கொழும்பு | 1974 |

## 400 மீற் ( பெண்கள் )

| | | | | |
|---|---|---|---|---|
| உலக சாதனை | - 47 . 60 | மறிற்றா கோச் | ஜி. டி. ஆர் | 1985 |
| ஒலிம்பிக் சாதனை | - 48 . 65 | ஒலிக் பிறஸ்குயினா | ரஷ்யா | 1988 |
| ஆசிய சாதனை | - 52 . 13 | கிலியன் லீ | சீனா | 1990 |
| தெற்காசிய சாதனை | - 53 . 42 | பி. ரி. உஷா | இந்தியா | 1987 |
| இலங்கை சாதனை | - 53 . 70 | ஜே. எல்லேபெருமா | கொழும்பு | 1992 |

## நீளம் பாய்தல் (பெண்கள்)

| | | | | |
|---|---|---|---|---|
| உலக சாதனை | - 07 . 52 | கலினா கிறிறோகோவா | ரஷ்யா | 1986 |
| ஒலிம்பிக் சாதனை | - 07 . 40 | ஜாகி ஜொய்னர் | அமெரிக்கா | 1988 |
| ஆசிய சாதனை | - 06 . 41 | லியோ வென்வென் | சீனா | 1982 |
| தெற்காசிய சாதனை | - 05 . 89 | றீத் ஏபிரகாம் | இந்தியா | 1991 |
| இலங்கை சாதனை | - 05 . 22 | டெலிமா பத்றர்சன் | அம்பாரை | 1990 |

## தடை தாண்டி ஓட்டம் (400) மீற்) பெண்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| உலக சாதனை | - 52 . 94 | மறினா ஸ்ரெபனோவா | ரஷ்யா | 1986 |
| ஒலிம்பிக் சாதனை | - 53 . 17 | டெல்ரா பிலின்ரோங் | அவுஸ்ரேலியா | 1988 |
| ஆசிய சாதனை | - 56 . 05 | பி. ரி. உஷா | இந்தியா | 1986 |
| தெற்காசிய சாதனை | - 57 . 18 | பி. ரி. உஷா | இந்தியா | 1987 |
| இலங்கை சாதனை | - 64 . 02 | யமுனா J. யாபா | கொழும்பு | 1990 |

## குண்டு போடுதல் (ஆண்கள்)

| | | | | |
|---|---|---|---|---|
| உலக சாதனை | - 23 . 12 | ரண்டி பார்ன்ஸ் | அமெரிக்கா | 1990 |
| ஒலிம்பிக் சாதனை | - 22 . 47 | அல்ப் ரிமஏன் | ஜி. டி. ஆர். | 1988 |
| ஆசிய சாதனை | - 18 . 89 | சர்போசெங் | சீனா | 1990 |
| தெற்காசிய சாதனை | - 17 . 10 | அப்துர் சிங் | இந்தியா | 1987 |
| இலங்கை சாதனை | - 14 . 42 | H. R. A. சில்வா | கொழும்பு | 1977 |

## பரிதி விட்டம் வீசுதல் (பெண்கள்)

| | | | | |
|---|---|---|---|---|
| உலக சாதனை | - 76 . 80 | கப்றியின் றீன்ச் | ஜி.டி.ஆர். | 1988 |
| ஒலிம்பிக் சாதனை | - 72 . 30 | எம். கெல்மன் | ஜி.டி.ஆர். | 1988 |
| ஆசிய சாதனை | - 63 . 56 | சுமாய் கோவ் | சீனா | 1990 |
| தெற்காசிய சாதனை | - 46 . 78 | விஜய் மாலாபொனட் | இந்தியா | 1987 |
| இலங்கை சாதனை | - 40 . 86 | நீபிகாறொட்றிகோ | கொழும்பு | 1988 |

## 10000 மீற் (ஆண்கள்)

| | | | | |
|---|---|---|---|---|
| உலக சாதனை | - 27 : 00 . 23 | ஆர்ரோ பரிபோஸ் | மெக்ஸிக்கே | 1989 |
| ஒலிம்பிக் சாதனை | - 27 : 21 . 46 | பிராகிம் பொத்தேவ் | மொரக்கோ | 1988 |
| ஆசிய சாதனை | - 28 : 26 . 74 | மசனாடி சின்ராகா | ஜப்பான் | 1986 |
| தெற்காசிய சாதனை | - 30 : 35 . 28 | தாரா சிங் | இந்தியா | 1985 |
| இலங்கை சாதனை | - 20 : 14 . 02 | கே. ஏ. கருணாரத்ன | கொழும்பு | 1990 |

(அனைத்து விளையாட்டுக்களும் இடம் பெறவில்லை)

தொகுப்பு: சகா

## சாவ் SAF விளையாட்டுக்களில் இலங்கையின் நிலை

இது வரை நடைபெற்ற SAF போட்டிகளில் இலங்கை பெற்ற பதக்கங்கள்


| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1வது | 1984 | 7 | 11 | 19 | 37 |
| 2வது | 1985 | 2 | 7 | 9 | 18 |
| 3வது | 1987 | 4 | 7 | 23 | 34 |
| 4வது | 1989 | 6 | 10 | 21 | 37 |
| 5வது | 1991 | 44 | 33 | 41 | 118 |
| | | 63 | 68 | 113 | 244 |

### கடந்த டிசம்பர் கொழும்பில் நடந்தேறிய SAF போட்டிகளின் முடிவுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1ம் இடம் | - | இந்தியா | - 64 | தங்கப்பதக்கங்கள் |
| 2ம் இடம் | - | இலங்கை | - 44 | தங்கப்பதக்கங்கள் |
| 3ம் இடம் | - | பாகிஸ்தான் | - 28 | தங்கப்பதக்கங்கள் |

—★—


*WITH BEST COMPLIMENTS FROM*



**NADHIKA DESIGN CENTRE**

**(Jewellery Cuttings)**

150, Sea street,

3rd Floor

Colombo - 11

# விளையாட்டு மன்றம்
# SPORTS COUNCIL

அரசினர் ஆசிரியர் கலாசாலை, மட்டக்களப்பு.
Govt. Teachers' College, Batticaloa.

065 - 2368

காப்பாளர்:
திரு. வ. கனகசிங்கம்
(முதல்வர்)

ஆலோசகர்கள்:
திரு. தி. பொன்னம்பலம்
(துணை முதல்வர்)
திரு. சி. கிருஸ்ணபிள்ளை
(பிரதி முதல்வர்)
திரு. வே. லக்ஷ்மிசுந்தரம்
செல்வி. பி. ஐ. மத்தியுஸ்
(உடற்கல்வி விரிவுரையாளர்கள்)
திரு. வ. தெய்வேந்திரன்
(விரிவுரையாளர்)

தலைவர்:
திரு. என். வன்னியசிங்கம்

செயலாளர்:
திரு. எஸ். ரவிநாதன்

பொருளாளர்:
செல்வி. எஸ் சுகுணா

துணைத் தலைவர்:
திரு. ஆர். பாஸ்கர்

துணைச் செயலாளர்:
திரு. பி. என். சிவலிங்கம்

15 - 07 - 1992

## செயற்பாடுகள்:

எமது முதல்வர், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள் ஆகியோரின் பூரண ஒத்துழைப்பினால் கலாசாலையின், 1992ம் ஆண்டிற்கான வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் எமது மைதானத்தில் மிகச் சிறப்பான முறையில் நடத்தப்பட்டது. குழு நிலைப் போட்டிகள் கடந்த மே மாதத்திலும் மெய்வல்லுனர் போட்டிகள் ஜூன் 11ந் திகதியன்றும் நடைபெற்றன.

பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ஆர். மோனகுருசாமி அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக மட்டக்களப்பு கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. ஜே. முத்துராஜா அவர்களும், உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். மாணிக்கராஜா அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

**விளையாட்டுப் போட்டிகளின் பெறுபேறு:**
முதலாமிடம்:- கலைமகள் இல்லம்.
மலைமகள் இல்லம்.
மூன்றாமிடம்:- திருமகள் இல்லம்.

மேற்படி விளையாட்டுக்கள் அனைத்தும் சிறப்பாக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். மேலும், எதிர்வரும் செப்டம்பர் நடுப்பகுதியில் பேராதனையில் நடைபெறவிருக்கும் ஆசிரியர் கலாசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகளில் எமது கலாசாலை ஆசிரிய மாணவர் அடங்கிய விளையாட்டுக் குழுவும் பங்கு பற்ற இருப்பதையும் மிக்க மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

செ. ரவிநாதன்
செயலாளர்.

# விளையாட்டு மன்றம்



**முன்வரிசை** (இடமிருந்து வலம்)
திரு. வே. லக்ஷ்மிசுந்தரம் (விரி), திரு. தி. பொன்னம்பலம் (துணைமுதல்வர்), திரு. என். வன்னியசிங்கம் (தலைவர்), திரு. வ. கனகசிங்கம் (முதல்வர்), திரு. வ. தெய்வேந்திரன் (விரி), திரு. கு. காராளசிங்கம்(விரி).

**நிற்பவர்கள்** (இடமிருந்து வலம்)
திரு. பி. என். சிவலிங்கம், திரு. எஸ். ஜே. திருச்செல்வம், செல்வி. எஸ். சுகுணா (பொருளாளர்), திரு. ஆர். பாஸ்கர், திரு எஸ். ரவிநாதன் (செயலாளர்)

# வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிப் பெறுபேறுகள் - 1992

| | மலைமகள் இல்லம் | கலைமகள் இல்லம் | திருமகள் இல்லம் |
|---|---|---|---|
| தலைவர்: | திரு. ரி. நடராஜா | திரு. பயஸ் ஆனந்தராஜா | திரு.என். புட்பமூர்த்தி |
| செயலாளர்: | திரு.ரி சகாதேவராஜா | திரு.எம்.விஜயநாதன் | திரு.எஸ்.சண்முகநாயகம் |
| தலைவி: | செல்வி.எம்.றோகினி | செல்வி.கே.சித்திரா | செல்வி.ரி.சசிலதா |
| பொருளாளர்: | திரு.பி.நடராசன் | திரு.எம்.சசிகரன் | செல்வி.எஸ்.ருத்திரானந்தராணி |
| வி.தலைவர்: | திரு.எஸ்.சரவணமுத்து | திரு.எம்.லதாகரன் | திரு.எம்.பிரபாகர் |
| வி.தலைவி: | செல்வி.ஐ மீராளினி | செல்வி.ரி.நவகீதா | திருமதி.என்.அரசநாயகம் |

| நிகழ்ச்சி | வெற்றிபெற்றோர் | இல்லம் | நிகழ்ச்சி | வெற்றிபெற்றோர் | இல்லம் |
|---|---|---|---|---|---|
| 100 மீ. ஆண் | திரு. M. உதயகுமார்<br>திரு. V. பாலசுப்பிரமணியம்<br>திரு. M. ஜீவரெட்ணம் | க<br>தி<br>ம | 1500 மீ ஆண் | திரு. P. M. இலங்கோவேல்<br>திரு. S. சரவணமுத்து<br>திரு. T. கணேசன் | தி<br>ம<br>க |
| 100 மீ. பெண் | செல்வி. N. சௌந்தரவல்லி<br>செல்வி. T. சத்யா<br>செல்வி. K. ஜெகதீஸ்வரி | ம<br>ம<br>க | குண்டு போடுதல் ஆண் | திரு. T. சகாதேவராஜா<br>திரு. N. பிரபாகர்<br>திரு. K. தவராஜா | ம<br>தி<br>க |
| 200 மீ. ஆண் | திரு. N. வன்னியசிங்கம்<br>திரு. B. வரதராஜன்<br>திரு. N. பிரபாகர் | க<br>ம<br>தி | ஈட்டி எறிதல் ஆண் | திரு. K இராசசேகர்<br>திரு. M ஜீவரெட்ணம்<br>திரு. P. தேவரஞ்சன் | தி<br>ம<br>க |
| 200 மீ. பெண் | செல்வி. K நாகேஸ்வரி<br>செல்வி. T சத்யா<br>செல்வி. T. சசிகலா | தி<br>ம<br>க | பரிதி வீசுதல் ஆண் | திரு. R. பாஸ்கர்<br>திரு. N. புட்பமூர்த்தி<br>திரு. M. ஜீவரெட்ணம் | தி<br>தி<br>ம |
| 400 மீ ஆண் | திரு. N. வன்னியசிங்கம்<br>திரு. P. N சிவலிங்கம்<br>திரு. P. நல்லரெட்ணம் | க<br>க<br>ம | உயரம் பாய்தல் ஆண் | திரு. N. பிரபாகர்<br>திரு. M. உதயகுமார்<br>திரு. S. ரவிநாதன் | தி<br>க<br>தி |
| 400 மீ. பெண் | செல்வி. N. சௌந்தரவல்லி<br>செல்வி. K. புஸ்பராணி<br>செல்வி. K. ஜெகதீஸ்வரி | ம<br>க<br>க | நீளம் பாய்தல் ஆண் | திரு. P. N. சிவலிங்கம்<br>திரு. S. நவரெட்ணம்<br>திரு. S. மோகனதாசன் | க<br>ம<br>தி |
| 800 மீ. ஆண் | திரு. P. நல்லரெட்ணம்<br>திரு. S. சரவணமுத்து<br>திரு. K. நாகேந்திரன் | ம<br>ம<br>க | முப்பாச்சல் | திரு. R. பாஸ்கர்<br>திரு. S. ரவிநாதன்<br>திரு. S. J. திருச்செல்வம் | தி<br>தி<br>க |

| நிகழ்ச்சி | வெற்றிபெற்றோர் | இல்லம் | நிகழ்ச்சி | வெற்றிபெற்றோர் | இல்லம் |
|---|---|---|---|---|---|
| குண்டு போடுதல் பெண் | திருமதி. M. கோபாலசிங்கம்<br>செல்வி. G. தம்பிரெட்டினம்<br>செல்வி. T. சசிகலா | ம<br>க<br>க | ஈட்டி எறிதல் பெண் | செல்வி. N. சந்திரிகா<br>செல்வி. K. புஸ்பராணி<br>திருமதி. S. புவிராஜ் | க<br>க<br>தி |
| பரிதி வீசுதல் பெண் | திருமதி. M. கோபாலசிங்கம்<br>செல்வி. G. தம்பிரெட்ணம்<br>திருமதி. T. சபாரெட்னம் | ம<br>க<br>ம | உயரம் பாய்தல் பெண் | செல்வி. N. ரோகினி<br>செல்வி. S. சுகுணா<br>செல்வி. K. நாகேஸ்வரி | தி<br>ம<br>தி |
| நீளம் பாய்தல் பெண் | செல்வி. G. தம்பிரெட்ணம்<br>செல்வி. T. சசிகலா<br>செல்வி. T. சத்தியா | க<br>க<br>ம | 3000 மீ. ஆண் | திரு. P. M. இளங்கோவேல்<br>திரு. N. இராஜேஸ்வரன்<br>திரு. P. நவரெட்ணராஜா | தி<br>தி<br>க |

4 × 100 மீற்றர் அஞ்சல் - ஆண்
1. கலைமகள்
2. திருமகள்

4 × 100 மீற்றர் அஞ்சல் - பெண்
1. மலைமகள்
2. கலைமகள்
3. திருமகள்

4 × 200 மீற்றர் அஞ்சல் - ஆண்
1. கலைமகள்
2. மலைமகள்

4 × 200 மீற்றர் அஞ்சல் - பெண்
1. மலைமகள்
2. கலைமகள்
3. திருமகள்

## குழுநிகழ்ச்சிகள்

1. கிறிக்கட் - மலைமகள்
2. எல்லே (ஆண்) - மலைமகள்
3. உதைபந்து - திருமகள்
4. கரப்பந்து - திருமகள்
5. வலைப்பந்து - மலைமகள்
6. எல்லே (பெண்) - திருமகள்
7. எறிபந்து - திருமகள்

## 1992 இறுதிப் பெறுபேறு

முதலாமிடம் - (125 புள்ளிகள்) கலைமகள், மலைமகள்
மூன்றாமிடம் - (119 புள்ளிகள்) திருமகள்.

1991 - விளையாட்டு வீரர் - திரு. ஏ. சிவயோகன்
விளையாட்டு வீராங்கனைகள் செல்வி. என், இன்பவல்லி, ரி. சத்யா

1992 - விளையாட்டு வீரர் - திரு. என். வன்னியசிங்கம்
திரு. ஆர். பாஸ்கர்
திரு. எம். இளங்கோவேல்
விளையாட்டு வீராங்கனை - செல்வி. ஜீ. தம்பிரெட்ணம்

(அ. - ரி)

# உங்கள் குழந்தை எதிர்கால மேதையாக வளர

தமிழில் தருபவர்: செல்வி. வே. நளினி
ஆரம்பக்கல்வி
விடுகையாண்டு

சின்ன வயது முதலே உங்கள் குழந்தையை அறிவுள்ளதாக வளர்க்க முடியும். எவ்வளவுக்கெவ்வளவு சின்ன வயதில் தொடங்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது. உதாரணமாக, உங்கள் குழந்தைக்கு ஒரு வயதாகியிருக்கும் போதே, சிலேட்டுப் பல கையில் பளிச்சென்று பெரிய எழுத்தில் சிறுசிறு சொற்களை எழுதிக் காட்டுங்கள். திரும்பத் திரும்ப அவைகளைக் காட்டி உச்சரியுங்கள். கொஞ்ச காலம் கழித்து சற்றுப் பெரிய சொற்களையும் வாக்கியங்களையும் எழுதிக் காட்டுங்கள் குழந்தைக்கு நான்கு வயதாகும் போது பற்பல சொற்களைக் கற்றிருக்கும். பார்ப்பவர்கள் பிரமிப்பார்கள் படிப்பை ஒரு விளையாட்டுப் போலச் சொல்லித் தருவதுதான் காரணம்.

தினந்தோறும் ஒரு குறிப்பிட்ட நேரம் குழந்தையுடன் இருப்பது என்று பழக்கம் ஏற்படுத்திக் கொண்டு செய்தித் தாள்களில் இருந்து சிறிய, சிறிய செய்திகளைப் படித்துக் காட்டி அதனுடன் விவாதியுங்கள். இரவு டி.வியிலோ ரேடியோவிலோ வரும் செய்திகளைக் குழந்தையுடன் சேர்ந்து உட்கார்ந்து கேளுங்கள். பள்ளியில் தரப்படும் வேலைகளைக் குழந்தை செய்வதற்கு, கூடுமான வரையில் ஒரு தனி இடம் ஏற்படுத்திக் கொடுங்கள். அங்கே நல்ல வெளிச்சமும் அமைதியும் இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். படுக்கையில் படுத்தபடியோ டி.வி. பார்த்தபடியோ, ரேடியோ கேட்டபடியோ படிப்பதற்கு இடம் கொடுக்காதீர்கள். இரவுச் சாப்பாட்டின் போது குழந்தையின் வகுப்பைப் பற்றியும் பாடத்தைப் பற்றியும் பேச்சுக் கொடுங்கள்.

வீட்டில் ஓர் அகராதி வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு புதிய சொல்லை அவனாகவே அர்த்தம் கண்டு பிடித்துத் தெரிந்து கொள்கின்ற மாதிரி அவனுக்கே அகராதியைப் பார்ப்பது எப்படி என்று தெரிகிற மாதிரி செய்யுங்கள். சரியான பொருள் தெரியா விட்டாலோ, உச்சரிப்புத் தெரியா விட்டாலோ அகராதியைப் புரட்டி அவன் தெரிந்து கொள்ளட்டும். பிறகு அந்தச் சொல்லை அடிக்கடி உபயோகித்துக் குழந்தையுடன் பேசுங்கள். குழந்தையுடன் வெளியூருக்குப் போவதாக இருந்தால் அந்த ஊர் எங்கே இருக்கின்றது? அதற்குப் போகும் வழி என்ன? என்ற தகவல்களை படத்தைக் காட்டி அவனுடன் பேசுங்கள். அதே போல் கலைக்களஞ்சியம் புத்தகம் கிடைத்தால் ஏதாவது ஒரு தேசத்தைப் பற்றி விளக்குங்கள். டி.வி யிலும் ரேடியோவிலும் குழந்தைகள் பங்கேற்கக் கூடிய அறிவியல் நிகழ்ச்சிகள் நடக்கும் போது குழந்தை அதைப் போர் என்று தள்ளி விடல் கூடும், அப்படிச் செய்யாமல் ஆர்வத்துடன் கேட்பதற்குக் குழந்தையைப் பழக்கப்படுத்துங்கள்.



குழந்தையின் வயதுக்கும் படிக்கும் வகைக்கும் ஏற்றபடி எதுவரையில் படிக்க வேண்டும் என்று எல்லை வகுத்துக் கொடுங்கள். அதைப் படித்து முடித்ததும் அதிலுள்ள பெயர்கள், இடங்கள் தேதிகளைப் பற்றிக் கேள்வி கேட்டு அவனுடைய ஆர்வத்தை வளருங்கள். ஆனால் சக்திக்கு மீறியதாக வேலை கொடுக்க வேண்டாம். பெரியதாக ஒரு விஷயத்தைப் படிக்கக் கொடுப்பதைக் காட்டிலும், சின்னச் சின்னதாகப் பல விஷயங்களைப் படிக்கும்படி சொல்லுங்கள். பள்ளிக்கூடத்திலிருந்து ரிப்போர்ட் கார்டு வரும்போது குழந்தையுடன் விவாதியுங்கள். ஒன்றில் நல்ல புள்ளி பெறமுடிந்ததும், இன்னொன்றில் நல்ல புள்ளி பெறமுடியாமல் போனதும் ஏன்? என்று அன்புடன் விசாரியுங்கள். குழந்தை சொல்லும் பதிலை அலட்சியமாகத் தள்ளி விடாமல் சீரியஸாகக் காது கொடுத்துக் கேளுங்கள்.

குழந்தையை அவ்வப்போது பாராட்டிப் பேசுவது முக்கியம்தான் ஆனால் சொல்வதை மனப்பூர்வமாகச் சொல்லுங்கள். ரொம்பச் சிறிய, சுலபமான விஷயத்துக்கெல்லாம் பாராட்டுவது தவறு ஏனென்றால் பெரியதாகச் செய்தாலும் சின்னதாகச் செய்தாலும் பாராட்டுக் கிடைப்பது நிச்சயம் என்று தெரிந்ததும் குழந்தைக்கு உங்களிடம் மதிப்புக் குறைந்து விடும். தன்னைக் குஷிப்படுத்துவதற்காக நீங்கள் சும்மாதான் சொல்கிறீர்கள் என்று குழந்தைக்குத் தோன்றி விட்டால் பாராட்டின் நோக்கமே பாழாகி விடும்.

ஒரு புதிய விஷயத்தைக் குழந்தைக்குச் சொல்லித்தர வேண்டுமானால், அதற்குப் பழக்கமான, தெரிந்த வேறொன்றை உதாரணம் காட்டி விளக்குங்கள். உதாரணமாக சுத்த ரத்தத்தைக் கொண்டு வரும் ரத்தக் குழாய் பற்றியும் அசுத்தரத்தத்தை வெளியேற்றும் ரத்தக் குழாய் பற்றியும் குழந்தை புரிந்து கொள்ள வேண்டுமானால் வீட்டில் குடிநீர்க் குழாயையும் சாக்கடைக் குழாயையும் காட்டி விளக்குங்கள். பாடத்தில் உள்ள எல்லா விஷயத்தையும் கரைத்துக் குடிக்கும்படி குழந்தையை வற்புறுத்தாதீர்கள். எந்த விஷயமானாலும் அதில் மையமான, முக்கியமான அம்சம் என்று சில இருக்கும். அவைகளை மட்டும் மனதில் பதிய வைத்துக் கொள்ளும்படி பழக்கப்படுத்துங்கள். அந்தப் பகுதிகள் என்னென்னவோ அந்தப் பக்கத்தில் நட்சத்திரக்குறி போட்டுச் குழந்தைக்கு வழி காட்டுங்கள். ஆசிரியை கரும்பலகையில் ஒன்றை எழுதினால் அதை நோட்டில் குறித்துக் கொள்வது நல்லது என்று எடுத்துக் கூறுங்கள். புதிய சொற்கள் வரும்போது அதைச் சுழித்துக் காட்டி அதன் முக்கியத்துவத்தை குழந்தை உணரும்படி பண்ணுங்கள்.

குழந்தையாக இருக்கும் போதே அதனுடன் சேர்ந்து படியுங்கள் படித்துக் காட்டுங்கள். பத்திரிகைகளில் குழந்தைகளுக்கான கட்டுரையோ, படமோ வெளி வந்திருந்தால் குழந்தையுடன் சேர்ந்து அதைப் படியுங்கள்.

உங்கள் குழந்தையின் பிறந்த நாள் எது? அதே தேதிகளில் பிறந்துள்ள பெரியோர்களின் வாழ்க்கை பற்றிப் படித்து அறிந்து குழந்தைக்குச் சொல்லுங்கள்.

தெருவில் நடந்து செல்லும் போதும் பஸ் அல்லது ரயிலில் வெளியூர் போகும் போதும் ஆங்காங்கே காணப்படும் அறிவிப்புப் பலகைகளைச் சுட்டிக் காட்டி அதற்குப் பொருள் என்ன? என்று குழந்தைக்கு விளக்குங்கள். சாலை விதிகளைப் பற்றிச் சொல்லிக் கொடுங்கள்.

குழந்தையிடம் அடிக்கடி சொல் விளையாட்டு, விளையாடுங்கள். உச்சரிப்பதற்கு வேடிக்கையான பழமொழிகளையும் விடுகதைகளையும் சொல்லுங்கள். குழந்தையை அருகில் வைத்துக் கொண்டு குறுக்கெழுத்துப் போட்டி விடைகளைக் கண்டு பிடியுங்கள். குழந்தையின் பெயரில் உள்ள எழுத்துக்களைக் கொண்டு எவ்வளவு சொற்களை உண்டாக்கலாம் என்று கண்டு பிடிக்கச் சொல்லுங்கள்.

டெலிபோன் டைரக்டரி இருந்தால், அகரவரிசைப்படி பெயர்களையும் டெலிபோன் எண்களையும் எப்படித் தெரிந்து கொள்வது என்று காட்டுங்கள் அவனுடைய சிநேகிதர்களின் பெயர்களையும் அகரவரிசைப்படி குறித்துக் கொள்ளப் பழக்குங்கள்.

ஓர் இடத்துக்கு போய் வந்ததும் அதைப் பற்றி வர்ணித்துப் பேசும்படி குழந்தையைக்

கேளுங்கள். அங்கே ஒரே இருட்டாயிருந்தது ஒரு விளக்கு மட்டும்தான் எரிந்தது. யாருமே இல்லை என்பது போல விவரித்துப் பேசும் படி சொல்லுங்கள். மிருகக் காட்சிச் சாலைக்கோ, ரயில்வே ஸ்டேஷனுக்கோ போய் வந்தால் அந்த இடங்களைப் பற்றிக் குழந்தையுடன் பேசுங்கள். அதன் மூலம் உங்கள் குழந்தையின் விருப்பு வெறுப்பு என்ன என்பதை அறிந்து கொள்ள முடியும், 'சும்மா சும்மா என்னடா கேள்வி?என்று குழந்தையை அடக்காமல்,அது நிறையக் கேள்விகள் கேட்பதற்கு இடம் கொடுக்க வேண்டியது அவசியம். குழந்தைக்கு புரிகிற மாதிரி, முழுமையாகப் பதில் கொடுங்கள். உங்களுக்குப் பதில் தெரியவில்லை என்றால் புத்தகத்தைப் பார்த்துச் சொல்லுங்கள். அப்படிப் பார்க்கும் போது குழந்தையும் உங்களுடன் சேர்ந்து பார்க்கட்டும். புத்தகத்தைக் குழந்தையும் பார்க்கிற மாதிரி வைத்துக் கொண்டு இரைந்து படிப்பது ஒரு நல்ல பழக்கம் உங்கள் உச்சரிப்பையும் புத்தகத்திலுள்ள எழுத்தையும் பார்த்துப் பார்த்து குழந்தை மனதில் பதித்துக் கொள்ளும். குழந்தையின் வயதுக்கேற்ற கதைப் புத்தகத்தைத் தேர்ந்தெடுங்கள். குழந்தை பொறுமையாக உட்கார்ந்து கேட்கும் நேரம் பார்த்துக் கதையைச் சொல்லுங்கள். படுக்கப் போகும் நேரத்தில் கதை சொல்வது நல்லது. வெறும் பாப்பாக் கதையாக இல்லாமல் பெரியோர் வாழ்க்கை, சரித்திரம், கணிதம், சங்கீதம் இவை சம்பந்தப்பட்ட கதைகளையும் சொல்லலாம்.

கதை சொல்லும் போது நீங்கள் அபிநயம் பிடியுங்கள். கதையில் வரும் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் தகுந்தாற் போல் குரலை மாற்றிக் கொள்ளலாம் கை, காலை ஆட்டலாம். முகத்தில் பாவம் காட்டலாம்.

நடுநடுவே குழந்தை டி.வி பார்ப்பதால் கெடுதி இல்லை. எழுத்துக்களைப் புரிந்து கொள்ள அது உதவும், கண்முன்னே காட்சிகளாக ஒரு கதை நகர்வதால் குழந்தையின் கவனத் திறமை வளரும். கதையைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆவல் உண்டாகும்.

குழந்தை உங்களை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும். நாவலோ பத்திரிகையோ படிக்க நேரிடும் போது குழந்தை தூங்கட்டும். வெளியே போகட்டும் என்று நினைக்காதீர்கள், குழந்தையின் கண்முன்னே படியுங்கள். படிப்பது என்பது ஒரு சந்தோஷமான விஷயம் என்பதை உங்களைப் பார்த்துக் குழந்தை தெரிந்து கொள்ளட்டும். *(வாசித்து விட்டீர்களா? குழந்தையைக் குழந்தையாகவே வளர விடுங்கள். எதிர்காலத்தில் அது மேதையாகலாம்.)*

ஆதாரம்: How to make your child a genious

---

## உலகில் பெரியவை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கண்டம் | - | ஆசியா | மலை | - | இமயம்(உயரத்தில்) அந்தீஸ்(நீளத்தில்) |
| சமுத்திரம் | - | பசுபிக் (ஆழம்) அத்திலாந்திக்(நீளம்) | சிகரம் | - | எவரெஸ்ட் |
| குடாநாடு | - | அரேபியா | நகரம் | - | டோக்கியோ (சனத்தொகையில்) லண்டன்(பரப்பளவில்) |
| நாடு | - | சீனா(சனத்தொகையில்) ரஷ்யா(பரப்பளவில்) | கடல் | - | மத்தியதரை |
| ஆறு | - | அமேசன் | ஏரி | - | கஸ்பியன் |
| நதி | - | நைல் | நன்னீர் வாவி | - | சுப்பிரீயர் |
| நீர்வீழ்ச்சி | - | ஏஞ்சல் | தீவுத்தொகுதி | - | இந்தோனேசியா |
| தீவு | - | கிறீன்லாந்து | எரிமலை | - | குவலாத்திரி (உயரத்தில்) |
| பாலைவனம் | - | சஹாரா | | | |

# சதிர் முகன் போல வல்லோர்

கு. நளினகாந்தன்
ஆரம்பப் பிரிவு
விடுகையாண்டு

ஆண்டான நாற்பத்தாறில் அடித்தள மிட்ட கூடம்
பூண்டாக முளைந்து அன்று பொலிவுற்ற மரமாய் நின்று
ஆண்டுகள் நாற்பத்தாறு ஆகிய நிறைவினாலே
ஈண்டுநாம் பெருமை கொண்டு இறும்பூது எய்துகிறோம்.

பாலையாம் வனம்போல் அன்று பரந்திட்ட இடத்தின் மீதே
ஓலையால் கொட்டில் கட்டி உதயமா னதுவாம் கூடம்
நாடி நாம் பயிற்சிபெற்று நற்கலை பயிலுதற்கு
மாடியாய்க் கட்டிடங்கள் மாண்புடன் விளங்கு தின்று.

ஆரம்ப காலந்தன்னில் ஆண்களே பயிற்சி பெற்றார்
அதன் பின்னர் மகளிர் கடை அளவுடன் வந்து சேர்ந்தார்
தீரமிக்கவர்கள் ஒன்றாய் சேர்ந்து நல் பயிற்சிபெற்று
தேசமே உயரும் வண்ணம் சிறார்களைப் பயிற்றுகின்றார்.

நடுநிலை வகுப்புமட்டும் கற்கலை புகட்டவல்ல
கருவியாய் அமைந்ததாகும் கலாசாலைப் பயிற்சி அன்று
கணிதமோ டறிவுநூலும் கருதும் ஆரம்பக் கல்வி
புனிதமாய்க் கற்றுத்தேறும் பொற்புறு பயிற்சி கண்டோம்.

எதிர்காலத் தந்தைதாயர் இங்குஆ சிரியக் கல்வி
முதிர்வுறப் பெறுவதாலே முன்னிலைச் சேவையாற்ற
சதிர்முகன் போல வல்லதக்கவர் ஆதல் கண்டோம்
அதிசிறப் பெய்தும் எங்கள் அன்னைநா டென்பதுண்மை.

# ஆயகலைகள் அறுபத்துநான்கும் இதோ!

1. ஆடல்
2. பாடல்
3. இசைக்கருவிகள்
4. வீணா வாத்தியம்
5. ஓவியம் / சித்திரம்
6. கவிதை
7. நிகண்டு
8. யாப்பு
9. அலங்கார சாத்திரம்
10. நாடகம்
11. செய்யுளினடியைக் கொண்டு ஏனையவற்றைப் பூர்த்தி செய்தல்
12. செய்யுளை மனப் பாடம் செய்தல்
13. அரிய வேலையையுடைய புதிர் செய்தல்.
14. நாத்திருந்தப் போட்டி
15. புதிர்வகை
16. ஏமாற்றுங் கலை
17, பல் நாட்டு மொழி கற்றல்
18. கீழ் மக்களின் மொழி கற்றல்
19. புத்தகம் அழகாக, விளங்கப் படித்தல்
20. முன் பின் தெரியாத நூலாயினும் சேர்ந்து படித்தல்.
21. தொடங்கிய செய்யுளை முடிக்கும் திறமை
22. மனப்பாடம் பண்ணுதல்
23. மனையடி சாத்திரம்
24. தச்சு வேலை
25. மணிபூமிகா கர்மம்
26. தோட்டக் கலை
27. கோலம் போடல்
28. தின்பண்டஞ் செய்தல்
29. பான நீர் வகை தயாரித்தல்
30. தையல் / நெசவு
31. பிரம்பு பின்னல்
32. பூவேலை
33. மாலை கட்டுதல்
34. கொண்டை கட்டல்
35. உடை அலங்காரம்
36. காதணி
37. வாசனைப் பூச்சுகள்
38. நகைகள் அணிதல்
39. உடம்பு பிடிப்பது
40. உதட்டிற்கு சாயம் பூசுதல்
41 காதற் செய்தி அனுப்புதல்
42.–43. ஆண் - பெண் நீராடும் போது நீரிலெழுப்பும் ஒலி
44 - 47 படுக்கை தயாரிப்பது
48. உலோகத்துக்கு மதிப்பு போடுவது
49-50 இந்திர ஜாலம்
51. துணியால் மறைப்பது
52. இரசவாதம்
53. உலோகமிருக்கு மிடத்தை கண்டு பிடித்தல்
54. சகுன அறிவு
55. எந்திரம் செய்வது
56. மைனா,கிளியை பேசப் பழக்குதல்
57. சூதாட்டம்
58. சொக்கட்டான்
59. ஆடு, கோழி சண்டையிடச் செய்வது
60. பொம்மை விளையாட்டு
61. கயிற்று விளையாட்டு
62. நன்னடத்தைப் பயிற்கி
63.–64. குதிரை, யானை ஏற்றும் உபாயம்

நன்றி: கலைக்களஞ்சியம்

ஆ - ர்

## நவரசம்

| | | |
|---|---|---|
| காமம் | வெகுளி | மயக்கம் |
| நகை | மருட்கை | அச்சம் |
| பெருமிதம் | உவகை | இழிவரல் |

# கணித, விஞ்ஞான மன்றம்
# MATHS, SCIENCE ASSOCIATION

அரசினர் ஆசிரியர் கலாசாலை, மட்டக்களப்பு.

Govt. Teachers' College, Batticaloa.

065 - 2368



காப்பாளர்:
திரு. வ. கனகசிங்கம்
(முதல்வர்)

ஆலோசகர்கள்:
திரு. தி. பொன்னம்பலம்
(துணை முதல்வர்)
திரு. மு. தேவராசமுதலி
திரு. க. விநாயகமூர்த்தி
திரு. வ. தெய்வேந்திரன்
திரு. எம். பாஸ்கரன்
(விரிவுரையாளர்கள்)

தலைவர்:
திரு. பொ. நடராசன்

செயலாளர்:
திரு. எம். விஜயநாதன்

பொருளாளர்:
திரு. கே. ரோமபாதன்

துணைத் தலைவர்:
திரு. எம். ஜீவரெட்ணம்

துணைச் செயலாளர்:
திரு. எஸ். நவரெட்ணம்


*10 - 07 - 1992*

## செயற்பாடுகள்:

*1978ல் நிகழ்ந்த சூறாவளியினால் பாதிப் படைந்து உபயோகிக்க முடியாத நிலையில் இருந்த கலாசாலை விஞ்ஞான ஆய்வு அறையினைப் புனரமைக்க நடவடிக்கைகள் எடுத்தமை. கடந்த 05 - 06 - 1992ல் மட்/பிராந்திய விஞ்ஞான உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. எம். பவளகாந்தன் அவர்களினால் இது திறந்து வைக்கப்பட்டது.*

*எமது செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றிகள்.*

**எம். விஜயநாதன்**
*செயலாளர்.*

# காத்திருப்பேன் காலமெல்லாம்

செல்வி. ப. ராஜமாலினி
ஆரம்பக்கல்வி
விடுகையாண்டு

சலனமற்ற தெளிந்த நீரோடை போன்ற முகம்; அதில் எந்தவித உணர்ச்சிப் பிரவாகமு மில்லை, அப்படியானமுகத்தெளிவு கண்களிலே எப்போதும் எதையோ தேடுகின்ற ஞானஒளி, நிமிர்ந்த நேரான பார்வை. இகல்பிடி போன்ற நடை. எளிமையான உடை; யாருக்கும் எதற்கும் அஞ்சாத அதே வேளை கர்வம் கொள்ளாத சுபாவம், அவளைப் பார்க்கும் யாருக்கும் கிண்டல் செய்ய மனம் வரமாட்டாது; மாறாக மதிப்பையே ஏற்படுத்துமா றான ஒரு தோற்றம். இவ்வளவிற்கும் சொந்தக்காரி தான் நந்தினி.

நந்தினி வழமைபோல் பாடசாலை முடிவடைந்து பஸ்சுக்காக காத்திருக்கின்றாள். அவள் செல்லும் பஸ் வழமைக்கு மாறாக இன்று தாமதிக்கின்றது. என்ன காரணமோ தெரியவில்லை என்று மனதுக்குள் எண்ணியவள் கைக்கடிகாரத்தைப் பார்க்கின்றாள். நேரம் 2-30 என அது காட்டுகிறது. தொடர்ந்து அதையே பார்க்கின்றாள். அந்த சின்னமுள் பெரியமுள் நகரும் விதம் அவளுக்கு வியப்பைத் தர சிந்தனை எங்கேயோ சிறகடிக்கின்றது. அன்று அந்த இளையபாரதி இந்த கடிகாரத்தை வைத்தே பெரிய சொற்பொழிவையே நடாத்தினானே. கடிகாரத்தைப் பார்த்து, ''நந்தா இதைப் பார்த்து மனிதன் கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்கள் எவ்வளவோ உள்ளன. ஒன்று இந்த முட்களைப் பார். என்ன சுறுசுறுப்பு. ஒரு வினாடி கூட ஓய்வில்லாமல் தொடர்ந்தும் இயங்குகின்றது. அவ்வாறே மனிதனும் ஓய்ந்தது போல் உட்காராமல், சோம்பலில்லாமல் தொடர்ந்தும் தொழில் செய்வானானால் இந்த நாட்டில் பஞ்சமே ஏற்படாது. பொருளாதாரம் வளர்ச்சியடைந்து நாட்டில் பிச்சைக்காரர் என்ற ஒரு வர்க்கமே ஏற்படாது; எல்லோரும் இந்நாட்டு மன்னர் என் நிலை ஏற்பட்டு விடும். மற்றது இரண்டு முட்களும் ஒன்றையொன்று சந்தித்துப் பின்னர் பிரிகின்றன பார். அவற்றுக்கு அதனால் பிரிவுத்துயரோ கவலையோ இல்லை; ஆனால் மனிதன் பிரிவைக்கண்டு கலங்குகின்றான். இருவர் சந்தித்து உரையாடும் போது கருத்து மோதல் ஏற்பட்டாலும் மீண்டும் இன்முகத்துடன் சந்தித்து உறவாடுதல் வேண்டும். இதையே இருமுட்களும் சந்தித்து விலகுதல் மூலமும் காட்டுகின்றன. மேலும் ஒருவரது முன்னேற்றத்தில் மற்றவர் தடையாக இல்லாமல் விலகிவழி விட வேண்டும். இதையே ஒரு முள் வர மறுமுள் விலகி வழி விடுவது காட்டுகிறது உலகம் ஒரு நியதியின் அடிப்படையிலேயே இயங்குகின்றது இதையே முட்களின் வலஞ்சுழியான நகர்வு காட்டுகிறது. இவ்வாறு கூறிக்கொண்டே போகலாம் நந்தா' என்று அன்று ரகு கூறியது இன்றும் நெஞ்சுக்குள்ளேயே இனித்தது. இவ்வாறு அவள் தன்னை மறந்திருந்த வேளையில் அவள் வழமையாக போகும் பஸ் நடத்துனர் 'என்ன ரீச்சர் போகல்லையா' என்று அழைக்க சுய நினைவுக்கு வந்தவளாக 'இதோ' என்றுகூறியவாறு பஸ்சில் ஏறி தான் போகும் இடத்திற்கான ரிக்கட்டைப் பெற்றுக்கொண்டு வசதியான இருக்கையில் அமர்கின்றாள். அமர்ந்து கொண்டு சிறுபிள்ளை போன்று ஜன்னலினூடாக வேடிக்கை பார்க்கின்றாள். பஸ் ஓடுவ



தற்கேற்ப தெருவின் இரு மருங்கிலுமுள்ள மரங்கள் ஓடுவது போன்று தெரிகின்

றது. உண்மையில் மரங்கள் ஓடுவதில்லை. பஸ்தான் ஓடுகின்றது. இதைப் போன்றுதானே மனிதர்களும் காலம் மாறுகின்றது, காலம் கெட்டுப் போய் விட்டது என்று கூறுகின்றார்கள். ஆனால் அந்தக் காலத்தை மாற்றுவதிலும், கெட்டுப் போக வைப்பதிலும் தாங்களும் பங்கு கொள்கிறார்கள் என்பதை மறந்து விடுகின்றார்கள் என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் போது நந்தினிக்கு முன் ஆசனத்தில் இருந்த பாடசாலை மாணவிகளில் இருவர் முத்தமிழ்விழா பற்றி உரையாடுவது காதில் விழுகிறது.அப்பேச்சைக் கேட்க தனது செவியை கூர்மையாக்கிக் கொள்கின்றாள். ஒரு மாணவி மற்றையவளிடம் ஏண்டி கலா மூன்று நாட்கள் முத்தமிழ் மன்றம் நடாத்தப் போகின்றார்களாமேடி சரியான அலுப்பு என்கிறாள்.அதற்கு மற்றயவள் 'அப்பிடிக் கூறாத கலா. ரகுநாதன் சேர் சொற்பொழிவாற்றப்போறாராம்அதைக் கேட்டால் அலுப்பேவராது' 'ரகுநாதன் சேர் பெரிய வித்துவானா? 'வித்துவானோ விற்காதவானோ நீ கேட்டுப்பார் அப்பதான் தெரியும். ரகுநாதன் சேர் இந்தியாவுக்குச் சென்று வந்து ஆற்றுகின்ற முதற் சொற்பொழிவு இதுதான் என்கிறாள். அதைக் கேட்ட நந்தினி மின்சாரத்தால் தாக்குண்டவள் போலானாள். அவளுள் ஒரு இனம் புரியாத சிலிர்ப்பு. அப்போது நடத்துனர் "என்ன ரீச்சர் இடம் வந்திற்றுதே இறங்கல்லையா?" எனக் கேட்க அவசர அவசரமாக இறங்கி வீடு நோக்கி நடக்கின்றாள்.


வீட்டை வந்தடைந்ததும் அலுப்புத்தீர நீராடி விட்டு அடுத்த வாரத்துக்கான பாடக் குறிப்பை எழுதுவதற்கு ஆயத்தமாகின்றாள். ஆனால் அவளால் மனமொன்றி எழுதமுடியவில்லை. ஒரு பாடம் எழுதுவதற்குள்ளே ஒன்பது பிழைகள் விட்டுவிட்டாள். மனம் ஒரு நிலையிலில்லாது தவிர்த்தது. அவள் மீது அவளுக்கே கோபம் வந்தது. இத்தனை வருடங்கள் தான் கட்டிக்காத்து பெற்ற பயிற்சிகள் அனைத்தும் எங்கே போய்விட்டது என்று எண்ணியவளாக கட்டிலில் வந்து சாய்கின்றாள். மனம் ஐந்து வருடங்களுக்குப் பின் நோக்கி நகர்கின்றது. அன்று மாசி மாதம் ஐந்தாம் திகதி. அவள் கலாசாலையினுள் முதன் முதல் காலடி எடுத்த நாள். சிங்கத்தின் குகைக்குள் புகுவது போன்று பயத்தினால் கால்கள் பின்ன அன்னநடை பயின்றாள். அப்போது அந்த ஆறடிமனிதன் அவளுக்கு கொடுத்த அன்புத் தொல்லைகளால் மனம் நொந்தது. கண்ணில் கார்காலம்தான் அந்த மூன்று வாரங்களிலும் அவன் அவளை "நந்தா என் நிலா" என்று தான் அழைப்பான். பலவாறான பயிற்சிகளின் மூலம் அவள் சிறிது மன உறுதியையும், வெட்கத்தையும் நீக்கியிருந்தாள். மூன்று வாரங்களின் பின் அறிமுகவிழா நடந்தது. அந்த அறிமுகவிழாவில் அவள் தன்னையும், தன் திறமைகளையும் வெளிக்காட்டியபோது அனைவரும் அதிசயித்துப் போனார்கள். அவளுக்கு அந்த ஆறடி மனிதன் நேரடியாகவே பாராட்டு வழங்கினான். ஆனாலும் அவளால் அந்த பாராட்டை ஏற்க முடியவில்லை. காரணம் அவன் கொடுத்த அன்புத் தொல்லைகள் தான். அது மனதில் அவன் மீது வெறுப்பையே ஏற்படுத்தியிருந்தது. அவன் சகஜமாக பழக முற்படும் போதெல்லாம் அவள் ஒதுங்கியே போவாள். பின், காலத்தின் போக்கில் எவரும் நிரந்தர எதிரியுமில்லை நண்பனுமில்லை என்பதற்கேற்ப அவள் அவன் மீது கொண்டிருந்த வெறுப்பு சிறிது சிறிதாக விலகியது. அதற்கு முக்கியகாரணம் அவனுடைய இலக்கிய ஆற்றல் தான். நந்தினிக்கும் இலக்கியம் என்றால் உயிர். அது அவன் பால் ஈடுபாட்டை ஏற்படுத்தியது. இருவரும் சந்திக்கும் வேளைகளில் எல்லாம் இலக்கியம் பற்றி உரையாடுவார்கள். அவளுக்கு எழும் சந்தேகங்களை அவனிடம் கேட்டுத் தீர்த்துக் கொள்வாள். இருவரும் சில வேளைகளில் மணிக்கணக்காக உரையாடுவார்கள். அவன் அவளை ஒருமையில் அழைக்குமளவிற்கு அந்த நட்பு வலுப்பட்டது. அந்த நட்புக்கு அவள் வைத்த பெயர்'காதல்' அவனுடைய சொல்வன்மையை விரும்பியவள் பின் அவனையே விரும்புமளவிற்கு அது மாறியது. எனினும் அவள் தன்னுடைய உள்ளக்கிடக்கையை அவனுக்கு வெளிக்காட்டவில்லை. நேரம் வரும்போது வெளிக்காட்டலாம் என தன்னுள்ளேயே அதை மறைத்து வைத்தாள்.

அவனுடைய முற்போக்கான எண்ணத்துக்காகவும், நாவன்மைக்காகவும் அவள் அவனுக்கு வைத்த பெயர் இளையபாரதி. ஒரு முறை கலாசாலையில் பட்டிமன்றம் நடைபெற்றது. அந்தப் பட்டிமன்றத்தில் தமிழுக்கு சேவையாற்ற பிரமச்சாரிய நிலைதான் சிறந்தது என ரகுநாதன் தலைமையிலான குழுவும்

சம்சாரிய நிலையிலும் சேவையாற்றலாம் எனும் தலைப்பில் நந்தினிகுழுவும் மோதியது. அப்போது ரகுநாதனின் முறைவரும் போது அவன் தான் திருமணம் முடிப்பதில்லை என்றும் தமிழ் ஆராய்ச்சியில் இறங்கி இலக்கியம் பரப்ப உறுதி பூண்டுள்ளதாகவும் கூறினான். பின் அவள் அதுபற்றிக் கேட்டபோது மீண்டும் அக்கருத்தையே கூறினான். நந்தினியும் விடாமல் ''ரகு உங்களை ஒரு பெண் காதலிக்கின்றாள் என வைத்துக் கொள்வோம். அப்போது என்ன கூறுவீர்கள்'' எனக் கேட்ட போது அதற்கு அவன் ''நந்தா அவளுக்காக நான் பரிதாபப்படுவேன்'' என்று கூறினான். அதைக்கேட்டதும் அவள் மனம் வெடித்து சுக்கு நூறாகியது. பின் அவள் அவனுடன் உரையாடுவதையும், அவனைக் காண்பதையும் குறைத்துக் கொண்டாள். அவன் அவளைத் தேடி வந்த போதெல்லாம் ஏதாவது ஒரு சாட்டைக் கூறித் தவிர்த்துக் கொண்டாள் அதற்குக் காரணம் அவன் மீது ஏற்பட்ட கோபமல்ல. மாறாக அவள் மனமே அவளுக்கு தடையாக இருந்தது அவனைக் காணும் போதும் மீண்டும் அந்த நினைவுகள் அவளைத் தாக்கின. மனம் சஞ்சலப்பட்டது. இவ்வேளையில் காலமும் அவளுக்கு சாதகமாக அமைந்தது. அதாவது அவனுடைய பயிற்சிக் காலமும் முடிவடைந்து அவன் கலாசாலையை விட்டு வெளியேறினான். அதனால் அவனைக்காணும் சந்தர்ப்பங்கள் குறைவடைந்தன.

அவன் கலாசாலையை விட்டு வெளியேறினாலும் சில வேளைகளில் அவள் வீட்டிற்கு வருவான். அவ்வேளையில் அவள் இருந்தாலும் இல்லை எனக் கூறி அவனைக் காண்பதை தவிர்த்தாள் அதாவது அவள் ஊரில் இருந்தாலும் அவன் கண்ணில் படாது அஞ்ஞாதவாசம் செய்தாள். அதற்குக் காரணம் அவள் மனம் அவளுக்கு அடங்காமை தான். ஒரு அறிஞர் ''பெண்ணே உன் மனம் உனக்கடங்கினால் உலகம் உனக்கடங்கும்'' என்று கூறினார். ஒருநாள் நந்தினி இல்லாத போது ரகு வந்து தான் தமிழாராய்ச்சி செய்வதற்கு மதுரை செல்வதாகக் கூறிச் சென்றான். அவனுக்காக அவள் இறைவனிடம் பிரார்த்தித்தாள். ''ரகு நீங்கள் திரும்பி வரும் போது நிச்சயமாக நான் புதிய நந்தினியாக மாறியிருப்பேன், அப்போது உங்களை மன உறுதியுடன் சந்திப்பேன்'' என்று உறுதி பூண்டாள். காலச்சக்கரத்தின் சுழற்சியால் ஆரம்பிக்கப்பட்ட யோகாசன மனக்கட்டுப்பாடு பயிற்சியின் நிமித்தம் மணித்தியாலக் கணக்கில் மேற்கொள்ளக் கூடிய அளவிற்கு அவள் மாறியிருந்தாள். இந்த நிலையிலே ரகு வந்திருப்பதாக நந்தினி அறிந்தாள்.

நந்தினி இப்போது பழைய நந்தினியாக மாறியிருந்தாள். அதாவது இலக்கியத்தாகம் கொண்ட எந்த விதமான ஆசா பாசங்களுக்கும் கட்டுப்படாத யாருடனும் பழகுவதற்கு எந்த விதமான தயக்கமும் கொள்ளாதவளாக மாறியிருந்தாள். அதற்குக் காரணம் அவளுடைய மனம் அவளுக்கு கட்டுப்பட்டமையேயாகும். நந்தினியின் மனதில் புதிய உற்சாகம். ரகுநாதனைக் கண்டு தானும் அவனுடன் சேர்ந்து இலக்கியப் பணியில் ஈடுபட்டு தமிழுக்கு சேவையாற்றுவதற்கு அனுமதி வாங்க வேண்டும் என்றோ ஒரு நாள் ரகுநாதன் தன்னைத்தேடி வருவான் என்று அதற்காக அவள் காத்திருக்கிறாள்.



ஓடும் போது கோபம் வந்தால் மெல்ல நட.
நடக்கும் போது கோபம் வந்தால் உட்கார்ந்து விடு.
உட்கார்ந்திருக்கும் போது கோபம் வந்தால் படுத்து ஓய்வு கொள்.
உன் கோபம் வந்த சுவடு தெரியாமல் போய்விடும்.
எவனிடம் ஒழுக்கமில்லையோ அவனிடம் கல்வியே இல்லை.

நபிமொழி

# அணி சேரா இயக்கம்

- ✱ நாடுகளிடையே, நல்லெண்ணம், கூட்டுறவு என்பவைகளை வளர்த்தல்.
- ✱ சமூக, கலாசார, பொருளாதார உறவுகளைக் கலந்தாலோசித்தல்.
- ✱ நவ காலனித்துவ இனவாதம் பற்றி ஆராய்தல்.
- ✱ எந்தவொரு வல்லரசோடும் சேராது உலக சமாதானத்துக்கு வழி வகுத்தல்

என்பனவற்றை நோக்கமாகக் கொண்டு

- ● முன்னாள் யூகோஸ்லாவியத் தலைவர் - டிட்டோ
- ● முன்னாள் இந்தியப் பிரதமர் - நேரு
- ● முன்னாள் எகிப்திய அதிபர் - நாஸர்

ஆகியோரின் கூட்டு முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட ஓர் உலகளாவிய அமைப்பே

**அணி சேரா இயக்கம் ஆகும்.**

இவ்வாண்டு வரை இவ்வியக்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளின் தொகை - 108 ஆகும்.

மூன்று ஆண்டுகளுக்கொருமுறை அங்கத்துவ நாடொன்றில் அங்கத்துவ நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சிமகாநாடு நடைபெறுகிறது.

இந்த வகையில் இது வரை நடைபெற்ற உச்சி மகாநாடுகளின் விபரம்:

| | ஆண்டு | நாடு | நகர் |
|---|---|---|---|
| 1 வது உச்சி மகாநாடு | 1961 | யூகோஸ்லாவியா | பெல்கிரேட் |
| 2 வது உச்சி மகாநாடு | 1964 | எகிப்து | கெய்ரோ |
| 3 வது உச்சி மகாநாடு | 1970 | ஸாம்பியா | லுசாக்கா |
| 4 வது உச்சி மகாநாடு | 1973 | அல்ஜீரியா | அல்ஜியர்ஸ் |
| 5 வது உச்சி மகாநாடு | 1976 | இலங்கை | கொழும்பு |
| 6 வது உச்சி மகாநாடு | 1979 | கியூபா | ஹவானா |
| 7 வது உச்சி மகாநாடு | 1982 | இந்தியா | புதுடில்லி |
| 8 வது உச்சி மகாநாடு | 1986 | ஸிம்பாப்வே | ஹராரே |
| 9 வது உச்சி மகாநாடு | 1989 | யூகோஸ்லாவியா | பெல்கிரேட் |
| 10 வது உச்சி மகாநாடு | 1992 | இந்தோனேஷியா | ஜகார்த்தா |

# எழுவாய் உதயம்

த. ஸ்கந்தராஜா
ஆரம்பக்கல்வி
முதலாம் வருடம்

THE PUBLIC LIBRARY
31-10-1972
BATTI

குளிருந் தென்றல் அசைந்தசைந்து
குலவி மகிழ்ந்து தவழ்ந்திடவே
மிளிரும் உதயச் செவ்வண்ணம்
விரைந்து கிழக்கில் பெருகிடவே
ஒளிரும் சிறைமென் புள்ளினங்கள்
ஒன்றாய் இசைகள் பாடிடவே
தளிரும் இலையும் வளர் காவில்
தண்ணார் மலர்கள் கண்விழிக்கும்.

கன்னிக் கடலில் முத்தணிந்து
காலைப் பசும்புல் களிப்பெய்தும்
மின்னும் மணிகள் பல கோர்த்து
மென்காற் சிலந்தி வலைபின்னப்
பொன்னின் ஆடை என்றதனைப்
போற்றிச் செடிகள் புனைந்தொளிர
என் மெய்தீண்டி கலைக்கதிரோன்
'எழுவாய் உதயம்' என்றதுவே.

முடிவில் கடலின் கரையினிலே
முதிர்ந்த சங்கைக் கண்டெடுத்தேன்
நொடியில் அதனைச் செவிசேர்த்தேன்
நுட்ப ஒலிகள் பல கேட்டேன்
இடியின் ஒலியும் மழை ஒலியும்
இந்த உலகின் ஒலியாவும்
படியக் கலந்த ஒலியொன்று
பண்ணார் 'ஓம் ஓம்' என்றொலிக்க.

கேட்டேன் அந்தப் பேரொலியை
கேட்டு வந்தேன் அவ்வொலியில்
காட்டின் ஒலியும் கடலொலியும்
கானப் புள்ளின் பண்ணிசையும்
பாட்டின் இசையும் வாத்தியங்கள்
பாடும் இசையும் சங்கினுள்ளே
கூட்டி ஒன்றாய் வைத்தவரார்?
கூறவல்லார் கூறுவரே.

கூறும் தமிழ் கூறுலகமெல்லாம்
கொண்டு நூற்றாண்டாடிடுமின்
சோறும் நீரும் கொண்ட திருச்
சுவைக்கும் தமிழ் தேர் மட்டுநகர்
தோறும் புகழைப் பறைசாற்ற
தோற்றம் தந்தான் ஒருமுனிவன்
நாறுமெங்கள் கலைச்செல்வி
நற்றாய்த் தமிழ்த்தேன் வாழியவே.

## எமது வாழ்த்துக்கள்

ஆசிரியராக, அதிபராக, கல்வி அதிகாரியாக, பிரதம கல்வி அதிகாரியாக பெரும் பணியாற்றி திருகோணமலை, மட்டக்களப்பு கல்வி மாவட்டங்களில் பிராந்திய கல்விப் பணிப்பாளராகவும் அருஞ்சேவை புரிந்த, மட்டக்களப்பு விபுலாநந்தர் நூற்றாண்டு விழாத் தலைவர்,

**திரு. க. தியாகராஜா அவர்கள்**

கடந்த 15-08-92 முதல் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவியுயர்வு பெற்றுள்ளார்கள்.

எமது கலாசாலை வளர்ச்சியில் பல்வேறு விதங்களில் அக்கறையோடு செயலாற்றிய அன்னாருக்கு நல் வாழ்த்துக்கள் கூறுவதோடு அன்னாரின் சேவை தொடர்ந்தும் சிறந்தோங்க இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

# குறள் தந்த மருத்துவம்



செல்வி. த நவகிதா
விஞ்ஞானம்
விடுகையாண்டு

சங்கம் மருவிய காலத்திலே (கி. பி 300 - 600) தோன்றிய பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் திருக்குறளும் ஒன்று. இது தமிழ்மறை எனப் போற்றப்படும் சிறப்பு வாய்ந்த நூலாகும். இன்று திருக்குறள் கருத்துக்கள் உலகளாவிய நிலையில் அறியப்பட்டு வருகின்றன. சமண சமயக் கருத்துக்களை உள்ளடக்கி மக்களுக்குரிய வழிகாட்டி நூலாகத் திகழ்கின்றது. மனிதனின் அகவாழ்வுக்கும், புறவாழ்வுக்கும் இன்றியமையாத போதனைகளையே இந்நூல் புலப்படுத்தி நிற்கின்றது. இவ்வகையில் உளப்பிணி உடற்பிணி சார்ந்த விடயங்கள் இந்நூலிலே நேர்முகமாகவும், மறைமுகமாகவும் விளக்கப்பட்டுள்ளது.

சங்கம் மருவிய காலத்திலே அறம், சமயம் போதிக்க வந்த சமண, பௌத்த துறவிகள் கல்வி, மருத்துவம், உணவு, உடை, உறையுள் என்பவற்றையும் மக்களுக்கு வழங்கினர். மருத்துவக் கோட்பாடுகளும், மருத்துவ முறைகளும் அக்காலத்திலேயே தமிழர் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்ததைக் கண்ட மதத்துறவிகள் தாம் கூறவந்த சமயக் கருத்துக்களை மருத்துவப் பெயர்களின் துணைகொண்டே பிரச்சாரம் செய்தனர். வள்ளுவர் ஒரு மதத்துறவி. அவருக்கு வைத்தியமும் உகவந்த கலை என்பதும் உண்மை. அவர் உளப்பிணி மருத்துவராகவே புறத்தோற்றத்தில் காணப்படுகின்றார். 95ம் அதிகாரமாகிய மருந்து என்பதைக் கூர்ந்து நோக்கும் போது வள்ளுவர் மருத்துவ தத்துவங்களை நன்கு அறிந்தவர் என்பது வெளிப்படை. சங்கம் மருவிய காலத்திலே சீரழிந்த சமூகத்தைச் சீர்திருத்த முற்பட்ட சமூகப் பணி மருத்துவருள் வள்ளுவர் தலைசிறந்தவர். எனவே சமூகப்பணி, உடற்பிணி மருத்துவம் போன்றவை அடக்கப்பட்ட தலைசிறந்த நூல் திருக்குறள். தமிழிலக்கியங்களிலே மருத்துவம் பற்றிய எண்ணக்கருத்துக்களை விரிவாகக் காணக்கூடியதாகவுள்ளது 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதை மக்களுக்கு உணர்த்தும் பொருட்டு வள்ளுவர் மருந்து பற்றித் தனி அதிகாரம் படைத்து மருத்துவத்துக்குச் சமூகத்தில் சிறப்பான இடம் கொடுத்துள்ளார். வள்ளுவர் கூறும் மருந்தியல் அதிகாரத்தை (பொருட்பால் 95ம் அதிகாரம்) ஆழ்ந்து நோக்கும் போது அதில் கூறப்பட்டுள்ள அரிய கருத்துகளில் பல சித்த ஆயுர்வேத மருத்துவ முறைகள் அடிப்படைத் தத்துவங்களாக அமைந்திருப்பதைக் காணலாம்.

மனிதனுக்கு நோய் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணம் அவன் உடலிலுள்ள வாதம், பித்தம், கபம் என்று சொல்லப்படுகின்ற மூன்று தாதுக்களின் சமநிலைகுழப்பமே என்பது சித்த மருத்துவ நூல்களின் கருத்தாகும். உடலின் சுகநிலை இம்மூன்று காரணிகளிலுமே தங்கியுள்ளது எனவும், இம்மூன்று காரணிகளும் தமது இயல்பான தொழிற்பாட்டிலிருந்து கூடிக்குறைந்தாலும் நோய்வாய்ப்பட நேரிடும் எனசித்த மருத்துவ நூல்கள் கூறுகின்றன. இதே கருத்தையே வள்ளுவரும் மருந்து என்ற அதிகாரத்திலுள்ள முதலாவது குறளில் விளக்கியுள்ளார்.

"மிகினும் குறையினும் நோய் செய்யும்
நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று
(குறள் 941)

இங்கு 'வளிமுதலா' என்பது வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றும் என்று பொருள்படும். மேலும் நூலோர் எண்ணிய மூன்று என்று வள்ளுவர் கூறியிருக்கின்றார். நோய் ஏற்பட்டு அவஸ்த்தைப்படுவதைக் காட்டிலும் வருமுன் காப்பதே சிறந்தது என்பது வள்ளுவர் கருத்தாகும். இயற்கை மருந்துகளான ஒழுக்கம், உணவுக்கட்டுப்பாடு பற்றி அவர் அதிக கவனத்துடன் எடுத்துக் காட்டி

யிருக்கின்றார். இதுபற்றி 942 ,943, 944,ம் குறள்கள் அறிவுரைகள் கூறுகின்றன. அதிகளவு உணவுட் கொள்ளலாம். அல்லதுவேளை தவறி உணவு உட்கொள்ளலாலும் நோய்கள் ஏற்படுகின்றன என்பதை இந்திய மருத்துவ நூல்களும் எடுத்துக் கூறியுள்ளன. இக்கருத்தை வள்ளுவர் பின்வரும் குறள்களில் தெளிவு படுத்துகிறார்.

''இழிவறிந்து உண்பான் கண் இன்பம்
போல் நிற்கும்
கழிபேரிரையான் கண் நோய்''
(குறள் 946)

''மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு
அருந்தியது
அற்றது போற்றி உணின்''
(குறள் 942)

இவ்விதம் உணவுக்கட்டுப்பாட்டைச் சரிவரமேற்கொண்டால் ஒரு மனிதனுக்கு நோயே அணுகாது அவனுக்கு மருத்துவமும் தேவையாகாது என்று கூறும் வள்ளுவர் நீடித்த ஆயுள், மனச்சந்தோஷம் என்பனவும் உணவுக்கட்டுப்பாட்டின் மூலம் கிடைக்கும் என்கிறார். ஒருவருக்கு நோய்வரின் மருத்துவனை அணுக வேண்டியது அவசியமாகும். அவ்விதம் வரும் நோயாளிக்கு எவ்விதம் சிகிச்சையளிக்க முற்பட வேண்டும் என்பதை மருத்துவனுக்கு குறள் மூலம் போதிக்கின்றார் வள்ளுவர்.

''நோய்நாடி நோய்முதல்நாடி அது
தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்''

இந்திய மருத்துவங்களிலே நோயைக் கண்டறிவதற்கு மூன்று உபாயங்கள் கூறப்பட்டுள்ளன அவை:- தர்சநம், ஸ்பரிசநம், பிரச்நம் என்பனவாகும்.

தர்சநம்: நோயாளியின் தோற்றத்தைக் கண்ணால் பார்த்துப் பரீட்சித்தல்.

ஸ்பரிசநம்: நோயாளியைக் கையால் தொட்டுப் பரீட்சித்தல், நாடி பார்த்தல்.

பிரச்நம்: நோயாளியின் பிரச்சனைகளை வாயினால் கேட்டறிதல்.

இம்மூன்று உபாயங்களும் நோய் இன்னதென்றறிவதற்கு இன்றியமையாதன என்று மருத்துவ நூல்கள் கூறும். மேலும் 'நோய் முதல் நாடி' என்பதை வியாதியின் பூர்வரூபம் என்று ஆயுர்வேத நூல்கள் குறிப்பிடுகின்றன. இதனையே வள்ளுவர் நோய்நாடி... என்ற குறளில் குறித்துள்ளார். ஒரு நோயாளிக்கு மருந்து கொடுக்க முற்படும் போது அந்த நோயாளியின் வயது, நோயின் அளவு. காலம் ஆகிய மூன்றையும் கருத்திற்கொள்ள வேண்டும் என்று மருத்துவ நூல்கள் கூறுகின்றன. நோயின் அளவு என்று சொல்லும் போது அதன் வேகத்தைக் கருதலாம். நோய் தீவிரமாய் இருந்தால் மருந்தின் பிரமாணம் கூடியதாக இருக்கும். மருத்துவத்தில் நோயாளிக்கு மருந்துகளைக் கொடுக்கும் போது காலத்தையும் கவனிக்க வேண்டியுள்ளது. இங்கு காலம் என்னும் போது கார், இளவேனிற், கூதிர் போன்ற ஆறு காலங்களையும் குறிப்பிடுகிறது. பருவங்கள் மாறும் போது புறச்சூழ்நிலை காரணமாக மனித உடலிலும் தாக்கம் ஏற்படுகின்றது. இதனால் வாதம், பித்தம், கபம் என்ற முத்தாதுக்களின் செயற்பாட்டிலும் சிலமாற்றங்கள் ஏற்படுகின்றன. எனவே அவ்வாறான மாற்றங்களை அவதானித்து அவற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் தகுந்த மருந்துகளை உபயோகிக்க வேண்டும் என்று மருத்துவ நூல்கள் கூறுகின்றன. இதையே வள்ளுவரும் தனது குறளில் வலியுறுத்துகின்றார்.

'உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்' .. (குறள் 949

மருத்துவ முறையானது நான்கு வகைப்பாட்டைக் கொண்டது. என்கிறார் வள்ளுவர். சித்த வைத்தியத்தின் அடிப்படை அம்சங்களையே அவர் குறிப்பிடுகின்றார்.

'உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச்
செல்வான் என்று
அப்பால் நாற் கூற்றே மருந்து'
(குறள் 950)

அறத்தைப் போதிக்க முற்பட்ட வள்ளுவர் மக்கள் அறவாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமானால் பிணியற்ற வாழ்வு அவசியம் என்பதை நன்கு உணர்ந்தமையாலும் இந்திய மருத்துவ அடிப்படைத் தத்துவங்களால் கவரப்பட்டதனாலும் தமது குறளில் 'மருந்து' எனும் தனி அதிகாரத்தையே படைத்துள்ளார். 'மருந்து' என்ற அதிகாரத்தில் மட்டுமன்றி ஏனைய அதிகாரங்களிலும் ஆங்காங்கே வள்ளுவர் கூறியுள்ள பலகருத்

துக்கள் மருத்துவம் சம்பந்தமுடையனவாக உள்ளன. மதுப்பழக்கத்திற்கு ஆட்பட்ட ஒருவரை சமூகம் வெறுத்து ஒதுக்குகின்றது. அது மட்டுமன்றி நோய்வாய்ப்பட்டு இறக்கவும் செய்கின்றார். எனவேதான் சமய ஒழுக்க நூல்களும் மதுவை வெறுக்கின்றன. வள்ளுவரும் 'கள்ளுண்ணாமை' எனும் தனி அதிகாரத்தையே (93) அமைத்து மக்களுக்கு மதுப்பழக்கத்தினால் ஏற்படும் தீமைகளை விளக்கலானார். கள்ளுண்ணாமையின் முக்கியத்துவத்தை வள்ளுவர் கூறும்போது கள்ளுண்பவனைக் கண்டால் அவனைப் பெற்ற தாயின் முகம்கூட வேதனையால் வாடும் என்று அழுத்திக் காட்டுகின்றார்.

'ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக்களி'... (குறள்923)

கோபம் பொல்லாது என்று அறங்கள் போதிப்பது போன்றே சினம் காத்தல் அவசியமென்பதை நவீன மருத்துவ நூல்களும் வற்புறுத்துகின்றன. சினம் கொள்வதனால் உடல், உளநோய்கள் ஏற்படும் என்பதை வள்ளுவர் பின்வரும் குறள்கள் மூலம் எடுத்துக் காட்டுகிறார்.

'தன்னைத்தான் காக்கின் சினங் காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்'.........
(குறள் 305)

'இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை'.........
(குறள் 310)

'சுத்தம் சுகம் தரும் என்பது பழமொழி. சுத்தம், அகச்சுத்தம், புறச்சுத்தம் என இரு வகைப்படும். வள்ளுவர் அகச்சுத்தம் பற்றிக் கூறும் போது மனத்தூய்மையைக் குறிப்பிடுகின்றார். அதுவே அறமும் நல்வாழ்வும் நெறியுமென்றார்.

'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுலநீர பிற'..... (குறள் 34)

மக்கள் சுகமாக வாழ்வதற்குரிய போதனைகளைக் கூறும் வள்ளுவர் முதலில் அறநெறி, பொருள் நெறி புகட்டி, ஈற்றில் இன்பநெறி போதிக்கின்றார். வள்ளுவர் தம் நூலிலே இனியவை கூறல், அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, தீவினை அச்சம் வாய்மை, வெஃகாமை பெண்வழிச்சேறல் வரைவின் மகளிர் முதலிய அதிகாரங்களிலே கூறுகின்ற விடயங்களை உற்று அவதானிக்கும் போது அங்கு உடற்பிணி, உளப்பிணி சார்ந்த விடயங்களையே கூறியுள்ளார். எனவே 'மருந்து' என்ற தனி அதிகாரத்தில் மட்டுமன்றி ஏனைய அதிகாரங்களிலும் மருத்துவக் கருத்துக்களை வள்ளுவர் தம் குறட்பாக்களில் எடுத்துக் காட்டியிருப்பது நோக்கத்தக்கதாகும்.

---

உசாத் துணை நூல்கள்: இலக்கியத்தில் மருத்துவக் குறிப்புகள், (கலாநிதி. இ. பாலசுந்தரம்) திருக்குறள், (பரிமேலழகர் உரை)

## அறிந்து கொள்ளுங்கள்

- முதலையால் ஏறக்குறைய ஆறு மணி நேரம் மூச்சுத் திணறாமல் தண்ணீருக்கு அடியில் இருக்க முடியும்.
- வண்ணத்துப் பூச்சியைப் போல நின்று பறக்கும் சக்தி வேறு எந்தப் பூச்சிக்கும் இல்லை.
- அடை காப்பதற்கு வசதி இருந்தால்தான் கிளி முட்டையிடும். இல்லாவிடில் எத்தனை வருடமானாலும் அது முட்டையிடுவதில்லை

# சித்திரக் கலையைக் கற்பிப்பதில் ஆசிரியரின் பங்கு

எம். எஸ்- ஏ. அஸீஸ்
முன்னாள் விரிவுரையாளர்

அழகியற் கல்வியானது கல்வித்துறையில் முக்கியமானதொன்றாகக் கருதப்பட்ட பின் கல்விப் பகுதியானது இத்துறையில் பல்வேறு விதமான முயற்சிகளை எடுக்க ஆரம்பித்தது. இதன் பின்னரே அழகியற் கல்வியை ஒரு பாடமாக பாடசாலைகளில் கற்பிக்கப்படல் வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளது. அழகியற் கலையான சித்திரம் மாணவர் எவருமே பார்த்த மாத்திரத்தில் இலகுவாக விளங்கிக் கொள்ளும் ஒரு ஒலியற்ற விளக்க மாகும். மாணவர்கள் மனதில் உள்ள கற்ப னைகளை சித்திரம் மூலமாக எவ்வாறு வெளிக் கொணருவது என்பது பற்றி ஆய் வுகள் இதைப் புலப்படுத்துகின்றது.

இவ்வாறான ஆய்வை மேற்கொண்ட பிரேங், சிஸ்பர்ட், ஆகியோரின் கருத்துரை கள் முக்கியமானதாகும். இதனாலேயே இன்று சித்திரம் பாடசாலைகளில் ஒரு பாடமாக கற்பிக்கப்படுகின்றது. இதன்படி மாணவர்க ளது மனஎழுச்சிகளுக்கும் கற்பனைகளுக்கும் மதிப்புக் கொடுப்பதும் மாணவர் சுதந்திர மாக தான் நினைத்ததை வெளிக் கொணரச் செய்வதும் சித்திரம் கற்பிக்கும் ஆசிரியரின் பிரதான கடமையாகும். விசேடமாகக் கூறு மிடத்து ரசனையுடன் கூடிய இரக்கமான தன்மையையும் வீரம், கோபம், சந்தோசம் முதலியவற்றையும் பிரதிபலிக்கக் கூடியவாறு ஒளி, நிழல் காணக்கூடிய விதத்தில் அமை யக்கூடிய சித்திரங்களை தாமாகவே வரையக் கூடிய விதத்தில் மாணவர்களை ஆயத்தப் படுத்தலாகும்.

சித்திரக்கலை என்று கூறுமிடத்து கலை யாற்றலை வளர்க்கவும் கலை சம்பந்தமான தொழில்களுக்கு கைகொடுக்கக் கூடிய வித மாகவும், தன்னம்பிக்கையை ஏற்படுத்தவும், மனோபாவங்களை விருத்தி செய்யவும், ஆக்க பூர்வமான வல்லமைகளை வெளிக் கொணர்வதற்கும் ஒரே பிரதான வழியாக சித்திரம் அமைந்துள்ளது. எனவே இத்துறை களில் மாணவர்களை முன்னேறச் செய்வது ஆசிரியரின் பிரதான கடமையாகும்.

சித்திரப்பாடம் என்பது உருவங்களைப் பார்த்துக் கீறுவது அல்ல. இவ்வாறு செய்வ தால் பிள்ளையினது கற்பனைத் திறன்கள் மட்டுப்படுத்தப்படுகின்றது. படைப்பாற்ற லுக்கு முதலிடம் கொடுப்பதன் மூலம் மாண வருக்கு சிறந்த ஒரு சுற்றாடலை ஏற்படுத் திக் கொடுத்து கற்பனைத் திறனை வளரச் செய்வது ஆசிரியரின் கடமையாகும். சித்தி ரப் பாடத்தில் மாணவர் எவரது ஆலோச னையுமின்றி தாம் சுயமாகவே வரையவும் வர்ணம் தீட்டவும் கூடிய மனநிலையை அடையச் செய்தல் வேண்டும். எனவே மேற்படி செயற்பாடுகளைச் செயற்படுத்து வதன் மூலம் சித்திரக்கலை கற்பிப்பதில் ஆசிரியர் பெரும் பங்கு வகிக்கிறார்.

## மகிழ்வுறுகிறோம்.

எமது கலாசாலையில் துணை முதல்வராகவும், விரிவுரையாளராகவும் பல வருட காலம் சேவை புரிந்து தற்போது பாகிஸ்தான் நாட்டில் வசிக்கும்

ஜனாப் எம். எஸ். ஏ. அஸீஸ்
அவர்களுக்கு எமது பாராட்டுக்கள்.

# தினப் பதிவேட்டின் நீங்காத நினைவுகள்
# 1991 - 1992

5 - 2 - 91 — எமது 1991/92 ஆண்டு ஆசிரிய மாணவர் வருகை,
15 - 2 - 91 — கலாசாலை வளவில் சிரமதானம்.
20 - 2 - 91 — 1990 / 91 ஆசிரிய மாணவர்களால் புதிய 1991 / 92 ஆசிரிய மாணவர்களுக்கென நடத்திய அறிமுக விழா
11 - 6 - 91 — கலாசாலை வருடாந்த சஞ்சிகை 'கலைச்செல்வி' வெளியீடு.
17 - 6 - 91 — முதலாம், இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான மூன்று வாரகாலக் கற்பித்தற் பயிற்சி ஆரம்பம்.
17 7 - 91 — முன்னாள் துணை முதல்வர் திரு.எம். பரஞ்சோதி முன்னாள் விரிவுரையாளர்கள், திரு.வீ. இராசையா திரு.எம்.பாஸ்கரன் திருமதி எஸ். சுந்தரலிங்கம் ஆகியோருக்கான பிரிவுபசார வைபவம்.
18 - 7 - 91 — இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் நடைபெற்றது.
19 - 7 - 91 — விபுலாநந்தர் விழா நடந்தேறியது.
29 - 7 - 91 — அரையாண்டுப் பரீட்சை ஆரம்பம்.
24 - 9 - 91 — உதயம் சஞ்சிகைகள் வெளியீடு.
1 - 10 - 91 — குடி நீர்ப் பிரச்சினையால் கலாசாலை இருவாரங்களுக்கு மூடப்பட்டது.
16 - 10 - 91 — வாணி விழா நடைபெற்றது.
21 - 10 - 91 — முதலாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான இரு வார காலக் கற்பித்தற் பயிற்சி ஆரம்பம்.
14 - 11 - 91 — மனித மேம்பாட்டுக் கல்வி இரு நாள் கருத்தரங்கு ஆரம்பம்
20 - 11 - 91 — விடுகையாண்டு ஆசிரிய மாணவர்களுக்கு முதலாம் ஆண்டு ஆசிரிய மாணவர்கள் அளித்த பிரிவுசார வைபவம்.
27 - 11 - 91 — ஒளி விழா நடைபெற்றது.
29 - 11 - 91 — கல்லடி இ. கி. மிஷனுக்கு விஜயம்.

# 1992

2 - 1 - 92 — புதிய ஆண்டுக்கான கலாசாலை ஆரம்பம்.
15 - 1 - 92 — தைப்பொங்கல் விழா இடம் பெற்றது.
5 - 2 - 92 — 1992 / 93புதிய ஆசிரிய மாணவர்கள் பயிற்சிக்கென அனுமதி.
18 - 2 - 92 — கலாசாலை வளவில் சிரமதானம்.
20 - 2 - 92 — புதிய ஆசிரிய மாணவர்களுக்கான அறிமுக விழா
2 - 3 - 92 — சிவராத்திரி விழா பலகலை நிகழ்ச்சிகளுடன் நடந்தேறியது.
4 - 3 - 92 — விடுகையாண்டு ஆசிரிய மாணவர்களுக்கான இருவாரகால கற்பித்தற் பயிற்சி ஆரம்பம்.

26 - 3 - 92 — சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழா அடிகளாரின் சிலை திறப்பு வைபவத்துடன் ஆரம்பம்.

28 - 3 - 92 — மூன்று நாள் நூற்றாண்டு விழாவின் இறுதி நாள் பல கலை நிகழ்ச்சிகளுடன் நிறைவு.

29 - 3 - 92 — சிறுகதை எழுதுவது எப்படி கருத்தரங்கு.

12 - 5 - 92 — வருடாந்த இல்ல விளையாட்டு விழாவிற்கான குழு நிலை விளையாட்டுக்கள் ஆரம்பம்.

4 - 6 - 92 — சிறுவர்களுக்குக் கதைசொல்லுவது பற்றிய மாஸ்டர் சிவலிங்கம் அவர்களின் விளக்கம்.

5 - 6 - 92 — மறுசீரமைக்கப்பட்டு, திருத்தியமைக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வு அறை திறந்து வைக்கப்பட்டது.

11 - 6 - 92 - வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக இடம் பெற்றன.

20 - 6 - 92 — மாகாண தமிழ் மொழித் தினத் தெரிவுப் போட்டிகள் கலாசாலையில் இடம் பெற்றது.

23 - 6 - 92 — முதலாம், இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான இருவார காலக் கற்பித்தற் பயிற்சி ஆரம்பம்.

17 - 7 - 92 — மட்டக்களப்பு சைவக் கோயில்கள் பாகம் 2 வெளியீடு.

18 - 7 - 92 — கிறீஸ்தவ ஆசிரிய மாணவர்களுக்கான கிறீஸ்தவ ஆத்மீகக் கருத்தரங்கு நடைபெற்றது.

24 - 7 - 92 — இந்து சமய பாடக் கருத்தரங்கு நடைந்தேறியது.

24 - 7 - 92 — மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியினால் ஆசிரிய மாண வர்களுக்கு தைபோயிட் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

27 - 7 - 92 — அரையாண்டுப் பரீட்சை ஆரம்பம்.

கலாசாலைத் திகதி அட்டவணையின் படி நடைபெற வேண்டியவை.

16 - 9 - 92 }
18 - 9 - 92 } பேராதனையில் நடைபெறும் ஆசிரியர் கலாசாலைகளுக் கிடையிலான விளையாட்டுப் போட்டியில் நமது கலாசாலை விளையாட்டுக் குழு பங்கு பற்றுகிறது-இதனோடு இணைந்த தான கல்விச் சுற்றுலாவும் இடம் பெற விருக்கிறது.

30 - 9 - 92 — சிறுவர் நுண்கலை சம்பந்தமான பயிற்சிநெறி கிழக்குப் பல்கலைக் கழக நுண்கலைதுறைத் தலைவர் கலாநிதி எஸ். மௌனகுரு அவர்களால் நடாத்தப்படும்.

2 - 10 - 92 — வாணி விழா.

9 - 10 - 92 — கலாசாலை வருடாந்த சஞ்சிகை ‘கலைச்செல்வி’ வெளியீடு.

16 - 10 - 92 — மாவட்ட சாரண ஆணையாளரின் அனுசரணையுடனான சாரணர் பாசறை

04 - 11 - 92 — ஒளி விழா.

18 - 11 - 92 — விடுகை வருட ஆசிரிய மாணவர்களுக்கான பிரிவுபசார வைபவம்.

7 - 12 - 92 — இறுதியாண்டு ஆசிரிய மணவர்களுக்கான இறுதிப் பரீட்சை ஆரம்பம்.

# சுவாமி விவேகானந்தர்

செல்வி. மு. இந்திராணி
ஆரம்பக்கல்வி
விடுகையாண்டு

மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் நிறைந்த கல்கத்தா நகரிலே விஸ்வநாத தத்தர் எனும் பண்பிற் சிறந்த பெரியாருக்கும் கற்பரசியாக திகழ்ந்த புவனேஸ்வரிக்கும் விவேகானந்தர் 1863ம் ஆண்டு ஜனவரி மாதம் 12ம் திகதி அவதரித்தார். இவர் லௌதீக வாழ்க்கை வாழ்ந்து பின் துறவறம் பூண்ட அவரது பாட்டனாரின் சாயலை ஒத்திருந்தார். அவர் பிறந்த நாளுக்கும் நட்சத்திரத்திற்குமேற்ப அவருக்கு நரேந்திரநாதன் என்ற நாமம் சூட்டினார்கள்.

சுவாமி விவேகானந்தர் மூன்று வயதினராய் இருக்கும்போதே அவர் செய்த சேட்டைகளுக்கு அளவேயில்லை. அவர் மூர்க்கத்தனமாய் நடந்தபோதெல்லாம் அவரது தாயார் அவரை நீர்க்குழாயின் அடியில் இருக்க வைத்து நீரைத் தலையில் கொட்டிவிடுவார். எவ்வாறு செய்தாலும் அவரின் துடுக்குத்தனத்தை அடக்க முடியவில்லை. இதைத் தாங்கமுடியாத அவரது தாயார் பிள்ளை வரம் வேண்டி சிவபிரானிடம் தவம் இருந்த எனக்கு இறைவன் தன் பூதகணங்களில் ஒன்றை அனுப்பி இருக்கிறார் என்று தன் மனச் சலிப்பை வெளியிடுவார்.

இவ்வாறு துடுக்குத்தனம் நிறைந்த விவேகானந்தர் தன் தாயிடம் மிகுந்த அன்பு கொண்டவராகவும் கடவுள் பக்தி கொண்டவராகவும் காணப்பட்டார். இதுவே அவர் பின்பு அடைந்த மேன்மைக்குக் காரணமாக அமைந்தது. சீதா ராமனின் கதையைக்கேட்ட இவர் அவர்களின் விக்கிரகம் ஒன்றை விலைக்கு வாங்கி தன் பூஜை அறையில் வைத்து வணங்கினார். காலம் உருண்டோடியது. சுவாமி விவேகானந்தர் திருமண வயதை அடைந்தார். அவர் வீட்டில் திருமணப் பேச்சுக்கள் நடந்தன. இதைக் கேள்வியுற்றதும் மனக்கலக்கமடைந்த சுவாமி அவர்கள் சீதையும் இராமனும் திருமணம் செய்தபின் அவர்களுக்கு ஏற்பட்ட கஸ்டங்களை நினைத்துப் பார்த்தார். உடனே தன் தாயிடம் சென்று அழுத வண்ணம் தன் மனநிலையை எடுத்துக் கூறினார்.

மகனின் அழுகையைச் சகிக்க முடியாத தாயார், 'நீ ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். நமது குல தெய்வமாகிய காசி விஸ்வநாதர் இருக்க நீ விசனப்படுவானேன்?' என்று அவருக்கு ஆறுதல் கூறினார். சந்தோசமடைந்த சுவாமி அவர்கள் விஸ்வநாதரது சிலை ஒன்றைக் கடையில் வாங்கி வைத்து நாள் தோறும் வணங்கினார். இவ்வாறு பாலப்பருவம் கடந்து உயர் பள்ளிக்கு அனுப்பப்பட்ட போது பாடசாலையில் அவர் சுறுசுறுப்புள்ளவராகவே காணப்பட்டார் ஆங்கிலக் கல்வியை அந்நியக் கல்வியாக நினைத்து முற்றாகவே ஆங்கிலத்தை கற்க மறுத்து விட்டார். ஆனாலும் பின்பு ஆங்கிலக் கல்வியைக் கற்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து ஆங்கிலக் கல்வியைக் கற்றறிந்தார். இவ்வாறு படித்துக் கொண்டிருக்கும் போது அவர் தன் குடும்பத்துடன் வெளியூர் செல்ல வேண்டியிருந்தது. இதனால் அவர் கல்வியில் சிறிது காலம் தடை ஏற்பட்டது. பின்பு பள்ளியில் சேர்ந்து மூன்று ஆண்டுகளில் கற்க வேண்டியவற்றை ஒரே ஆண்டில் கற்று அதிகூடிய புள்ளிகளைப் பெற்று அவ்வாண்டில் அப்பாடசாலைக்குத் தனிப் பெருமையைத் தேடிக் கொடுத்தார்.

இவ்வாறு அவா கல்வி கற்று வரும் போது அவருக்கு ஆன்மீகத்துறையில் மனம் நாட்டம் ஏற்பட்டது. இதனால் அவர் பலரிடம் ஆன்மீகம் சம்பந்தமான பல கேள்விகளை ஆவலுடன் கேட்டார். அதற்கு அவர்கள் அளித்த பதில் சுவாமி விவேகானந்தருக்கு திருப்தி இல்லாமல் போகவே அவர் தம் ஆசிரியரான வில்லியம் ஹேஸ்டி என்பவரைக் கண்டு தன் பிரச்சினைகளை எடுத்துக் கூறினார்.

இவரின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த பேராசிரியர் சுவாமி அவர்கட்கு இராம

கிருஸ்ண பரமஹம்ஸரை சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார். அதன்படி விவேகானந்தர் அவர்கள் இராமகிருஸ்ண பரமஹம்சரைச் சந்தித்து ஆன்மீகம் பற்றி உரையாடும் போது முதலில் கேட்ட கேள்வி ஐயன்மீர் தாங்கள் கடவுளைக் கண்டிருக்கிறீர்களா?'' என்பதே. அவ்வினாவிற்கு இராமகிருஸ்ணர் அவர்கள், ''ஆம் கண்டிருக்கின்றேன், இங்கே உன்னை காண்பதை விடத் தெளிவாகவே கண்டிக்கின்றேன்'' என்று கூறினார். இப்பதிலைக் கேட்ட விவேகானந்தர் தன் நெடுநாளைய ஆசை இன்று தான் நிறைவேறியுள்ளது என நினைத்து பூரிப்படைந்தார். அன்றிலிருந்து அவர் தம்மைப் படிப்படிப்படியாக தம் குருதேவரிடம் ஒப்படைத்தார்.

இவ்வாறு காலம் கடந்து கொண்டிருந்த போது இராம கிருஸ்ணர் அவர்கள் நோயினால் பாதிக்கப்பட்டார். இதனால் அவர் காசிப்பூர் என்னும் இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். இது சுவாமி விவேகானந்தர் அவர்கட்குக் கீழ் மற்றைய சீடர்களைக் கொண்டு வர இராம கிருஸ்ணருக்கு நல்லதொரு சந்தர்ப்பமாயிற்று இவ் வேளையில் சுவாமி விவேகானந்தர் அவர்கள் தனக்கு சமாதியடைய உதவ வேண்டும் என்று கேட்ட போது அவரின் குருதேவரான இராம கிருஸ்ணர் அவர்கள் அவரைக் கண்டித்து உலகுக்கு உதவுமாறு சட்டளையிட்டார். அதே வேளையில் தான் மகாசமாதி அடைவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு அனுபவ ரீதியாக இவருக்கு நிர்விகற்ப சமாதியை அளித்தார். தான் மகா சமாதி அடைவதற்கு மூன்று நாட்களுக்கு முன் தான் பெற்றிருந்த சக்தி முழுவதையும் விவேகானந்தரிடம் ஒப்படைத்து? ''நான் உன்னிடம் செலுத்தியுள்ள சக்தியின் வலிமையால் நீ மகத்தான காரியங்களைச் சாதிக்கலாம். அதன் பின்னர் நீ எங்கிருந்து வந்தாயோ அங்கு திரும்பிச் சென்று விடுவாய்'' என்று கூறினார்.

தம் குருதேவரின் சொற்படி நடந்து வந்த விவேகானந்தர் அவர்கள், ஒரு நாள் தம் சீடர்களை ஒரு வீட்டில் வைத்து கடினமான விவாதத்தையும் ஆன்மீகப் பயிற்சியையும் மேற்கொண்டார். இருந்தும் எல்லாச் சீடர்கள் மத்தியிலும் சந்நியாச விரதம் மேற்கொள்ள வேண்டும் என்ற அவா மேலோங்கி இருந்தது. இவ் ஆவல் அவர்களுக்குக் கட்டுக் கடங்காது போகவே, ஒரு நாள் சீடர்கள் அனைவரும் அக்கினியை மூட்டி அதைச் சுற்றி அமர்ந்திருந்தனர். இதைக் கண்ட விவேகானந்தர் அவர்கள் மக்கள் துயர் துடைத்த யேசுநாதர் சிலுவையில் அறையுண்ட கதையை ஆவேசமாக எடுத்துக் கூறினார். இதன் மூலம் விவேகனந்தர் அவர்கள் இராமக் கிருஸ்ணரின் இரண்டு உபதேசங்களை நிலை நாட்டினார். இப்பேச்சு முடிந்ததும் வித்தியாசமான ஒரு தெய்வீக அமைதி நிலவியது இதன் பின் சீடர்கள் அக்கினி முன் தங்களைத் துறவியாக்கி அந்தக் காவியுடையையும் ஏற்றனர். இவர்கள் துறவு மேற்கொள்ள முக்கிய தூண்டு கோலாக இருந்த விவேகானந்தர் தனக்கென்று எந்தவொரு சந்நியாச நாமத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை. யாருமே அறியாமல் தான் வாழ வேண்டும் என்று அவர் விரும்பினார். ஆனால் சிறியவராக வேண்டும் என்ற போதே ஒருவர் பெரியவர் ஆகின்றார். என்ற வசனத்திற்கேற்ப விவேகானந்தரும் பெரியவர் ஆனார்.

இவர் 1893ம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள சிக்காக்கோவிற்குச் சென்றிருந்தார். அங்கு அனைத்துலகச் சமயப் பெருமன்றக் கூட்டம் ஒன்றில் இவர் உரையாற்றும் போது தன் மனதிற்குள் கலை வாணியைப் பணிவுடன் வணங்கியபின் சபையினரை நோக்கி 'அமெரிக்க நாட்டு சகோதரிகளே சகோதரர்களே' என விழித்து சொற்பொழிவைத் தொடங்கினார். அவரது வாயில் இருந்து வந்த சொற்கள் அமெரிக்க மக்கள் பலரை அவரின் சீடர்களாக மாற்றின.

அதன் பின்பு சுவாமி அவர்கள் இரண்டு முறை இங்கிலாந்திற்குச் சென்றார். அங்கு அவர் ஆற்றிய சொற்பொழிவின் தொகுப்புத்தான் ஞானயோகம் என வழங்கப்படுவதாகும். இங்கிலாந்திலும் பலர் இவரின் சீடர்களாயினர். அவரின் அரும் பெரும் முயற்சியினால் இந்தியாவில் உள்ள வேலூர் என்னும் இடத்தில் நிலம் வாங்கப்பட்டு அதில் ஒரு மடம் நிறுவப்பட்டது. அப்புதிய மடத்தில் பல துறவியர்கள் வந்து குடியேறினர். இவ்வாறு இருந்து வரும் நாளில் சுவாமி விவேகாநந்தரின் உடல் நலம் குன்றி வந்தது. இதனால் அவர் 1899 ம் ஆண்டில் சுவாமி சூரியாநந்தரையும் சகோதரி 'நிவேதி'யையும்

உடன் அழைத்துக் கொண்டு இந்தியாவிற்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கு சென்ற பின் அவரது உடல்நிலை பெரிதும் தேறி வந்தது. இருந்தும் தன் இறுதிக்காலம் நெருங்கி வருவதை சுவாமி அவர்கள் வெகுவாக உணர்ந்து கொண்டார்.

இதனால் சுவாமி அவர்கள் 'மேக்லியாட் என்ற பெண்மணிக்கு கடிதம் ஒன்றை எழுதினார். அதில், ''ஓடம் ஒன்று அமைதித் துறையை நெருங்கிக் கொண்டிருக்கிறது' அதனை மேலும் ஓடச் செய்ய முடியாது'' என்று குறிப்பிட்டு எழுதினார். அதன் பின்பு 1900ம் ஆண்டு யாருக்கும் முன்கூட்டியே அறிவிக்காமல் வேலூர்மடத்திற்கு விரைந்து சென்றார். சுவாமிக்கு இறுதிக்காலம் நெருங்கி விட்டது என்பது தெரிந்து விட்டது. இறுதி நாட்களில் அவரது காரியங்களெல்லாம் ஏதோ நோக்கத்துடன் செயற்படுவனவாகவும் முக்கியத்துவம் உடையனவாகவும் காணப்பட்டன. ''பெரிய மரங்களின் நிழலில் சிறுசிறு செடிகள் வளராது'' என்ற வசனத்தையும் அவர் அழகாக எடுத்துரைத்தார்.

1902ம் ஆண்டு ஆடி மாதம் 4ம் நாள் காலை 8 மணி தொடக்கம் 11 மணி வரை வழக்கத்திற்கு மாறாக சுவாமி அவர்கள் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். பின்பு அமைதியாகக் கீழே படுத்தார். சிறிது நேரத்தின் பின்பு இருமுறை மூச்சை நன்றாக உள்ளே இழுத்தார். அவ்வளவுதான் சுவாமிகள் நிலையான ஓய்வில் ஆழ்ந்து விட்டார். ஆனால் அவர் என்றும் அழியாதவர். அவரின் போதனைகள் என்றும் இவ்வுலகில் நிலைத்துக் கொண்டேயிருக்கும் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

உசாத்துணை நூல்கள்:-

1) குழந்தைகள் கலைக் களஞ்சியம்.
2) கருமவிதி
3) சுவாமி விவேகானந்தரின் ஞானயோகம்

தமிழ் மணம் பரப்பும் கலைச்செல்விக்கு எமது வாழ்த்துக்கள்

நவீன டிசைன்களாலான அழகிய சிறந்த பவுண் தங்க
நகைகளுக்கு மட்டுமாநகரில் நம்பிக்கையான ஒரே இடம்

ரூபா ஜுவலரி மாட்

ஓடர் நகைகள் குறித்த தினத்தில் உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.

For Sovereign Gold Jewelleries

Visit

RUPA JEWELLERY MART

69, Main Street, Batticaloa.

# எமது கலாசாலை சிற்றூழியர்கள்

திரு. K. விவேகானந்தன்
திரு. S. நடராஜபதி
திரு. N. நாராயண மூர்த்தி
திரு. K. கனகரெட்ணம்
திருமதி. G. நாகராஜா
திரு. T. ஜோசப்
திரு. S. கனகரெட்ணம்
திரு. S. ஜெய்சங்கர்
திரு. K. கணேசமூர்த்தி
திருமதி. T. மாரிமுத்து

திரு. K. கருணாநிதி
திருமதி. T. பாக்கியம்
திரு. V. கந்தசாமி
செல்வி. K. M. T. குரூஸ்
திரு. T. கோவிந்தராஜா
திரு. S. மரியதாஸ்
திரு. M. மாரிமுத்து
திரு. S. உதயராஜா
தி,மதி. S. றோசம்மா
திருமதி. C. ஆரோக்கியமேரி

## சர்வதேச அமைப்புகளும் ஆரம்ப ஆண்டுகளும்

| | |
|---|---|
| ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான கலாசார ஸ்தாபனம் (UNESCO) | - 1946 |
| ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF) | - 1946 |
| அணிசேரா நாடுகளின் அமைப்பு (NAM) | - 1961 |
| தென்கிழக்காசிய நாடுகளின் சம்மேளனம் ஆசியான் (ASEAN) | - 1967 |
| தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்புச் சங்கம் சார்க் (SAARC) | - 1985 |
| அரபு நாடுகளின் சம்மேளனம் | - 1945 |
| ஆபிரிக்க ஒற்றுமை நிறுவனம் (OAU) | - 1963 |
| வட அத்திலாந்திக் நாடுகளின் ஒப்பந்த அமைப்பு (NATO) | - 1949 |

# பண்டைத் தமிழர் திருமணங்கள்

எஸ். கீதபொன்கலன்
ஆரம்பக்கல்வி A
விடுகை வருடம்

திருமணங்கள் மங்களகரமானவை. ஆணும், பெண்ணும் கூடி வாழ்வாங்கு வாழ்வதற்கு முதல் நிலையாய் இருந்த நிகழ்ச்சியைத் தமிழர் 'திருமணம்' என்று அழைத்தனர். தொல்காப்பியர் திருமணத்தை ''வரைவு'' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார். ''கற்பொடு புணர்ந்த கௌவை'' என்பது திருமணத்திற்கு முன் நிகழ்வதாகும். இக்காலத்தில் திருமணத்திற்கு முன் ''பரிசம்'' போடுவது போலவே அக்காலத்திலும் ''பரியம்'' அளிக்க வேண்டும் என்ற நிலை இருந்து வந்துள்ளது. பெண் வீட்டார் பந்தலிட்டு புது மணல் பரப்பி மாலை மாற்றி விளக்கேற்றி வைப்பார்கள். பல்லியம் முழங்க தெய்வ வழிபாடு செய்வார்கள். பின்னர் மூன்று அல்லது ஐந்து மங்கல மகளிர் சென்று புதுக் குடங்களில் நீர் கொண்டு வந்து புதுத்தாழியில் ஊற்றி, அந்நீருள் பூவையும் நெல்லையும் இடுவர். மணமகளை மனையில் இருத்தி மணமக்களைப் பெற்ற நான்கு மகளிர் மணமகளைச் சுற்றி நின்று மூதாட்டியார் தாழியிலுள்ள நீரை முகந்து தர அதை வாங்கிக்

''கற்பினின்றும் வழுவாது உன் கணவனைக் காக்கும் துணைவியாவாயாக''

என்று வாழ்த்தி நீராட்டுவார்கள். இதுவே ''வதுவைத்'' திருமணம் என்று சொல்லப்படும்.

சங்ககால முறைமை பற்றி நோக்கும் போது வாழை இலையும் அறுகம் புல்லும் விரவி வெண்நூலினால் கட்டி, அதைக் காப்பாகக் கட்டி மனையில் அமர்த்துவார்கள். பெண்ணின் பெற்றோர் ''நீ விரும்பியவனுக்கே உன்னைத் திருமணம் செய்து கொடுக்கிறோம். இணைபிரியாது இன்புற்று வாழ்க'' என்று வாழ்த்துவார்கள். இது கடைச்சங்ககாலமுறை.

மழை, மிகுகுளிர், மிகுபனி இல்லாத காலமே மனைவிக்கு ஏற்ற காலம் என கருதப்பட்டது. தை மாதம் முதல் ஆவணி மாதம் வரை உள்ள காலத்தில் தமிழர்களால் மனைவினை நிகழ்த்தப்பட்டது. தண்ணொளி வீசும் திங்கள், உரோகிணியுடன் உறையும் நாளே திருமணத்திற்கு ஏற்ற நாளாக அன்று கருதப்பட்டது.

கணவனோடு வாழுகின்றவர்களை ''வாலிழை மகளிர்'' என்று கூறுவர். பண்டைத் தமிழகத்தில் குறிஞ்சி நிலத்து இளைஞர்கள் புலியைக் கொன்று, தமது வீரச் செயலை நிரூபித்துத் தாம் விரும்பும் பெண்ணை மணந்து கொண்டனர். புலியைக் கொன்ற இளைஞர் தமது வீரத்திற்கு அடையாளமாகத் தாம் கொன்ற புலியின் பற்களை மங்கல நாணிற் கோர்த்து மணமகளின் கழுத்தில் அணிவர். இவ்வழக்கமே நாளடைவில் தாலி தரிக்கும் வழக்கமாக வளர்ந்தது. பழங்காலத்தில் திருமணமென்றால், ஊருக்குப் பெரியவர் பொதுமக்கள் முன்னிலையில் ஒரு பனையோலையில் மணமக்கள் இருவர் பெயரையும் எழுதி வாழ்த்துவார். அந்தப் பனை ஓலையைக் கயிற்றில் முடிந்து திருமணமானதற்கு அடையாளமாகவும், ஆக்குவர். அந்தப் பெரியவரால் எழுத்தாணியால் எழுதப்பட்ட அந்த வாழ்த்தோலையே அம்மணமக்களின் திருமணத்திற்கும் சாட்சியாகவும் விளங்க திருமணங்கள் நடைபெற்று வந்தன.

பனை ஓலைக்கு ''தாலபத்திரம்'' என்று பெயர். எனவேதான் மங்கல நாணுக்குத் ''தாலி'' என்று பெயர் ஏற்பட்டது. நாட்கள் செல்லச் செல்ல நாளடைவில் பனை ஓலைக்குப் பதிலாக மஞ்சள் அல்லது பொன்னணி அணியும் பழக்கம் ஏற்பட்டது.

தமிழர்கள் மணமாகாத பெண்களுக்குக் காலில் சிலம்பை அணிவித்து ''அவர்கள் மணம் ஆகாதவர். மணக்க விரும்புவோர் மணக்கமுன் வரலாம்'' என்று அறிவித்து அவர்கள் மணம் செய்து கொள்ளும் முன்னால் அச்சிலம்பைக் கழற்றிவிட்டு ''அவர்கள் மணம் பெற்ற மகளிர் ஆயினர். இனி வேறு ஆடவர் எவரும் மன விருப்பமுடன் பார்ப்பது கூடாது'' என அறிவித்து வாழ்ந்தனர். மணநாளுக்கு முன்னால் நிகழும் இச்சடங்கை ''சிலம்புகழி நோன்பு'' என்று வழங்குவர்.

வீரத்தின் விளை நிலமான பண்டைத் தமிழகம் காதலையும் வீரத்தையும் போற்றி வளர்த்தது. அதிலும் வீரத்திற்குப் பரிசாக காதல் நிகழ்ந்தது. காடும் காடுசார்ந்த பகுதியும் முல்லை எனப்பட்டது. இங்கு வாழும் மக்கள் ஆயர், இடையர், பொறுவர் என்றெல்லாம் அழைக்கப்படுவர். இவர்களுடைய தொழில் ஆடுமாடு மேய்த்தல், மேட்டு நிலங்களை உழுது பயிரிடுதல்.

வெறும் அழகை மட்டும் பெண்கள் விரும்புவதில்லை. வீரனை, விரிந்த மார்புடையவனை, ஆண்மகனைத்தான் அவர்கள் மாலை இட்டு மணாளனாக்கிக் கொள்வர். வீரத்தை மதிப்பிட ஆயர்குல மக்கள் கைக்கொள்ளும் முறையே மெய்சிலிர்க்க வைக்கும். மலர்மாலை அணிந்த ஆயர் குல இளைஞர்கள் ஒன்றுகூடி நிற்பர். ஊருக்குள் பெரியவரான முதியவர் ஒருவர் ''இதோ! இந்த முத்துப்பல் வரிசைக் காரியைப் பெற வேண்டுமென்றால் அதோ அந்த வெள்ளை நிறக்காளையின் கூரிய கொம்புகளுடன் விளையாட வேண்டும். அதோ! நிற்கிறாளே அந்த முகில் வண்ணக் கூந்தல் முழுநிலா முகத்தாள் அவளுடைய தோளில் உறங்க வேண்டுமென்றால் இந்தப் பொல்லாத காளையின் திறன் அடக்கவேண்டும்.'' என்று எடுத்துக் கூறுவார். சினமிக்க எருதுகள் தொழுவினுள் அவிழ்த்து விடப்படும்; காதலியை மணக்க நிற்கும் காளைகள் சீறிப்பாய்ந்து வரும் காளைகளை அடக்க வேண்டும். மதம் மிக்க யானைகளைக் காட்டிலும் அஞ்சாமைவாய்ந்த காளையைவென்று அடக்கும் இளம் காளைக்கு அழகு மங்கை மாலையிடுவாள். இந்நிலையில் அங்கு கூடியுள்ள காளையரோ கொல்லேறு தழுவிப் பெற்ற விழுப்புண்ணிற்கு தம் காதலியரின் மென்தோள் வேதுபெறுவது எப்போது என்று கனவு கண்டுகொண்டிருக்க அவர்தம் இதயம் கவர்ந்த கட்டழகு வல்லிகள் தாம் சாய்ந்திருக்கும் காளைகளின் கொம்புகளையும் இனித்தாங்கள் சாயப்போகும் காளையினரின் பரந்த மார்பின் திண்மையையும் மாறிமாறி பார்த்துக்கொண்டிருப்பார்கள். சீறிப் பாய்ந்தோடிவரும் காளைகளின் மூர்க்கத்தனம் அவை தன்னை அடக்க வருபவரை எதிர்த்து நிற்கும் காட்சியை கலித்தொகை முல்லைக் கலியில் பரக்கக் காணலாம். அத்தகைய வீரம் மிக்க ஒரு பாடற் காட்சியே இது.

மேற்பாட் டுலண்டின் நிறனொக்கும் புன்குருக்கண்
நோக்கஞ்சான் பாய்ந்த பொதுவனைச் சாக்குத்திக்
கோட்டிடைக் கொண்டு குலைப்பதன் கோற்றங்காண்
அஞ்சீ ரசையியல் கூந்தற்கை நீட்டியான்
நெஞ்சம் பிளந்திட்டு நேரார் நடுவன்தன்
வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்;

'பட்டுப் பூச்சியின் பசுமையோடு செந்நிறம் பெற்ற காளை, காளையின் கம்பீரத்தையும் விழியிலே வாங்கி நிற்கும் சீற்றத்தையும் கண்டு இளைஞர்கள் அஞ்சவில்லை. எருதுக்கும் இளைஞருக்கும் போர். தன்னை அடக்கப் பாய்ந்த இளைஞனைக் குத்திக் கொம்பில் கோத்துக் கொண்டு அது ஆடுமாம்' அந்தக் காட்சியை வருணிக்க கவிஞர் காட்டும் உவமையே மெய்சிலிர்க்க வைக்கும்.

'அழகும் மென்மையும் வாய்ந்த திரௌபதியின் கூந்தலைத் தீண்டிய துச்சாதனனின் நெஞ்சைப் பிளந்து கொன்று தன் வஞ்சத்தை முடித்துக் கொண்ட வீமசேனனைப் போல அந்த எருது காட்சியளிக்கிறதாம்'

முல்லை நிலத்து காதல் மகள், மணக்க இருக்கும் காதலனது வீரத்திற்கு மாலையிட மணமாலையுடன் நிற்பாள். கொல்லேற்றின் கொம்பிற்கு அஞ்சுவோனை ஆயர் மகள் மணந்து கொள்ள மாட்டாள். அஞ்சாமல் சென்று கொல்லேற்றத்தை அடக்க இயலாதவன் ஆயர் மகளுடைய தோளை அணைக்க இயலாது. கொம்பின் இடையே புகுந்து பாய்ந்து வென்றால்தான் காதல் மார்பில் மகிழ்ந்து தலை வைக்க முடியும். இந்த அழகிய கருத்துக்கள் எல்லாம் முல்லைக்கலிப் பாடல்களில் காணலாம். சங்க காலத்து

வீரம் இன்றும் பழந்தமிழர் பட்டி தொட்டிகளில் இருந்து கொண்டுதான் இருக்கிறது. பொங்கல் திருநாட்களில் இன்றும் கூட 'ஜல்லிக் கட்டு' என்ற பெயரில் காளையடக்கும் வீர விளையாட்டு தமிழ் நாட்டின் கிராமங்களில் இடம் பெற்று வருவதை நாம் அறியலாம்.

காதலுக்காக தன்னையே மாய்த்துக் கொள்ளும் காளைகள் இருந்தனர். பழந்தமிழர் இலக்கியங்களின் கண் இதனைக் காணக்கூடியதாயுள்ளது. ஒருவன் தன்னை விரும்பாத ஒருத்தியின் மீது தாங்க முடியாத காதல் கொண்டு செய்யும் ஒரு செயலை 'மடலேறுதல்' என்று கூறுவர். கருக்கு மழுங்காத பனைமட்டைகளால் குதிரை உருவத்தில் ஓர் ஊர்தி செய்யப்படும். காமவெறி கொண்டவன் அவ்வூர்தியின் மேலேறி அமர்வான். தான் காமமுற்ற அந்தப் பெண்ணின் உருவத்தை ஒரு துணியிலே வரைவான். அதனைத் தன் கையிற் பிடித்துக் கொண்டு தான் ஏறிக் கொண்டிருக்கும் பனைமட்டை ஊர்தியைப் பிறரால் இழுக்கச் செய்வான். பனைமட்டைகளின் இருபுறங்களிலும் வாள் போன்றிருக்கும் கருக்கள் அவன் உடல் உராய்ந்து புண்படுத்தும். அவ்வாறு தோன்றும் புண்ணில் இருந்து இரத்தம் வழியாது. ஆனால் அதற்கு மாறாக வெண்மையான நீர்தான் வெளியேறும். ஊர்மக்கள் அவனுக்காக மனமிரங்கி, அவன் விரும்பிய பெண்ணையே அவனுக்குத் திருமணம் செய்து வைப்பார்கள். இல்லையென்றால் அவன் மலைக்குன்றின் மீதேறி கீழே விழுந்து தன்னுயிரை மாய்த்துக் கொள்வான்.

---

திருமணம் என்பது முற்றுகையிடப்பட்ட கோட்டை வெளியே இருப்பவர்கள் உள்ளே செல்லத் துடிக்கிறார்கள். உள்ளே இருப்பவர்கள் வெளியே வரத் தவிக்கிறார்கள்.

ஷேக்ஸ்பியர்

---


தரமான
* புரியாணி, * கொத்து ரொட்டி,
* சம்சா, * கட்லட்,
மற்றும் விதம் விதமான, ருசியான உணவு வகைகளுக்கு இன்றே நாடுங்கள்.

ஹாஜியார்
சாப்பாட்டுக்கடை

Hajiyar Eating House
72, Main Street,
Batticaloa.

நங்கையருக்கு
நவீன சாரிகள்,

ஆடவருக்கு
அற்புத ஆடைகள்,
இன்றே
நாடுங்கள்

மர்ழியாஸ்
12, பிரதான வீதி,
மட்டக்களப்பு.

# வேதனை

இ. ரோமபாதன்
விஞ்ஞானம்
விடுகையாண்டு

*பாலூட்டிப் பாடித் தாலாட்டி வளர்த்த*
*தாய் உள்ளம் சிலையாகவே,*
*காலூன்றி வாழும் நாள் வரும்வேளை*
*சேய் உயிர் விண்ணோக்குதே!*

*கொடி பற்றி வாழக் கொப்பொன் றிலாது*
*நலிர்கின்ற நல்ல தளிர்கள்*
*கொடிதென்று வாழ்வைக் குறிதொண்டு என்று*
*விடிவென்று விண் நோக்குதே!*

*பிழைகொண்டு நாளும் பிழைக்கின்றோர் வாழ்வு*
*தழைத் தோங்கி வளர்கின றதே*
*கறையற்று வாழும் காம் கொண்டோர் வாழ்வு*
*தழைக் காது தருகின்றதே!*

*நொடிக்குள்ளே மாறி நடிக்கின்ற உள்ளம்*
*நொய்தாகத் துயில் கொள்ளுதே*
*நடிக்கின்ற உள்ளம் பிடிக்காதோர் வாழ்வு*
*நலமின்றித் துயர் கொள்ளுதே!*

*எதிர்காலம் ஓங்கும் இளையோர்கள் வாழ்வு*
*இலையுதிர்ந் திட லாச்சுதே*
*இதன் காரணத்தால் எதிர் கால வாழ்வு*
*எரியாத விளக் காச்சுதே.*

*உண்மைகள் எங்கும் உறங்கிடும் வேளை*
*உள்ளங்கள் ஊமையாகும் இந்த*
*உண்மையை யார்க்கும் உணர்த்திடத்தானா*
*இறைவனும் ஊமை யானான்!*

*வாடும் பயிர்க்கு மழையற்றுப் போனால்*
*வாழ்வொன்று உளதாகுமோ?*
*தேடும் எமக்குன் திருப்பார்வை நீங்கில்*
*செயல் என்ன சொல்லும் இறைவா.*

சிறுகதை

# தண்ணீரில் மீனழுதால்

ம. லிதாகரன்
ஆரம்பக்கல்வி B
விடுகையாண்டு

அன்று வெள்ளிக்கிழமை. அம்மன் ஆலயத்தில் பக்திப் பரவசமூட்டும் சுப்ரபாதம் ஒலித்தது; விடிகாலைப் பொழுதாயிற்று என்பதை சேவல்கள் கூவி உணர்த்தின. அதற்கு சாட்சி தெரிவிப்பதுபோல் மலர்களிலும் மரங்களிலும் உறங்கி எழுந்த பறவைகளின் அரவமும் ஒலித்தது. வானில் தோன்றிய விடி வெள்ளிகள் வைகறைப் பொழுதின் இருளை நீக்கின. மணி ஏழு ஆகியும் கண்விழித்த வண்ணமே கட்டிலில் படுத்திருந்தான் புருசோத்தமன்.

வீட்டுக் கடமைகளையெல்லாம் முடித்துவிட்டு ஆலயப் செல்வதற்காக உள்ளே வந்த அக்கா கற்பகம், வழமையாக 5-30 ற்கே எழுந்துவிடும் புருசோத்தமன் இன்னும் படுத்திருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டாள்,

''ஏய் தம்பி!''

''ம்...''

''என்ன இன்னுமா நீ எழும்பல்ல? என்ன சுகமில்லையாடா? கெதியா எழும்பு,

''இல்ல நான் இண்டைக்கு லீவு. அது தான் '' படுக்கையில் இருந்து எழுந்தான் புருசோத்தமன்.

நேற்று அவன் அலுவலகத்தில் எதிர்பாராமல் எதிர் நோக்கிய அந்த நிகழ்ச்சி அவனை ஆச்சரியப்படுத்தியதா? இல்லை ஆனந்தப்படுத்தியதா? என்பது அவனுக்கே புரியவில்லை.

கொலுசுச்சத்தம் காதில் ஒலிக்க, யாரோ வருகிறார்கள் என உணர்ந்து நிமிர்ந்து பார்த்தான் புருசோத்தமன். அது யாருமல்ல, அது அவனுடன் பணிபுரியும் சகுந்தலா தான்.

''புருசோத்தமன் நான் உங்களுடன் தனியாகக் கதைக்கணும்.உங்களுக்கு ஆட்சேபனை இல்லேன்னா...''

—அவள் சொல்லி முடித்தாள் ''ஒகே' நாற்காலியைக் காட்டினான் புருசோத்தமன். அதில் அமர்ந்தாள் சகுந்தலா.

தலை குனியாமல் கண்ணிரெண்டும் நாணிக் குனிந்த வண்ணம் இருந்தவளை 'என்ன விஷயம்?'' என வினவ வாயெடுத்தான். வினவவில்லை. கஸ்தூரிப் பொட்டிட்ட அவளது வட்ட முகத்தையும், மேசைமேல் இருந்த அவளின் மென்மையான உரோமங்களையுடைய மிருதுவான முன்னங்கையையும், கரு நீலப் பட்டாடைக்குப் பொருத்தமாக அணிந்திருந்த ரவுக்கையின் மேல் தெரிந்த நுண்ணிய அமைப்பையுடைய சங்கிலி அணிந்திருந்த கழுத்தையும், வில்லையொத்த புருவத்தையும் இரசிக்கலானான்.

திடீரெனப் பார்த்தவள், ''நான் உங்களை...'' அதற்கு மேல் ஒன்றும் கூறத் தைரியம் இல்லாதவளாய் தனது கைப்பையில் இருந்து ஒரு மடித்த கடதாசியை எடுத்து மேசைமேல் வைத்துவிட்டு, காலில் அணிந்த கொலுசின் ஓசை கூடக் கேட்காவண்ணம் மௌனமாக வெளியேறினாள்.

அலுவலக வேலையை சிறிது நிறுத்திவிட்டு அக் கடதாசியைப் பிரித்துப் படித்தான்.

அன்பின் புருசோத்!

நித்தமும் உங்களைப் பார்த்து என் கண்கள் தத்தளிக்கின்றன, உங்களைக் காணாதபோது அமைதியை இழந்து என் இதயம் தவிக்கின்றது. இதை என்னவென்று நான் சொல்ல? நான் அறிந்தவரை இது நான் உங்கள் மேல் கொண்ட காதலே,

ஆம் புருசோத்: நான் உங்களை அடைய ஆசைப்படுகிறேன். அது பல நாள் ஆசை. இவ்வாசையை நிராசையாக்காமல் என்னை உங்கள் காதலியாக என் மனைவியாக ஏற்றுக் கொள்ளுங்கள். இப்படிக்கு,
சகுந்தலா.

மூன்று நாட்களின் பின் மனதில் ஒரு புத்துணர்ச்சியும், அதேவேளை ஒரு பதட்டத்துடனும் அலுவலகம் நோக்கிச் சென்றான்.

தானுண்டு தன்பாடுண்டு என இருந்தவனை அவளின் தோற்றமும், அன்புப் பார்வையும் சிறிது நேரம் தத்தளிக்க வைத்தன. அவன் பார்வையும் அவள் பார்வையும் ஐக்கியமாகின. அவன் உள்ளம் அவனிடத்தில் இல்லை என்பதை அவன் உணர்ந்தான்.

இதுவரை நாணமுடன் பார்ப்பதும், அவன் பார்வையைத் தாங்காமல் தலை குனிவதுமாக இருந்து வந்த 'வாய் திறந்து பேசாத காதல்' இப்போது கடற்கரை என்றும் திருவிழாக்கள் என்றும் விரிவடைந்த தெய்வீகக் காதலானது.

காதல் வாழ்க்கை வட்டம், விரைவாகச் சுழன்று வருடம் ஒன்றைத் தாண்டியும் இருவர் வீட்டிலும் இது பற்றிய விடயம் தெரியவில்லை.

கடற்கரையில் புன்னை மர நிழலின் மென்மையான தென்றல் உடலையும் உள்ளத்தையும் சில்லெனக் குளிரவைத்தது.

''சகு! உங்க வீட்டில நம்ம திருமணத்தச் சம்மதிப்பாங்களா? உங்க அப்பா பெரிய பெரிய இடத்திலெல்லாம் மாப்பிள பார்க்கிறாராம்''

''ஓ அதனாலென்ன?''

''நீங்க உங்க வீட்டில நம்ம விசயம் எதுவும் சொல்லல்ல. நல்ல இடமெண்டா உங்க அம்மா அப்பா விருப்பப்படி நடங்க'' கிண்டலாகக் கூறினான்.

பெற்றோரிடம் இதைக் கதைக்க சகுந்தலா பல தடவை முயற்சித்தும் அச்சம் தடைபோட்டு விட்டதே. இது வரை பெற்றோர் பார்த்த மாப்பிள்ளைகள் ஏனோ பிடிக்கவில்லை எனக்கூறி மௌனியாக இருந்து விட்டவள் அவள் -புருசோத்தமனின் இவ்வார்த்தை அவளைத் தூக்கி வாரிப் போட்டது.

கைப் பிடியைத் தளர்த்தி அழுதவளாய் 'அந்த ஜாதிப் பெண் நானில்ல புருசோத்! என் நெஞ்சில் என் அருமைக் காதலர் புருசோத்தான் நிறைந்திருப்பார். எப்ப உங்களைப் பார்த்தேனா அன்றே நீங்கள் தான்...

நான் உங்களைத்தான் புருசோத்...

என்ன.. என்ன...... ஏமாத்திடாதீங்க...... ஏமாத்தினா......

நான் உயிருடன் .....

மேலும் பேசவிடாமல் தடுத்து, முந்தானைத் தலைப்பால் கண்ணீரைத் துடைக்க எத்தனித்தவளை அரவணைத்து, அவள் கண்ணீரைத் துடைத்து

''சகு நான் சத்தியமா ஜோக்குக்குத் தான் சொன்னன்' என்ன மன்னிச்சிடு ப்ளீஸ்''

ஒருவாறு அழுகையை அடக்கினான்.

மறுநாள் விடுமுறையாதலால் இருவரும் அலுவலகம் செல்லவில்லை. சந்திக்கும் வாய்ப்பும் கிடைக்கவில்லை. நேற்று கடற்கரையில் நிகழ்ந்த அந்தச்சிறு ஊடலையும் சகுவின் சிறுபிள்ளைத்தனமான அழுகையையும் நினைத்து இன்பத்தை மேலும் சேர்த்து சாயும் நாற்காலியில் அமர்ந்து தேனீர் பருகிக் கொண்டிருந்த அதேவேளை

''அடோ எயாகௌத''

என்றபடி இலங்கை இராணுவத்தினரின் சத்தம் கேட்டுத் திரும்பினான். வீட்டின் பின்புறம் பல இராணுவத்தினர் சுற்றிவளைத்திருந்தனர். அவனை அழைத்துச் சென்றனர்.

இடையில் செல்லும் போதுதான் அறிந்தான் அவ்வூரே சுற்றிவளைக்கப்பட்டிருந்ததை.

''ஐயா ..அவன் என் தம்பி ஐயா ..அம்மா அப்பா இல்லாதவன் ஐயா அவனை விடுங்கையா'' எனப்புலம்பியவாறு பின்னால் சென்ற கற்பகத்திற்கு ஒரு தள்ளுப்போட்டு விட்டு புருசோத்துடன் சேர்த்து ஏனைய நால்வரையும் கைது செய்து சென்றனர்.

மறுநாள் இராணுவநிலையம் சென்று கேட்டபோது அவர்கள் இறந்து விட்டதாயும் பிரேதம் எரிக்கப்பட்டதாயும் அறிந்தனர்.

